# தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்புரவாகுதல்

*வேத ஆராய்ச்சி தொகை நூல் V*

## *பெரோயரின் கேள்விகள்*

# பெரோயரின் கேள்விகள்

## தொகுதி 5

## தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்புரவாகுதல்




“ நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.”

II தீமோத்தேயு ௨ : 15

# வேத ஆராய்ச்சி தொகை நூல் V

## பெரோயரின் கேள்விகள்

### பொருளடக்கம்


| வ.எண் | தலைப்புகள் | குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஒப்புரவாகுதலின் தத்துவமும் மெய்த்தன்மையும் | அத்தியாயம் – 1 | 3 |
| 2. | ஒப்புரவாகுதலின் ஆசிரியர் | அத்தியாயம் – 2 | 11 |
| 3. | ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் ஒரே பேறானவர் | அத்தியாயம் – 3 | 21 |
| 4. | ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் மாசில்லாதவர் | அத்தியாயம் – 4 | 25 |
| 5. | ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் “ தம்முடைய சகோதரருக்கு ஒப்பானார்” , “நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடியவர்” | அத்தியாயம் – 5 | 29 |
| 6. | ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் “ தாவீதின் குமாரனும், தாவீதின் ஆண்டவரும்” | அத்தியாயம் – 6 | 35 |
| 7. | ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் “ மனுஷகுமாரன்” | அத்தியாயம் – 7 | 38 |
| 8. | ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் தேவனுடைய பரிசுத்த ஆவி | அத்தியாயம் – 8 | 41 |
| 9. | ஞானஸ்நானம், சாட்சி, ஒப்புரவாகுதலின் ஆவியினால் முத்திரையிடப்படுதல் | அத்தியாயம் – 9 | 49 |
| 10. | தெளிந்த புத்தியுள்ள ஆவி | அத்தியாயம் – 10 | 56 |
| 11. | ஒப்புரவாகுதலின் பரிசுத்த ஆவி மறுக்கும் செய்திகளை ஆழ்ந்து ஆராய்தல் | அத்தியாயம் – 11 | 60 |

| | | | |
|---|---|---|---|
| 12. | ஒப்புரவாகுதலின் பாடம் – மனிதன் | அத்தியாயம் – 12 | 68 |
| 13. | ஒப்புரவினால் உண்டாகும் நித்திய ஜீவனுக்கும் சாகாமைக்கும் உரிய நம்பிக்கை | அத்தியாயம் – 13 | 85 |
| 14. | ஒப்புரவாகுதலின் அவசியம் – சாபம் | அத்தியாயம் – 14 | 91 |
| 15. | "எல்லாரையும் மீட்கும்பொருள்" ஒப்புரவாகுதலுக்கு ஒரே அடிப்படை | அத்தியாயம் – 15 | 96 |
| 16. | ஒப்புரவாகுதலின் ஊழியம் அல்லது ஒப்புரவாகுதல் | அத்தியாயம் – 16 | 108 |

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் V மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 1

### "ஒப்புரவாகுதலின் தத்துவமும் மெய்த்தன்மையும்"

(1) Is it because Justice and Love are the basis of the Divine government that **Atonement for man's sin** is made the foundation of the Christian religion? Or what does differentiate the religion of the Bible from all other religions? Page 15

1. நீதியும், அன்பும் தெய்வீக ஆளுகையின் அடிப்படையாக இருக்கின்ற காரணத்தினாலேயா, **மனிதனுடைய பாவத்திற்கு ஒப்புரவாகுதல்** என்பது கிறிஸ்தவ மதத்தின் அஸ்திபாரமாக்கப்பட்டிருக்கிறது? அல்லது மற்ற அனைத்து மதங்களிலிருந்து வேதாகமத்தில் சொல்லப்படும் மதத்தை வேறுபடுத்திக் காட்டுவது என்ன? **E P. 1 ¶ 1**

(2) Do Christian believers generally understand this or appreciate the philosophy of the Atonement set forth in the Bible? If not, why not? What is their disadvantage, and what should they do to put on this part of the armor of God, to be ready for the testings of "this evil day?" Page 15

2. கிறிஸ்தவ விசுவாசிகள் பொதுவாக இதைப் புரிந்திருக்கிறார்களா அல்லது வேதத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஒப்புரவாகுதலின் தத்துவத்தைப் புரிந்துகொண்டிருக்கிறார்களா? இல்லையென்றால், ஏன் இல்லை? அவர்கள் அடைந்த பாதகம் என்ன? மற்றும் "இந்தத் தீங்கு நாளின்" சோதனைகளுக்கு ஆயத்தமாகும்படிக்கு, தேவனுடைய ஆயுதவர்க்கத்தின் இந்தப் பகுதியைத் தரித்துக்கொள்வதற்கு அவர்கள் செய்யவேண்டியது என்ன? **E P. 1 ¶ 1**

(3) State the so-called "orthodox" view of the **Atonement.** Page 16

3. **ஒப்புரவாகுதல்** குறித்து "பாரம்பரிய" (பண்டைய மத முறைமைகளைக் கடைப்பிடிப்பவர்களின்) கண்ணோட்டத்தைக் குறிப்பிடவும். **E P. 2 ¶ 1**

(4) State the unorthodox but growingly popular view of the subject. Page 16

4. ஒப்புரவாகுதல் குறித்து "பாரம்பரியமல்லாத" (பண்டைய மத முறைமைகளைக் கடைப்பிடிக்காதவர்களின்) பிரபலமாக வளர்ந்துவரும் கண்ணோட்டத்தைக் குறிப்பிடவும். **E P. 2 ¶ 2**

State the Bible's teaching on this subject and quote the Scriptures supporting same under the following divisions of the subject:

ஒப்புரவாகுதல் குறித்த வேதாகமப் போதனையைக் குறிப்பிடவும். மேலும், அதை ஆதரிக்கும் வேதவாக்கியங்களைப் பின்வரும் பிரிவுகளின் கீழ் மேற்கோள்காட்டவும்:

(5) Did man fall into sin so as to need an Atonement for his sin? What Scriptures prove this? Page 17 ¶ 2

5. மனிதன் பாவத்திற்குள் விழுந்ததால் அவன் செய்த பாவத்திற்காக ஒரு பரிகாரம் அல்லது பாவநிவாரணம் தேவைப்பட்டதா? இதை நிரூபிக்கும் வேதவாக்கியங்கள் என்ன? **E P. 3 ¶ 2**

(6) Was it right on God's part to condemn Adam and to allow the death penalty to follow and to involve all of Adam's race? Page 17 ¶ 3

6. தேவன், ஆதாமை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததும், அவர்மேல் மரண தண்டனை வரப்பண்ணினதும், அதில் ஆதாமின் சந்ததியினர் அனைவரையும் உட்படுத்தியதும் சரியா? **E P. 3 ¶ 3**

(7) What provision did God's love make for mankind? Page 17 ¶ 4

7. மனுக்குலத்திற்காக தேவனுடைய அன்பு செய்திட்ட ஏற்பாடு என்ன? **E P. 3 ¶ 4**

(8) Was not the providing of a **ransom** all that was necessary? What more could God do? Page 17 ¶ 5
8. எல்லாரையும் மீட்கும்படிக்கு **மீட்கும்பொருள்** அளிப்பது மட்டுமே அவசியமானதாக இருக்கவில்லையா? இதற்கும் மேலாக தேவன் செய்யக்கூடியது என்னவாக இருக்கும்? **E P. 4 ¶ 1**

(9) What prevented our Lord Jesus from uplifting our race without redeeming it by His death? Page 18 ¶ 1
9. நம்முடைய மனித இனத்தைத் தம்முடைய மரணத்தினால் மீட்காமல், அப்படியே தூக்கிவிடுவதற்கு நமது ஆண்டவர் இயேசுவைத் தடைசெய்தது என்ன? **E P. 4 ¶ 2**

(10) If the sins of the past had all been canceled would further work for man be necessary? What? Page 18 ¶ 2
10. கடந்த கால பாவங்கள் அனைத்தும் இரத்துசெய்யப்பட்டிருப்பதால், மனிதனுக்காக மேற்கொண்டு வேலைசெய்வது அவசியப்படுமா? என்ன வேலை? **E P. 4 ¶ 3**

(11) What has Satan had to do with the fallen race? And how does this affect its future? And does he even now hinder the blessing from reaching the masses? Page 18 ¶ 3
11. விழுந்துபோன சந்ததியினிடத்தில் சாத்தான் என்ன செய்துகொண்டிருக்கிறார்? மேலும், அவர்களின் எதிர்காலத்தை இது எவ்வாறு பாதிக்கிறது? மேலும், அவர் இன்னமும் ஆசீர்வாதமானது திரளான ஜனங்களுக்குக் கடந்துபோகாதபடிக்கு தடுக்கிறாரா? **E P. 4 ¶ 4**

(12) Was God's provision of Atonement merely for the few who now hear of and accept it? Support your reply with Scripture quotations. Page 19 ¶ 1
12. ஒப்புரவாகுதல் என்ற தெய்வீக ஏற்பாடானது தற்போது செவிகொடுத்து ஏற்றுக்கொண்ட சிலருக்கு மாத்திரமே உரியதா? வசனத்தை மேற்கோள்காட்டி உங்கள் பதிலை நிரூபியுங்கள். **E P. 5 ¶ 1**

(13) What is the Divine order for extending the blessings of the Atonement to every creature? Page 19 ¶ 2
13. ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதங்களானது ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அளிக்கப்படுவதற்கான தெய்வீக வரிசை என்ன? **E P. 6 ¶ 1**

(14) Do any now enjoy the blessings of the Atonement? Who? Why do not all share this blessing now? Page 19 ¶ 3
14. ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதங்களைத் தற்போது யாரேனும் அனுபவித்துவருகிறார்களா? அவர்கள் யார்? (மனுக்குலம்) அனைவரும் இந்த ஆசீர்வாதத்தில் பங்குகொள்ளாதிருப்பது ஏன்? **E P. 6 ¶ 2**

(15) Will not present hindrances always prevent the majority of the race from sharing the benefits of the great Sin-Atonement? If not, why not? Page 19 ¶ 4
15. தற்போதைய தடைகளானது மகா பாவநிவாரண பலியின் பலன்களில் பங்குகொள்வதிலிருந்து மனித சந்ததியில் பெரும்பான்மையினரை என்றென்றும் தடைசெய்திடுமா? இல்லையெனில், ஏன் இல்லை? **E P. 6 ¶ 3**

(16) Is there more than one phase of Atonement? If so, state the other phase and show the harmony between these as one Atonement work. Page 20 ¶ 1
16. ஒப்புரவாகுதலில் ஒன்றிற்கும் மேற்பட்ட படிநிலைகள்/நிகழ்வுகள் உள்ளதா? அப்படியானால், மற்ற படிநிலையை/ நிகழ்வைக் குறிப்பிட்டு, ஒப்புரவாகுதலின் ஒரே வேலையாக இவைகள் இரண்டிற்கும் இடையே காணப்படும் இசைவைக் காண்பிக்கவும். **E P. 7 ¶ 1**

(17) What will be the final result of this Atonement work, which God has purposed and has begun? Page 20 ¶ 2
17. தேவன் நோக்கங்கொண்டு ஆரம்பித்திருக்கும் இந்த ஒப்புரவாகுதல் வேலையின் இறுதி முடிவாக இருக்கப்போவது என்ன? **E P. 7 ¶ 2**

(18) Is the Bible doctrine of Atonement for man's sin and his reconciliation to God in accord with the modern theory of Evolution? Page 20 ¶ 3
18. மனிதனுடைய பாவத்திற்கான நிவாரணம் மற்றும் தேவனுடனான அவனது ஒப்புரவாகுதல் குறித்த வேதாகம போதனையானது, பரிணாமத்தின் நவீன கொள்கையோடு இசைவாக உள்ளதா? **E P. 7 ¶ 3**

(19) The Bible teaches a fall of man from Divine fellowship. Can the Evolution theory be harmonized with this? Page 21 ¶ 1
19. தெய்வீக ஐக்கியத்திலிருந்து/உறவிலிருந்து மனிதன் விழுந்தான் என்று வேதம் போதிக்கிறது. பரிணாமக் கொள்கையை இதனுடன் இசைவாக்க முடியுமா? **E P. 8 ¶ 1**

(20) Would it have been justifiable on God's part to punish mankind for evoluting, if that was the law of his organism? Page 21 ¶ 1
20. பரிணாமமே அருடைய உயிரினத்தின் சட்டமாக இருந்திருந்தால், பரிணமித்ததற்காக மனுக்குலத்தை தண்டிப்பது தேவன் தரப்பில் நியாயமானதாக இருந்திருக்குமா? **E P. 8 ¶ 1**

(21) Could Justice have demanded a ransom or any sin-sacrifice, had Adam not been intelligent and a transgressor and justly under the sentence of death? Page 21 ¶ 1
21. ஆதாம் அறிவுள்ளவராகவும், மீறுதலுக்கு உட்பட்டவராகவும் தண்டனை தீர்ப்பின்கீழ் நியாயமாய்க் காணப்படுபவராகவும் இராமல் இருந்தால், நீதியானது ஓர் ஈடுபலியினையோ அல்லது பாவநவாரண பலியையோ கேட்டிருக்கக்கூடுமா? **E P. 8 ¶ 1**

(22) Is the belief or disbelief of Evolution optional with Christian believers? Or is it so radically opposed to the Divine revelation that to accept the one intelligently must mean the repudiation of the other? Page 21 ¶ 2
22. கிறிஸ்தவ விசுவாசிகளிடத்தில் பரிணாமத்தின் நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை என்பது விரும்பித் தேர்ந்தெடுக்கிற காரியமா? அல்லது இது, நுண்ணறிவுள்ள ஒன்றை ஏற்றுக்கொள்வது மற்றொன்றை நிராகரிப்பது என்ற தெய்வீக வெளிப்பாட்டை தீவிரமாக எதிர்க்கிறதாக உள்ளதா? **E P. 8 ¶ 2**

(23) Are Christians generally aware of this conflict and of the importance to themselves of a correct faith? Or are they generally so overcharged with the cares of this life that they are not worthy to be counted of the "Very Elect," and are intended to be sifted out by the "strong delusions" which are to make the close of this Age "perilous"? Page 22 ¶ 1
23. கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளாகவே இந்த முரண்பாட்டிற்கும், சரியான விசுவாசத்தின் முக்கியத்துவத்திற்கும் விழிப்புள்ளவர்களாக இருக்கிறார்களா? அல்லது அவர்கள் பொதுவாகவே ஜீவியத்தின் கவலைகளினால் பாரமடைந்தவர்களாக "உண்மையுள்ளவர்களாக" எண்ணப்படுவதற்கு பாத்திரமற்றவர்களாகவும், இந்த யுக முடிவைக் "கொடியதாக்கக்கூடிய" "கொடிய வஞ்சகத்தின்" மூலமாகவும் சலித்து பிரிக்கப்படுவார்களா? **E P. 9 ¶ 1**

(24) Do the Scriptures teach that God created Adam in the image of God or in the image and likeness of a chimpanzee? Page 22 ¶ 1
24. வேதவாக்கியக்கியங்கள், தேவன் ஆதாமைத் தமது சாயலில் சிருஷ்டித்தார் என்று போதிக்கிறதா? அல்லது ஒரு சிம்பான்சி குரங்கின் சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டித்தார் என்று போதிக்கிறதா? **E P. 9 ¶ 1**

(25) Do the Scriptures teach that Adam's perfection implied a perfection of knowledge that he knew everything? Or, merely that he had a perfect organism and sufficient knowledge for the tests of obedience imposed? Was Adam deceived into sin? Page 22 ¶ 1
25. ஆதாமின் பரிபூரணம் என்பது அவர் சகலத்தையும் அறிந்திருக்கிறார் என்ற அறிவின் பூரணத்தைக் குறிப்பதாக வேதவசனங்கள் போதிக்கிறதா? அல்லது அவர் ஒரு பரிபூரண உடலமைப்பையும், கட்டளையிடப்பட்ட கீழ்ப்படிதல் எனும் பரீட்சைக்குப் போதிய அறிவு பெற்றவராக மாத்திரம் இருந்தார் என்று போதிக்கிறதா? ஆதாம் பாவஞ்செய்வதற்கு வஞ்சிக்கப்பட்டாரா? **E P. 9 ¶ 1**

(26) What has uniformly been God's method for revealing knowledge in the past-to Abraham and others? Page 22 ¶ I
26. கடந்த காலத்தில் ஆபிரகாமுக்கும் மற்றவர்களுக்கும் அறிவை வெளிப்படுத்துவதற்கான தேவனுடைய ஒரே மாதிரியான முறை என்னவாக இருந்திருக்கிறது? **E P. 9 ¶ 1**

(27) Do the angels of heaven have all knowledge? Matt. 24:36
27. பரலோகத்தின் தூதர்கள் சகல அறிவையும் பெற்றவர்களாக இருக்கிறார்களா?

(28) Will the saints ever know perfectly-"know as they are known"? Will that which is perfect in knowledge ever be our portion? I Cor. 13:10, 12
28. பரிசுத்தவான்கள் "அறியப்பட்டிருக்கிறபடியே"-பரிபூரணமாய் எப்போதேனும் "அறிந்துகொள்வார்களா?" அறிவில் பூரணம் என்பது எப்போதேனும் நம்முடைய பங்காயிருக்குமா?

(29) What penalty was pronounced on Adam and shared by his posterity? Page 22 ¶ 2. Rom. 5:12
29. ஆதாம் மீது தீர்ப்பளிக்கப்பட்டு, அவரது சந்ததியினரால் பங்குகொள்ளப்பட்ட தண்டனை என்ன? ரோமர் 5:12 **E P. 10 ¶ 1**

(30) What does salvation from sin and its death penalty imply? Page 22 ¶ 2
30. பாவத்திலிருந்தும், அதன் சம்பளமாகிய மரணத்திலிருந்தும் இரட்சிக்கப்படுவது என்பது எதைக் குறிக்கிறது? **E P. 10 ¶ 1**

(31) What was predicted as respected Messiah and His work? Page 22 ¶ 2
31. மேசியா மற்றும் அவரது வேலை தொடர்பாக முன்னறிவிக்கப்பட்டது என்ன? **E P. 10 ¶ 1**

(32) How would the Evolution theory agree with St. Peter's declaration respecting coming glorious years, or "times of restitution"? Page 23 ¶ 1, 2
32. வரவிருக்கிற மகிமையான வருடங்கள் அல்லது "திரும்பக்கொடுத்தலின் காலங்கள்" தொடர்பாக பரிசுத்த பவுலின் அறிக்கையோடு பரிணாமக் கொள்கை எவ்வாறு உடன்படும்? **E P. 10 ¶ 2; E P. 11 ¶ 1**

(33) To what three important matters, past, and future, do the Scriptures point us, in explanation of sin, redemption and salvation? Page 24 ¶ 1
33. பாவம், மீட்பு மற்றும் இரட்சிப்பு குறித்து விவரிக்கப்படுகையில், கடந்தகால மற்றும் எதிர்காலம் தொடர்புடைய எந்த மூன்று முக்கியமான காரியங்களை வேதவாக்கியங்கள் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது? **E P. 11 ¶ 2**

(34) When did sin enter the world, or was it always here? Page 24 ¶ 2
34. பாவம் உலகத்தில் எப்பொழுது நுழைந்தது, அல்லது அது எப்போதும் அங்கேயே இருந்ததா? **E P. 12 ¶ 1**

(35) Is it correct or incorrect for us to speak of the world as "children of wrath," and why? Rom 5:8, 9, Eph. 2:3
35. உலகத்தைக் குறித்து "கோபாக்கினையின் பிள்ளைகள்" என்று பேசுவது சரியானதா அல்லது தவறானதா? ஏன்?

(36) Is it correct or incorrect for us to speak of "the Fatherhood of God" to all humanity and of the "brotherhood of all mankind"? John 8:44
36. மனுக்குலம் யாவருக்குமான "தேவனுடைய தகப்பன்துவம்" மற்றும் "அனைத்து மனுக்குலத்தின் சகோதரத்துவம்" என்ற வார்த்தைகளைக் குறிப்பிடுவது சரியானதா (அ) தவறா? யோவான் 8:44

(37) If the relationship of sons of God belongs only to believers, and if such are "brethren" in the true sense, who is "our neighbor," If we are to do "good unto all men as we have opportunity, especially to the household of faith"? Gal. 6:10
37. தேவனுடைய புத்திரரின் உறவுமுறையானது விசுவாசிகளுக்கு மாத்திரமே உரியதானால், மேலும் இப்படிப்பட்டவர்கள் உண்மையான கோணத்தில் "சகோதர சகோதரிகள்" என்பதினால், "நமக்குக்

கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்ய" வேண்டியிருக்க, "நம் அயலான்" யார்?

(38) Has reconciliation, or at-one-ment, yet been completed between God and any of Adam's race? Page 25 ¶ 1
38. தேவனுக்கும், ஆதாமின் சந்ததியினர் யாருக்கேனும் இடையில் ஒப்புரவாக்கப்படுதல் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? **E P. 12 ¶ 2**

(39) What evidences have we that such a reconciliation will ultimately reach beyond the Church of this Age to the race in general? Page 25 ¶ 1, 2
39. இத்தகைய ஒப்புரவாக்கப்படுதல் இந்த யுகத்தின் சபைக்கும் அப்பாற்பட்டு, பொதுவான மனித சந்ததிக்கும் இறுதியில் சென்றடையும் என்பதற்கு நாம் பெற்றிருக்கும் சான்றுகள் என்ன? **E P. 12 ¶ 2; E P. 13 ¶ 1**

(40) Do the Scriptures teach that the Church is so separate from the world that her hopes and ambitions spiritual are not discerned? Page 26 ¶ 1. Matt. 11:27; John 15:15; 1 Cor. 2:11; 1 John 31
40. சபையின் ஆவிக்குரிய நம்பிக்கைகளும், குறிக்கோள்களும் (உலகத்தால்) தெளிவாக உய்த்துணரப்படாததால் அவர்கள் அதிகமாய் உலகத்தினிடமிருந்து பிரிந்திருக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்று வேதவசனங்கள் போதிக்கிறதா? **E P. 13 ¶ 2**

(41) What are the "earnest expectations" of humanity, and when will these be more than realized? Page 26 ¶ 1. Rom. 8:19-23
41. மனுக்குலத்தின் "மிகுந்த ஆவல்கள்" என்ன? மேலும், இவை அவர்கள் உணர்வதற்கும் அதிகமாய் எப்பொழுது காணப்படும்? **E P. 13 ¶ 2**

(42) What great promise did the Lord make, prior to the First Advent of our Lord Jesus, in which are included all the hopes for the Church and the world and which was subsequently elaborated by our Lord and His Apostles? Page 26 ¶ 1
42. நமது ஆண்டவராகிய இயேசுவின் முதலாம் வருகைக்கு முன்னர், சபை மற்றும் உலகத்திற்குரிய சகல நம்பிக்கைகளை உள்ளடக்கினதும், பின்பு நமது ஆண்டவராலும், அவரது அப்போஸ்தலராலும் விளக்கிக் கூறப்பட்டதுமான ஆண்டவர் கொடுத்திட்ட மகா வாக்குத்தத்தம் என்ன? **E P. 13 ¶ 2**

(43) Since "condemnation passed upon all men, because all are sinners," and since God changeth not, what grounds have we for faith or hope as respects the salvation of Adam and his race? Page 26 ¶ 2
43. "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும்" வந்தபடியால், மேலும் தேவன் மாறாதவராக இருக்கிறபடியால், ஆதாம் மற்றும் அவரது சந்ததியினரின் இரட்சிப்பு தொடர்பாக நம்முடைய விசுவாசம் (அ) நம்பிக்கைக்காக நாம் பெற்றிருக்கும் அடித்தளம் என்ன? **E P. 14 ¶ 1**

(44) What difference is there between the Little Flock and the world as respects God's love and its redemption from the curse--the death penalty? Page 26 ¶ 2
44. தேவனுடைய அன்பு மற்றும் மரண தண்டனையாகிய சாபத்திலிருந்து மீட்பு தொடர்புடைய விஷயத்தில் சிறுமந்தை மற்றும் உலகத்திற்கு இடையே காணப்படும் வேறுபாடு என்ன? **E P. 14 ¶ 1**

(45) What inference may properly be drawn from the fact that the Church is referred to as a "first-fruits"? James 118; Rev. 14:4
45. சபை "முதற்பலன்களாக" குறிப்பிடப்படும் காரியத்திலிருந்து எடுக்கப்படக்கூடிய சரியான அனுமானம் என்ன?

(46) Are there two parts to the work of Atonement? If so, name them and describe their operation. Page 27 ¶ 1
46. ஒப்புரவாகுதலின் வேலைக்கு இரண்டு பாகங்கள் உள்ளதா? ஆம் என்றால், அவைகளைப் பெயரிட்டு, அவற்றின் செயல்பாட்டை விவரிக்கவும். **E P. 14 ¶ 2 - E P. 15 ¶ 1**

(47) Are the members of the Little Flock included in the first part of the Atonement work-the reconciliation for iniquity?
47. சிறுமந்தையினர் ஒப்புரவாகுதல் வேலையின் - அதாவது அக்கிரமத்தினின்று ஒப்புரவாகுதல் வேலையின் முதல் பாகத்தில் உள்ளடக்கப்படுகிறார்களா?

(48) Will the Little Flock share with the world in its experiences under the New Covenant? Or will this class be counted "not of the world," but chosen-out ones for association with their Redeemer, as members of the Body of the great Mediator between God and mankind in general? Z. '07, Page I
48. சிறுமந்தையினர், புது உடன்படிக்கையின் கீழ் உலகத்தின் அனுபவங்களோடு பங்குபெறுவார்களா? அல்லது இந்த வகுப்பார் "உலகத்தாரல்லாதவர்களாக" எண்ணப்பட்டு, தங்கள் மீட்பரோடு இணைவதற்கு, அதாவது தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே மகா மத்தியஸ்தராக இருப்பவரின் சரீர அங்கங்களாக இணைவதற்குத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களா?

(49) Does the invitation to the Church to follow the Lord in sacrifice, to drink of His cup of the New Covenant, signify the privilege of joining with our Lord in providing the blood (sacrifice) wherewith the New Covenant will by and by be sealed?
49. பலியில் கர்த்தரைப் பின்பற்றவும், புது உடன்படிக்கைக்குரிய பாத்திரத்தில் பானம்பண்ணவும் சபைக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பானது, புது உடன்படிக்கையினை முத்திரையிடும் இரத்தத்தினை கொடுத்திடுவதற்கு நமது கர்த்தருடன் இணைந்திடும் சிலாக்கியத்தினை குறிக்கின்றதாய் இருக்குமா?

(50) How by nature "we were children of wrath even as others," whence and how does this privilege come to us? "Who hath made us to differ"? and how were we made acceptable as joint-sacrificers with Christ? Page 28 ¶ 1. Rom. 12:1; I Cor. 4:7; Eph. 2:3
50. சுபாவத்தின்படி "நாம் . . . மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாக" இருந்தது எப்போது? எப்போதிலிருந்து மற்றும் எப்படி இந்தச் சிலாக்கியம் நமக்கு வந்தது? "நம்மை விசேஷித்தவர்களாகும்படி செய்கிறவர் யார்"? மேலும், கிறிஸ்துவோடுகூட உடன்-பலிசெலுத்துபவர்களாக நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டோம்? ரோமர் 12:1; 1 கொரி. 4:7; எபேசியர் 2:3. **E P. 16** ¶ **1, 2**

(51) Will the world's justification be instantly or gradually effected? and how? and when? Page 29 ¶ 1
51. உலகத்தின் நீதிமானாக்கப்படுதல் உடனடியாக செயல்படுத்தப்படுமா அல்லது படிப்படியாக செயல்படுத்தப்படுமா? எப்பொழுது? மற்றும் எப்படி? **E P. 16** ¶ **3**

(52) How long a time will the mediations of the New Covenant God-ward require? And how long man-ward? Page 29 ¶ 2
52. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தம், தேவன் தரப்பில் எவ்வளவு காலத்திற்கு அவசியப்படும்? மனதனுக்கு எவ்வளவு காலம் அவசியப்படும்? **E P. 17** ¶ **1**

(53) When did our Lord Jesus become the Head of the world's Mediator? At His birth, or at His baptism, or at His resurrection? I Tim. 2:5, 6
53. நமது ஆண்டவராகிய இயேசு எப்பொழுது உலகத்தின் மத்தியஸ்தரானார்? அவரது பிறப்பின்போதா, (அ) அவரது ஞானஸ்நானத்தின்போதா, (அ) அவரது உயிர்த்தெழுதலின்போதா? 1 தீமோத்தேயு 2:5, 6

(54) When was it that our Lord "**gave** Himself a ransom"? Was it at His consecration? And did He fulfill the giving at Calvary?
54. நமது ஆண்டவர் எப்பொழுது "மீட்கும்பொருளாகத் தம்மை **ஒப்புக்கொடுத்தார்**"? அவரது அர்ப்பணிப்பின்போதா? மேலும், அவர் அதைக் கல்வாரியில் நிறைவேற்றி முடித்தாரா?

(55) When do we join our Lord as members of "His Body"? At birth, at justification, at consecration and receiving of the Spirit, or in the resurrection?
55. "ஆண்டவருடைய சரீரத்தின்" அங்கங்களாக அவரோடு நாம் எப்பொழுது இணைவோம்? பிறக்கும்போதா, நீதிமானாக்கப்படும்போதா, அர்ப்பணித்து பரிசுத்த ஆவியைப் பெறும்போதா, (அ) உயிர்த்தெழும்போதா?

(56) Does "His Resurrection" begin when the Lord accepts our consecration? And is it finished when we experience our final "change"? Phil. 3:7-11
56. கர்த்தர் நம்முடைய அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் தருவாயில் "உயிர்த்தெழுதல்" தொடங்குகிறதா? மேலும், நம்முடைய இறுதி "மாற்றத்தை" அடையும்போது அது முடிவடைகிறதா?

(57) Will the Mediatorial work of Messiah (His Millennial reign) ever have an end? When? Why? What will by that time have been accomplished? Why will it not be prolonged? Page 30 ¶ 1, 2
57. மேசியாவின் மத்தியஸ்த வேலைக்கு (அவரது ஆயிர வருட அரசாட்சிக்கு) முடிவு இருக்கிறதா? எப்பொழுது? ஏன்? அந்நேரத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பது என்ன? அது ஏன் நீடிக்காது? **E P. 17 ¶ 2; E P. 18 ¶ 1**

(58) Accepting Abraham as typifying God, and Isaac as typifying The Christ, and the three wives of Abraham (Sarah, Hagar, and Keturah) as typifying the three great Covenants between God and all from the human family who shall eventually become blest with the full liberty of the sons of God, which represented the "law Covenant"? which the "New Covenant"? and which the original or "Abrahamic Covenant"? Gal. 4.22-31; Jer. 31:31-34
58. ஆபிரகாம் தேவனை அடையாளப்படுத்துவதாகவும், ஈசாக்கு கிறிஸ்துவை அடையாளப்படுத்துவதாகவும், ஆபிரகாமின் மூன்று மனைவிகளான சாராள், ஆகார் மற்றும் கேத்துராள், தேவனுக்கும், இறுதியாக தேவனுடைய புத்திரருக்குரிய முழுச் சுயாதீனத்தோடு ஆசீர்வதிக்கப்படப்போகும் மனுக்குலம் அனைவருக்கும் இடையே காணப்படப்போகும் மூன்று மகா உடன்படிக்கைகளை அடையாளப்படுத்துகிறதாகவும் ஏற்றுக்கொண்டிருக்க, "நியாயப்பிரமாண உடன்படிக்கை" யாரால் அடையாளப்படுத்தப்பட்டது? "புது உடன்படிக்கை" யாரால் அடையாளப்படுத்தப்படுகிறது? மற்றும் "ஆபிரகாமின் உடன்படிக்கை" யாரால் அடையாளப்படுத்தப்படுகிறது?

(59) Is there room for doubt as to which were the children of Agar or Hagar, the people under the Law Covenant?
59. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் உள்ள ஜனங்களான, ஆகாரின் பிள்ளைகள் யார் என்பதில் சந்தேகம் இருக்கிறதா?

(60) Is there room for doubt as to which are the children of Sarah, "the Seed of Abraham according to promise," or children of God under the Original Covenant or Abrahamic Covenant? Gal. 3:16, 17, 4:28; Heb. 13:20; 11:27; Jas. 2:21
60. "வாக்குத்தத்தத்தின்படி ஆபிரகாமின் வித்து" அல்லது "ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் உள்ள தேவனுடைய ஜனங்களான" சாராளின் பிள்ளைகள் யார் என்பதில் சந்தேகம் இருக்கிறதா?

(61) Is there room for doubt that the "New Covenant" cannot have been the oldest or the original and "Abrahamic Covenant," nor the "Law Covenant" added four hundred and thirty years after it, but must be the one typified by Keturah, Abraham's last wife, accepted after the death of Sarah? (Gen. 25:1-4) Is there any doubt that the promise of a New Covenant and its effects belong to the future? Jer. 31:27-34
61. "புது உடன்படிக்கை" என்பது பழமையான (அ) ஆதியில் கொடுக்கப்பட்ட "ஆபிரகாமின் உடன்படிக்கை" ஆகவோ, அல்லது நானூற்று முப்பது வருடங்களுக்குப் பின்னர் கொடுக்கப்பட்ட "நியாயப்பிரமாண உடன்படிக்கை" ஆகவோ இருந்திருக்க முடியாது, மாறாக சாராளின் மரணத்திற்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆபிரகாமின் கடைசி மனைவியாகிய கேத்துராள் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் ஏதேனும் உள்ளதா? (ஆதியாகமம் 25:1-4) புது உடன்படிக்கையின் வாக்குத்தத்தமும், அதன் பலன்களும் எதிர்காலத்திற்குரியது என்பதில் சந்தேகம் ஏதேனும் உள்ளதா? எரேமியா 31:27-34.

(62) Is it not the New Covenant that the Apostle refers to in Rom. 11:27? If not, what Covenant is signified?
62. ரோமர் 11:27-ஆம் வசனத்தில் அப்போஸ்தலர் குறிப்பிடுவது புது உடன்படிக்கை பற்றினதில்லையா? இல்லையெனில், அங்குக் குறிப்பிடப்படும் உடன்படிக்கை என்ன?

(63) How could Israel partake of restitution except under the New Covenant? and how could this signify their obtaining mercy through the Church's mercy, except as the Church as the Spiritual Seed of the original promise (Gal. 3:29) becomes partaker with her Lord in the **sealing** of the New Covenant? Rom. 11:26, 31. Pages 30, 31, 32

63. புது உடன்படிக்கையின் கீழ் அல்லாமல் இஸ்ரயேல் எவ்வாறு திரும்பக்கொடுத்தலில் பங்குகொள்ளக்கூடும்? மேலும், ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் ஆவிக்குரிய வித்தாகிய சபை (கலா. 3:29) தனது ஆண்டவரோடுகூட புது உடன்படிக்கையை **முத்தரிப்பதில்** பங்குகொண்டாலே, சபையினுடைய இரக்கத்தின் மூலமாக அவர்கள் இரக்கம் பெற்றுவார்கள் என்பதை எவ்வாறு அடையாளப்படுத்தக்கூடும்? ரோமர் 11:26, 31. **E P. 18, 19, 20**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் V மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 2

## *''ஒப்புரவாகுதலின் ஆசிரியர்''*

(1) Was the arrangement for an Atonement for human sin an afterthought or an original purpose? Who was the Author of the arrangement? Has He accomplished His purposes? Page 33 ¶ 1

1. மனுஷனுடைய பாவத்திற்கான ஒப்புரவாகுதலின் ஏற்பாடானது பாவஞ்செய்யப்பட்ட பிறகு அதுபற்றி ஏற்பட்ட எண்ணமா அல்லது ஆதியிலிருந்த நோக்கமா? இந்த ஏற்பாட்டின் ஆசிரியர் யார்? அவர் தமது நோக்கங்களை நிறைவேற்றியிருக்கிறாரா? **E P. 23 ¶ 1**

(2) Are the prevalent views on the relations between the Father and the Son correct? If not, wherein is the error? Page 33 ¶ 2

2. பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையிலான உறவுகள் குறித்த விஷயத்தில் பெரும்பாலும் நிலவும் கருத்துக்கள் சரியானதா? இல்லையெனில், தவறு எதில் இழைக்கப்பட்டிருக்கிறது? **E P. 24 ¶ 1**

(3) State the proper view of the question. What is God's relationship to the plan of Atonement? And what Christ's? Page 34

3. கேள்வியின் சரியான பார்வையைக் குறிப்பிடவும். ஒப்புரவாகுதலின் திட்டம் குறித்த விஷயத்தில் தேவனின் உறவு நிலை என்ன? மற்றும் கிறிஸ்துவின் உறவு நிலை என்ன? **E P. 25 ¶ 1, 2**

(4) State the error of the view that our Lord Jesus stands weeping for sinners and importuning the Father for their forgiveness and, as the hymn declares, "Five bleeding wounds He shows, They intercede for me."

4. "அவருடைய ஐந்து இரத்தக் காயங்கள், எனக்காகப் பரிந்துபேசுகின்றன" என்று துதிபாடல் தெரிவிப்பதுபோன்று, நமது ஆண்டவராகிய இயேசு பாவிகளுக்காக கண்ணீர் விட்டவராகவும், அவர்களது மன்னிப்புக்காக பிதாவிடம் வேண்டிக்கொண்டிருக்கிறவராகவும் இருக்கிறார் என்ற பார்வையில் காணப்படும் தப்பறையைக் குறிப்பிடவும்.

(5) Let us have five texts on the subject from the Apostolic writings, with a brief explanation in each case showing how they apply. Page 35

5. அப்போஸ்தலருடைய எழுத்துக்களிலிருந்து இவ்விஷயத்தைப் பற்றின ஐந்து வசனப்பகுதிகளை நாம் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு வசனத்திலும், அவை எவ்வாறு பொருந்துகின்றன என்பதைக் காட்டும் ஒரு சுருக்க விளக்கத்துடன் எடுத்துக்கூறவும்.

(6) Quote from our Lord Jesus' own words on this subject eleven texts and show briefly the application of each. Page 35, last par., and 36

6. இந்த விஷயத்தைக் குறித்து நம்முடைய ஆண்டவராகிய இயேசு தமது சொந்த வாய்மொழியில் பேசின வார்த்தைகள் அடங்கின பதினொரு வசனங்களை மேற்கோள்காட்டி, அவை ஒவ்வொன்றின் பொருத்தத்தைச் சுருக்கமாகக் காண்பிக்கவும். **E P. 27 ¶ 2-12**

(7) What does the "scroll" of Rev. 5 represent? Whose was it originally and in whose possession was it when Christ died? Page 36, last par.

7. வெளிப்படுத்தல் 5-ஆம் அதிகாரத்தின் (புஸ்தக) "சுருள்" எதைக் குறிக்கும்? முதலில் அது யாருடையதாக இருந்தது? மற்றும் கிறிஸ்து மரித்தபோது இது யாருடைய வசமாயிற்று? **E P. 28 ¶ 1**

(8) What is signified by the giving of the "scroll" to the Lamb of God, for Him to open it and fulfill its provisions? Page 37

8. புஸ்தகத்தைத் திறக்கவும், அதில் எழுதப்பட்டவைகளை நிறைவேற்றவும், (புஸ்தக) "சுருளானது" தேவ ஆட்டுக்குட்டியானவருக்குக் கொடுக்கப்படுவதன் மூலம் அடையாளப்படுத்துவது என்ன? **E P. 28 ¶ 2**

(9) Did that "scroll" represent the Abrahamic promise or Oath-bound Covenant? Heb. 6:17-20
9. (புஸ்தக) "சுருளானது" ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தைக் குறிக்குமா அல்லது வாக்குத்தத்த உடன்படிக்கையைக் குறிக்குமா?

(10) Is it because of the Father's honoring of His Only Begotten Son that we as well as angels should honor Him? Page 37
10. தம்முடைய ஒரே பேறான குமாரனை பிதா கனம்பண்ணினதினாலேயா, நாமும் அதேசமயம் தூதர்களும் அவரைக் கனம்பண்ண வேண்டும்? **E P. 28 ¶ 2**

(11) If the Scroll is the Covenant, how is our Lord Jesus the Servant or "Messenger of the Covenant"? And how does He fulfill this service of the Covenant?
11. (புஸ்தக) சுருள் என்பது உடன்படிக்கை என்றால், நமது ஆண்டவராகிய இயேசு ஊழியக்காரராக அல்லது "உடன்படிக்கையின் தூதுவனாக" இருப்பது எப்படி? மேலும், இந்த உடன்படிக்கையின் ஊழியத்தை அவர் எவ்வாறு நிறைவேற்றினார்?

(12) Has Christ through His Spirit, the Holy Spirit, made known to some the "hidden mystery' – "Christ in you the hope of Glory"? Has He shown us "things to come"? –Rev. 1:1; 4:1; John 16:13-15; Psa. 16:11; 25:14
12. தம்முடைய ஆவியினாலே, அதாவது பரிசுத்த ஆவியினாலே, "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்" என்ற "மறைவான இரகசியத்தை" சிலர் அறியும்படி கிறிஸ்து செய்திருக்கிறாரா? "வரப்போகிற காரியங்களை" அவர் நமக்குக் காண்பித்திருக்கிறாரா? - வெளிப்படுத்தல் 1:1; 4:1; யோவான் 16:13-15; சங்கீதம் 16:11; 25:14.

(13) What Divine law was illustrated in the exaltation of our Lord? Page 38 ¶ 1
13. நமது ஆண்டவருடைய உயர்த்தப்படுதலில் எடுத்துக்காட்டப்பட்ட தெய்வீகச் சட்டம் என்ன? **E P. 30 ¶ 1**

(14) Cite some Scriptures showing that our Lord's exaltation was dependent on His faithfulness to the Father's will, and that His exaltation is a proof of His faithfulness even unto death. Page 38 ¶ 2
14. நமது ஆண்டவருடைய உயர்த்தப்படுதலானது பிதாவின் சித்தத்திற்கு அவர் உண்மையுள்ளவராக இருந்ததன் அடிப்படையிலானது என்றும், அவருடைய உயர்த்தப்படுதலானது மரணபரியந்தமுமான அவரது உண்மைக்கான நிரூபணமாக உள்ளது என்றும் காண்பிக்கக்கூடிய சில வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 30 ¶ 2**

(15) What was our Lord's reward and what is the proof thereof? Page 39
15. நமது ஆண்டவருக்கான பரிசு என்னவாக இருந்தது? அதற்கான நிரூபணம் என்ன? **E P. 31 ¶ 1**

(16) Give the meaning of the name Jehovah. Page 40
16. யேகோவா எனும் நாமத்தின் பொருளைக் கொடுக்கவும். **E P. 32 ¶ 1**

(17) Cite some Scriptures and elucidate them in proof of the heavenly Father's excellent glory and honor and dignity and power. Pages 40 and 41
17. பரலோகப் பிதாவின் மிகச் சிறந்த மகிமை, கனம், உன்னத நிலை மற்றும் வல்லமை ஆகியவற்றிற்குச் சான்றாக இருக்கக்கூடிய வேதவசனங்கள் சிலவற்றை மேற்கோள்காட்டி, அவைகளை விளக்கிக்கூறவும். **E P. 33 ¶ 1 - E P. 34 ¶ 1**

(18) To whom is the great name of Jehovah applied in the Bible? Page 41 ¶ 2
18. வேதாகமத்தில் யேகோவா எனும் கனம்பொருந்தின நாமமானது யாருக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது? **E P. 34 ¶ 2**

(19) By many it is supposed that the name Jehovah belongs also to our Lord Jesus. Is this correct or not? Page 42 ¶ 1
19. யேகோவா எனும் நாமமானது நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கும் பொருந்தும் என்று அநேகரால் நம்பப்படுகிறது. இது சரியா (அ) இல்லையா? **E P. 35 ¶ 1**

(20) How about the term **Jehovah-Tsidkenu**, found in Jeremiah 23:5, 6, apparently applicable to our Lord Jesus? Explain its significance and application. Page 42 ¶ 2, 3
20. எரேமியா 23:5, 6-ஆம் வசனங்களில் காணப்படும் **யேகோவா-ஜிட்கனோ** என்ற வார்த்தை, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கு எவ்வாறு பொருந்தும்? அதன் முக்கியத்துவத்தையும், பயன்பாட்டையும் விளக்கிக்கூறவும். **E P. 35 ¶ 2, 3**

(21) Are other Hebrew words used in the Bible showing compounds with the word Jehovah? Page 43 ¶ 1
21. வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மற்ற எபிரெய வார்த்தைகளானது யேகோவா என்ற வார்த்தையுடன் இணைந்து காண்பிக்கிறதா? **E P. 36 ¶ 2**

(22) Is the fact that our Lord appeared amongst men before He was "made flesh" (before He assumed the human nature) a justification for the application of the Father's exclusive name, Jehovah, to Him? Page 43 ¶ 2, 3
22. நம்முடைய ஆண்டவர் "மாம்சம் ஆக்கப்படுவதற்கு" முன் (அதாவது, அவர் மனுஷீக சுபாவத்தில் வருவதற்கு முன்) மனுஷர் மத்தியில் வெளிப்பட்டார் எனும் உண்மையானது, பிதாவுக்கே உரித்ததான நாமமாகிய யேகோவா என்ற நாமம் அவருக்குப் பொருந்தும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதா? **E P. 36 ¶ 3; E P. 37 ¶ 1**

(23) The Apostle styles our Lord Jesus "The Lord of Glory" (I Cor. 2:8); and in Psa. 24:7-10 Jehovah is mentioned as "King of Glory." Does this justify the thought Jesus is Jehovah? Page 44 ¶ 1
23. அப்போஸ்தலன் நமது ஆண்டவராகிய இயேசுவை "மகிமையின் கர்த்தர்" (1 கொரிந்தியர் 2:8) என்று குறிப்பிடுகிறார்; சங்கீதம் 24:7-10-ஆம் வசனங்களில், பரலோகப் பிதா "மகிமையின் இராஜா" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார். இது, இயேசுவே யேகோவா தேவன் (பரலோகப் பிதா) என்ற கருத்தை நிரூபிக்கின்றதா? **E P. 38 ¶ 1**

(24) A fifth proof that our Lord Jesus is Jehovah is claimed from the comparison of Isa. 2:2-4 with Micah 4:1-3. What is the proper answer? Page 44 ¶ 2, 3
24. நம்முடைய ஆண்டவராகிய இயேசுவே யேகோவா தேவன் என்பதற்கான ஐந்தாவது ஆதாரமாக, ஏசாயா 2:2-4-ஆம் வசனங்களை மீகா 4:1-3-ஆம் வசனங்களுடன் ஒப்பீடுசெய்து கூறப்படுகிறது. இதற்கான சரியான பதில் என்ன? **E P. 38 ¶ 2, 3**

(25) What is the proper thought respecting the sixth objection, based on a comparison of Psa. 90:1, 2 and Micah 5:2? Page 45 ¶ 1, 2, 3
25. சங்கீதம் 90:1, 2-ஆம் வசனங்களையும், மீகா 5:2-ஆம் வசனத்தையும் ஒப்பீடுசெய்வதன் அடிப்படையில், ஆறாவது எதிருரை பற்றின சரியான கருத்து என்ன? **E P. 39 ¶ 1-3**

(26) What is the seventh claim on this subject and how should we understand Isaiah 25:6-9? Page 45, last par., and 46 ¶ 1
26. இவ்விஷயத்தின் மீதான ஏழாவது கூற்று என்ன? மற்றும் ஏசாயா 25:6-9-ஆம் வசனங்களை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்? **E P. 40 ¶ 1, 2**

(27) Consider the eighth text offered in proof--Isa. 9:6. Do the titles, Wonderful, Counselor, Mighty God, Everlasting Father and Prince of peace prove that Jehovah is another proper name or title for our Lord Jesus? Page 46 ¶ 2, 3
27. ஆதாரமாக வழங்கப்பட்ட எட்டாவது வசனத்தை (ஏசாயா 9:6) கவனிக்கவும். அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா மற்றும் சமாதானப் பிரபு போன்ற சிறப்புப்பெயர்களானது, யேகோவா என்பது நமது ஆண்டவராகிய இயேசுவுக்கான மற்றொரு சரியான பெயர் (அ) சிறப்புப்பெயர் என்பதை நிரூபிக்கிறதா? **E P. 40 ¶ 3; E P. 41 ¶ 1**

(28) Do the Scriptures which refer to Jesus as the Arm of Jehovah prove that Jehovah is the proper title for our Lord Jesus? If not, why not? Page 46 ¶ 4 to 47 ¶ 5
28. யேகோவாவின் கரம் என்று இயேசுவைக் குறிப்பிடும் வேதவசனங்கள், யேகோவா என்ற நாமமே நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கான சரியான சிறப்புப்பெயர் என்பதை நிரூபிக்கிறதா? இல்லையெனில், ஏன் இல்லை? **E P. 41 ¶ 2 - E P. 42 ¶ 3**

(29) Examine the tenth proof-text--Isa. 6:1--and demonstrate what is and what is not its true signification. Page 47, last two par., and Page 48
29. பத்தாவது ஆதாரமான வசனமாகிய ஏசாயா 6:1-ஆம் வசனத்தை ஆராய்ந்துபார்த்து, அதன் உண்மையான முக்கியத்துவம் என்ன என்பதையும், எது உண்மையான முக்கியத்துவம் அல்லாதது என்பதையும் தெளிவுபடுத்திக்காட்டவும். **E P. 42 ¶ 4 - E P. 44 ¶ 1**

(30) How should we view Isa. 8:13, 14? Page 49 ¶ 1
30. ஏசாயா 8:13, 14-ஆம் வசனங்களை நாம் எவ்வாறு கண்ணோக்குவது? **E P. 44 ¶ 2**

(31) Proof-text number 12 is Psa. 110. Examine it and demonstrate the truth respecting its teachings. Page 49 ¶ 2, 3, 4
31. பன்னிரண்டாவது ஆதார வசனப்பகுதியான 110-ஆம் சங்கீதத்தை ஆராய்ந்துபார்த்து, அதன் போதனைகள் தொடர்பான சத்தியத்தைத் தெளிவுபடுத்திக்காட்டவும். **E P. 45 ¶ 1-3**

(32) Since our Lord Jesus is styled the "Great Teacher," and since it is written, "All thy children shall be taught of Jehovah" (Isa. 54:13), is or is not this a proof that our Lord Jesus is there referred to as Jehovah by name? Pages 50-54
32. நம்முடைய ஆண்டவராகிய இயேசு "மாபெரும் போதகர்/வல்லமையுள்ள போதகர்" என்று குறிப்பிடப்படுவதாலும், "உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்று எழுதப்பட்டிருப்பதாலும் (ஏசாயா 54:13), நம்முடைய ஆண்டவராகிய இயேசுவே யேகோவா என்ற நாமத்தினால் குறிப்பிடப்படுகிறார் என்பதற்கான ஆதாரமாக இது காணப்படுகிறதா? அல்லது இல்லையா? **E P. 45 ¶ 4 - E P. 51 ¶ 1**

(33) Find and read one or more Scripture texts containing the word **Trinity**. Page 54 ¶ 1
33. **திரித்துவம்** என்ற பெயரை உள்ளடக்கியுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வசனப்பகுதிகளைக் கண்டறிந்து வாசிக்கவும். **E P. 51 ¶ 2**

(34) Is it supposable that the doctrine of the Trinity is taught in the Bible and yet no such word can be found in it? Page 54 ¶ 1
34. திரித்துவ உபதேசம் வேதத்தில் கற்பிக்கப்பட்டிருந்தபோதிலும், அத்தகைய ஒரு வார்த்தையாவது வேதாகமத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு வாய்ப்புள்ளதா? **E P. 51 ¶ 2**

(35) Quote the strongest text in the Bible which seemingly implies that there are three Gods instead of one. Compare I John 5:7 with Deuteronomy 5:6-11. Page 56 ¶ 2
35. ஒரே தேவனுக்குப் பதிலாக மூன்று தேவர்கள் உண்டு என்பதாகச் சுட்டிக்காட்டக்கூடிய, வேதத்தில் உள்ள வலுவான வசனப்பகுதியை மேற்கோள்காட்டவும். 1 யோவான் 5:7-ஆம் வசனத்தை உபாகமம் 5:6-11-ஆம் வசனங்களுடன் ஒப்பிடவும்.

(36) What is the teaching of Trinitarianism-that there is one God who sometimes assumes three distinct manifestations, or three God's equal in glory and honor? Did you ever know anybody able or willing to give a positive answer to this question? Page 54 ¶1
36. **ஒரே** தேவன் உண்டு, அவர் சிலசமயங்களில் மூன்று தனித்துவமான வெளிப்பாடுகளை எடுத்துக்கொள்வார் என்றோ அல்லது மூன்று தேவர்கள் உண்டு, மூவரும் சமநிலை மகிமையும், கனமும் உடையவர்கள் என்றோ கருதப்படக்கூடிய - திரித்துவ உபதேசம் (Trinitarianism) என்பது என்ன? இக்கேள்விக்கான உறுதியான பதிலைக் கொடுக்க முடிபவர்களையோ அல்லது கொடுக்க வாஞ்சிப்பவர்கள் எவரையேனும் எப்போதாகிலும் நீங்கள் அறிந்ததுண்டா? **E P. 51 ¶ 2**

(37) Explain the force of the Trinity doctrine in the passage, "The **head** of the woman is the man, the head of the man is Christ, and the Head of Christ is God." (I Cor. 11:3) Page 55 ¶ 1
37. "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் **தலையாயிருக்கிறானென்றும்**, கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும்..." (1 கொரிந்தியர் 11:3) காணப்படும் வசனப்பகுதியில் உள்ள திரித்துவ கோட்பாட்டை விளக்கிக்கூறவும். **E P. 52 ¶ 1**

(38) What objection can be urged against I John 5:7? Does it teach three Gods in one person, or three distinct Gods? Page 55 ¶ 2
38. 1 யோவான் 5:7-ஆம் வசனத்துக்கு எதிராக வலியுறுத்தப்படும் எதிருரை என்ன? இது, ஒரு நபருக்குள் மூன்று தேவர்கள் இருப்பதாகவோ, அல்லது மூன்று தனித்துவமான தேவர்கள் இருக்கிறார்கள் என்றோ கற்பிக்கிறதா? **E P. 53 ¶ 1**

(39) Were the translators of our Common Version Bible to blame for the insertion of the spurious text? Why not? Page 56 ¶ 1
39. மூலப்பிரதியில் இல்லாத பகுதிகளைச் சேர்த்ததற்காக நமது பொது மொழிப்பெயர்ப்பு வேதாகமத்தை மொழிப்பெயர்த்தவர்கள் குற்றஞ்சாட்டப்படலாமா? ஏன் இல்லை? **E P. 54 ¶ 1**

(40) Do scholars of all denominations acknowledge that the greater part of I John 5:7 is not a part of the original Bible, but a spurious addition without right of authority? Page 56 ¶ 1
40. 1 யோவான் 5:7-ஆம் வசனத்தின் பெரும்பகுதியானது, மூலப்பிரதியில் இல்லாதப் பகுதி என்றும், எவ்வித அதிகாரமின்றி சேர்க்கப்பட்ட பகுதி என்றும் அனைத்து சபை பிரிவுகளின் வேத வல்லுநர்களும் ஒத்துக்கொள்கிறார்களா? **E P. 54 ¶ 1**

(41) Which words in that text are spurious?
41. அந்த வசனத்தில், சேர்க்கப்பட்டவைகளாகக் கருதப்படும் வார்த்தைகள் என்ன?

(42) Would the passage make as good sense or better if the interpolation were omitted? Read the passage corrected. Page 56 ¶ 2
42. இடையில் சேர்க்கப்பட்ட பகுதியை தவிர்த்தோமானால், அந்த வசனப்பகுதியானது நல்ல அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்குமா? திருத்தப்பட்ட பகுதியை வாசிக்கவும். **E P. 55 ¶ 1**

(43) Mention some of the versions of the New Testament that omit these words and cite the comment by the "Improved Version," also Lang's comment. Page 57
43. இவ்வார்த்தைகளை நீக்கிவிட்ட புதிய ஏற்பாட்டு மொழிப்பெயர்ப்புகள் சிலவற்றைக் குறிப்பிடவும். மேலும், "இம்ப்ரூவ்டு மொழிப்பெயர்ப்பினால்" கொடுக்கப்பட்ட விளக்கவுரையையும், லாங் என்பவர் எழுதிய வேதாகம விளக்கவுரையையும் மேற்கோள்காட்டவும். **E P. 55 ¶ 2 - E P. 56 ¶ 3**

(44) Name some prominent Bible scholars who have pronounced the passage a spurious interpolation. Page 57, last par.
44. அந்தப் பகுதியானது தவறாகக் கூட்டிச்சேர்க்கப்பட்டதாக சாட்சிபகர்ந்த முக்கியமான வேத வல்லுநர்கள் சிலரைப் பெயரிடவும். **E P. 56 ¶ 4**

(45) Quote Dean Alford's words. Page 58 ¶ 1
45. டீன் ஆல்போர்டு என்பவரின் கூற்றை மேற்கோள்காட்டவும். **E P. 56 ¶ 5**

(46) Quote Dr. C. Tischendorf on the subject. Page 58 ¶ 2
46. இந்தத் தலைப்பின்மீது டாக்டர் C. டிஸ்சென்டர்ப் என்பவரின் கூற்றை மேற்கோள்காட்டவும். **E P. 56 ¶ 6**

(47) Quote Prof. T. B. Wolsey. Page 58 ¶ 3
47. பேராசிரியர் T. B. வால்சே என்பவரின் கூற்றை மேற்கோள்காட்டவும். **E P. 56 ¶ 7**

(48) Quote Dr. Adam Clarke on this passage. Page 58 ¶ 4
48. இந்தப் பகுதியைக் குறித்து டாக்டர் ஆடம் கிளார்க் என்பவரின் கூற்றை மேற்கோள்காட்டவும். **E P. 56 ¶ 8**

(49) Quote John Wesley on this subject. Page 58, last par.
49. இந்தத் தலைப்பைக் குறித்து ஜான் வெஸ்லியின் கூற்றை மேற்கோள்காட்டவும். **E P. 57 ¶ 1**

(50) Why was there more excuse for misunderstanding on this matter a century or two ago than now? Page 58, last par
50. இந்த நூற்றாண்டைப் பார்க்கிலும், ஒன்று அல்லது இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவ்விஷயத்தைக் குறித்த தவறான புரிந்துகொள்ளுதலுக்காக அதிகக் காரணங்கள் இருந்தது ஏன்? **E P. 57 ¶ 1**

(51) In what sense is there a unity or oneness between the Father and the Son? Page 59 ¶ 1
51. பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே எந்தக் கோணத்தில்/அர்த்தத்தில் ஒருமைப்பாடு (அ) ஒற்றுமை காணப்படுகிறது? **E P. 57 ¶ 2**

(52) Are the Father and the Son spoken of in the Scriptures as equal, in the sense that neither has nor ever had a superiority over the other? Page 59 ¶ 1
52. பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்று வசனங்களில் சொல்லப்பட்டிருப்பது, ஒருவர் இன்னொருவரைவிட ஒருபோதும் உயர்ந்தவராக இருந்திருக்கவில்லை என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? **E P. 57 ¶ 2**

(53) What is implied in the terms Father and Son? Page 60 ¶ 1
53. பிதா மற்றும் குமாரன் என்ற வார்த்தைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது என்ன? **E P. 59 ¶ 1**

(54) Are all things **of** the Son and all things **by** the Father, or **vice versa**, and what does this statement imply? Page 60 ¶ 1
54. சகலமும் குமார**னுடையதாகவும்,** பிதாவைக் **கொண்டு** உண்டானதாகவும் இருக்கிறதா? அல்லது **நேர்மாறாக** இருக்கிறதா; மேலும் இவ்வாக்கியம் சுட்டிக்காட்டுவது என்ன?

(55) The doctrine of the Trinity is called a mystery. Why? In what sense is it mysterious? Page 60 ¶ 2
55. திரித்துவ உபதேசமானது ஓர் இரகசியம் என்று அழைக்கப்படுவது ஏன்? எந்த விதத்தில் அது இரகசியமானது? **E P. 59 ¶ 2**

(56) Would Satan over-honor Christ? Why, then, would he propagate this error? and what has he effected? Page 61 ¶ 1, 2
56. கிறிஸ்துவை சாத்தான் அளவுமீறின கனத்திற்குரிய ஸ்தானத்தில் முன்வைப்பாரா? அப்படியானால், அவர் ஏன் இந்தத் தப்பறையை பரவச் செய்தார்? மற்றும் அதனால் அவருக்கு என்ன பலன் உண்டாயிற்று? **E P. 60 ¶ 1; E P. 61 ¶ 1**

(57) How old is the error on this subject, and how did it get so firm a footing in Christendom? Pages 62, 63
57. இவ்விஷயம் குறித்த தப்பறையானது எவ்வளவு காலமாக இருந்துவருகிறது? மேலும், இது கிறிஸ்தவமண்டலத்தில் இவ்வளவு உறுதியாக நிலைபெற்றது எப்படி? **E P. 62 ¶ 1 - E P. 63 ¶ 3**

(58) Was faith in the unreasonable and unscriptural made a test of orthodoxy and its disbelief threatened with eternal torment and was the error thus fastened? Page 64
58. காரண காரியத்திற்கு உட்படாததும், வசனத்தில் சொல்லப்படாததுமான போதனைகளில் விசுவாசம் வைப்பது மரபுவழியினருக்கு (Orthodoxy) ஒரு சோதனையாக அமைந்ததா? மற்றும் இப்போதனைகளை விசுவாசியாதவர்கள் நித்திய வேதனை அளிக்கப்படும் என்று அச்சுறுத்தப்பட்டனரா? மற்றும் இப்படியாக இந்தத் தப்பறை உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதா? **E P. 64 ¶ 1; E P. 65 ¶ 1**

(59) Is the Hebrew name Jehovah properly shown in our common Bibles? How many times does it occur? How many times is it correctly rendered and how many times incorrectly? Page 65, last par.
59. யேகோவா என்ற எபிரெய பெயரானது நம்முடைய பொது மொழிப்பெயர்ப்பு வேதாகமங்களில் சரியாகக் காண்பிக்கப்பட்டுள்ளதா? அது எத்தனை முறை வந்துள்ளது? அது எத்தனை முறை சரியாக மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கிறது? எத்தனை முறை தவறாக மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கிறது? **E P. 66 ¶ 2**

(60) What motive seems to have led to this kind of hiding of the Truth? Page 65, footnote
60. இப்படி சத்தியத்தை மறைத்துவைப்பதற்கான உள்நோக்கம் என்ன? அடிக்குறிப்பு (தமிழ் தொகுதியில் மொழிப்பெயர்க்கவில்லை)

(61) What about the word **elohim**--how frequently does it occur? What does it signify, and to whom is it applied? Page 66 ¶ 3
61. **எலோஹிம்** என்ற வார்த்தை குறித்த விஷயத்தில்--அது எத்தனை முறை தொடர்ச்சியாக வந்துள்ளது? அது அடையாளப்படுத்துவது என்ன? மற்றும் அது யாருக்குப் பயன்படுத்தப்பட்டது? **E P. 66** ¶ **5**

(62) What Hebrew words are used as titles for our Lord Jesus? Page 66 ¶ 4
62. நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கான சிறப்புப் பெயர்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தைகள் என்ன? **E P. 67** ¶ **1, 2**

(63) When **elohim**, the Hebrew word usually translated God, is used in Psa. 8:5 and translated **angels**, is it a mistaken translation or not? Prove it. Page 67 ¶ 2
63. **எலோஹிம்** என்ற எபிரெய வார்த்தையானது வழக்கமாக தேவன் என்று மொழிப்பெயர்க்கப்படும்போது, சங்கீதம் 8:5-ஆம் வசனத்தில் பயன்படுத்தப்பட்ட அந்த எபிரெய வார்த்தையானது **தேவதூதர்** என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருப்பது தவறான மொழிப்பெயர்ப்பா அல்லது இல்லையா? நிரூபிக்கவும். **E P. 67** ¶ **4**

(64) Is the Hebrew word **elohim**, usually translated God, ever applied in the Scriptures to the heathen or false gods? If so, how many times? Give some illustrations. Page 67 ¶ 3 and on
64. பொதுவாக தேவன் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள **எலோஹிம்** என்ற எபிரெய வார்த்தையானது, வேதவசனங்களில் எங்காவது அஞ்ஞான மார்க்கத்தின் தேவர்களுக்கோ அல்லது பொய்யான தெய்வங்ளுக்கோ பயன்படுத்தப்பட்டுள்ளதா? அப்படியானால், எத்தனை முறை? எடுத்துக்காட்டுகள் சிலவற்றைக் கொடுக்கவும். **E P. 68 - E P. 69** ¶ **2**

(65) Is this same word **elohim** ever applied in the Scriptures to men in olden times? If so, give illustrations. Page 68 ¶ 3 - 8
65. **எலோஹிம்** என்ற அதே வார்த்தையானது வசனங்களில் எங்காவது பழைய ஏற்பாட்டுக்கால மனுஷர்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? அப்படியானால், உதாரணங்கள் கொடுக்கவும். **E P. 69** ¶ **3 - E P. 70** ¶ **1**

(66) Is this word **elohim** ever used prophetically in reference to the saints of this Gospel Age? If so, give quotation and explain. Page 68 ¶ 9, 10 and foot-note Page 69
66. **எலோஹிம்** என்ற இந்த வார்த்தையானது இந்தச் சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களைக் குறிக்கும்படியாக தீர்க்கதரிசனங்களில் எங்காவது பயன்படுத்தப்பட்டுள்ளதா? அப்படியானால், மேற்கோள்காட்டி விளக்கவும். **E P. 70** ¶ **2-4**

(67) Is **elohim** otherwise rendered in the Old Testament? Page 69 ¶ 1
67. **எலோஹிம்** என்ற வார்த்தை, பழைய ஏற்பாட்டில் வேறு வார்த்தைகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதா? **E P. 71** ¶ **2**

(68) What are the facts respecting the terms God and Lord in the New Testament? Give illustrations. Page 69 ¶ 2, and Page 70
68. புதிய ஏற்பாட்டில் தேவன் மற்றும் கர்த்தர் என்ற வார்த்தைகள் குறித்த உண்மைகள் என்ன? உதாரணங்கள் கொடுக்கவும். **E P. 71** ¶ **3 - E P. 73** ¶ **6**

(69) What about the word **Godhead** of the New Testament-how many times does it occur, and is it always from the same Greek word? Page 71 ¶ 4
69. புதிய ஏற்பாட்டின் **தேவத்துவம்** என்ற வார்த்தை குறித்த காரியம் என்ன - அது எத்தனை முறை கொடுக்கப்பட்டுள்ளது, மற்றும் அவை அனைத்தும் ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததா? **E P. 73** ¶ **7**

(70) What is the ordinarily understood meaning of this word **Godhead**, and is it the proper thought of any of the three Greek words used?
70. **தேவத்துவம்** என்ற இந்த வார்த்தையின் சாதாரணமாகப் புரிந்துகொள்ளப்பட்ட அர்த்தம் என்ன? மேலும், இது பயன்படுத்தப்பட்ட மூன்று கிரேக்க வார்த்தைகளில் ஏதேனும் ஒன்றின் சரியான கருத்தாக உள்ளதா?

(71) Give the Greek words mistranslated **Godhead** and show the meaning of each. Page 71 ¶ 5
71. **தேவத்துவம்** என்று தவறாக மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள மற்ற கிரேக்க வார்த்தைகளைக் கொடுத்து, அவை ஒவ்வொன்றின் அர்த்தத்தையும் காண்பிக்கவும். **E P. 74** ¶ **1-3**

(72) Did the fact that Jesus was "worshiped" by His disciples and others, and the fact that He received such worship without protest, prove that He was Jehovah, His own Father?
72. இயேசு தம்முடைய சீஷர்களாலும், மற்றவர்களாலும் "தொழுதுகொள்ளப்பட்டார்" என்ற காரியமும், அப்படிப்பட்ட தொழுதுகொள்ளுதலை மறுப்புத்தெரிவிக்காமல் அவர் ஏற்றுக்கொண்டார் என்ற காரியமும், அவர் யேகோவா தேவனாக இருந்தார் என்பதற்கு, அதாவது அவருடைய சொந்த பிதாவாகிய தேவனாக இருந்தார் என்பதை நிரூபிக்கிறதா?

(73) Prove the answer by Scriptural citations. Pages 72, 73
73. வேதவசன மேற்கோள் மூலம் பதிலை நிரூபிக்கவும். **E P. 74** ¶ **4 - E P. 78** ¶ **1**

(74) Our Lord Jesus said explicitly, "I and My Father **are** one." (John 10:30) Does this prove that He was both Father and Son, or that the one person filled these two offices? Page 75 ¶ 1, 2
74. நம்முடைய ஆண்டவராகிய இயேசு, "நானும் பிதாவும் ஒன்றா**யிருக்கிறோம்**" என்று வெளிப்படையாகக் கூறினார். (யோவான் 10:30) இது, அவரே பிதாவாகவும் குமாரனாகவும் இருந்தார் என்பதை நிரூபிக்கிறதா, அல்லது ஒரு நபர் இந்த இரண்டு ஸ்தானங்களை நிரப்பினார் என்பதாக நிரூபிக்கிறதா? **E P. 78** ¶ **2 - E P. 79** ¶ **1**

(75) When our Lord prayed for His followers, "that they **all** may be **one**" (John 17:21), does it signify that He expected or desired that all of His followers should ultimately become **one person** or one in heart-harmony and purpose?
75. **"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்"** (யோவான் 17:21) என்று நம்முடைய ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்காக ஜெபித்தபோது, தம்முடைய சீஷர்கள் அனைவரும் இறுதியில் **ஒரே நபராக** மாறவேண்டும் என்ற எதிர்பார்ப்போ அல்லது விருப்பமோ அவர் வைத்திருந்தார் என்பதாக அடையாளப்படுத்துகிறதா அல்லது அவர்கள் அனைவரும் இருதய-இசைவிலும், நோக்கத்திலும் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பையோ (அ) விருப்பத்தையோ வைத்திருந்தார் என்பதாக அடையாளப்படுத்துகிறதா?

(76) How, then, **must** His statement of the next verse be understood, viz.: "that they may be one **even as We are one**"? Page 75 ¶ 3, 4
76. பின்னர், "**நாம் ஒன்றாயிருக்கிறதுபோல** அவர்களும் ஒன்றாயிருக்கும்படி," என்ற அவருடைய அடுத்த வசனத்தின் வாக்கியத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள **வேண்டும்**? **E P. 79** ¶ **2, 3**

(77) If "no man can see God and live" (Exod. 23:20), what could our Lord Jesus have meant when He said, "He that hath seen Me hath seen the Father"? (John 14:7-10). Pages 76, 77
77. "ஒரு மனுஷனும் என்னைக் (தேவனை) கண்டு உயிரோடிருக்கக்கூடாது" (யாத்திராகமம் 23:20) என்றிருக்கும்போது, "என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான்" என்று நம்முடைய ஆண்டவர் இயேசு கூறினபோது, அவர் எதை அர்த்தப்படுத்தியிருக்கக்கூடும்? (யோவான் 14:7-10) **E P. 80** ¶ **1 - E P. 82** ¶ **1**

(78) Is it the Father or the Son that is styled the King of kings and Lord of lords? Page 78
78. ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்று அழைக்கப்படுவது பிதாவாகிய தேவனா அல்லது குமாரனா? **E P. 82** ¶ **2 - E P. 83** ¶ **1**

(79) Does this passage refer to the Father or how otherwise should we understand it? Page 78, last par.
79. இந்தப் பகுதியானது பிதாவைக் குறிப்பதாக உள்ளதா? அல்லது இதை நாம் எப்படியாக புரிந்துகொள்ள வேண்டும்? **E P. 83 ¶ 2**

(80) Cite and explain other similar passages. I Cor. 15:27; Col. 2:10. Page 79 ¶ 1
80. இதற்கொத்த மற்ற பகுதிகளை மேற்கோள்காட்டி, விளக்கவும். 1 கொரிந்தியர் 15:27; கொலோசெயர் 2:10. **E P. 83 ¶ 3**

(81) Would the passage "thought it not robbery to be equal with God" prove the Trinity doctrine? If both were one how could one think of robbing Himself? Page 78 ¶ 2, 3
81. "தேவனுக்குச் சமமாயிருப்பதைக் (குமாரன்) கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்" என்கிற வசனப்பகுதி திரித்துவ உபதேசத்தை ஆதரிப்பதாக உள்ளதா? இருவரும் ஒருவர் என்றால் ஒருவர் தன்னைத்தானே கொள்ளையாடிட எப்படி சிந்திக்கக்கூடும்? **E P. 84 ¶ 1, 2**

(82) What did our Lord Jesus testify respecting His equality with the Father? And did He not tell the truth? Page 79 ¶ 2
82. சமநிலை விஷயத்தில் பிதாவுடன் தமக்கு இருக்கும் நிலை குறித்து நமது ஆண்டவராகிய இயேசு அளித்த சாட்சியம் என்ன? மேலும், அவர் உண்மையைச் சொல்லவில்லையா? **E P. 84 ¶ 1**

(83) What appears to be the Apostle's argument what point is he proving in Phil. 2:6? Page 79, last par.
83. பிலிப்பியர் 2:6-ஆம் வசனத்தின் மீது அப்போஸ்தலரின் வாதமாகத் தோன்றுவது என்ன? - அதாவது அவ்வசனத்தில் அவர் நிரூபிக்கும் காரியம் என்ன? **E P. 84 ¶ 2**

(84) Is there any evidence that this verse is improperly translated? If so, what? Page 80 ¶ 1
84. இந்த வசனம் தவறாக மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் ஏதேனும் உள்ளதா? அப்படியானால், என்ன ஆதாரம்? **E P. 85 ¶ 1**

(85) Give, in order, different translations of the verse: By Clarke, Wakefield, Stewart, Rotherham, Revised Version, American Revision Committee, Sharpe, Neeland, Dickenson, Turnbull, and the Emphatic Diaglott. Pages 80, 81
85. இவ்வசனத்திற்கான பல்வேறு மொழியாக்கங்களை வரிசைபடி கொடுக்கவும்: க்ளார்க், வேக்பீல்டு, ஸ்டீவர்ட், ரோதர்ஹாம், திருத்திய மொழிப்பெயர்ப்பு, அமெரிக்கன் ரிவிஷன் கமிட்டி, ஷார்ப், நீலாண்டு, டிக்கென்சன், டர்ன்புல் மற்றும் எம்பாட்டிக் டயக்லாட். **E P. 86 - E P. 87 ¶ 2**

(86) In view of all this array of scholarship, what must we conclude that the passage teaches? Page 81, last par.
86. மேற்கூறப்பட்டுள்ள விளக்கங்களின் கண்ணோட்டத்தை வைத்து இப்பகுதி எதைப் போதிப்பதாக நாம் முடிவுக்கு வரவேண்டும்? **E P. 87 ¶ 3**

(87) What great spirit being took a very different course? Give proof-text. Page 81, last par.
87. மிகவும் வேறுபட்ட நடக்கையை எடுத்த மாபெரும் ஆவிக்குரிய ஜீவி யார்? வசன-ஆதாரம் அளிக்கவும். **E P. 87 ¶ 3**

(88) What quality in Jesus shines out pre-eminently in contrast with what quality in Satan? Page 81, last par.
88. சாத்தானுடைய எந்த குணலட்சனத்திற்கு மாறுபட்ட விதத்தில் கர்த்தர் இயேசுவினுடைய எந்த குணநலன் ஒப்புயர்வற்ற நிலையில் பிரகாசித்தது? **E P. 87 ¶ 3**

(89) What reward was bestowed on the Son by the Father? and on what account? Cite the Scriptures. Page 82, top
89. பிதாவினால் குமாரனுக்கு வழங்கப்பட்ட வெகுமதி என்ன? எந்தக் காரணத்திற்காக வழங்கப்பட்டது? வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 87 ¶ 3 கடைசி 12 வரிகள்**

(90) Can such rewarding be harmonized with the idea of oneness of person or with original equality between the Father and the Son? Page 82 ¶ 1
90. இப்படிப்பட்ட வெகுமதி அளிக்கப்பட்ட காரியமானது நபர் விஷயத்தில் ஒன்றாக இருக்கிறார்கள் என்ற கூற்றோடு இசைவுபடுத்திட முடியமா அல்லது பிதா மற்றும் குமாரனுக்கிடையே நிலவின சமநிலை குறித்த கூற்றோடு இசைவுபடுத்திட முடியுமா?

(91) Are we enjoined nevertheless to honor the Son whom the Father exalted, **even as** we honor the Father who exalted Him? Page 82 ¶ 2
91. குமாரனை உயர்த்தின பிதாவை **நாம்** கனம் பண்ணுகிறது**போல,** பிதா உயர்த்தின குமாரனையும் நாம் கனம் பண்ணுவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கிறோமா? **E P. 88** ¶ **2-4**

(92) Quote a Scripture passage showing the distinct separateness of the Father and the Son as persons, and also the relationship of Their work. Page 82 ¶ 2
92. பிதாவும், குமாரனும் தனி நபர்களாக தனித்தனியாக இருப்பதையும், அவர்களது வேலையின் உறவு நிலையையும் காண்பிக்கும் வேதவசனப்பகுதியை மேற்கோள்காட்டவும். **E P. 88** ¶ **2-4**

(93) Does the Scripture, `Blessed be the God and Father of our Lord Jesus Christ," favor the thought that Father and Son are one in **person**? Note the entire passage. Eph. 1:2-18. Page 82 ¶ 3
93. "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்ற வசனமானது, பிதாவும் குமாரனும் ஒரே **நபராக** இருக்கின்றார்கள் என்ற கருத்தை ஆதரிக்கிறதா? முழுப் பகுதியையும் கவனிக்கவும். எபேசியர் 1:2-18 **E P. 89** ¶ **1**

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 3

### "ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் ஒரே பேறானவர்"

(1) Who is the Great One whom Jehovah has exalted to so high honor? What has He done to merit it? What is He yet to do in His high exaltation? Page 83
1. பிதாவாகிய தேவனால் மிகுந்த கனம்வாய்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கும் இந்த மகா பெரியவர் யார்? அதற்காக அவர் என்ன செய்தார்? இந்த உன்னத உயர்த்தப்படுதலில் இருந்தவாறு அவர் இன்னமும் செய்ய வேண்டியிருப்பது என்ன? **E P. 91 ¶ 1; E P. 92 ¶ 1**

(2) Did our Lord Jesus have a pre-existence? What was He before He was "made flesh"? 84 ¶ 1
2. நம்முடைய ஆண்டவராகிய இயேசு பூமிக்கு வருவதற்கு முன்பு ஒரு நிலையைப் பெற்றிருந்தாரா? அவர் "மாம்சம் ஆக்கப்படுவதற்கு" முன் என்னவாக இருந்தார்? **E P. 92 ¶ 2**

(3) Was He then "a god" or mighty one? And if so, what was His name? Page 84 ¶ 2
3. அப்பொழுது அவர் "ஒரு தேவனாக" இருந்தாரா அல்லது வல்லமையுள்ள ஒருவராக இருந்தாரா? மற்றும் அப்படியானால், அவருடைய நாமம் என்னவாக இருந்தது? **E P. 92 ¶ 3**

(4) In that pre-human existence, was the Son in some sense "before" all creatures in time as well as in rank? Page 84 ¶ 3
4. மாம்சத்தில் பூமிக்கு வருவதற்கு முன்பிருந்த நிலையில், குமாரனானவர் சர்வ சிருஷ்டிகளுக்கும் "முன்" இருந்தவர் எனும்போது, காலம் விஷயத்திலும் அதேசமயம் சிருஷ்டிக்கப்பட்ட வரிசை விஷயத்திலும் முன் இருந்தவர் என்ற அர்த்தத்தில் சொல்லப்படுகிறதா? **E P. 92 ¶ 4**

(5) Why did the Son stoop to human conditions? Was it of compulsion? Page 84 ¶ 4
5. குமாரன் மாம்சீக நிலைகளுக்குத் தாழ்த்தப்பட்டது ஏன்? அது வற்புறுத்தலினால் உண்டானதா? **E P. 93 ¶ 1**

(6) Was His humiliation to human conditions intended to be eternal? Explain fully. Page 84 ¶ 5
6. மாம்சீக நிலைக்கு உட்படுத்தப்பட்ட அவருடைய தாழ்மை நிலையானது நித்தியத்திற்குமான திட்டமாக இருந்ததா? முழுமையாக விளக்கவும். **E P. 93 ¶ 2**

(7) Did Jesus' resurrection restore Him to the spirit plane? Page 84 ¶ 6
7. இயேசுவின் உயிர்த்தெழுதல் அவருக்கு ஆவிக்குரிய நிலையைத் திரும்பப் பெற்றுத்தந்ததா? **E P. 93 ¶ 3**

(8) Of what station is our Lord Jesus now? Page 85 ¶ 1
8. நமது ஆண்டவராகிய இயேசு இன்று என்ன நிலையில் உள்ளார்? **E P. 93 ¶ 4**

(9) Why was our Lord in His pre-human existence known as The Word or The **Logos**? Page 85 ¶ 2
9. நம்முடைய ஆண்டவர் மாம்சத்தில் (பூமிக்கு) வருவதற்கு முன்பிருந்த நிலையில் வார்த்தை அல்லது **லோகோஸ்** என்று அழைக்கப்பட்டது ஏன்? **E P. 93 ¶ 5**

(10) What does Dr. Alex. Clarke say of this word **Logos**? Page 85 ¶ 2
10. **லோகோஸ்** என்ற இந்த வார்த்தை குறித்து டாக்டர் அலெக்ஸ் கிளார்க் கூறியது என்ன? **E P. 93 ¶ 5**

(11) Show the fitness of the name to the Son, and give an illustration of a king's **logos**. Page 85 ¶ 3
11. குமாரனுக்கு அந்தப் பெயர் பொருத்தமானதா என்பதைக் காண்பித்து, இராஜாவின் **லோகோஸ்** என்பதற்கு எடுத்துக்காட்டு மூலம் விளக்கங்கொடுக்கவும். **E P. 94 ¶ 1**

(12) Does the Greek text of John 1:1 show two persons and refer to both as God? Page 86 ¶ 1
12. யோவான் 1:1-ஆம் வசனத்தின் கிரேக்க பதம், இரண்டு நபர்களைக் காண்பித்து, இருவரையும் தேவன் என்று குறிப்பிடுகிறதா? **E P. 95 ¶ 1**

(13) Is there anything in the Greek text to differentiate these two Persons who are both styled God? What and how should the verse be translated to show its Greek value? Page 86 ¶ 1, 2
13. தேவன் என்று இருவருமே அழைக்கப்படுவதால், இரண்டு பேருக்கும் உள்ள வித்தியாசத்தினைக் காண்பிப்பதற்கு கிரேக்க பதத்தில் ஏதேனும் (வித்தியாசம்) கொடுக்கப்பட்டுள்ளதா? கிரேக்க பதத்தின் மதிப்பை வெளிக்காட்டுவதற்கு இந்த வசனம் எப்படி மற்றும் என்னவென்று மொழிப்பெயர்க்கப்பட வேண்டும்? **E P. 95 ¶ 1, 2**

(14) What beginning is here referred to? Page 86 ¶ 3
14. இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆதி எது? **E P. 95 ¶ 3**

(15) If the word "beginning" here refers to the beginning of Jehovah God's creative work, state what that work was, and give three or more Bible proof-texts on the subject. Page 86 ¶ 3
15. "ஆதி" என்ற வார்த்தை இங்கு பிதாவாகிய தேவனுடைய சிருஷ்டிப்பின் துவக்க வேலையைக் குறிப்பிடுவதாக இருக்குமானால், அந்த வேலை என்ன என்பதைக் குறிப்பிட்டு, அது குறித்து மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட ஆதார வசனப்பகுதிகளை வேதத்திலிருந்து கொடுக்கவும். **E P. 95 ¶ 3**

(16) If our Lord as Jehovah's Word or **Logos** was His first creation, whence came angels and men, and all else that have been created? By whom were these created? Page 87 ¶ 1
16. தேவனுடைய வார்த்தை அல்லது **லோகோசாக** நம்முடைய ஆண்டவரே பிதாவின் முதல் சிருஷ்டியானால், தேவதூதர்களும், மனிதர்களும் மற்றும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் மற்ற அனைத்து சிருஷ்டிகளும் எங்கிருந்து வந்தன? இவைகள் யாரைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்டன? **E P. 96 ¶ 1**

(17) How should we understand the declaration that our Lord was rich and for our sakes became poor? Page 87 ¶ 1
17. நம்முடைய ஆண்டவர் ஐசுவரியமுள்ளவராக இருந்தும், நமது நிமித்தம் தரித்திரரானார் என்ற அறிக்கையை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? **E P. 96 ¶ 1**

(18) How will this comport with our Lord's reference to His glory with the Father "Before the world was"? John 17:5; Page 87 ¶ 1
18. "உலகம் உண்டாகிறதற்கு முன்னே" (யோவான் 17:5) பிதாவுடன் தமக்கிருந்த மகிமை குறித்த நமது ஆண்டவருடைய குறிப்போடு இது எவ்வாறு இசைவுறும்? **E P. 96 ¶ 1**

(19) How can these Scriptures be answered by those who deny our Lord Jesus' prehuman existence? Page 87 ¶ 2
19. நமது ஆண்டவராகிய இயேசு, மாம்சத்தில் பூமிக்கு வருவதற்கு முன்பிருந்த நிலையை ஏற்க மறுப்பவர்களால் இந்த வசனங்களுக்கு எவ்வாறு பதிலளிக்கக்கூடும்? **E P. 97 ¶ 1**

(20) Do these Scriptures examined substantiate the thought that our Lord Jesus was the "Only Begotten" of the Father? (1 John 4:9) What does "Only Begotten" imply if not that none other than He was the direct creation of the heavenly Father? Page 88 ¶ 1
20. ஆய்வுசெய்யப்பட்ட இவ்வசனங்களானது, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவே பிதாவினுடைய "ஒரே பேறானவர்" என்ற கருத்தை நிரூபிக்கிறதா? (1 யோவான் 4:9) அவரைத் தவிர வேறு எவரும் பரலோகப் பிதாவின் நேரடி சிருஷ்டிப்பாக இருக்கவில்லை எனில், "ஒரே பேறானவர்" என்பது குறிப்பாகச் சுட்டிக்காட்டுவது என்ன? **E P. 98 ¶ 1**

(21) What Scriptures declare that God sent His Son into the world, and thus imply our Lord's pre-human existence? Page 88 ¶ 2
21. தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பினார் என்றும், இப்படியாக நமது ஆண்டவர் பூமிக்கு வருவதற்கு முன்பிருந்த நிலை சுட்டிக்காண்பிக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கக்கூடிய வேதவசனங்கள் என்ன? **E P. 98 ¶ 2**

(22) The Apostle says, "He was in the world, and the world was made by Him, and the world knew Him not." According to this Scripture, was it the Father or the Son who directly created the world? Page 88 ¶ 2
22. "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இவ்வசனத்தின் பிரகாரம், உலகத்தை நேரடியாக சிருஷ்டித்தவர் பிதாவா அல்லது குமாரனா? **E P. 98 ¶ 2**

(23) If the Son created the world, by what power did He do it--His own, or the heavenly Father's? Quote a Scripture proving that it was the Father's power exercised through the Son. Did our Lord Jesus claim to be the Father as well as the Son, and to have sent Himself into the world? Quote a Scripture on this subject. Page 89 ¶ 1
23. குமாரன் இவ்வுலகை சிருஷ்டித்தாரானால், அவர் எந்த வல்லமையினால் இதைச் சிருஷ்டித்தார் - தம்முடைய சொந்த வல்லமையினாலேயா அல்லது பரலோகப் பிதாவின் வல்லமையினாலேயா? பிதாவின் வல்லமையே குமாரன் மூலம் செயல்படுத்தப்பட்டது என்பதை நிரூபிக்கும் வசனத்தை மேற்கோள்காட்டவும். நம்முடைய ஆண்டவராகிய இயேசுதாமே பிதாவாகவும் அதேசமயம் குமாரனாகவும் இருப்பதாகவும், இவ்வுலகில் தம்மைத்தாமே அனுப்பிக்கொண்டவராகவும் இருந்தார் என்று கூறிக்கொண்டாரா? இவ்விஷயத்திற்கு ஒரு வசனத்தை மேற்கோள்காட்டவும். **E P. 99 ¶ 1**

(24) Quote four other Scriptures in which the Lord represents Himself as having come down from a heavenly condition to an earthly state. Page 89 ¶ 1, 2
24. பரலோக நிலையிலிருந்து பூமிக்குரிய நிலைக்கு இறங்கி வந்திருப்பதாக ஆண்டவர் தம்மைக்குறித்துச் சொல்லியிருக்கும் மற்ற நான்கு வசனப்பகுதிகளை மேற்கோள்காட்டவும். **E P. 99 ¶ 1; E P. 100 ¶ 1**

(25) Did Jesus claim that His existence antedated that of Abraham? Where? Page 89 ¶ 2; Page 90 ¶ 1
25. (ஆண்டவராகிய) இயேசு, தாம் ஆபிரகாமுக்கு முன் இருந்ததாகக் கூறினாரா? எங்கு? **E P. 100 ¶ 1, 2**

(26) Explain in what sense our Lord was before Abraham. Page 90 ¶ 2
26. எந்த அர்த்தத்தில் நம்முடைய ஆண்டவர் ஆபிரகாமுக்கு முன் இருந்தவர் என்பதை விளக்கவும். **E P. 101 ¶ 1**

(27) How shall we understand our Lord's statement, "No man knoweth the Son, but the Father"? Matt. 11.27; Page 91 ¶ 1
27. "பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்" என்ற நமது ஆண்டவருடைய அறிக்கையை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? மத்தேயு 11:27; **E P. 102 ¶ 1**

(28) What is the key to this knowledge? Why cannot all understand such matters? Page 91 ¶ 2
28. இந்த அறிவிற்கான திறவுகோல் என்ன? இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாராலும் புரிந்துகொள்ள முடியாதது ஏன்? **E P. 103 ¶ 1**

(29) Why was Nicodemus refused a knowledge of heavenly things? Why is it necessary to believe God's revelation respecting earthly things before we can understand heavenly things? Page 92 ¶ 2
29. பரமகாரியங்கள் பற்றின அறிவு நிக்கொதேமுக்கு மறுக்கப்பட்டது ஏன்? பரமகாரியங்களை நாம் புரிந்துகொள்வதற்கு முன் பூமிக்கடுத்த காரியங்கள் தொடர்புடைய தேவனுடைய வெளிப்படுத்தலை விசுவாசிக்க வேண்டியது அவசியமாய் இருப்பது ஏன்? **E P. 104 ¶ 1**

(30) How was our Lord's pre-existent condition referred to by the wise man? Page 92 ¶ 3; Page 93 ¶ 1
30. நம்முடைய ஆண்டவர் பூமிக்கு வருவதற்கு முன்பிருந்த நிலையானது, (சாலொமோன்) ஞானியினால் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது? **E P. 105** ¶ **1, 2**

(31) In what sense was Christ "the first and the last"? Page 93 ¶ 2
31. எந்த அர்த்தத்தில் கிறிஸ்து "ஆதியும், அந்தமுமாய்" இருந்தார்? **E P. 105** ¶ **3**

(32) What is the ordinary theory respecting "incarnation"? Page 93 ¶ 3
32. "அவதாரம் எடுத்தல்" குறித்துச் சாதாரணமாகச் சொல்லப்படும் கோட்பாடு என்ன? **E P. 106** ¶ **1**

(33) What is the correct theory respecting the text: "The **Logos** was made flesh and dwelt among us"? John 1:14; Page 93 ¶ 3; Page 94 ¶ 1
33. "அந்த **லோகோஸ்** (வார்த்தை) மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14) என்ற வசனப்பகுதியைக் குறித்த சரியான கோட்பாடு என்ன? **E P. 106** ¶ **1; E P. 107** ¶ **1**

(34) When our Lord is referred to as a man in the Scriptures, does this imply that He was a blemished man--an imperfect man? Page 95 ¶ 1
34. நம்முடைய ஆண்டவர் வசனங்களில் ஒரு மனுஷனாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்போது, அவர் மாசுப்பட்ட ஒரு மனுஷனாக - ஓர் அபூரண மனுஷனாக இருந்தார் என்பதாகக் குறிப்பிடுகிறதா? **E P. 108** ¶ **1**

(35) Quote two Scriptures which prove that He is not referred to as a sinner in any sense of the word. Page 95 ¶ 1
35. அவர் எவ்விதத்திலும் ஒரு பாவியைப் போன்று குறிப்பிடப்படவில்லை என்பதை நிரூபிக்கும் இரண்டு வசனப்பகுதிகளை மேற்கோள்காட்டவும். **E P. 108** ¶ **1**

(36) If our Lord had been of fallen human nature, could He have been our Redeemer? If not, why not? Page 95 ¶ 2; Page 96
36. நம்முடைய ஆண்டவர், விழுந்துபோன மனுஷீக சுபாவமுடையவராக இருந்திருப்பாரானால், அவரால் நம்முடைய மீட்பராக இருந்திருக்க முடியுமா? இல்லையெனில், ஏன் இல்லை? **E P. 108** ¶ **2; E P. 109** ¶ **1**

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 4

### *"ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் மாசில்லாதவர்"*

(1) The Scriptures declare that a clean thing cannot come out of an unclean. (Job 14:4) How does this agree with the declaration that our Lord was "holy, harmless, undefiled, separate from sinners?" Page 97

1. அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்க முடியாது என வேதவசனங்கள் அறிவிக்கிறது (யோபு 14:4). இந்த வசனம் நம்முடைய ஆண்டவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக" இருந்தார் என்ற அறிக்கையோடு எவ்வாறு ஒத்துப்போகிறது? **E P. 111**

(2) Is a knowledge of the manner in which God accomplished this bringing of a clean thing out of an unclean essential to true discipleship? In other words, is the philosophy of the Atonement indispensable to faith? Page 98 ¶ 1

2. அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கதை தேவன் நிறைவேற்றின விதம் குறித்த அறிவானது, உண்மை சீஷத்துவத்திற்கு மிகவும் முக்கியமானதா? வேறுவிதத்தில் கூறுவோமானால், ஒப்புரவாகுதலின் தத்துவம் விசுவாசத்திற்கு இன்றியமையாததா? **E P. 112 ¶ 1**

(3) What is the Roman Catholic view of the "Immaculate Conception"? Does it apply to Jesus or to His mother? Page 98 ¶ 2

3. "புனிதமான கருத்தரிப்பு" குறித்த ரோமன் கத்தோலிக்கப் பார்வை என்ன? இது இயேசுவுக்குப் பொருந்துமா அல்லது அவருடைய தாயாருக்குப் பொருந்துமா? **E P. 113 ¶ 1**

(4) If Jesus' birth was out of the ordinary channel of affairs--a miracle--can it be said that there are other miracles in nature which are not so considered merely because they are more general? Page 98 ¶ 3

4. இயேசுவின் பிறப்பு சாதாரண முறைமையின்படி இல்லாத - ஓர் அற்புதம் - எனில், இயற்கையிலும் அதுபோல அநேக அற்புதங்கள் இருந்தும் அவைகள் பொதுவான நிகழ்வுகளாக இருக்கும் காரணத்தினால், அற்புதமாகக் கருதப்படவில்லை என்று கூறப்படலாமா? **E P. 113 ¶ 2**

(5) Give illustrations of two substances in nature which act contrary to the ordinary so-called laws of nature. Page 98 ¶ 3

5. இயற்கையின் சாதாரண விதிகள் என்று அழைக்கப்படுவதற்கு மாறாகச் செயல்படும் இயற்கையில் உள்ள இரண்டு பொருள்களின் உதாரணங்களைக் கொடுக்கவும். **E P. 113 ¶ 2**

(6) Does existence or living energy come from the father, or from the mother? Page 99 ¶ 1

6. வாழுயிர் (ஜீவன்) அல்லது உயிர் ஆற்றல் என்பது தகப்பனிடமிருந்து வருகிறதா அல்லது தாயிடமிருந்து வருகிறதா? **E P. 114 ¶ 1**

(7) Does the body or form come from the father, or from the mother? Page 99 ¶ 1

7. சரீரம் அல்லது உருவம் தகப்பனிடமிருந்து வருகிறதா அல்லது தாயிடமிருந்து வருகிறதா? **E P. 114 ¶ 1**

(8) What is the significance of the word "father"? Page 99 ¶ 2

8. "தகப்பன்" என்ற வார்த்தையின் உட்பொருள் என்ன? **E P. 114 ¶ 2**

(9) Is it because of this principle, that the life or being comes from the father, and organism **from** the mother, that children are spoken of as being of or from their fathers and borne by their mothers? Gen. 24;47. Give several illustrations. Page 99 ¶ 3
9. இந்தக் கொள்கையின் காரணமாகவா, தகப்பனிடமிருந்து ஜீவன் (அ) உயிரும், தாயிட**மிருந்து** சரீரமும் வருகிறது என்றும், பிள்ளைகள் தகப்பனால் உருவாக்கப்பட்டு, தாயினால் பெற்றெடுக்கப்பட்டார்கள் என்ற வழக்கச்சொல்லும் ஏற்பட்டது? ஆதியாகமம் 24:47. பல்வேறு உதாரணங்கள் அளிக்கவும். **E P. 114 ¶ 3**

(10) Does science agree with the Scriptures in this teaching as applied to humanity, and to all mammalia, that the life principle comes from the father, and the organism from the mother? Page 100 ¶ 2
10. தகப்பனிடமிருந்து ஜீவனும், தாயிடமிருந்து சரீரமும் வருகிறது என்ற இந்தக் கொள்கையானது, மனுக்குலத்திற்கும், அனைத்து பாலூட்டி இனத்திற்கும் பொருந்தும் என்ற விஷயத்தில் வேதவசனங்களை விஞ்ஞானம் ஒப்புக்கொள்கிறதா? **E P. 115 ¶ 2**

(11) Give an illustration on this subject from the egg of a fowl. Page 100 ¶ 2, 3
11. கோழி முட்டையிலிருந்து இந்தத் தலைப்புக்கு ஓர் உதாரணம் தருக. **E P. 115 ¶ 2, 3**

(12) In view of these facts, could it be possible for a perfect child to be born of a perfect father, even if the mother were imperfect? Page 100 ¶ 4
12. இந்த உண்மைகளைக் கவனிக்கையில், தாய் அபூரணமாக இருந்தாலும், தகப்பன் பரிபூரணமாக இருக்கையில், ஒரு பரிபூரண குழந்தை பிறப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா? **E P. 116 ¶ 1**

(13) Why is it that "One man's meat is another man's poison"? Page 101 ¶ 1
13. "ஒருவனுக்குத் தேவாமிர்தமாக இருப்பது மற்றவனுக்கு விஷமாக இருப்பது" ஏன்? **E P. 116 ¶ 2**

(14) Applying this principle, could a perfect race have been born had mother Eve sinned and become imperfect, and father Adam remained sinless and perfect? Page101 ¶ 2
14. இந்தக் கொள்கையைப் பயன்படுத்தும்போது, தாயாகிய ஏவாள் பாவஞ்செய்து அபூரணமாகியும், தகப்பனாகிய ஆதாம் பாவஞ்செய்யாதவராக பரிபூரண நிலையில் உள்ளவராகவும் தொடர்ந்து நீடித்திருப்பாராகில், ஒரு பரிபூரண சந்ததி பிறந்திருக்கக்கூடுமா? **E P. 117 ¶ 1**

(15) Would the reverse of this have been true? That is, suppose that Adam had sinned and mother Eve had remained sinless and perfect, could the race thus have retained its perfection through the mother? Page 101 ¶ 3; Page 102 ¶ 1
15. இதற்கு நேர்மாறானது உண்மையாக இருந்திருக்குமா? அதாவது, ஆதாம் பாவஞ்செய்தவராகவும், தாயாகிய ஏவாள் பாவஞ்செய்யாமலும், பரிபூரண நிலையிலும் காணப்பட்டிருந்தார்கள் என்று வைத்துக்கொண்டால், அந்தச் சந்ததி தாயின் மூலம் தன் பரிபூரணத்தைத் தக்கவைத்திருக்க முடியுமா? **E P. 117 ¶ 2, 3**

(16) Does the Scripture, "Who can bring a clean thing out of an unclean thing," refer, then, to Adam or to Eve--to the male or to the female? Page 102 ¶ 2
16. பின்பு, "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ" என்ற வசனப்பகுதியானது, ஆதாமையா அல்லது ஏவாளைக் குறிப்பிடுகிறதா? - அதாவது ஆணைக் குறிப்பிடுகிறதா அல்லது பெண்ணைக் குறிப்பிடுகிறதா? **E P. 118 ¶ 1**

(17) In what way may the mind of the mother affect her offspring before its birth, and how may the facts be seen to comport with the Scriptural declaration that our Lord Jesus was holy and separate from sinners while his mother was imperfect like the remainder of the race? Page 102 ¶ 3
17. தாயின் மனநிலையானது எந்த விதத்தில் தன் சந்ததி பிறப்பதற்கு முன்பே அதனை பாதிக்கக்கூடும்? மேலும் இந்த உண்மைகளானது, நமது ஆண்டவராகிய இயேசுவின் தாயானவர்கள் மற்ற சந்ததியினரைப் போன்று அபூரணராக இருக்கையில் நமது ஆண்டவர் பரிசுத்தரும், பாவிகளுக்கு விலகினவருமாக இருந்தார் என்ற வேதவசன அறிக்கையுடன் எவ்வாறு பொருந்துவதாகக் காணலாம்? **E P. 118 ¶ 2; E P. 119 ¶ 1-3**

(18) What do we know in respect to Jesus' mother-her character, attitude towards God, etc., that would authorize the conclusion that she was holy-minded and that her influence upon her child would correspond to this? Quote and cite the Scriptures. Page 102 ¶ 3
18. இயேசுவின் தாய் பரிசுத்த சிந்தையுடையவர் என்றும், அவர்களுடைய பிள்ளையின் மீதான அவர்களது செல்வாக்கு இதற்கு ஒத்திருக்கும் என்றும் உள்ள தீர்வை அங்கீகரிக்கும் வகையில், அவர்களைக்குறித்து - அதாவது, அவர்களது குணலட்சணம், தேவன் விஷயத்தில் அவர்களது மனநிலை, போன்றவற்றைக் குறித்து நாம் அறிந்துள்ளவை என்ன? வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 118 ¶ 2; E P. 119 ¶ 1-3**

(19) Whence came the perfect life principle, which resulted in the birth of Jesus-"holy, harmless, undefiled"? Page 103 ¶ 1
19. "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாகிய" - இயேசுவின் பிறப்புக்கு வழிவகுத்த "பூரண ஜீவனுக்குரிய கொள்கை" எங்கிருந்து வந்தது? **E P. 119 ¶ 4**

(20) If life proceeds from the father and nature from the mother, of what nature was the "Man Christ Jesus"? Page 103 ¶ 2
20. தந்தையிடமிருந்து உயிரும், தாயிடமிருந்து சுபாவமும் தோன்றுகிறதென்றால், "மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" எப்படிப்பட்ட சுபாவமுடையவராக இருந்தார்? **E P. 119 ¶ 5**

(21) Is this same principle, that the mother gives nature, the father life, borne out by the record of Gen. 6:1-5? If so, how? Page 103 ¶ 3
21. தந்தையிடமிருந்து ஜீவனும், தாயிடமிருந்து சுபாவமும் கொடுக்கப்படுகிறது என்ற இதே கொள்கையா, ஆதியாகமம் 6:1-5 வசனங்களின் பதிவிலும் வெளிப்பட்டது? **E P. 120 ¶ 1**

(22) What would have become of Adam's race had the fallen angels been permitted to continue the generation of a new race of humans, contrary to the Divine arrangement and organization? Page 104 ¶ 1
22. தெய்வீக ஏற்பாடு மற்றும் அமைப்புக்கு எதிராக, ஒரு புதிய மனித சந்ததியின் தலைமுறையினரைத் தொடர விழுந்துபோன தூதர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால், ஆதாமின் சந்ததி என்னவாகியிருக்கும்? **E P. 120 ¶ 2**

(23) Did that new race of mental and physical giants dominate and intimidate humanity, and is it probable that their continuance in power and authority would eventually have crushed out Adam's race? Page 104 ¶ 1, 2
23. மன ரீதியாகவும், சரீர ரீதியாகவும் இராட்சதர்களாகக் காணப்பட்ட புதிய சந்ததியினர், மனுக்குலத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி, அச்சுறுத்தி வந்தார்களா? மேலும், அவர்கள் வல்லமையிலும், அதிகாரத்திலும் தொடர்ந்து இருந்திருப்பார்களானால், இறுதியில் ஆதாமின் சந்ததியினரையே நசுக்கிப்போட்டிருக்க வாய்ப்புள்ளதா? **E P. 120 ¶ 2; 121 ¶ 1** (முதல் 9 வரிகள்)

(24) How is the principle we have discussed, namely, life from the father and form from the mother, illustrated in nature, by the fact that God is the great Creator and Life-giver to angels of various grades, to man, to beasts and fowl and fishes? Page 104 ¶ 3
24. பல்வேறு தரநிலையிலுள்ள தூதர்களுக்கும், மனிதனுக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், நீர்வாழ் ஜந்துக்களுக்கும் தேவனே மாபெரும் சிருஷ்டிகராகவும், ஜீவன் அளிப்பவராகவும் இருக்கின்றார் என்ற உண்மையின் மூலம், தகப்பனிடமிருந்து ஜீவனும், தாயிடமிருந்து உருவமும் உண்டாகிறது என்று நாம் விவாதித்துக்கொண்டிருந்த இந்தக் கொள்கையானது, இயற்கையில் (in nature) எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது? **E P. 121 ¶ 1** (10-ஆம் வரி முதல் பத்தி முழுவதும்)

(25) The God and Father of our Lord Jesus Christ "hath begotten us as new creatures." Who was the mother in this case-mother of the New Creation? Page 104 ¶ 3
25. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும், பிதாவுமாயிருக்கிறவர் "புதுச் சிருஷ்டிகளாக நம்மை ஜெநிப்பித்திருக்கிறார்." இந்த விஷயத்தில் புதுச் சிருஷ்டியின் தாயாக இருந்தது யார்? **E P. 121 ¶ 1** (10-ஆம் வரி முதல் பத்தி முழுவதும்)

(26) What lesson can we draw from the fact that in the typical Jewish Age each child ranked in favor and standing according to the dignity and rank of its mother rather than its father? Page 105 ¶ 1
26. நிழலான யூத யுகத்தின்போதுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அதன் தகப்பனிடமிருந்தல்ல மாறாக அதன் தாயினுடைய கனம் மற்றும் அந்தஸ்தின் அடிப்படையிலேயே கனத்திலும், ஸ்தானத்திலும் உயர்ந்து காணப்படுகின்றது என்ற உண்மையிலிருந்து என்ன படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளலாம்? **E P. 122 ¶ 1**

(27) Is or is not this same principle illustrated in the birth of our Lord Jesus? If it is, show how. Page 105 ¶ 2
27. நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் பிறப்பிலும் இதே கொள்கை விளக்கப்பட்டுள்ளதா (அ) இல்லையா? ஆம் என்றால், எவ்வாறு என்று காண்பிக்கவும். **E P. 122 ¶ 2**

(28) In harmony with the foregoing, show how our Lord Jesus was a clean thing--a pure and holy being, undefiled by sin. Page 105 ¶ 2
28. மேற்கூறப்பட்டவைகளுக்கு இசைவாக, நம்முடைய ஆண்டவராகிய இயேசு எப்படி சுத்தமுள்ளவராக - அதாவது, தூய்மையும், பரிசுத்தமுள்ள ஓர் ஜீவியாக, பாவத்தால் கறைபடாதவராக (மாசில்லாதவராக) இருந்தார் என்பதைக் காண்பிக்கவும். **E P. 122 ¶ 2**

(29) If our Lord Jesus is a New Creature, a spirit Being, and now highly exalted to the divine nature, and if it is declared that He will be Father and Life-Giver to humanity in its regeneration during the Millennium, what nature will the restored ones have--human or divine? Page 105 ¶ 3
29. நம்முடைய ஆண்டவராகிய இயேசு ஒரு புதுச்சிருஷ்டியாக, ஓர் ஆவிக்குரிய ஜீவியாக, தற்போது தெய்வீகச் சுபாவத்திற்கு மிகவும் உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டவராக இருப்பாரானால் மற்றும் ஆயிர வருட அரசாட்சியின் போது மறுஜென்ம காலத்தில் மனுக்குலத்திற்கு அவர் பிதாவாகவும், ஜீவன் அளிப்பவராகவும் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டிருக்குமானால், (திரும்பக்கொடுத்தலின் காலத்தில்) திரும்பி வந்தவர்கள் எப்படிப்பட்ட சுபாவத்தை உடையவர்களாக இருப்பார்கள் - மாம்சீக சுபாவமா அல்லது தெய்வீக சுபாவமா? **E P. 122 ¶ 3**

(30) Show how this and related items are illustrated in the three wives of Abraham--Sarah, Hagar, and Keturah. Page 105 ¶ 3
30. இது குறித்தும், இதுசார்ந்த விஷயங்கள் குறித்தும் ஆபிரகாமின் மூன்று மனைவிகளான - சாராள், ஆகார் மற்றும் கேத்தூராள் ஆகியோரில் எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்பதைக் காண்பிக்கவும். **E P. 122 ¶ 3**

(31) Shall we not conclude that our Lord's birth was a miracle, wholly out of accord with Jehovah's usual procedures, or was it in harmony? Page 106 ¶ 1
31. நமது ஆண்டவருடைய பிறப்பானது யேகோவா தேவனுடைய பொதுவான வழிமுறைகளுக்கு முரணான அல்லது யேகோவா தேவனுடைய பொதுவான வழிமுறைகளுக்கு இசைவான ஓர் அற்புதம் என்ற முடிவிற்கு நாம் வரலாமா? **E P. 123 ¶ 1**

(32) How is this illustrated in Adam? Who was his father, and who his mother? Page 106 ¶ 1
32. இது ஆதாமில் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது? அவரது தகப்பன் யாராக இருந்தார் மற்றும் தாய் யார்? **E P. 123 ¶ 1**

(33) What is signified by the Apostle's statement that such an one "became us"--how and why? Page 106 ¶ 1
33. இப்படிப்பட்ட ஒருவரே "நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" என்ற அப்போஸ்தலரின் வாக்கியத்தினால் அடையாளப்படுத்துவது என்ன - எப்படி மற்றும் ஏன்? **E P. 123 ¶ 1**

---

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 5

### ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர்

### ''தம் சகோதரருக்கு ஒப்பானார்''
### ''நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடியவர்''

(1) State briefly the two popular, erroneous views respecting Jesus' relations to God and man. Page 107 ¶ 1

1. தேவனிடத்திலும், மனுஷனிடத்திலுமான இயேசுவின் உறவைக்குறித்த இரண்டு பிரபலமான, தப்பறையான கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறவும். **E P. 125 ¶ 1**

(2) State briefly the Scriptural view of His relationship to God and man. Page 107 ¶ 1

2. தேவனிடத்திலும், மனுஷனிடத்திலுமான அவருடைய உறவைக்குறித்த வேதாகமப் பார்வையைச் சுருக்கமாகக் கூறவும். **E P. 125 ¶ 1**

(3) Would it have been possible for our Lord to keep the Divine Law and thus to inherit eternal life, if He had been a sinner, if His life had not come from above, but through Adam's line? Page 108 ¶ 1

3. நமது ஆண்டவருடைய ஜீவன் பரத்திலிருந்து வந்திராமல், மாறாக ஆதாமின் வழியாக வந்திருந்து, ஒரு பாவமுள்ளவராக இருந்திருப்பாரானால், தெய்வீகப் பிரமாணத்தைக் கடைப்பிடிக்கவோ, அதன் அடிப்படையில் நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கவோ அவரால் முடிந்திருக்குமா? **E P. 126 ¶ 1**

(4) Since we were not by nature undefiled and separate from sinners, how can it be said that He was "made like unto His brethren"--in what respect was He made like them? Page 108 ¶ 2

4. சுபாவத்தின்படி நாம் மாசற்றவர்களாக, பாவிகளுக்கு விலகினவர்களாக இல்லாதிருக்கும்போது, அவர் "தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது" என்று எவ்வாறு சொல்லமுடியும் - எந்த வகையில் அவர் அவர்களுக்கு ஒப்பானவராக ஆக்கப்பட்டார்? **E P. 127 ¶ 1; E P. 128 ¶ 1**

(5) If we are Jesus' 'brethren'--in what respect was He made like us? Page 108 ¶ 2

5. நாம் இயேசுவின் "சகோதரர்கள்" என்றால் - எந்த விதத்தில் அவர் நம்மைப்போல் ஆக்கப்பட்டார்? **E P. 127 ¶ 1; E P. 128 ¶ 1**

(6) Cite seven Scriptures showing that we are Christ's brethren only after justification. Page 109

6. நாம் நீதிமான்களாக்கப்பட்ட பின்னரே கிறிஸ்துவின் சகோதரர்கள் ஆகிறோம் என்பதைக் காண்பிக்கும் ஏழு வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 127 ¶ 1; E P. 128 ¶ 1**

(7) Was our Lord tempted as the world is tempted, in all points? Page 110 ¶ 1

7. உலகம் சோதிக்கப்படுவதுபோல நம்முடைய ஆண்டவர், எல்லா விதங்களிலும் சோதிக்கப்பட்டாரா? **E P. 129 ¶ 1**

(8) In our Lord's temptation in the wilderness at the beginning of His ministry, what was the first suggestion made by the Adversary as recorded, and was this a temptation to Him as a New Creature or as a man? Page 110 ¶ 3

8. நமது ஆண்டவருடைய ஊழியத்தின் துவக்கத்தில் வனாந்தரத்தில் ஏற்பட்ட அவருடைய சோதனையில், பதிவு செய்யப்பட்டுள்ளபடி எதிராளியானவனால் முன்வைக்கப்பட்ட முதல் ஆலோசனை என்னவாக இருந்தது? மேலும், அது ஒரு புதுச்சிருஷ்டி என்ற விதத்தில் அவருக்கு

சோதனையாக இருந்ததா அல்லது ஒரு மனுஷன் என்ற விதத்தில் அவருக்குச் சோதனையாக இருந்ததா? **E P. 129 ¶ 3**

(9) Do the Lord's "brethren" have similar temptations? If so, are these tempted as "New Creatures" or natural men, and what may be considered as some of the brethren's temptations? Page 110 ¶ 3
9. ஆண்டவருடைய "சகோதரர்களுக்கும்" இதேபோன்ற சோதனைகள் இருக்குமா? ஆம் என்றால், இவர்கள் புதுச்சிருஷ்டிகளாக சோதிக்கப்படுகிறார்களா அல்லது ஜென்மசுபாவமான மனுஷர்களாக சோதிக்கப்படுகிறார்களா? மேலும், சகோதரர்களின் சில சோதனைகளாக நாம் எதைக் கருதலாம்? **E P. 129 ¶ 3**

(10) Describe our Lord's second point of temptation from the Adversary in the wilderness. Show how it applied and whether it tested Him as a "New Creature" or as a man. Page 111 ¶ 1
10. வனாந்தரத்தில் எதிராளியானவனிடமிருந்து நமது ஆண்டவருக்கு நேரிட்ட இரண்டாம் சோதனையை விவரிக்கவும். அதிலிருந்து படிப்பினைகள் என்ன? மேலும், அது அவரை ஒரு "புதுச் சிருஷ்டி" என்ற விதத்தில் சோதித்ததா அல்லது ஒரு மனுஷன் என்ற விதத்தில் சோதித்ததா என்பதையும் காட்டவும். **E P. 130 ¶ 1**

(11) Are the Lord's "brethren" tempted in like manner? Give illustrations and show whether these affect them as men or as New Creatures. Page 111 ¶ 2
11. கர்த்தருடைய "சகோதரர்கள்" இதே விதத்தில் சோதிக்கப்படுகிறார்களா? இவைகள் மனுஷருக்கு நேரிடுகிறது போன்ற தாக்கத்தை ஏற்படுத்துமா அல்லது ஒரு புதுச்சிருஷ்டிகளுக்குரிய தாக்கத்தை ஏற்படுத்துமா என்பதைக் காண்பித்து, விளக்கங்கள் கொடுக்கவும். **E P. 130 ¶ 2**

(12) Name one of the chief battles of the Christian seeking to be a good soldier, loyal to the Captain of his salvation. Page 112 ¶ 1
12. தன்னுடைய இரட்சிப்பின் தளபதிக்கு நேர்மையாகவும், நல்ல போர்ச்சேவகனாகவும் இருக்க நாடக்கூடிய கிறிஸ்தவனின் பிரதானமான போராட்டங்களில் ஒன்றைப் பெயரிடவும். **E P. 131 ¶ 1**

(13) Why is fixity of will essential to our victory? Page 112 ¶ 1
13. நம்முடைய வெற்றிக்கு சித்தத்தின் உறுதித்தன்மை அவசியமாக இருப்பது ஏன்? **E P. 131 ¶ 1**

(14) What was our Lord's third temptation in the wilderness? Explain the intimations and suggestions of the Adversary's words as they would apply to our Lord. Page 112 ¶ 2
14. வனாந்தரத்தில் நம்முடைய ஆண்டவருக்கு நேரிட்ட மூன்றாம் சோதனை என்ன? நமது ஆண்டவருக்குப் பொருந்தக்கூடியதுபோன்று எதிராளியின் வார்த்தைகளில் காணப்பட்ட அறிவுரைகளையும், பரிந்துரைகளையும் விளக்கிக்கூறவும். **E P. 132 ¶ 1**

(15) What was there in Satan's past career that probably led up to this request? What ambitions of his were not fully satisfied? Why would he evidently have preferred our Lord as a partner in the dominion of earth and under better conditions than those of the reign of sin and death? Page 113 ¶ 1
15. இந்தக் கோரிக்கை வரை வழிநடத்தப்படும்படிக்கு சாத்தானின் கடந்தகால வாழ்க்கையில் காணப்பட்டது என்ன? அவனுடைய எந்தப் பேராசையானது முழுமையாக திருப்திப்படுத்தப்படாதிருந்தது? பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சியைப் பார்க்கிலும் சிறந்த சூழ்நிலைகளின் கீழ் ஆட்சிசெய்யவும், இந்தப் பூமியின் மீது ஆதிக்கம் செலுத்துவதிலும் சாத்தான் நமது ஆண்டவரைப் பங்காளியாக/கூட்டாளியாக இருக்க ஏன் விரும்பியிருந்திருக்கக்கூடும்? **E P. 133 ¶ 1**

(16) Did Satan's temptation imply a new remedy for sin and his willingness to co-operate in its application? What may we reasonably surmise as respects Satan's motives, etc.? Page 114 ¶ 1
16. சாத்தானின் சோதனையானது, பாவத்திற்கான புதியதொரு தீர்வாகவும், அதைச் செயல்முறைப்படுத்துவதில் ஒத்துழைப்பதற்கு சாத்தான் விருப்பமுள்ளவனாக இருந்ததையும் சுட்டிக்காட்டுகிறதா? சாத்தானின் நோக்கங்கள் போன்றவைகள் குறித்து நாம் நியாயமாக என்ன யூகிக்க முடியும்? **E P. 134 ¶ 1**

(17) What was our Lord's decision and was it hard to reach? Page 114 ¶ 2
17. நமது ஆண்டவருடைய தீர்மானம் என்னவாக இருந்தது? மேலும், அதை அடைவது கடினமாக இருந்ததா? **E P. 134 ¶ 2**

(18) Are the Lord's brethren subject to temptations along this same line? Page 114 ¶ 3
18. கர்த்தருடைய சகோதரர்களும் இதே வழியில் சோதனைகளுக்கு உட்பட்டிருக்கிறார்களா? **E P. 134 ¶ 3**

(19) Cite illustration of Satan's temptation of the Church to seek for other means of saving the world than that which God has outlined in the Scriptures, and tell why other plans than the Lord's seemed to many preferable. Page 114 ¶ 3, 4
19. தேவன் வசனத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதைத் தவிர்த்து உலகத்தை இரட்சிப்பதற்கான வேறு வழிகளை நாடுவதற்கு சபைமீதான சாத்தானின் சோதனையை எடுத்துக்காட்டி, கர்த்தருடைய திட்டத்தைத் தவிர மற்ற திட்டங்கள் அநேகருக்கு விரும்பப்படத்தக்கதாகத் தோன்றுவது ஏன்? **E P. 134 ¶ 3; E P. 135 ¶ 1**

(20) Do these temptations to the brethren come in various forms? If so, state some of these especially some prevalent in our Lord's day. Page 115 ¶ 1; Page 116 ¶ 1
20. சகோதரர்களுக்கான இந்தச் சோதனைகள் பல்வேறு வடிவங்களில் வருமா? ஆம் என்றால், அவைகளில் சிலவற்றை, மிகக்குறிப்பாக நமது கர்த்தருடைய நாளில் பரவலாய்க் காணப்பட்ட சிலவற்றைக் குறிப்பிடவும். **E P. 135 ¶ 2; E P. 137 ¶ 1**

(21) Since our Lord was not fallen, depraved, but holy, harmless, separate from sinners, how could He be "tempted in all points like as we are"? Page 117 ¶ 1
21. நம்முடைய ஆண்டவர் விழுந்துபோனவரும், சீர்கேடு அடைந்தவருமாக இல்லாமல், மாறாக பரிசுத்தரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக இருக்கும்பட்சத்தில், "நம்மைப் போல எல்லா விதத்திலும்" அவரால் எவ்வாறு "சோதிக்கப்பட" முடியும்? **E P. 138 ¶ 1**

(22) Mention some of humanity's weaknesses and besetments and explain the difference between these and the temptations of our Lord and His "brethren." Page 117 ¶ 1
22. மனுக்குலத்தின் பெலவீனங்கள் மற்றும் சூழ்ந்துகொண்டிருக்கும் பாவங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு, இவைகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டினையும், நமது ஆண்டவருடைய சோதனைகள் மற்றும் அவருடைய "சகோதரர்களுடைய" சோதனைகள் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினையும் விளக்கிக்கூறவும். **E P. 138 ¶ 1**

(23) Since the temptations of the New Creatures are thus different from the temptations of those of the world, explain the relationship between the weaknesses of the flesh and temptations of the spirit or new nature. Page 117 ¶ 2
23. புதுச் சிருஷ்டிகளின் சோதனைகளானது இப்படியாக உலகத்தாரின் சோதனைகளிலிருந்து வேறுபட்டதாக இருக்க, மாம்சீக பெலவீனங்களுக்கும், புதிய சுபாவத்தின் அல்லது புதிய மனதின் (ஆவியின்) சோதனைகளுக்கும் இடையே காணப்படும் தொடர்பை விளக்கிக்கூறவும். **E P. 139 ¶ 1**

(24) Quote and cite the Scripture which declared that the Captain of our salvation was made "perfect through suffering," and state whether or not this signifies that He was imperfect as a man and attained human perfection, or what does it signify? Page 118 ¶ 1, 2
24. நம்முடைய இரட்சிப்பின் தளபதியானவர் "உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டார்" என்று அறிக்கையிடக்கூடிய வசனத்தை மேற்கோள்காட்டி, இவ்வசனம் அவர் ஒரு மனுஷனாக அபூரண நிலையில் இருந்து பரிபூரண மனுஷீக நிலையை அடைந்தார் என்பதாக அர்த்தப்படுத்துகிறதா இல்லையா என்பதைக் குறிப்பிடவும், அல்லது இவ்வசனம் அர்த்தப்படுத்துவது என்ன? **E P. 139 ¶ 2, 3**

(25) What motive is Scripturally assigned to our Lord as influencing Him in His consecration and sacrifice? Quote and cite the Scripture. Page 118 ¶ 3
25. வேதவாக்கியங்களில் காணப்பட்ட எந்தக் காரியம் நமது ஆண்டவர் தம்மை அர்ப்பணிக்கவும், பலிசெலுத்தவும் அவரை உந்தித் தள்ளினது? அந்த வேதவாக்கியங்களை மேற்கோள்காட்டவும். **E P. 140 ¶ 1, 2**

(26) What four different features of joy actuated our Lord? Let us discuss these one at a time. Page 118 ¶ 4; Page 119 ¶ 1, 2, 3
26. நமது ஆண்டவரை சந்தோஷப்படச் செய்த நான்கு வேறுபட்ட அம்சங்கள் என்ன? இவைகளை ஒரே நேரத்தில் நாம் கலந்தாலோசிப்போமாக. **E P. 140 ¶ 3 - E P. 141 ¶ 2**

(27) Was this joy set before our Lord as a certainty or as a contingent reward for faithfulness? and if the latter to whom was He to be faithful and to what degree? Page 119 ¶ 4
27. நமது ஆண்டவருக்கு முன்வைக்கப்பட்ட இந்தச் சந்தோஷமானது நிச்சயிக்கப்பட்டதாக இருந்ததா அல்லது அவரது உண்மைக்கான பரிசாக நிபந்தனைக்குட்பட்டதாக இருந்ததா? மேலும் நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்குமாயின், அவர் யாரிடத்தில் உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் மற்றும் எந்த அளவு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும்? **E P. 141 ¶ 3**

(28) Did our Lord learn obedience through the things which He suffered in order that He might become a Son of God? If not, for what did He suffer? Quote and cite the Scriptures demonstrating this. Page 120 ¶ 1, 2
28. நம்முடைய ஆண்டவர் தேவனுடைய குமாரன் ஆகும்பொருட்டு, பட்ட பாடுகளின் மூலமாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டாரா? இல்லையெனில், அவர் எதற்காகப் பாடுபட்டார்? இதை நிரூபித்துக் காட்டக்கூடிய வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 142 ¶ 1; 143 ¶ 1**

(29) To whom did our Lord Jesus demonstrate or prove His fidelity and what results followed? Page 120 ¶ 3
29. நம்முடைய ஆண்டவராகிய இயேசு யாருக்குத் தமது கீழ்ப்படிதலை மெய்ப்பித்துக் காண்பித்தார்? மேலும், பின்தொடர்ந்த பலன்கள் என்ன? **E P. 143 ¶ 2, 3**

(30) Apply this same principle to the Church, the Body of Christ, and explain what we should expect in ourselves and in each other, and in God's dealings with us. Page 120 ¶ 4. Discuss this matter thoroughly.
30. இதே கொள்கையைக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குப் பொருத்தி, நம்மிடத்திலும், ஒருவருக்கொருவரிடத்திலும், நம்மிடத்திலான தேவனுடைய அணுகுமுறைகளிலும் நாம் எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பதை விளக்கவும். **E P. 143 ¶ 4.** இந்த விஷயத்தை முழுமையாக விவாதிக்கவும்.

(31) When we read in the Scriptures that our Lord was made "in the likeness of sinful flesh," just what does this signify--that He was a sinner?--that He was just like a sinner?-or what? Cite the Scripture and paraphrase it so as to bring out its proper thought. Page 121 ¶ 1
31. நம்முடைய ஆண்டவர் "பாவமாம்சத்தின் சாயல்" ஆக்கப்பட்டார் என்று வசனத்தில் நாம் வாசிக்கும்போது, இது அடையாளப்படுத்துவது என்ன - அவர் பாவியாக இருந்தார் என்பதையா? - அதாவது, அவர் ஒரு பாவியைப் போன்று இருந்தார் என்பதையா? - அல்லது எதை அடையாளப்படுத்துகிறது? இதன் சரியான கருத்தை வெளிக்கொணரும் பொருட்டு வசனத்தை மேற்கோள்காட்டி சுருக்கமாகக் கூறவும். **E P. 144 ¶ 2**

(32) What bearing would the doctrine of the ransom have in respect to the above questions? If Jesus had been born of a human father and thus partaken of a blemished, fallen, human nature, like sinful flesh in general, could He have been our Redeemer, our Ransom? If not, why not? Page 122 ¶ 1
32. மேலே இடம்பெறும் கேள்விகள் மீட்கும்பொருள் உபதேசத்தோடு எப்படி சம்பந்தப்படுகிறது? இயேசு, ஒரு மனுஷீகத் தகப்பனிடத்தில் பிறந்தவராகவும், இப்படியாக பொதுவாக பாவமாம்சத்தின் சாயலாக மாசுபட்டவராக, விழுந்துபோன மனுஷீக சுபாவத்தில் பங்குடையவராகவும்

இருந்திருப்பாரேயானால், நமக்கான மீட்பராகவோ அல்லது நம்முடைய மீட்கும்பொருளாகவோ அவரால் இருந்திருக்க முடியுமா? முடியாதென்றால்? ஏன் முடியாது? **E P. 145 ¶ 1**

(33) We read, "Himself took our infirmities." Does this signify that the Man Christ Jesus was born with human infirmities? Cite the occurrences of the statement in the Old and New Testaments and explain their proper signification. Page 122 ¶ 2
33. "அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டார்" என்று நாம் வாசிக்கிறோம். இது, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு மனுஷீக பெலவீனங்களுடன் பிறந்தார் என்பதாக அர்த்தப்படுத்துகிறதா? பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இவ்வாக்கியத்தின் நிகழ்வுகளை மேற்கோள்காட்டி, அதன் சரியான அர்த்தத்தை விளக்கிக்கூறவும். **E P. 145 ¶ 2**

(34) Our Lord, according to the Scriptural accounts, was in some respects less vigorous than some of His disciples and some other men at the time of His death. How could this be, if they were born imperfect and He was a perfect being, unblemished? Explain the philosophy. Page 122 ¶ 3; Page 123 ¶ 1
34. நம்முடைய ஆண்டவர், வேதவசனங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, அவருடைய மரணத் தருவாயில் தம்முடைய சீஷரில் சிலரைப் பார்க்கிலும் மற்றும் மற்ற சில மனுஷரைப்பார்க்கிலும் சில விஷயங்களில் பலம் குறைந்தவராக இருந்தார். அவர்கள் அபூரணராகவும், அவரோ ஒரு பரிபூரண மனுஷராக, மாசற்றவராகவும் பிறந்தபோது, இது எப்படி சாத்தியமாக முடியும்? இதன் தத்துவத்தை விளக்கிக்கூறவும். **E P. 146 ¶ 1, 2**

(35) Does Matthew's Gospel offer an explanation of the Prophet's words under consideration, "Himself bare our sicknesses"? What is the inferable explanation? Page 124 ¶ 1, 2
35. நாம் மேலே பார்த்துவரும், "அவர்தாமே . . . நம்முடைய நோய்களைச் சுமந்தார்" என்ற தீர்க்கத்தரிசியின் வார்த்தைக்கு மத்தேயு சுவிசேஷமானது விளக்கம் அளிக்கின்றதா? யூகிக்க முடிந்த விளக்கம் என்ன? **E P. 147 ¶ 1, 2**

(36) Did our Lord Jesus use His own physical strength in the healing of sickness or was it done by special outside strength supplied? Page 124 ¶ 3
36. நம்முடைய ஆண்டவராகிய இயேசு, நோய்களைக் குணப்படுத்துவதற்குத் தம்முடைய சொந்த சரீர பலத்தைப் பயன்படுத்தினாரா அல்லது அவருக்கு அருளப்பட்ட விசேஷித்த வல்லமையினால் செய்யப்பட்டதா? **E P. 148 ¶ 1**

(37) If vitality went forth from Jesus to heal the sick, did it cause Him proportionate weakness, pain, sickness? And can similar instances be cited of others to a less degree? Pages 125, 126
37. நோயாளிகளைக் குணப்படுத்துவதற்கு இயேசுவிடமிருந்து உயிர் ஆற்றல் புறப்பட்டுச் சென்றதினால், அதே அளவு பெலவீனத்தை, வலியை, நோயை அவருக்கு உண்டுபண்ணிற்றா? மேலும் இதே மாதிரி அனுபவம் சற்றுக் குறைவான அளவில் மற்றவர்களுக்கு நிகழ வாய்ப்புள்ளதா? **E P. 149 ¶ 1 - E P. 150 ¶ 1**

(38) Should we say, then, that suffering is the wage of sin which our Lord bore for mankind? Page 126 ¶ 2
38. அப்படியானால், நம்முடைய ஆண்டவர் மனுக்குலத்திற்காகப் பொறுத்துக்கொண்ட பாடே (suffering) பாவத்தின் சம்பளம் என்று நம்மால் சொல்ல முடியுமா? **E P. 151 ¶ 1**

(39) How did our Lord pour out His soul unto death? What part of His experience paid our penalty? Page 127 ¶ 1
39. நம்முடைய ஆண்டவர் தம்முடைய ஆத்துமாவை எவ்வாறு மரணத்தில் ஊற்றினார்? அவருடைய அனுபவத்தின் எந்தப் பகுதியானது நம்முடைய அபராதத்தைச் செலுத்தியது? **E P. 151 ¶ 2**

(40) When our Lord cried, "My God! My God! why has Thou forsaken Me?" whom did He address? and what did the expression imply? Was such an experience necessary? If so, why? Page 127 ¶ 2
40. நம்முடைய ஆண்டவர், "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறிய போது, அவர் யாரிடம் உரையாற்றினார்? மேலும், இந்தச் சொற்றொடர் (expression)

குறிப்பாய்த் தெரிவிப்பது என்ன? இப்படிப்பட்ட அனுபவம் அவசியமாக இருந்ததா? ஆம் என்றால், ஏன்? **E P. 152 ¶ 1**

(41) What was the effect of these trying experiences? What purpose was served? Who will ever profit by them, and how? Page 128
41**.** இப்படிப்பட்ட சோதிக்கும் அனுபவங்களின் விளைவு என்னவாக இருந்தது? இதன் பயன் என்ன? அவைகளால் பயன் அடையக்கூடியவர்கள் யார்? மற்றும் எப்படி? **E P. 153 ¶ 1**

---

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 6

### ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர்
### "தாவீதின் குமாரனும் தாவீதின் ஆண்டவரும்"

(1) Why do we speak of "the Man Christ Jesus" as the Mediator of the Atonement rather than refer to the **Logos**, or pre-human One? Page 129

1. ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தராக, இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பிருந்தவரை அல்லது **லோகோஸைக்** குறிப்பிடுவதற்குப் பதிலாக "மனுஷனாக வந்த கிறிஸ்து இயேசுவை" நாம் குறிப்பிடுவது ஏன்? **E P. 155**

(2) In considering our Lord's genealogy as a man, what is the explanation of the conflict between the accounts in Matthew 1 and Luke 3? Explain why they differ and the value of the two, and why one says that Joseph was the son of Heli while the other declares him the son of Jacob? Page 129

2. ஒரு மனுஷனாக நமது ஆண்டவருடைய வம்சாவழியைக் கருத்தில்கொள்ளும் போது, மத்தேயு 1-ஆம் அதிகாரம் மற்றும் லூக்கா 3-ஆம் அதிகாரத்தின் பதிவுகளுக்கு இடையிலான முரண்பாட்டின் விளக்கம் என்னவாக இருக்கிறது? அவை ஏன் வேறுபடுகின்றன என்பதையும், அவ்விரண்டுக்குமான மதிப்பு (value) குறித்தும் விளக்கிக்கூறவும். மேலும் ஒரு பதிவு, யோசேப்பை ஏலியின் குமாரன் என்றும், மற்றொரு பதிவு அவரை யாக்கோபின் குமாரன் என்றும் அறிக்கையிட்டிருப்பது ஏன்? **E P. 155**

(3) If Jesus was a descendant of King David by both Joseph's and Mary's lineage, to which is He really accredited? Quote the Scriptures proving the point. Pages 130-132

3. ஒருவேளை இயேசு, யோசேப்பு மற்றும் மரியாள் ஆகிய இருவரின் வம்சாவழியின் மூலம் தாவீதின் சந்ததியாக இருப்பார் என்று சொல்வோமானால், அவர் உண்மையில் யார் வழியாக வந்திருக்க வேண்டும்? இக்காரியத்தை நிரூபிக்கும் வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 156 ¶ 1 - E P. 160 ¶ 2**

(4) Why and how was the line of our Lord's descent changed from Solomon's to Nathan's? Page 133

4. நமது ஆண்டவருடைய வம்சாவழி, சாலொமோனின் வம்சாவழியிலிருந்து நாத்தானின் வம்சாவழிக்கு மாற்றப்பட்டது ஏன்? மற்றும் எப்படி? **E P. 160 ¶ 3 - E P. 161 ¶ 2**

(5) When Jesus' mother poetically sang of the putting down of **the mighty** from their seats and the exalting of those of **low degree**, to what did she refer? Page 133 ¶ 4

5. **பலவான்களை** ஆசனங்களிலிருந்து தள்ளி, **தாழ்மையானவர்களை** உயர்த்தினார் என்று இயேசுவின் தாயார் கவிதை நடையில் பாடினபோது, அவர்கள் மறைமுகமாகக் குறிப்பிட்டது என்ன? **E P. 161 ¶ 3-5**

(6) When did our Lord become the "Righteous **Branch**" of David's stock? When did He become David's **root**? What different thought do the two words express? Page 134 ¶ 1, 2; Page 135 ¶ 3; Page 136

6. நம்முடைய ஆண்டவர் எப்பொழுது தாவீதின் வம்சத்தில் வந்த "நீதியின் **கிளை**" ஆனார்? அவர் எப்பொழுது தாவீதின் **வேர்** ஆனார்? இந்த இரண்டு வார்த்தைகளும் வெளிப்படுத்தக்கூடிய வெவ்வேறு கருத்து என்ன? **E P. 162 ¶ 1, 2; E P. 164 ¶ 2 - E P. 165 ¶ 1**

(7) In John 1:1 the **Logos** is referred to as **a God**; and in Matthew 22:43, 44, we read: "Jehovah said unto My Lord (Master), sit Thou," etc. What is the proper relationship of these statements? When did Christ become Lord both of the dead and living? (Rom. 14:9) Pages 134-136
7. யோவான் 1:1-ஆம் வசனத்தில் **லோகோஸ் ஒரு தேவனாகக்** குறிப்பிடப்படுகிறார்; மேலும் மத்தேயு 22:43-44-ஆம் வசனங்களில், "...வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார்" என்றும் வாசிக்கிறோம். இந்த வாக்கியங்களுக்கான சரியான தொடர்பு என்ன? கிறிஸ்து, மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் எப்பொழுது ஆண்டவர் ஆனார்? (ரோமர் 14:9) **E P. 162 ¶ 3 – 165 ¶ 1**

## இரண்டாம் ஆதாம்

(8) When our Lord is styled the Second Adam, what feature of His work is referred to? Page 137 ¶ 1
8. நம்முடைய ஆண்டவர் இரண்டாம் ஆதாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கும்போது, அவரது வேலையின் எந்த அம்சமானது குறிப்பிடப்படுகிறது? **E P. 165 ¶ 2**

(9) When did our Lord become the Second Adam, and how and when will He regenerate the first Adam and his death-stricken family? Pages 137, 138
9. நம்முடைய ஆண்டவர் எப்போது இரண்டாம் ஆதாம் ஆனார்? மேலும் அவர், முதலாம் ஆதாமையும், மரணத்தால் பாதிக்கப்பட்ட அவரது குடும்பத்தினரையும் எப்பொழுது மற்றும் எப்படி புத்துயிர் கொடுத்து உருவாக்குவார்? **E P. 165 ¶ 2 - E P. 167 ¶ 2**

(10) Did it cost our Lord anything to become the Second Adam? If so, what? Page 138 ¶ 3; Page 139 ¶ 1
10. நம்முடைய ஆண்டவர் இரண்டாம் ஆதாம் ஆவதற்கு விலை ஏதும் கொடுக்கவேண்டி இருந்ததா? ஆம் என்றால், என்ன விலை? **E P. 168 ¶ 1, 2**

(11) How will the Lord's **first** work for His Church correspond with His whole work for the world by and by? Page 139 ¶ 2
11. தம்முடைய சபைக்காக நமது ஆண்டவர் செய்யும் முதல் வேலையானது, விரைவில் உலகத்திற்காக அவர் செய்யப்போகும் முழு வேலையுடன் எவ்வாறு ஒத்திருக்கும்? **E P. 169 ¶ 1**

(12) How is the expression, "Root and Offspring," well illustrated in the Scriptural figure of Christ and the Church (a grape-vine)? Note and explain the figures. Page 140
12. "வேர் மற்றும் கிளை" என்ற சொற்றொடர், கிறிஸ்துவையும் சபையையும் உருவகமாகக் குறிப்பிடக்கூடிய (ஒரு திராட்சச்செடி) வசனத்தில் எவ்வாறு நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது? அந்த உருவகங்களைக் குறிப்பிட்டு, விளக்கிக்கூறவும். **E P. 169 ¶ 2; E P. 170 ¶ 1**

## நித்திய பிதா

(13) What titles are given to our Lord in Isaiah 9:6?
13. ஏசாயா 9:6-ஆம் வசனத்தில், நம்முடைய ஆண்டவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டப்பெயர்கள் என்ன? **E P. 171 ¶ 1**

(14) In what sense should we understand that our Lord Jesus was the Mighty God? How the Wonderful One? How the Counselor or Teacher? How the Prince of Peace? Page 141 ¶ 2
14. நம்முடைய ஆண்டவராகிய இயேசு வல்லமையுள்ள தேவனாக இருந்தார் என்பதை நாம் எவ்விதத்தில் புரிந்துகொள்ள வேண்டும்? அதிசயமானவராக இருப்பதை எவ்வாறு புரிந்துகொள்வது? ஆலோசனை கர்த்தராக அல்லது போதகராக இருப்பதை எவ்வாறு புரிந்துகொள்வது? சமாதான பிரபுவாக இருப்பதை எவ்வாறு புரிந்துகொள்வது? **E P. 172 ¶ 1**

(15) Does the application of the title, the Everlasting Father, to our Lord Jesus, in any manner conflict with the application of such a title to Jehovah? If not, why not? Page 141 ¶ 3
15. நித்திய பிதா என்ற பெயரை நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கும், யேகோவா தேவனுக்கும் பயன்படுத்துவது முரண்பாடாக இருக்குமா? இல்லையெனில், ஏன் இல்லை? **E P. 172 ¶ 2**

(16) Quote one or more Scriptures which refer to the heavenly Father as one person, and to the Son of the Father as another person, and which declares Jehovah to be the Father of our Redeemer. Page 141 ¶ 3
16. பரலோகப் பிதாவை ஒரு நபராகவும், பிதாவின் குமாரனை மற்றொரு நபராகவும், மற்றும் யோகோவா தேவன் நமது மீட்பருடைய பிதா என்பதையும் அறிக்கைசெய்கிற ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 172 ¶ 2**

(17) Is Jesus now the Everlasting Father, or will He become such in the future? Under what circumstances will this be to Him a proper title? Page 141 ¶ 3, 4
17. இயேசு தற்போது நித்திய பிதாவாக இருக்கின்றாரா? அல்லது எதிர்காலத்தில் அவர் அவ்விதம் இருப்பாரா? எந்தச் சூழ்நிலைகளின் கீழ் இது அவருக்கு ஒரு சரியான பெயராக இருக்கும்? **E P. 172 ¶ 2, 3**

(18) What relationship will the perfected world hold at the end of the Millennium to the Son--and what to the Father? Page 141 ¶ 4
18. ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் பூரணமாக்கப்பட்ட உலகமானது குமாரனோடு எவ்வித உறவில் காணப்படுவார்கள்? பிதாவோடு எவ்வித உறவில் காணப்படுவார்கள்? **E P. 172 ¶ 3**

(19) Explain the Scripture which says, "Instead of Thy fathers shall be Thy children," etc. (Psa. 45:16) Who are the fathers and whose children will they become and by what process will the change be effected? Page 142 ¶ 3
19. "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்" என்று சொல்லப்படக்கூடிய வசனத்தை விளக்கிக்கூறவும். (சங்கீதம் 45:16) பிதாக்கள் என்பவர்கள் யார்? அவர்கள் யாருடைய பிள்ளைகளாக மாறுவார்கள்? மற்றும் எந்தச் செயல்முறை மூலம் மாற்றம் நிகழும்? **E P. 173 ¶ 2**

(20) Is our Lord Jesus ever spoken of as the Father of the Church? If not, why not? Page 143 ¶ 1
20. நம்முடைய ஆண்டவராகிய இயேசு எப்போதாவது சபைக்குப் பிதாவாகப் பேசப்பட்டிருக்கிறாரா? இல்லை எனில், ஏன் இல்லை? **E P. 175 ¶ 1**

(21) What is the relationship between Christ and the Church, Scripturally stated? Prove your view by several quotations. Page 144
21. வேதவசனங்களில் கூறப்பட்டுள்ளபடி, கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள உறவுமுறை என்ன? பல்வேறு மேற்கோள்கள் மூலம் உங்கள் கண்ணோட்டத்தை நிரூபிக்கவும். **E P. 176 ¶ 1-4**

(22) If this particular relationship between Christ and the Church is the "mystery" of the Scriptures, explain it and show why. Pages 145-147
22. கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள இந்தக் குறிப்பிட்ட உறவுமுறையானது வேதவாக்கியங்களில் இடம்பெறும் "இரகசியமாய்" இருக்கும் என்றால், அதை விளக்கிக்கூறி, ஏன் என்று காண்பிக்கவும். **E P. 177 ¶ 1 - E P. 180 ¶ 1**

---

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 7

### ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர்
### ''மனுஷகுமாரன்''

(1) How does this title, "The Son of Man," apply to our Lord Jesus, since the Scriptures declare that He was born of a virgin, and since He never acknowledged Joseph as His father? Page 149
1. நம்முடைய ஆண்டவராகிய இயேசு ஒரு கன்னிகைக்குப் பிறந்தார் என்றும், அவர் யோசேப்பை ஒருபோதும் தம்முடைய தந்தை என்று கூறிக்கொள்ளவில்லை என்றும் வேதவசனங்கள் தெரிவிப்பதிலிருந்து, அவருக்கு "மனுஷகுமாரன்" என்ற சிறப்புப்பெயர் எவ்வாறு பொருந்துவதாக இருக்கும்? **E P. 183**

(2) Cite a few of the texts in which our Lord applied to Himself the term, "The Son of Man." Page 150
2. "மனுஷகுமாரன்" என்ற சிறப்புப்பெயரை நம்முடைய ஆண்டவர் தமக்கென்று பொருத்திக்கொண்டுள்ள வசனப்பகுதிகள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 184**

(3) Is this to be applied to our Lord merely respecting His earthly ministry or is it also applied to Him relative to His glory of the future? Page 150
3. இந்தச் சிறப்புப்பெயர் நமது ஆண்டவருடைய பூமிக்குரிய ஊழியம் தொடர்புடைய காரியத்திற்கு மாத்திரம் பொருந்தக்கூடியதாக உள்ளதா? அல்லது அவருடைய எதிர்கால மகிமைக்குத் தொடர்புடைய காரியத்திற்கும் பொருந்தக்கூடியதாக உள்ளதா? **E P. 185**

(4) Since the evidence is conclusive that our Lord Jesus was not Joseph's son, and that His human nature was sacrificed forever, why should He adopt this title which so clearly identifies Him with humanity? Page 151
4. நம்முடைய ஆண்டவராகிய இயேசு யோசேப்பின் குமாரன் அல்ல என்பதற்கும், அவருடைய மாம்சீக சுபாவமானது நித்தியத்திற்கும் பலியாக்கப்பட்டுவிட்டது என்பதற்கும் உறுதியான ஆதாரங்கள் இருப்பதால், மனுஷீகத்தோடு மிகத் தெளிவாக அவரை அடையாளம் காண்பித்த இந்தச் சிறப்புப்பெயரை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டியது ஏன்? **E P. 186 ¶ 1 - 187 ¶ 1**

(5) Who was **The Man** of the human race, aside from our Lord Jesus? Page 152 ¶ 1
5. நமது ஆண்டவராகிய இயேசுவைத் தவிர, மனுஷ சந்ததியின் **மனுஷனாக** (பரிபூரண மனுஷனாக) இருந்தவர் யார்? **E P. 187 ¶ 2**

(6) Quote from the Psalms showing that Adam was ordained of God to be the head of his race. Page 152 ¶ 1
6. ஆதாம் தன்னுடைய சந்ததியினருக்குத் தலையாக இருக்கும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதைக் காண்பிக்கும் சங்கீதத்திலிருந்து மேற்கோள்காட்டவும். **E P. 187 ¶ 2**

(7) Is Christ to inherit that which was originally Adam's? Quote a Scripture in proof of this. Page 152 ¶ 2
7. ஆதியில் ஆதாமுடையதாக இருந்ததை கிறிஸ்து சுதந்தரிக்க வேண்டியிருக்கிறதா? இதை நிரூபிக்கும் வசனப்பகுதி ஒன்றை மேற்கோள்காட்டவும். **E P. 188 ¶ 1**

(8) If Adam's inheritance was lost through sin, how does it come to Christ as **The** Son of **The** man? Page 152 ¶ 2
8. ஆதாமின் சுதந்தரம் பாவத்தினால் பறிபோயிற்று என்றால், அது **மனுஷகுமாரனாக** கிறிஸ்துவுக்கு வந்தது எப்படி? **E P. 188 ¶ 1**

(9) Does the Greek text connected with our Lord's title, "The Son of Man," show any peculiarity? If so, what? Page 153 ¶ 1
9. "மனுஷகுமாரன்" என்ற நமது ஆண்டவருடைய சிறப்புப்பெயருடன் தொடர்புடைய கிரேக்கப் பதமானது ஏதேனும் சிறப்பியல்பைக் காட்டுகிறதா? ஆம் என்றால், அது என்ன? **E P. 188 ¶ 2**

(10) Why should this title, "The Son of Man," apply to our Lord Jesus not only after His resurrection, but after the Millennium--to all eternity? Page 153 ¶ 2
10. "மனுஷகுமாரன்" என்ற இந்தச் சிறப்புப்பெயரானது நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் பொருந்துவதாக மாத்திரம் அல்லாமல், ஆயிர வருஷ அரசாட்சிக்குப் பின்னரும்--நித்தியத்திற்கும்கூட பொருந்துவதாக இருக்க வேண்டியது ஏன்? **E P. 189 ¶ 1**

## மனுஷனாகிய கிறிஸ்து இயேசு

(11) Is it conceded even by enemies of the Gospel that Jesus was a remarkable Personage? If so, on what account? Cite some Scriptures in proof of this. Page 153 ¶ 3
11. சுவிசேஷத்தை எதிர்க்கிறவர்களாலுங்கூட இயேசு ஒரு தனிச்சிறப்புடைய பிரமுகர் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறதா? ஆம் என்றால், எதன் அடிப்படையில்? இதை நிரூபிக்கும் வேதவசனங்கள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 189 ¶ 2**

(12) What was the significance of Pilate's expression, "Behold the Man"? Where should the emphasis be laid and what significance should be attached to his words? Page 154
12. "இதோ, இந்த மனுஷன்" என்று பிலாத்து பேசின வாசகத்தின் முக்கியத்துவம் என்னவாக இருந்தது? அவருடைய வார்த்தைகளில் எங்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்? மேலும், அவருடைய வார்த்தைகளோடுகூட இணைக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் என்ன? **E P. 190**

(13) Quote Rousseau's eulogy on "**The** Son of **The** Man" Page 154 ¶ 2
13. **"மனுஷகுமாரன்"** குறித்து ரூசோ என்பவரின் புகழுரையை மேற்கோள்காட்டவும். **E P. 190 ¶ 1; E P. 191 ¶ 1**

(14) Quote Napoleon Bonaparte's eulogy on "The Man Christ Jesus." Page 155
14. "மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" குறித்து நெப்போலியன் போனபார்ட் சொன்ன புகழாரத்தை மேற்கோள்காட்டவும். **E P. 192 ¶ 1, 2, 3**

(15) Why should the world be excusable for considering Jesus more than a man? Page 155 ¶ 4
15. இயேசுவை ஒரு சாமான்ய மனிதருக்கும் மேலானவராகக் கருதும் விஷயத்தில் உலகம் மன்னிக்கப்பட வேண்டியது ஏன்? **E P. 193 ¶ 1**

(16) Was He not more than a man-not only more than sinful man, but more even than a perfect man? Where, how and when did He receive this greatness? Page 155 ¶ 4
16. அவர் ஒரு மனுஷனைவிட மேலானவராக இருக்கவில்லையா - பாவ மனுஷனைவிட மேலானவராக மாத்திரம் அல்லாமல், மாறாக ஒரு பரிபூரண மனுஷனை விடவும் மேலானவராக இருக்கவில்லையா? இந்த மேன்மையை அவர் எங்கு, எப்படி மற்றும் எப்பொழுது பெற்றார்? **E P. 193 ¶ 1**

## நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது

(17) Quote the text of Isaiah 53:2 and show comparison with Leeser's or Young's translation.
17. ஏசாயா 53:2-ஆம் வசனப்பகுதியை மேற்கோள்காட்டி, அதை லீசர் மொழிபெயர்ப்பு அல்லது யங்ஸ் மொழிபெயர்ப்புடன் ஒப்பிட்டுக் காண்பிக்கவும்.

(18) Does this Scripture imply that our Lord Jesus was of mean personal appearance? Page 156 ¶ 2
18. நம்முடைய ஆண்டவராகிய இயேசு விரும்பத்தக்க தோற்றம் இல்லாதவராக இருந்தார் என்பதாக இந்த வசனம் குறிப்பிடுகிறதா? **E P. 193 ¶ 3**

(19) Mention various views of honorableness, beauty, etc., and show which of these ideals our Lord disappointed and why. Page 156 ¶ 3
19. கண்ணியம், அழகு, போன்ற பலதரப்பட்ட பார்வைகளைக் குறிப்பிட்டு, இவைகளில் எந்தெந்த எதிர்பார்ப்புகளுக்கு இசைவாக நம்முடைய ஆண்டவர் காணப்படவில்லை? மற்றும் ஏன்? **E P. 194 ¶ 1**

(20) What were the Scribes, Pharisees, and rulers of the Jews expecting in Messiah and His reign? and how did our Lord disappoint these expectations? Page 157; Page 158 ¶ 1
20. வேதபாரகர்களும், பரிசேயர்களும், யூதர்களின் அதிகாரிகளும், மேசியா விஷயத்திலும் அவருடைய அரசாட்சி விஷயத்திலும் எதிர்பார்ப்பாகக் கொண்டிருந்தது என்ன? மேலும், நம்முடைய ஆண்டவர் இந்த எதிர்பார்ப்புகளுக்குக் கொடுத்த ஏமாற்றம் என்ன? **E P. 194 ¶ 2 - E P. 196 ¶ 1**

(21) In what respect was our Lord's appearance undesirable and disappointing to those men? Page 158 ¶ 2
21. நமது ஆண்டவருடைய தோற்றம் எந்த வகையில் அந்த மனுஷருக்கு விரும்பத்தக்கதாக இல்லாமலும், ஏமாற்றம் அளித்ததாகவும் இருந்தது? **E P. 196 ¶ 2**

(22) What can we say of the expression, "His visage was so marred"? Is it not out of harmony with what we should expect of a perfect man and what we should expect in the light of various Scriptures referring to our Lord? Page 158 ¶ 3
22. "அவருடைய ரூபம், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே" என்ற சொற்றொடரைக்குறித்து நாம் என்ன சொல்லக்கூடும்? ஒரு பரிபூரண மனுஷன் எப்படி இருப்பார் என்று நாம் எதிர்பார்போமோ அதற்கு இது இசைவில்லாததுபோல் காணப்படவில்லையா? மேலும், நமது ஆண்டவரைக்குறித்த பல்வேறு வேதவசனங்களின் வெளிச்சத்திலிருந்து நாம் எதிர்பார்க்க வேண்டியது என்ன? **E P. 197 ¶ 1**

(23) Give a better translation of the passage of this prophecy and show its application. Page 159 ¶ 1, 2
23. இந்தத் தீர்க்கத்தரிசன பகுதிக்கான சிறந்த மொழிப்பெயர்ப்பைக் கொடுத்து, அதன் பயன்பாட்டைக் காண்பிக்கவும். **E P. 197 ¶ 2; E P. 198 ¶ 1**

(24) If our Lord was "touched with a feeling of our infirmities," might not this include possible lines of sadness on His face? Explain this fully. Page 159 ¶ 3
24. நமது ஆண்டவர், "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடியவர்" என்றால், இது அவருடைய முகத்தில் போதுமான அளவு சோகத்தை வெளிப்படுத்துவதையும் உள்ளடக்கியிருக்கக்கூடும் அல்லவா? இதை முழுமையாக விளக்கிக்கூறவும். **E P. 198 ¶ 2**

(25) Would our Lord, the Perfect One, suffer more or less from His environment because of His perfection? Page 160 ¶ 1
25. பரிபூரணரான நம்முடைய ஆண்டவர், அவருடைய பரிபூரணத்தினிமித்தம் அவருடைய சுற்றுப்புற சூழ்நிலையிலிருந்து ஏறத்தாழ பாதிப்புக்குள்ளாகி இருப்பாரா? **E P. 199 ¶ 1**

(26) How did these outward conditions probably affect our Lord's personal appearance? And would these conditions assist in His appreciating human conditions sympathetically? Page 160 ¶ 2
26. இந்த வெளிப்புறச் சூழ்நிலைகளானது நமது ஆண்டவருடைய தனிப்பட்ட தோற்றத்தை எவ்வாறு பாதித்தது? மேலும், இந்தச் சூழ்நிலைகளானது மனித நிலைமைகளை அனுதாபத்துடன் புரிந்துணர அவருக்கு உதவியிருக்குமா? **E P. 199 ¶ 2**

(27) Review the questions of this lesson and point out what beauty there is in the expression, "The Chiefest among ten thousand." Page 161 ¶ 1
27. இந்தப் பாடத்தின் கேள்விகளை மறுஆய்வு செய்து, "பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்" என்ற சொற்றொடரில் காணப்படும் அழகைச் சுட்டிக்காண்பிக்கவும். **E P. 200 ¶ 1 - E P. 201 ¶ 2**

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் V மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 8

### "ஒப்புரவாகுதலின் மார்க்கம் தேவனுடைய பரிசுத்த ஆவி"

(1) Does the Holy Spirit have an important part in connection with the Reconciliation or At-One-Ment of the Church of God? If so, what is its part? And why could we not without it appreciate the Divine will or understand the "deep things" of God's promises? Pages 163, 164

1. தேவனுடைய சபையின் ஒப்புரவாகுதலோடு தொடர்புடைய விஷயத்தில் பரிசுத்த ஆவிக்கு ஒரு முக்கிய பங்கு உள்ளதா? ஆம் என்றால், அதன் பங்கு என்ன? மேலும், இது இல்லாமல் தெய்வீகச் சித்தத்தைப் புரிந்து உணரவோ அல்லது தேவனுடைய வாக்குத்தத்தங்களின் "ஆழங்களை" புரிந்துகொள்ளவோ நம்மால் கூடாதது ஏன்? **E P. 203, 204**

(2) Will the Holy Spirit be an instrumentality of blessing to the world also during the Millennium? Quote a Scripture in proof of this. Page 163; Page 164 ¶ 1

2. இந்தப் பரிசுத்த ஆவி ஆயிர வருட அரசாட்சியின் போதும்கூட உலகத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரக்கூடிய கருவியாகச் செயல்படுமா? இதை நிரூபிக்கும் வசனப்பகுதி ஒன்றை மேற்கோள்காட்டவும். **E P. 203, 204, 205**

(3) What reason can be assigned for the blessing of the world being mentioned by the Prophet in advance of the blessing of the Church, when really other Scriptures show us that the order was reversed? Page 164, foot-note

3. உண்மையில் மற்ற வசனங்கள் இந்த வரிசை தலைகீழாக இருப்பதை நமக்குக் காண்பிக்கும்போது, தீர்க்கதரிசி, சபையின் ஆசீர்வாதத்தைக் குறிப்பிடுவதற்கு முன்னதாகவே உலகத்தின் ஆசீர்வாதத்தைக் குறித்து குறிப்பிடப்பட்டிருப்பதற்கான காரணமாகக் கூறமுடிவது என்ன? (அடிக்குறிப்பு தமிழ் தொகுதியில் மொழிப்பொயர்க்கப்படவில்லை)

(4) Quote another Scripture in the New Testament which shows that the Holy Spirit will operate during the Millennium for the blessing and assistance of the world--Rev. 22:17. Page 165

4. உலகத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், உதவிக்காகவும் ஆயிர வருட அரசாட்சியின்போது பரிசுத்த ஆவி கிரியைசெய்யும் என்பதைக் காண்பிக்கக்கூடிய மற்றொரு வசனப்பகுதியைப் புதிய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள்காட்டவும்--வெளிப்படுத்தல் 22:17. **E P. 205 ¶ 1** (பிற்பகுதி)

(5) What doctrine arose in the Church after the death of the Apostles-after the New Testament had been completed--and beclouded the Truth in general and the operations of the Holy Spirit in particular? Page 165 ¶ 1

5. அப்போஸ்தலர்கள் நித்திரை அடைந்த பின்னர் - புதிய ஏற்பாடு எழுதிமுடிக்கப்பட்ட பின்னர் - சபையில் மேலெழுந்து, பொதுவாக சத்தியத்தையும், குறிப்பாக பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளையும் மங்கப்பண்ணின உபதேசம் என்ன? **E P. 206 ¶ 1**

(6) Does the word Trinity or Trinitarian occur in the Bible? If not, by what authority are these terms so generally applied as names of doctrines, churches, etc.? Are the Scriptures consistent and harmonious on the subject of the relationship of the Father to the Son and the Holy Spirit, and how? Page 165 ¶ 2

6. திரித்துவம் என்ற வார்த்தை வேதாகமத்தில் இடம்பெறுகிறதா? இல்லை என்றால், எந்த அதிகாரத்தின் கீழ் இந்தப் பெயர்கள் மிகவும் பரவலாக உபதேசங்கள், சபைகள் போன்றவைகளுக்குப் பெயர்களாக வழங்கப்படுகின்றன? குமாரனோடும், பரிசுத்த ஆவியோடும் பிதாவுக்கு இருக்கும் உறவு குறித்து விவரிக்கும் வசனங்கள் இசைவாகவும், இணக்கமாகவும் உள்ளதா? மற்றும் எப்படி? **E P. 206 ¶ 2**

(7) Is the expression, "These three, the Father, the Son, and the Holy Spirit, one in substance, equal in power and glory," a Scriptural quotation? If not, where is it found? Page 165 ¶ 2
7. "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் ஒருவராயிருக்கின்றனர், இம்மூவரும் சம வல்லமை, சம மகிமை உடையவர்கள்" என்ற சொற்றொடரானது, வேதவசனத்தின் அடிப்படையிலான மேற்கோளா? இல்லை என்றால், இது எங்குக் காணப்படுகிறது? **E P. 206 ¶ 2**

(8) Explain how three persons could be one person, or how one person could be three persons. And if merely one in kind or substance be meant, and not one in person, where could be the proof of Their equality, since the Father is always mentioned first-- mentioned as the God and Father of our Lord and Savior Jesus Christ? Page 166
8. மூன்று நபர்கள் எப்படி ஒரு நபராக இருக்க முடியும், அல்லது ஒரு நபர் எப்படி மூன்று நபர்களாக இருக்க முடியும் என்பதை விளக்கிக்கூறவும். மேலும் நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும், பிதாவுமாகக் குறிப்பிடப்படுபவர் - எப்போதும் முதலாவதாகக் குறிப்பிடப்படுகிறபடியால், ஆள் தத்துவத்தில் ஒன்றாக இருப்பதை அர்த்தப்படுத்தாமல், பண்பில் ஒன்றாகவோ அல்லது ஆள் தத்துவத்தில் ஒன்றாகவோ இருப்பதை மாத்திரம் அர்த்தப்படுத்துமானால், அவர்கள் சமத்துவமானவர்கள் என்பதற்கான நிரூபணம் எங்குக் காணப்பட முடியும்? **E P. 206 ¶ 2**; **E P. 207 ¶ 1**

(9) Give references to the Holy Spirit under sixteen different terms or titles in the New Testament. Page 167. (Mention some terms applied in Scripture to an **opposing spirit**, as signifying in general the **wrong spirit**-the spirit, disposition or power which has its chief exemplification in Satan; the spirit manifesting itself in all who are in harmony with sin and Satan). Page 168 ¶ 1
9. பரிசுத்த ஆவிக்கு, புதிய ஏற்பாட்டில் உள்ள பதினாறு வெவ்வேறு சிறப்புப் பெயர்களின் கீழ்க் காணப்படும் குறிப்புகளைக் கொடுக்கவும். **E P. 208 ¶ 1 - 209 ¶ 2** (பொதுவாக **பொல்லாத ஆவி** என்று குறிப்பிடக்கூடிய - அதாவது, சாத்தானில் பிரதானமாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் ஆவி, குணம்/மனநிலை அல்லது வல்லமை மற்றும் பாவத்தோடும், சாத்தானோடும் இசைவாக இருப்பவர்கள் எல்லாரிடத்திலும் வெளிப்படுகிற ஆவியாகிய **எதிர்க்கிற ஆவி**/தீமையான ஆவிக்கு வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சில அடைமொழிகளைக் குறிப்பிடவும்.) **E P. 210 ¶ 1**

(10) Is the term Holy Ghost the same in meaning as Holy Spirit? Why the two translations? Which is preferable? Cite standard authorities. Page 168 ¶ 2
10. Holy Ghost என்ற வார்த்தைக்கு பரிசுத்த ஆவிக்கு உரிய அதே அர்த்தத்தையே குறிக்குமா? ஏன் இந்த இரண்டு மொழிப்பெயர்ப்புகள்? எது உகந்த வார்த்தையாக உள்ளது? தரமான சான்றுகளை (authorities) மேற்கோள்காட்டவும். **E P. 210 ¶ 2**

(11) What authority is there for speaking of the Holy Spirit as a separate person from the Father and the Son--the "third person" of the Trinity? Cite Scriptures showing that it signifies, not a person, but the spirit of a person. Page 169 ¶ 1
11. பரிசுத்த ஆவியை, பிதா மற்றும் குமாரனிடமிருந்து ஒரு தனி நபராக - அதாவது, திரித்துவத்தின் "மூன்றாவது நபராக" எதன் அடிப்படையில் பேசப்படுகிறது? அது ஒரு நபர் அல்ல, மாறாக ஒரு நபரின் ஆவி என்பதை அடையாளப்படுத்திக் காட்டக்கூடிய வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 211 ¶ 1**

(12) When the pronouns he, whom, him, and his are used in respect to the Holy Spirit, what is the signification? Does this teach or imply personality? Page 170 ¶ 1, 2
12. He, whom, him and his என்ற பிரதிப்பெயரைப் பரிசுத்த ஆவிக்குப் பயன்படுத்தும்போது, அதன் உட்பொருள் என்னவாக இருக்கிறது? இது தனிமனித நிலையைப் போதிக்கவோ அல்லது சுட்டிக்காட்டவோ செய்கிறதா? **E P. 212 ¶ 1; E P. 213 ¶ 1**

(13) Do other translations use the same terms? Cite some illustrations where the same Greek word is rendered in the feminine and others in which it is rendered in the neuter gender. Page 170 ¶ 3; Pages 171, 172
13. மற்ற மொழிப்பெயர்ப்புகளும் அதே சொற்களையே பயன்படுத்துகின்றதா? அதே கிரேக்க வார்த்தையானது பெண்பாலிலும், மற்றவை பொதுப்பாலிலும் மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 213 ¶ 2 - E P. 216**

(14) What is the meaning of the term Holy Spirit, as used in the Scriptures? What qualities or powers are represented by the term? Give illustrations of the use of the Hebrew word **ruach** and the Greek word **pneuma**. Pages 173, 174
14. வேதவசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதுபோன்று, பரிசுத்த ஆவி என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? இந்த வார்த்தையின்மூலம் குறிப்பிடப்படும் குணநலன்கள் அல்லது வல்லமைகள் என்ன? **ருவாக்** என்ற எபிரெய வார்த்தை மற்றும் **நியூமா** என்ற கிரேக்க வார்த்தையின் பயன்பாடு குறித்த எடுத்துக்காட்டுகளை அளிக்கவும். **E P. 216 ¶ 1 - E P. 219**

(15) What sense attaches to the word "spirit," when we say that God is a Spirit? Page 174, last par.
15. தேவன் ஆவியாயிருக்கிறார் என்று நாம் கூறும்போது, "ஆவி" என்ற வார்த்தையோடு இணைகிற அர்த்தம் என்ன? E P. 219 கடைசி பத்தி முதல் **E P. 220 ¶ 3** வரை

(16) What is signified by the statement that "the spirit moved on the face of the waters," in the account of creation? (Gen. 1:2) Was this an intelligent moving? Page 175 ¶ 1
16. சிருஷ்டிப்பு குறித்த பதிவில், "தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்" என்ற வாக்கியத்தினால் அடையாளப்படுத்துவது என்ன? (ஆதியாகமம் 1:2) இது ஒரு நபரின் அசைவாக இருந்ததா? **E P. 220 ¶ 4 - E P. 221 ¶ 1**

(17) The Apostle says that "Holy men of old spoke and wrote as they were moved of the Holy Spirit." In what sense did it move them? Page 175 ¶ 1
17. "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். எந்த வகையில் அது அவர்களை ஏவிற்று? **E P. 221 ¶ 2, 3**

(18) Give an illustration of the Spirit of God working in the hearts of cunning craftsmen, and explain the nature of the operation. Page 175 ¶ 2
18. முத்திரை வெட்டாய் வெட்டிப் பதிக்கிறதற்காகக் கைவினைஞர்களின் இருதயங்களில் தேவனுடைய ஆவி செயல்படுவது குறித்த எடுத்துக்காட்டைக் கொடுக்கவும். மேலும், அது செயல்படும் தன்மைக்குறித்து விளக்கவும். **E P. 221 ¶ 4, 5**

(19) When the Lord put His Spirit upon Moses, and subsequently upon the elders of Israel, what did it signify? What was its operation? Is there anything to indicate that it was a person that was distributed amongst them? Page 176 ¶ 1
19. கர்த்தர் மோசேயின் மீதும், அதன்பின் இஸ்ரயேலின் மூப்பர்கள் மீதும் தமது ஆவி வைக்கப்பட்டபோது/ஊற்றினபோது, அது சுட்டிக்காட்டினது என்ன? அதன் செயல்பாடு என்னவாக இருந்தது? அவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது ஒரு நபர் என்ற ரீதியில் சுட்டிக்காண்பிக்கும்படியாக அங்கு ஏதேனும் உள்ளதா? **E P. 222 ¶ 1**

(20) Was the Holy Spirit manifested in the same manner before Pentecost as subsequently? Cite some Scriptures in proof of the answer. Page 176 ¶ 2, 3
20. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னர் பரிசுத்த ஆவி வெளியரங்கமாக அருளப்பட்டதுபோல, அதற்கு முன்னர் வெளியரங்கமாக அருளப்பட்டதா? இந்தப் பதிலுக்கு நிரூபணமாக வசனங்கள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 222 ¶ 2 - E P. 223 ¶ 3**

(21) In what sense was the Holy Spirit granted at Pentecost different from any previous presentation? To whom and for what purpose was it granted? Page 177 ¶ 1
21. பெந்தெகொஸ்தே நாளன்று அருளப்பட்ட பரிசுத்த ஆவியானது, இதற்கு முன் அருளப்பட்டதிலிருந்து எந்த விதத்தில் வேறுபடுகிறது? யாருக்காக மற்றும் எந்த நோக்கத்திற்காக அது அருளப்பட்டது? **E P. 224 ¶ 1**

(22) In what respect does this manifestation differ from the previous manifestation of the Spirit? Give Scriptural citation in proof of answer. Page 177 ¶ 2; Page 178 ¶ 1
22. ஆவியின் இந்த வெளிப்பாடு முந்தைய அதன் வெளிப்பாட்டிலிருந்து எந்த வகையில் வேறுபடுகிறது? பதிலுக்கு நிரூபணமாக வசனத்தின் அடிப்படையிலான மேற்கோள்களை அளிக்கவும். **E P. 224 ¶ 2 - E P. 226 ¶ 1**

(23) Does the Holy Spirit as it now operates in the Church always manifest itself in the same manner? Demonstrate the answer from the Scriptures. Page 178 ¶ 2
23. இன்று சபையில் செயல்படுகின்ற பரிசுத்த ஆவியானது, எப்பொழுதும் ஒரே மாதிரியான விதத்தில்தான் வெளிப்படுமா? வசனத்திலிருந்து பதிலை விவரிக்கவும். **E P. 226 ¶ 2**

(24) Is there a difference between the Holy Spirit and the gifts of the Spirit, and what relationship do they bear to each other? Give Scriptural quotations proving the answer. Page 179 ¶ 1
24. பரிசுத்த ஆவிக்கும், ஆவியின் வரங்களுக்கும் இடையில் வேறுபாடு ஏதேனும் உள்ளதா? மேலும், இவைகளுக்கு இடையிலான சம்பந்தம் என்ன? இதற்கான பதிலை நிரூபிக்கும் வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 226 ¶ 3**

(25) Were the gifts of the Spirit such as would vanish away? Does this signify that the Spirit would cease to operate, or that thereafter it would be differently manifested? Page 179 ¶ 2
25. இப்படிப்பட்ட ஆவியின் வரங்கள் ஒழிந்துபோகுமா? இது, ஆவி செயல்படுவதை நிறுத்திவிடும் என்பதை அடையாளப்படுத்துகிறதா? அல்லது அதன்பிறகு அது வேறு விதத்தில் வெளிப்படுத்தப்படும் என்பதை அடையாளப்படுத்துகிறதா? **E P. 227 ¶ 1**

(26) Is there a difference between the gifts of the Spirit, which were miraculous, and the personally developed fruits of the Spirit? Explain the difference with Scriptural references. Page 180 ¶ 1
26. அற்புதமான விதத்தில் வெளிப்பட்ட ஆவியின் வரங்களுக்கும், தனிப்பட்ட முறையில் உருவாக்கப்பட்ட ஆவியின் கனிகளுக்கும் இடையே வேறுபாடு ஏதேனும் உள்ளதா? வசனக் குறிப்புகளுடன் வேறுபாட்டை விளக்கிக்கூறவும். **E P. 228 ¶ 1-4**

(27) What are the fruits of the Spirit, and how do they differ from its gifts? Page 180 ¶ 2
27. ஆவியின் கனிகள் என்னென்ன? மேலும், அவை ஆவியின் வரங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? **E P. 229 ¶ 1-3**

(28) Explain the different manifestations of the Spirit and the different objects served. Page 181 ¶ 1
28. ஆவியின் வெவ்வேறு வெளிப்பாடுகளையும், அது நிறைவேற்றிட்ட வெவ்வேறு நோக்கங்களையும் விளக்கிக்கூறவும். **E P. 230 ¶ 1; E P. 231 ¶ 1**

(29) Is the term Spirit of God sometimes used in a similar manner as we use the expression, spirit of man, or mind of man? Give some instances. Page 182
29. சிலசமயங்களில் மனுஷனுடைய ஆவி அல்லது மனுஷனுடைய சிந்தை என்று நாம் பயன்படுத்தக்கூடிய சொற்றொடரைப் போலவே தேவனுடைய ஆவி என்ற சொற்றொடரும் அதே விதத்தில் பயன்படுத்தப்பட்டதா? சில உதாரணங்கள் கொடுக்கவும். **E P. 231 ¶ 2 - E P. 232 ¶ 3**

(30) Give three senses in which the term Spirit of God may be understood; also some illustrations. Page 183
30. தேவனுடைய ஆவி என்ற சொல்லைப் புரிந்துகொள்ளக்கூடிய மூன்று விதங்களை/கோணங்களை அளிக்கவும்; சில எடுத்துக்காட்டுகளையும் அளிக்கவும். **E P. 232 ¶ 3 - E P. 233 ¶ 3**

(31) The Spirit of God is said to be given sometimes in measure and again without measure. What do these statements imply? Could they be applied to a person or only to the spirit of a person? Page 184 ¶ 1
31. தேவனுடைய ஆவி சில சமயங்களில் அளவோடு கொடுக்கப்படுவதாகவும் (அருளப்படுவதாகவும்) மீண்டுமாக அளவில்லாமல் கொடுக்கப்படுவதாகவும் (அருளப்படுவதாகவும்) சொல்லப்படுகிறது. இந்த வாக்கியங்கள் சுட்டிக்காட்டுவது என்ன? அவை ஒரு நபருக்குப் பொருந்தக்கூடியதா அல்லது ஒரு நபரின் ஆவிக்கு மாத்திரமே பொருந்தக்கூடியதா? **E P. 234 ¶ 1**

(32) Can any but consecrated believers receive the Holy Spirit at all? And how may these increase their measure? Page 185 ¶ 1
32. அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளைத் தவிர வேறு யாராவது பரிசுத்த ஆவியைப் பெற முடியுமா? மேலும், இவர்கள் தங்கள் (ஆவியின்) அளவை எவ்வாறு அதிகரிக்கலாம்? **E P. 236 ¶ 1, 2**

(33) Quote a number of the uses of the word **spirit** and explain, if possible, how these could possibly be used in reference to a person-"spirit of truth," "spirit of the Father," etc. Page 185, Page 186 ¶ 1
33. **ஆவி** என்ற வார்த்தையின் பல பயன்பாடுகளை மேற்கோள்காட்டி, கூடுமானால், "சத்திய ஆவி," "பிதாவின் ஆவி" போன்றவை எவ்வாறு ஒரு நபரைக்குறிக்கும் வகையில் பயன்படுத்தப்படக்கூடும் என்பதை விளக்கவும். **E P. 236**

(34) If the Spirit of the Father means another God, how should we understand the words "spirit of the world," "spirit of error," "spirit of Satan," etc? Page 186 ¶ 2
34. பிதாவின் ஆவி என்பது வேறொரு தேவனைக்குறிக்கும் என்றால், "உலகத்தின் ஆவி" "தப்பறையின் ஆவி" "சாத்தானின் ஆவி" போன்ற வார்த்தைகளை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? **E P. 237 ¶ 1**

(35) What is meant by the term spirit of Anti-Christ, and how should we be on guard against it? Page 187 ¶ 1
35. அந்திக் கிறிஸ்துவின் ஆவி என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? மேலும், அதற்கு எதிராக நாம் நம்மை எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும்? **E P. 238 ¶ 1, 2**

(36) Do the holy and unholy influences or spirits at work in the world imply that there is no personal God or no personal Satan? Page 187 ¶ 2
36. இவ்வுலகத்தில் கிரியை செய்துவருகிற பரிசுத்த மற்றும் அசுத்த ஆவிகள் அல்லது வல்லமைகள் என்பது கடவுள் என்ற ஒருவர் இல்லை என்றோ அல்லது சாத்தான் என்ற ஒருவர் இல்லை என்றோ குறிப்பாகத் தெரிவிக்கிறதா? **E P. 238 ¶ 3**

(37) If it be agreed that the Bible teaches that "God is a Spirit," and that He is holy, hence a Holy Spirit, what distinctions should we properly observe as between this expression and the other one-God's Holy Spirit? Page 188
37. "தேவன் ஆவியாயிருக்கிறார்" என்றும், அவர் பரிசுத்தர், ஆகையால் பரிசுத்த ஜீவியாக இருக்கிறார் என்றும் வேதம் போதிக்கிறதாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இந்த அறிக்கைக்கும், தேவனுடைய பரிசுத்த ஆவி என்ற மற்றொரு அறிக்கைக்கும் இடையே நாம் சரியாகக் கூர்ந்து கவனிக்கவேண்டிய வேறுபாடு என்ன? **E P. 239 ¶ 1**

(38) Who besides the Creator must by His arrangement have the Holy Spirit if they would have His approval? Page 188 ¶ 1
38. சிருஷ்டிகரின் அங்கீகரிப்பைப் பெற வேண்டுமானால், அவரைத் தவிர அவருடைய ஏற்பாட்டில் வேறு யார் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வேண்டும்? **E P. 239 ¶ 1**

(39) If Satan is a spirit being, has he also a spirit or disposition? and have his associates, the demons? Page 188 ¶ 1
39. சாத்தான் ஓர் ஆவியின் ஜீவியாக இருந்தால், அவரும்கூட ஓர் ஆவியோ அல்லது மனநிலையோ பெற்றவராக இருக்கிறாரா? மேலும், அவருடைய கூட்டாளிகள் யாவரும் பிசாசுகளாக இருக்கின்றனரா? **E P. 239 ¶ 1**

(40) What do we know of battlings between these two classes of spirit beings-the "holy" and the "unclean"? **Where Is the battleground and when did the contest begin?** Page 189
40. "பரிசுத்தமான" மற்றும் "அசுத்தமான" இரண்டு வகையான ஆவியின் ஜீவிகளுக்கிடையிலான யுத்தங்கள் குறித்து நாம் அறிந்திருப்பது என்ன? **யுத்தக் களம் எங்குள்ளது? மற்றும் போர் எப்போது துவங்கியது? E P. 240 ¶ 1 - E P. 242 ¶ 1**

(41) Which contestant gains the victory and why? What is the twofold mission of the Spirit of holiness? Explain the entire subject. Pages 190, 191
41. வெற்றி பெற்ற போட்டியாளர் யார்? மற்றும் ஏன்? பரிசுத்தமான ஆவியின் இருதரப்பட்ட ஊழியம் (பணி) என்னவாக இருக்கிறது? முழுக் காரியத்தையும் விளக்கிக்கூறவும். **E P. 243 ¶ 1; E P. 244 ¶ 2**

(42) Why the apparent weakness of the right spirit, and those under its sway? Will it always be thus? What say the Scriptures? Page 192
42. சரியான ஆவியினுடைய வெளிப்படையான பலவீனங்களும், அதற்குக் கீழ் இருப்பவர்களும் ஊசலாடுவது ஏன்? இது, எப்போதும் இப்படியே இருக்குமா? வேதவாக்கியங்கள் என்ன சொல்கிறது? **E P. 245 ¶ 1; E P. 246 ¶ 1**

(43) Does the same principle apply to the individual as well as to the Church? How is this matter generally understood? Page 193 ¶ 1, 2
43. அதே கொள்கையானது தனி நபருக்கும் அதேசமயம் சபைக்கும் பொருந்துமா? பொதுவாக இவ்விஷயம் எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகிறது? **E P. 247 ¶ 1, 2**

(44) What is the right spirit which should be renewed in us? What kind of a consecration secures the begetting of the Holy Spirit? Pages 194, 195
44. நம்மில் புதுப்பிக்கப்பட வேண்டிய சரியான ஆவி என்ன? எவ்வகையான அர்ப்பணிப்பு பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலைக் கொண்டுவருகின்றது? **E P. 248, 249**

(45) What is it to be spiritually minded? And does this condition now lack perfection, and why? Page 195 ¶ 2, 3
45. ஆவிக்குரிய சிந்தையோடிருப்பது என்பது என்ன? மேலும், இந்த நிலை தற்போது பூரணமற்றதா? மற்றும் ஏன்? **E P. 250 ¶ 1, 2**

(46) What is the thought behind the word "holy"? Page 196 ¶ 1
46. "பரிசுத்தம்" என்ற வார்த்தையின் பின்னால் உள்ள கருத்து என்ன? **E P. 251 ¶ 1**

(47) What shall we think of the "spirit of fear" and the "spirit of error"? and how should we get rid of these? Pages 196 ¶ 2, 3; 197 ¶ 1
47. "பயத்தின் ஆவி" மற்றும் "தப்பறையின் ஆவி" குறித்து நாம் என்ன நினைப்பது? மேலும், இவைகளை நாம் எப்படி அகற்றுவது? **E P. 251 ¶ 2 - E P. 252 ¶ 1**

(48) What do we know of the "spirit of faith"? "the spirit of Truth"? "the spirit of holiness"? Pages 197, 198, 199
48. "விசுவாசத்தின் ஆவி," "சத்திய ஆவி," "பரிசுத்த ஆவி" குறித்து நாம் அறிந்திருப்பது என்ன? **E P. 252 ¶ 2 - E P. 255**

(49) Are all mankind dual beings, that is to say, can all be spoken of as having an old mind and a new mind or man? If not, why not? Give the proofs of the answer. Page 199 ¶ 2
49. மனுக்குலத்தார் அனைவருமே, இரட்டை ஜீவிகளா? அதாவது, அனைவருமே பழைய சிந்தையும், புதிய சிந்தையும் அல்லது பழைய மனுஷனையும், புதிய மனுஷனையும் உடையவர்களாகச் சொல்லப்படலாமா? இல்லையென்றால், ஏன் இல்லை? பதிலுக்குரிய ஆதாரங்களை அளிக்கவும். **E P. 256 ¶ 1**

(50) What does the Apostle Paul say regarding the conflict between the flesh and the spirit in those who have been Spirit-begotten? Page 200
50. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாய் இருப்பவர்களிடத்தில் மாம்சத்துக்கும், ஆவிக்கும் இடையில் உண்டாகும் போராட்டம் குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறுவது என்ன? **E P. 256 ¶ 2 - E P. 257 ¶ 2**

(51) How are the spirit-begotten children of God taught of God through the Spirit? Give illustrations. Page 201
51. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், ஆவியின் மூலமாக தேவனால் எவ்வாறு போதிக்கப்படுகிறார்கள்? எடுத்துக்காட்டுகள் தரவும். **E P. 258 ¶ 1 - E P. 259 ¶ 2**

(52) How may the Spirit-begotten ones know things which the natural man cannot appreciate, and why? Page 202
52. ஜென்ம சுபாவமான மனுஷனால் புரிந்துணரமுடியாத காரியங்களை ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களால் எவ்வாறு அறிந்துகொள்ள முடிகிறது? மற்றும் ஏன்? **E P. 259 ¶ 3; E P. 260 ¶ 1**

(53) Why is the Holy Spirit styled the Comforter? Give illustrations of the operation of the Holy Spirit. Page 203
53. பரிசுத்த ஆவி, தேற்றரவாளன் என்று அழைக்கப்படுவது ஏன்? பரிசுத்த ஆவியின் செயல்பாடு குறித்து எடுத்துக்காட்டுகள் தரவும். **E P. 260 ¶ 2 - E P. 261 ¶ 3**

(54) Does anything connected with the Scriptural use of the term "Holy Spirit," either directly or indirectly imply another God or that a number of Gods is necessary to the work being done or to be done? Page 204 ¶ 1
54. "பரிசுத்த ஆவி" என்று வேதவாக்கியத்தில் பயன்படுத்தப்படுகிற பதம், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இன்னொரு தேவனை குறிக்கின்றதா, அல்லது செய்யப்படுகின்ற வேலைக்கென்றோ அல்லது செய்யப்படவேண்டிய வேலைக்கென்றோ அநேக தேவர்கள் அவசியப்படுகிறார்களா? **E P. 261 ¶ 4**

(55) Does the fact that the personal pronoun **he** is used in referring to the Holy Spirit imply personality? Explain the matter. Page 204 ¶ 2
55. பரிசுத்த ஆவியைக் குறிப்பிடுகையில் **அவர் (he)** என்ற தனிப்பட்ட பெயர்சொல் பயன்படுத்தப்பட்ட உண்மையானது ஒரு தனி நபராகச் சுட்டிக்காட்டுகிறதா? காரியத்தை விளக்கிக்கூறவும். **E P. 262 ¶ 1**

(56) Through what agency does God supply the Holy Spirit, the holy disposition? And why is it called the Spirit of Truth? Page 204 ¶ 3
56. எதன் மூலமாகத் தேவன் பரிசுத்த ஆவியை, அதாவது பரிசுத்த மனநிலையை அருளுகிறார்? மேலும், அது சத்திய ஆவி என்று அழைக்கப்படுவது ஏன்? **E P. 262 ¶ 2 - E P. 263 ¶ 2**

(57) What thought is connected with the expression, "Be ye filled with the Spirit"? And is the filling instantaneous or how is it? Page 205 ¶ 1
57. "ஆவியினால் நிறைந்திருங்கள்" என்ற சொற்றொடருடன் இணைக்கப்பட்டிருக்கும் கருத்து என்ன? மேலும், நிரப்பப்படுதல் என்பது உடனடியாக நடைபெறக்கூடியதா? அல்லது எப்படி நிரப்பப்படும்? **E P. 263 ¶ 3**

(58) If "filled" with the Spirit, is a further filling possible? and why? and how? Page 205 ¶ 1
58. ஆவியினால் "நிறைந்திருந்தால்" மேற்கொண்டு நிரப்பப்படுதல் சாத்தியப்படுமா? மேலும் ஏன்? மற்றும் எப்படி? **E P. 263 ¶ 3**

(59) Is knowledge essential to the filling with the Spirit? Does knowledge always result in a filling with the Spirit? What rules operate in this matter? Page 205 ¶ 2
59. ஆவியினால் நிரப்பப்படுவதற்கு அறிவு அத்தியாவசியமானதா? அறிவு எப்போதும் ஆவியினால் நிரப்பப்படுவதை விளைவிக்குமா? இவ்விஷயத்தில் செயல்படக்கூடிய விதிகள் என்ன? **E P. 264 ¶ 1**

(60) Is the "Spirit of the Truth" one of the "gifts of the Spirit"? Is it one of the "fruits of the Spirit"? Page 205 ¶ 3
60. "சத்திய ஆவி" என்பது "ஆவியின் வரங்களில்" ஒன்றா? இது "ஆவியின் கனிகளில்" ஒன்றா? **E P. 264 ¶ 2 - E P. 265 ¶ 2**

(61) Show how these matters are illustrated by the Vine. Page 206 ¶ 1
61. இக்காரியங்கள் திராட்சச்செடியின் மூலம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது என்பதைக் காண்பிக்கவும். **E P. 265 ¶ 3**

(62) Explain the difference between the "fruits" and the "gifts" of the Holy Spirit. Page 206 ¶ 2
62. பரிசுத்த ஆவியின் "கனிகளுக்கும்" "வரங்களுக்கும்" இடையே உள்ள வேறுபாட்டினை விளக்கிக்கூறவும். **E P. 266 ¶ 1**

(63) Enumerate some of the "gifts of the Spirit" and some of the "fruits of the Spirit" Show why and how these matters are as they are. Pages 207, 208
63. "ஆவியின் வரங்கள்" சிலவற்றையும், "ஆவியின் கனிகள்" சிலவற்றையும் குறிப்பிடவும். இவைகள் ஏன் மற்றும் எப்படி இப்படியாகக் காணப்படுகின்றன? **E P. 267, 268, 269.**

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 9

### ''ஞானஸ்நானம், சாட்சி, ஒப்புரவாகுதலின் ஆவியினால் முத்திரையிடப்படுதல்''

(1) What particular thought is marked by "The Day of Pentecost"? Page 209
1. "பெந்தெகொஸ்தே நாள்" சுட்டிக்காட்டுவது என்ன? E P. 271 ¶ 1, 2

(2) Why is the blessing of the Holy Spirit called a "spirit of adoption"? Who are adopted? And why? Page 210
2. பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதம் "புத்திரசுவிகாரத்தின் ஆவி" என்று அழைக்கப்படுவது ஏன்? புத்திரர்களாக்கப்பட்டவர்கள் யார்? மேலும் ஏன்? E P. 271 ¶ 2

(3) When the Holy Spirit of God is said to have been shed forth, does it convey the thought of personality or not? Are persons ever shed forth or can a person be shed forth? Could a spirit or influence be shed forth? Page 210
3. தேவனுடைய பரிசுத்த ஆவி பொழியப்பட்டிருந்ததாக சொல்லப்படும்போது, அது தனிநபர் என்ற எண்ணத்தைத் வெளிப்படுத்துகிறதா அல்லது இல்லையா? நபர்கள் எப்போதாவது பொழியப்பட்டிருக்கின்றனரா அல்லது ஒரு நபர் பொழியப்பட முடியுமா? ஓர் ஆவி அல்லது செல்வாக்கு பொழியப்படக்கூடுமா? E P. 272 ¶ 1

(4) If the Father, the Son and the Holy Spirit are really, as some claim, "one in person," how could the Son receive the Holy Spirit from the Father and shed it forth? Is it not much more reasonable and much more in harmony with the teachings of the Scriptures to understand that the Father is one person, that the Son is another Person, separate and distinct, and yet one in the sense of being fully in harmony? And is it not reasonable to think of this holy influence, this Divine power, as proceeding forth from the Fountain of all grace, the Father, and coming properly to the Son, highly exalted to Divine glory and power? And is it not proper to think of the Son's receiving this Holy Spirit as the Advocate or Attorney for the "household of faith," and for the members of His Body, the Church, and dispensing it upon them? Page 211 ¶ 1
4. பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி என்பது சிலர் அறிக்கையிடுவதுபோன்று உண்மையில் "ஒரே நபர்" என்றால், குமாரன், பிதாவிடமிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்று அதை எப்படி பொழிய முடியும்? பிதா ஒரு நபராகவும், குமாரன் மற்றொரு நபராகவும், தனித்தனியே வேறுபட்டவர்கள் என்பதும், மற்றும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பது முழு இசைவாய் இருக்கிறார்கள் என்ற அர்த்தத்தில் புரிந்துகொள்வது என்பதும் வேதத்தின் உபதேசங்களுக்கு மிகவும் நியாயமானதாகவும், மிகவும் இசைவானதாகவும் இருக்கவில்லையா? மேலும், பரிசுத்த ஆவியாகிய இந்தத் தெய்வீக வல்லமையானது, எல்லா கிருபைக்கும் ஊற்றாயிருக்கிற பிதாவிடமிருந்து புறப்பட்டு, தெய்வீக வல்லமை மற்றும் மகிமைக்கு உயர்வாய் உயர்த்தப்பட்ட குமாரனிடத்திற்கு வந்தது என்று சிந்திப்பது நியாயமானதல்லவா? மேலும், குமாரன் இந்தப் பரிசுத்த ஆவியை "விசுவாச வீட்டாருக்காகவும்," தம்முடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினருக்காகவும் பரிந்துபேசுகிறவராகவோ அல்லது வழக்கறிஞராகவோ பெற்று, அதை அவர்கள்மீது பொழிந்தருளினார் என்று சிந்திப்பது சரியானதல்லவா? E P. 273 ¶ 1

(5) Some urge that Christians pray for fresh Pentecostal blessings. Is this suggestion Scriptural or not? Give the reasons. Page 211 ¶ 2
5. புதிய பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களுக்காக கிறிஸ்தவர்கள் ஜெபிக்க வேண்டும் என்று சிலர் வறிபுறுத்துகின்றனர். இந்த ஆலோசனை வசனத்தின் அடிப்படையிலானதா அல்லது இல்லையா? காரணங்கள் அளிக்கவும். E P. 274 ¶ 1-4

(6) Which was the first baptism of the Holy Spirit and what was its effect? And how was it manifested? Page 211 ¶ 3

6. பரிசுத்த ஆவியின் முதல் ஞானஸ்நானம் எதுவாக இருந்தது? மற்றும் அதன் பலன் என்னவாக இருந்தது? மேலும், அது எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது? **E P. 274 ¶ 5; E P. 275 ¶ 1**

(7) Who did the baptizing of Jesus with water? Who with the Holy Spirit? Who baptized the Church at Pentecost? Page 212 ¶ 1

7. இயேசுவுக்கு தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுத்தது யார்? பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுத்தது யார்? பெந்தெகொஸ்தே நாளன்று சபைக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார்? **E P. 275 ¶ 2 - E P. 276 ¶ 1**

(8) What was the outward evidence of the Spirit's baptism in Jesus' case? What in the Church's case at Pentecost? What in the case of the first Gentile convert, Cornelius? Page 212 ¶ 2; Page 213 ¶ 1

8. இயேசுவின் விஷயத்தில் ஆவியின் ஞானஸ்நானத்தின் வெளியரங்கமான சாட்சியம் என்னவாக இருந்தது? பெந்தெகொஸ்தே நாளன்று சபையின் விஷயத்தில் எப்படியாக இருந்தது? மதமாறின முதல் புறஜாதியான, கொர்நெலியுவின் விஷயத்தில் எப்படியாக இருந்தது? **E P. 276 ¶ 2; E P. 277 ¶ 1**

(9) Why was there a special manifestation of the Holy Spirit in the case of Cornelius? Page 213 ¶ 2

9. கொர்நெலியுவின் விஷயத்தில் பரிசுத்த ஆவியின் விசேஷித்த வெளிப்பாடு இருந்தது ஏன்? **E P. 277 ¶ 2**

(10) If a special manifestation by Spirit baptism had not been granted to Cornelius, what would have been the effect upon all of us, who by birth are Gentiles and not Hebrews? Page 213 ¶ 3

10. ஆவியின் ஞானஸ்நானம் மூலம் ஒரு விசேஷ வெளிப்பாடு கொர்நெலியுவுக்கு வழங்கப்படாதிருந்திருக்குமானால், பிறப்பிலேயே எபிரெயர்களாக அல்லாமல் புறஜாதியாராய் இருக்கும் நம் அனைவர் மீதும் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தி இருந்திருக்கக்கூடும்? **E P. 278 ¶ 1**

(11) Do we know of any other baptism of the Holy Spirit than these three that apply to the Gospel Age? And are we not deprived of some blessing in that we have no such outpouring? If not, why not? Explain the philosophy of it. Page 214 ¶ 1; Page 215 ¶ 1, 2

11. சுவிசேஷ யுகத்திற்குப் பொருந்தக்கூடிய பரிசுத்த ஆவியின் இந்த மூன்று ஞானஸ்நானத்தைத் தவிர வேறு ஞானஸ்நானத்தைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோமா? மேலும், அப்படிப்பட்டதொரு பொழியப்படுதலை நாம் பெற்றிருக்கவில்லை என்பதால் சில ஆசீர்வாதங்களை நாம் இழந்துபோகவில்லையா? இல்லை என்றால், ஏன் இல்லை? அதன் தத்துவத்தை விளக்கிக்கூறவும். **E P. 278 ¶ 2 - E P. 280 ¶ 3**

(12) What relationship subsists between water baptism and the baptism of the Holy Spirit, which we are now discussing? Page 215 ¶ 3

12. தற்போது நாம் விவாதித்துவருகிற தண்ணீர் ஞானஸ்நானத்திற்கும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? **E P. 281 ¶ 1**

(13) How should we regard the views of some who, contrary to the Scriptures, pray and agonize for a Pentecostal blessing? Page 216

13. வேதவசனங்களுக்கு முரணாக, பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்து, கடும்முயற்சி எடுக்கும் சிலருடைய கருத்துகளை நாம் எவ்வாறு கருத வேண்டும்? **E P. 281 ¶ 2; 282 ¶ 1**

(14) Will there ever be another baptism of the Holy Spirit? If so, when, where, upon whom? Page 217

14. பரிசுத்த ஆவியின் மற்றொரு ஞானஸ்நானம் எப்போதாவது இருக்குமா? ஆம் என்றால், எப்பொழுது, எங்கு, யார் மீது பொழியப்படும்? **E P. 283 ¶ 1-3**

(15) What will be the effect of that Spirit baptism? Page 217 ¶ 3

15. அந்த ஆவியின் ஞானஸ்நானத்தின் பலன் என்னவாக இருக்கும்? **E P. 284 ¶ 1**

(16) Will the outpouring of the Holy Spirit upon all flesh signify that all will be received into eternal fellowship with God? Page 218 ¶ 1
16. மாம்சமான யாவர்மீதும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதல் என்பது மனுக்குலம் அனைவருமே தேவனுடனான நித்திய ஐக்கியத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பதை அடையாளப்படுத்துகிறதா? **E P. 285 ¶ 1, 2**

(17) Is there anything peculiar in the phraseology of Joel's prophecy? State it. Then explain the statement in harmony with other Scriptures. Page 219
17. யோயேல் தீர்க்கத்தரிசனத்தின் சொற்றொடரில் விசித்திரமாக ஏதேனும் காணப்படுகிறதா? அதைக் குறிப்பிடவும். பின்பு, மற்ற வசனங்களுடன் இசைவுபடுத்தி இந்த அறிக்கையை விளக்கிக்கூறவும். **E P. 285 ¶ 3, 4**

(18) In what sense can we properly consider the old men said to dream dreams as being the Ancient Worthies, whose philosophies were but vague visions-presentations of the wonderful Millennial facts which shall yet be fulfilled?
18. இணை நிறைவேறவேண்டிய ஆயிரமாண்டின் ஆச்சரியமான உண்மைகளின் விளக்கங்களாக - தெளிவற்ற தரிசனங்களாக மாத்திரம் கண்டவர்களாகக் காணப்படும் இந்த முற்பிதாக்கள்தான், சொப்பனம் கண்டதாகக் கூறப்படும் மனுஷர்கள் என்று எந்த விதத்தில் நாம் எடுத்துக்கொள்ளலாம்?

(19) In what way can we say that the young men of the future will see with clearness of vision and actually the things of which the Ancient but vaguely "dreamed"? Page 220 ¶ 1. Z. '09, Page 266
19. முற்பிதாக்கள் தெளிவற்ற விதத்தில் "சொப்பனங்களாக" மாத்திரமே கண்ட காரியங்களை வாலிபர்கள் எதிர்காலத்தில் தெளிவாகக் காண்பார்கள் என்பதை நாம் எவ்விதத்தில் கூறலாம்? **E P. 287 ¶ 1**

(20) Will the Holy Spirit, granted during the Millennium, be the same spirit or power or influence of God that Christians of the present Age enjoy? Page 220 ¶ 1
20. ஆயிர வருட அரசாட்சியின்போது அருளப்படும் பரிசுத்த ஆவியானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் தேவனுடைய ஆவி அல்லது வல்லமை அல்லது ஆற்றல்போன்று காணப்படுமா? **E P. 287 ¶ 1**

(21) Will those receiving it be similarly thrown out of harmony with the world? Why not?
21. அதைப் பெறுபவர்களும் இதேபோன்று உலகத்தின் எதிர்ப்புக்கு ஆளாகுவார்களா? ஏன் இல்லை?

(22) Will that baptism of the Spirit cost the baptized ones suffering and self-denial, as the baptism of the Spirit now affects the Church? If it will not, why not? Page 220 ¶ 2
22. ஆவியின் ஞானஸ்நானமானது தற்போது சபைக்கு பாடுகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் போன்றவை சம்பவிப்பதற்கு வழிவகுப்பதுபோன்று, ஆயிர வருட அரசாட்சியின்போது கொடுக்கப்படும் ஆவியின் ஞானஸ்நானமானது, ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு பாடுகள், சுயத்தை வெறுத்தல் போன்றவை வர வழிவகுக்குமா? அப்படியாக இல்லை என்றால், ஏன் இல்லை? **E P. 287 ¶ 2**

(23) Will the baptizing during the Millennium mean, as now, the begetting of the Holy Spirit to a change of nature? If not, why not? Page 220 ¶ 3
23. ஆயிர வருட அரசாட்சியின்போது கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தில் தற்போது (இந்த யுகத்தில்) சுபாவ மாற்றத்திற்கென்று ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் நடப்பதுபோன்று இருக்குமா? அப்படி இல்லை என்றால், ஏன் இல்லை? **E P. 288 ¶ 1**

(24) What will it signify? Page 221
24. அது எதை அடையாளப்படுத்தும்? **E P. 288 ¶ 2; E P. 289 ¶ 1**

(25) Was our Lord in the flesh the Second Adam? Page 221 ¶ 3
25. மாம்சத்தில் வந்த நம்முடைய ஆண்டவர் இரண்டாம் ஆதாமாக இருந்தாரா? **E P. 289 ¶ 2**

(26) When did our Lord become the Second Adam? Cite the Scriptural proof, and explain how the Second Adam, a Spirit Being, could be the Father of restored humanity on the earthly plane.
26. நம்முடைய ஆண்டவர் எப்பொழுது இரண்டாம் ஆதாம் ஆனார்? வசன ஆதாரத்தை மேற்கோள்காட்டி, ஓர் ஆவிக்குரிய ஜீவியான, இரண்டாம் ஆதாம், பூமிக்குரிய தளத்தில் மீட்கப்பட்ட மனுக்குலத்திற்கு எப்படி தந்தை ஆக முடியும் என்பதை விளக்கிக்கூறவும்.

(27) While we are not to pray for fresh Pentecosts or Spirit Baptisms, may we pray for a filling of the Holy Spirit? Page 222 ¶ 1
27. ஆவியின் ஸ்நானம் என்றொரு புது ஸ்நானத்திற்காக நாம் ஜெபிக்கக்கூடாதவர்களாக இருக்கையில், நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்காக ஜெபிக்கலாமா? **E P. 290 ¶ 1**

(28) Cite a Scripture which authorizes us to pray for the Holy Spirit. Page 222 ¶ 3
28. பரிசுத்த ஆவிக்காக ஜெபிப்பதற்கு நமக்கு அதிகாரம் அளித்திருக்கும் வசனப்பகுதி ஒன்றை மேற்கோள்காட்டவும். **E P. 291 ¶ 1, 2**

(29) Will such prayers be miraculously answered, or by what means should we expect that the seeker would find and the knocker have the door of blessing opened up to him? Page 223
29. இப்படிப்பட்ட ஜெபங்கள் அற்புதமான விதத்தில் பதிலளிக்கப்படுமா? அல்லது எவ்விதத்தில் தேடுகிறவர் கண்டடைவார் என்றும், தட்டுகிறவனுக்கு ஆசீர்வாதத்தின் கதவு திறக்கப்படும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம்? **E P. 291 ¶ 3-20-ஆம் வரிவரை.**

(30) Is more than prayer necessary to the obtaining of the Holy Spirit? If so, what more is essential? Page 223 ¶ 2
30. பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு ஜெபத்திற்கும் மேலாகத் தேவைப்படுகிறது உண்டா? ஆம் என்றால், மேலும் அவசியப்படுவது என்ன? **E P. 291 ¶ 3-20-ஆம் வரி முதல் பத்தி முழுவதும்.**

(31) Quote and cite a Scripture which urges us to be filled with all the fullness of God? Page 224 ¶ 1
31. தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்று நமக்கு வலியுறுத்தக்கூடிய வசனம் ஒன்றை மேற்கோள்காட்டி எடுத்துரைக்கவும். E P. 292 ¶ 1

(32) When our Lord assured us that our heavenly Father is pleased to give the Holy Spirit to them that ask Him, can this be properly understood to mean that the Father would wish us to ask for another God, a third person in a trinity of Gods? Is such a thought reasonable or connected with the promise? Page 224 ¶ 2
32. தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பது நம்முடைய பரம பிதாவுக்குப் பிரியமாயிருக்கிறது என்று நமது ஆண்டவர் நமக்கு உறுதியளித்திருக்கும்போது, திரித்துவ தேவர்களில் மூன்றாவது நபரான, வேறொரு தேவனுக்காக வேண்டிக்கொள்ளும்படி பிதா விரும்புகிறார் என்ற விதத்தில் இதைப் புரிந்துகொள்ளலாமா? இதுபோன்ற கருத்தானது நியாயமானதாகவோ அல்லது வாக்குத்தத்தத்துடன் தொடர்புடையதாகவோ உள்ளதா? **E P. 293 ¶ 1**

(33) Where and how are we to seek and find God's further blessing and Holy Spirit? Page 225
33. மேற்கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியையும் நாம் எங்கு, எவ்வாறு தேடிக் கண்டடைவது? **E P. 293 ¶ 2 - E P. 294 ¶ 4**

(34) Why is the doctrine of the witness of the Spirit important to the people of God? Page 226 ¶ 1
34. ஆவியின் சாட்சி குறித்த உபதேசம் தேவனுடைய ஜனங்களுக்கு முக்கியமானதாக இருப்பது ஏன்? **E P. 295 ¶ 1, 2**

(35) What is meant by "our spirit," in Romans 8:16 "The Spirit itself beareth witness with our spirit that we are the children of God"?
35. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கிறார்" - (என்ற) ரோமர் 8:16-ஆம் வசனத்தில் "நம்முடைய ஆவியுடனே" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

(36) Why should we consider the Holy Spirit another God, separate and distinct from the Father and Son, if we do not consider our spirit a separate person from ourselves?
36. நம்முடைய ஆவியை, நம்மிடமிருந்து வேறுபட்ட ஒரு தனி நபராக நாம் கருதாதவர்களாக இருக்கையில், பரிசுத்த ஆவியை, பிதா மற்றும் குமாரனிலிருந்து பிரித்து வேறொரு தேவனாக வேறுபடுத்தி நாம் ஏன் எண்ணிப்பார்க்க வேண்டும்?

(37) Is there any danger of trusting too much to "feelings," and what is the remedy? Page 226
37. "உணர்வுகளை" அதிகமாக நம்புவதில் ஆபத்து ஏதேனும் உள்ளதா? மேலும், இதற்கான தீர்வு என்ன? **E P. 295 ¶ 3**

(38) Quote some hymns to show that doubt and distress prevail and show the real difficulty and the cure. Page 227
38. சந்தேகமும் துயரமும் நிலவுவதைக் காட்ட சில பாடல்களை மேற்கோள்காட்டவும், மற்றும் உண்மையான சிரமம் மற்றும் சிகிச்சையைக் காட்டவும். **E P. 296 ¶ 1 - E P. 297 ¶ 3**

(39) Explain the difference between Faith and Credulity. Page 228
39. விசுவாசத்திற்கும், மூட நம்பிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்கிக்கூறவும். **E P. 298 ¶ 1 - E P. 299 ¶ 2**

(40) How may we obtain the witness of the Holy Spirit? Page 229
40. பரிசுத்த ஆவியின் சாட்சியத்தை நாம் எவ்வாறு பெறுவது? **E P. 299 ¶ 3 - E P. 300 ¶ 4**

(41) How may we be sure that we made the proper start in the Heavenly way? And that we are still on it? And that we shall make our calling and election sure? Page 230
41. பரலோகப் பாதையில் சரியான துவக்கத்தைச் செய்திருக்கிறோம் என்பதை நாம் எவ்வாறு உறுதி செய்வது? மேலும், இந்தப் பாதையில் நாம் இன்னுமும் இருக்கிறோம் என்பதை எவ்வாறு உறுதி செய்வது? மற்றும் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வோம் என்பதையும் நாம் எவ்வாறு உறுதிசெய்வது? **E P. 301 ¶ 1; E P. 302 ¶ 1**

(42) Is our "full assurance of faith" based upon our perfection, or what? Page 231
42. நம்முடைய "விசுவாசத்தின் பூரண நிச்சயமானது" நம்முடைய பூரணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதா? அல்லது எதை அடிப்படையாகக்கொண்டுள்ளது? **E P. 303 ¶ 1**

(43) Are tribulations a witness of the Holy Spirit to God's people? If so, what testimony or "witness" do they bear? Page 232
43. உபத்திரவங்கள் என்பது பரிசுத்த ஆவியின் சாட்சியமாக தேவனுடைய ஜனங்களுக்கு உள்ளதா? ஆம் என்றால், என்ன "சாட்சியம்" விளங்குகின்றது? **E P. 303 ¶ 2**

(44) Are the Lord's dealings with us all alike, or alike to all? If not, why not? Page 233
44. நம்முடனான கர்த்தருடைய கையாளும் முறைகள் அனைத்தும் ஒரே விதமாக இருக்கிறதா அல்லது எல்லாருக்கும் ஒரே விதமாக இருக்கிறதா? இல்லை என்றால், ஏன் இல்லை? **E P. 305, 306**

(45) Why do some of God's children require more and others less disciplining?
45. தேவனுடைய பிள்ளைகள் சிலருக்கு அதிகமான ஒழுங்குபடுத்துதலும், மற்றவர்களுக்குக் குறைவான ஒழுங்குபடுத்துதலும் தேவைப்படுவது ஏன்?

(46) Are all chastenings evidences or witnesses of Divine displeasure? If not, explain other reasons for them, and the service of them. Page 234
46. சிட்சைகள் அனைத்துமே, தெய்வீக அதிருப்திக்கான சாட்சியங்களா? இல்லை என்றால், அவைகளுக்கான மற்றக் காரணங்களையும், அவைகளின் ஊழியத்தையும் (service) விளக்கிக்கூறவும். **E P. 306 ¶ 3 - E P. 307 ¶ 2**

(47) What prunings should we note, and what results should we expect? Page 234 ¶ 2, 3
47. எப்படிப்பட்ட சுத்திகரிப்புகளை நாம் கவனிக்க வேண்டும்? மேலும், நாம் எதிர்பார்க்க வேண்டிய பலன்கள் என்ன? **E P. 307 ¶ 3; E P. 308 ¶ 1**

(48) Quote several texts from the Bible, showing the Spirit's witnesses to us, and explain how these should be understood as witnesses, and how they should influence our lives. Page 235
48. ஆவியின் சாட்சியங்களை நமக்குக் காண்பிக்கிற பல்வேறு வசனப்பகுதிகளை வேதத்திலிருந்து மேற்கோள்காட்டி, இவைகளைச் சாட்சியங்களாக நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்பதையும், அவை நம்முடைய ஜீவியங்களில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தவேண்டும் என்பதையும் விளக்கிக்கூறவும். **E P. 308 ¶ 2 - 309 ¶ 2**

(49) What did the experiences of our Lord Jesus witness respecting Divine favor with Him? Explain His sufferings as in full accord with the Spirit's witness, and show how ours should correspond. Page 236
49. நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோடுகூட தெய்வீகக் கிருபை/தயவு இருந்தது குறித்து அவரது அனுபவங்கள் அளித்த சாட்சியம் என்ன? ஆவியின் சாட்சியோடுகூட முழு இசைவில் காணப்படும் அவருடைய பாடுகளை விளக்கிக்கூறி, அதற்கு ஒத்தாற்போல் நம்முடையது எப்படி இருக்கவேண்டும் என்பதைக் காண்பிக்கவும். **E P. 310 ¶ 1-3**

(50) Would our Lord's witness of the Spirit have been the same had He taken a different course? Pages 236, 237.
50. நம்முடைய ஆண்டவர் வித்தியாசமான ஒரு போக்கை எடுத்திருந்திருப்பாரேயானால், அவருடைய ஆவியின் சாட்சி அதே விதத்தில் இருந்திருக்குமா? **E P. 310 ¶ 2 - E P. 311 ¶ 1**

(51) Explain I John 5:4, showing how its fulfilment is a witness, and to whom it applies. Pages 237, 238
51. 1 யோவான் 5:4-ஆம் வசனத்தை விளக்கி, அதன் நிறைவேறுதல் எப்படி ஒரு சாட்சியமாக உள்ளது என்பதைக் காண்பித்து, அது யாருக்குப் பொருந்தும் என்பதைக் கூறவும். **E P. 311 ¶ 2**

(52) Is our knowledge of holy things and of "things to come" a witness or testimony? If so, of what? Page 238
52. பரிசுத்த காரியங்கள் குறித்தும், "வருங்காரியங்கள்" குறித்தும் நமக்கு இருக்கும் அறிவானது ஒரு சாட்சியமா? ஆம் என்றால், எதற்கான சாட்சியம்? **E P. 312 ¶ 1**

(53) What should every Christian resolve re the witness of the Spirit? Page 239
53. ஆவியின் சாட்சி குறித்த விஷயத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தீர்மானிக்க வேண்டியது என்ன? **E P. 313 ¶ 1, 2**

(54) Will the Holy Spirit witness to the converts of the Millennial Age? If so, will the witness be the same as to us or in what respects different? Page 239 ¶ 3
54. பரிசுத்த ஆவி, ஆயிர வருட யுகத்தில் மனம் மாற்றம் அடைபவர்களுக்கு சாட்சியிடுமா? ஆம் என்றால், அந்தச் சாட்சி நமக்கு இருப்பது போன்றே இருக்குமா அல்லது எந்த வகையில் வேறுபட்டிருக்கும்? **E P. 314 ¶ 1**

(55) Explain the difference between a real witness of the Spirit and the unsatisfactory reliance upon "feelings." Page 240
55. உண்மையான பரிசுத்த ஆவியின் சாட்சிக்கும், "உணர்வுகளை" நம்பும் திருப்திகரமற்ற நிலைக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டை விளக்கிக்கூறவும். **E P. 315 ¶ 1, 2**

(56) Why should those possessing the true "witness" rejoice, and those not possessing it seek it? Page 241
56. உண்மையான "சாட்சியத்தை" பெற்றிருப்பவர்கள் களிகூரவும், மற்றும் அதைப் பெறாதவர்கள் அதைத் தேடவும் வேண்டியது ஏன்? **E P. 316 ¶ 1, 2**

(57) What is it to be sanctified by the Holy Spirit? And what are the needful steps to this end? Pages 241, 242
57. பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட வேண்டியது என்ன? மேலும், இதை அடைவதற்குத் தேவையான படிநிலைகள் என்ன? **E P. 317 ¶ 1 - E P. 318 ¶ 1**

(58) What did St. Paul mean by his prayer that God would sanctify His people "wholly"?
58. தேவன் தம்முடைய ஜனங்களை "முற்றிலும்" பரிசுத்தமாக்குவாராக என்ற தன்னுடைய ஜெபத்தின் மூலம் பரிசுத்த பவுல் காண்பிப்பது என்ன? **E P. 318 ¶ 2**

(59) Are there degrees of sanctification? and are these degrees easily attained? Page 243
59. பரிசுத்தமாக்கப்படுதலுக்குப் படிநிலைகள் உள்ளதா? மற்றும் அந்தப் படிநிலைகள் சுலபமாக அடையக்கூடியதா? **E P. 318 ¶ 3 - E P. 319 ¶ 2**

(60) Explain what is signified by the expression, "new creatures in Christ Jesus." Page 243, last par.
60. "கிறிஸ்து இயேசுவுக்குள் புதுச் சிருஷ்டிகள்" என்ற சொற்றொடரின் மூலம் அடையாளப்படுத்தப்படுவது என்ன என்பதை விளக்கிக்கூறவும். **E P. 319 ¶ 3**

(61) Is a filling of the Holy Spirit attainable? If so, is it of sudden or of gradual attainment? Page 244 ¶ 1; Page 245
61. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்பது அடையக்கூடியதா? ஆம் என்றால், அது உடனடியாகப் பெறக்கூடியதா அல்லது படிப்படியாகப் பெறக்கூடியதா? **E P. 320 ¶ 1 - E P. 321 ¶ 3**

(62) Could we be properly said to be filled with a spirit **person**? and could the same person fill many persons and still retain personality? In a word, is personality divisible? Page 268, last par.
62. நாம் ஒரு ஆவி-**நபரால்** நிரப்பப்பட்டிருக்கிறோம் என்று சொல்வது சரியாக இருக்கமுடியுமா? மேலும், அதே நபர் அநேக நபர்களை நிரப்பி காணப்பட்டும், அதேநேரம் தனித்துவத்தை தக்கவைத்தும் கொண்டு காணப்பட முடியுமா? ஒரு வார்த்தையில் சொல்லப்போனால், தனித்துவம் என்பது பிரிக்கப்பட முடியுமா? **E P. 357 ¶ 1**

(63) What is the Apostle's illustration of our being filled with the Holy Spirit? Show the application. Page 245
63. பரிசுத்த ஆவியினால் நாம் நிரப்பப்படுதல் குறித்து அப்போஸ்தலனின் எடுத்துக்காட்டு என்ன? அதன் பயன்பாட்டைக் காண்பிக்கவும். **E P. 321 ¶ 2, 3**

(64) Can we be "filled with the Holy Spirit" without conforming to the Divine conditions? And can we thus conform unless we know the conditions? And can we know the conditions except by the study of God's Word and obedience thereto? Page 245 ¶ 2; Page 246 ¶ 1
64. நாம் தெய்வீக நிபந்தனைகளுக்கு இணங்காமல் "பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட" முடியுமா? மேலும், நிபந்தனைகளை நாம் அறியாமல் இப்படியாக இணங்கமுடியுமா? மேலும், தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்துப்பார்த்து, அதற்குக் கீழ்ப்படிவது தவிர மற்றபடி நிபந்தனைகளை நம்மால் அறியமுடியுமா? **E P. 322 ¶ 1, 2**

(65) Is the sealing of the Spirit the same thing as the witness of the Spirit?
65. ஆவியினால் முத்திரிக்கப்படுதல் என்பது ஆவியின் சாட்சியத்தைப் போன்ற ஒரே/அதே காரியமா?

(66) What is meant by the seal of the Spirit? When and how is it obtained? Suddenly or gradually? Pages 246-248
66. ஆவியினால் முத்திரித்தல் என்பது என்ன? அது எப்போது மற்றும் எப்படி பெறப்பட்டது? உடனடியாகவா அல்லது படிப்படியாகவா? **E P. 323-327**

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 10

### ''தெளிந்த புத்தியின் ஆவி''

(1) In the text, "God hath not given us the spirit of fear, but of power and of love and of a sound mind" (2 Tim. 1:7), what is the contrast? What is the antithesis to the spirit of a sound mind? Page 249 ¶ 1

1. "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1:7) என்ற வசனப்பகுதியில் இடம்பெறும் தெளிந்த புத்தியின் ஆவிக்கு நேர்மாறாக இருப்பது என்ன? இதற்கு எதிரிடையாக இருப்பது என்ன? **E P. 329 ¶ 1**

(2) In this Scripture are we to understand that the four spirits mentioned are persons? Or are any of them persons? or are they merely qualities of mind which might appertain to persons--on the human or on the spirit plane? Page 249 ¶ 1

2. இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நான்கு ஆவிகள் என்பது நபர்கள் என்ற விதத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டுமா? அல்லது அவைகளில் ஏதாவது நபர்களா? அல்லது அவை வெறுமனே மனுஷீக தளத்திலோ அல்லது ஆவிக்குரிய தளத்திலோ இருக்கும் நபர்களுக்குப் பொருந்தக்கூடிய மனதின் குணநலன்களா? **E P. 329 ¶ 1**

(3) If a Christian has a spirit of fear, to what should it be attributed? What is lacking in him when his mind is under the control of such spirit or influence? And what is the remedy for such an undesirable condition of spirit or mind? Page 249 ¶ 2

3. ஒரு கிறிஸ்தவனிடத்தில் பயத்தின் ஆவி இருந்தால், அதற்கான காரணம் என்ன? இப்படிப்பட்ட ஆவியினுடைய கட்டுப்பாட்டின் கீழ் அவனுடைய சிந்தை காணப்படும் பட்சத்தில், அவனிடத்தில் குறைவுபடுவது என்ன? மேலும், இப்படிப்பட்ட விரும்பத்தகாத நிலையிலுள்ள ஆவி அல்லது சிந்தைக்கு தீர்வு என்னவாக இருக்கிறது? **E P. 329 ¶ 2**

(4) Does the Spirit of Christ take hold upon the strong-minded or the strong-bodied merely, or upon the weak-minded and weak-bodied merely? What is the result in either case? Give Scripture proofs. Page 250 ¶ 1, 2

4. கிறிஸ்துவின் ஆவி பலமான மனதை அல்லது பலமான சரீரத்தை உடையவர்களிடன் மட்டும் செயல்படுகிறதா, அல்லது பலவீனமான மனதை மற்றும் பலவீனமான சரீரத்தை உடையவர்களிடம் மட்டும் செயல்படுகிறதா? எவ்வாறாக இருப்பினும் விளைவு என்னவாக இருக்கும்? வசன ஆதாரங்கள் அளிக்கவும். **E P. 330 ¶ 1; E. P. 331 ¶ 1**

(5) In the text quoted (2 Tim. 1:7) what is meant by the "spirit of power"? Does it refer to physical strength or spiritual strength or what? Page 250 ¶ 3

5. மேற்கோள்காட்டப்பட்ட 2 தீமோத்தேயு 1:7-ஆம் வசனத்தில், "பலமுள்ள ஆவி" என்பதன் அர்த்தம் என்ன? இது சரீர பலத்தை குறிக்கிறதா அல்லது ஆவிக்குரிய பலத்தை குறிக்கிறதா அல்லது எந்தப் பலத்தைக் குறிக்கிறது? **E P. 331 ¶ 2**

(6) Similarly explain "the spirit of love" in the same text. Is it natural love, or what kind? How does it operate? And does it abide or will it pass away? Cite Scripture. Page 250 ¶ 3

6. அதுபோல, அதே வசனத்தில் வரும் "அன்பின் ஆவி" குறித்து விளக்கிக்கூறவும். இது சாமான்யமான அன்பா அல்லது எவ்வகையான அன்பு? அது எவ்வாறு செயல்படுகிறது? மேலும், அது அப்படியே தங்கியிருக்குமா அல்லது கடந்துபோய்விடுமா? வேதவசனத்தை மேற்கோள்காட்டவும். **E P. 331 ¶ 2**

(7) Are the Lord's people naturally more sound of mind --better balanced mentally—than the remainder of the world? Or how do they compare on the average? Page 251 ¶ 1
7. கர்த்தருடைய ஜனங்கள், உலகில் எஞ்சியிருப்பவர்களைவிட இயல்பாகவே அதிகளவில் தெளிந்த புத்தியுள்ளவர்களாக - மனரீதியில் சிறந்த சமநிலை கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்களா? அல்லது அவர்கள் சராசரியாக எப்படி ஒப்பிடுகிறார்கள்? **E P. 332 ¶ 1**

(8) What is the effect of the Truth upon the fully consecrated believer begotten of the Holy Spirit and taught of God? How does he compare with the average man? Page 251 ¶ 2
8. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவரும், தேவனால் போதிக்கப்பட்டவருமான முழுமையாக அர்ப்பணஞ்செய்த விசுவாசியின் மீது சத்தியத்தின் விளைவு என்னவாக இருக்கிறது? அவர் சராசரி மனிதனுடன் தன்னை எப்படி ஒப்பிடுகிறார்? **E P. 332 ¶ 2**

(9) Explain how it is that there is such diversity of mind, and say whether there are many of strictly sound mind. Quote Scriptures. Page 251 ¶ 3
9. மனதில் இத்தகைய பன்முகத்தன்மை இருப்பதற்கான காரணத்தை விளக்கி, முற்றிலும் தெளிந்த புத்தியுள்ளவர்கள் பலர் இருக்கின்றனரா என்று கூறவும். வசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 333 ¶ 1, 2**

(10) What are some of the causes of mental unbalance, and in what manner does the Holy Spirit rectify natural weaknesses and mental defects? Page 252 ¶ 1, 2
10. சமநிலையான மனது இல்லாமைக்கான சில காரணங்கள் என்ன? மேலும், ஜென்மசுபாவமான பெலவீனங்களையும், மனரீதியான குறைபாடுகளையும் பரிசுத்த ஆவி எவ்விதத்தில் சரிசெய்யும்? **E P. 333 ¶ 3; E. P. 334 ¶ 1**

(11) Give an illustration of the manner in which the spirit of a sound mind rectifies an imperfect judgment. Page 252 ¶ 2
11. தெளிந்த புத்தியின் ஆவியானது ஓர் அபூரண நிதானிப்பைச் சரிசெய்யும் விதம் குறித்த ஓர் எடுத்துக்காட்டை அளிக்கவும். **E P. 334 ¶ 1**

(12) Give some illustrations of evidences of mental unsoundness common to the world and often to the Church. Page 253 ¶ 1
12. பொதுவாக உலகத்தாரிடமும், அவ்வப்போது சபையிடமும் நிலவும் தெளிந்த புத்தியில்லாத மனநிலைக்கான சாட்சியங்களுக்குச் சில உதாரணங்கள் கொடுக்கவும். **E P. 336 ¶ 1**

(13) What is the most general mental ailment as evidenced by asylum statistics, and is the same mental weakness a besetment to Christians? Page 254, top
13. (பைத்தியக்கார) விடுதியின் புள்ளிவிவரப்படி மிகவும் பொதுவாய்க் காணப்படும் மனநோய் என்ன? மேலும், அதே மனரீதியான பலவீனம் கிறிஸ்தவர்களுக்கு ஒரு தாக்குதலாக இருக்கிறதா? **E P. 336 ¶ 1** பிற்பகுதி

(14) Which is the greatest need amongst men, restitution of bodies or of morals or of sound minds? And what would the last have to do with correcting the former two? Page 254 ¶ 2
14. மனுஷர் மத்தியில் மாபெரும் தேவையாயிருப்பது என்ன - சரீர ரீதியான மீட்பா அல்லது ஒழுக்க ரீதியான மேம்பாடா அல்லது தெளிந்த புத்தியா? மேலும் கடைசியாகச் சொல்லப்பட்ட தெளிந்த புத்தியானது, அதற்கு முன் சொல்லப்பட்ட மற்ற இரண்டையும் சரிசெய்வதற்குச் செய்ய வேண்டியுள்ளது என்ன? **E P. 337 ¶ 2; E P. 338 ¶ 1**

(15) What quality of mind is the source of the greatest trouble to the world and the greatest to the Christian? What is the antidote or remedy which the Scriptures set forth? Page 254 ¶ 2
15. உலகத்தின் மாபெரும் பிரச்சனைக்கும், கிறிஸ்தவர்களின் மாபெரும் பிரச்சனைக்கும் காரணமாக இருக்கும் மனநிலை என்ன? இதற்கு வேதவசனங்கள் முன்வைக்கும் தீர்வு என்ன? **E P. 337 ¶ 2; E P. 338 ¶ 1**

(16) What is the antidote for that poisoned condition of mind styled "the spirit of fear"? Cite the Scriptural antidote. Page 255 ¶ 1, 2
16. "பயத்தின் ஆவி" என்று அழைக்கப்படும் நச்சுத்தனமான மனநிலைக்கான மாற்று மருந்து என்ன? வசனரீதியான மாற்று மருந்தை மேற்கோள்காட்டவும். **E P. 338 ¶ 2; E. P. 339 ¶ 1**

(17) Does the spirit of the Truth correct over-confidence and under-confidence? How? Cite the Scriptures. Page 255 ¶ 3
17. சத்திய ஆவி அதிகப்படியாக சுயத்தின்மேல் நம்பிக்கை வைத்தலையும், அதிகப்படியாக தன்னைத்தானே தாழ்த்திக்கொள்ளுதலையும் சரிசெய்யுமா? எப்படி சரிசெய்யும்? வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 339 ¶ 2**

(18) Why is it that the heavenly hopes and promises appeal to some and not to others equally educated and intelligent otherwise? Explain the philosophy. Pages 256, 257
18. பரலோக நம்பிக்கைகளும், வாக்குத்தத்தங்களும் சிலருக்கு ஈர்க்கக்கூடியதாகவும், இதற்குச் சரிசமமாக ஞானிகளும் கல்விமான்களுமான மற்றவர்களை ஈர்க்காமலும் இருப்பது ஏன்? இதன் தத்துவத்தை விளக்கவும். **E P. 340 ¶ 1 - E. P. 341 ¶ 2** (முதல் 33 வரிகள்)

(19) What is the answer of the "spirit of a sound mind to our Lord's inquiry, "What will a man exchange for his soul"--his being, his existence? Page 258 ¶ 1
19. "மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்"--அவனது உயிரையா, அவனது வாழ்வையா, என்ற நமது ஆண்டவருடைய கேள்விக்கு "தெளிந்த புத்தியுள்ள ஆவியின்" பதில் என்னவாக இருக்கிறது? **E. P. 341 ¶ 2** (34 -ஆம் வரி முதல் பத்தி முழுவதும்)

(20) How were we redeemed from vain conversation, and how does the spirit of a sound mind give a new viewpoint to every affair of life? Page 258 ¶ 2; Page 259 ¶ 1
20. வீணான நடத்தையிலிருந்து (உரையாடலிலிருந்து) நாம் எவ்வாறு மீட்கப்பட்டோம்? மேலும், வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்திற்கும் தெளிந்த புத்தியின் ஆவியானது ஒரு புதிய கண்ணோட்டத்தை எவ்வாறு அளிக்கிறது? **E P. 343 ¶ 1-4**

(21) Which ambitions are restrained by the heavenly promises, and which are encouraged and developed thereby? Cite Scriptures on the subject and show their application. Page 259 ¶ 2, 3
21. பரலோகத்திற்குரிய வாக்குத்தத்தங்களினால் தடுக்கப்படும் பேராசைகள் என்ன? மேலும் எவையெல்லாம் ஊக்குவிக்கப்பட்டு, வளர்க்கப்படுகின்றன? இவ்விஷயம் சம்பந்தமான வசனங்களை மேற்கோள்காட்டி, அவைகளின் பயன்பாட்டைக் காட்டவும். **E P. 344 ¶ 1 - E. P. 345 ¶ 1**

(22) Show the philosophy of how the spirit of a sound mind deepens and broadens character. What, if anything, opposes this? Cite the Scriptures. Page 260 ¶ 1
22. தெளிந்த புத்தியின் ஆவி, எவ்வாறு குணநலன்களை ஆழமாக்கவும், அகலமாக்கவும் செய்கிறது என்பதன் தத்துவத்தைக் காண்பிக்கவும். எதிர்ப்புகளை தெளிந்த மனமானது எப்படி பார்க்கின்றது? வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 345 ¶ 2**

(23) If patience, sympathy, generosity, love, godlikeness are elements of a sound mind, show how these qualities become more developed and appreciated. Page 260 ¶ 2
23. பொறுமை, இரக்கம், பெருந்தன்மை, அன்பு, தெய்வத்தன்மை ஆகியவை தெளிந்த புத்தியின் மூலக்கூறுகள் என்றால், இந்தக் குணலட்சணங்களானது எவ்வாறு இன்னும் அதிகமாக வளர்க்கப்பட்டு, வெளிப்படவேண்டும் என்பதைக் காட்டவும். **E P. 345 ¶ 3**

(24) What is the effect of the spirit of a sound mind in the home? How does it operate? What is the motive or mainspring? Page 260 ¶ 3
24. வீட்டில், தெளிந்த புத்தியுள்ள ஆவியின் விளைவு என்னவாயிருக்கும்? அது எவ்வாறு செயல்படும்? அதன் நோக்கம் அல்லது செயல் தூண்டுதலுக்கான காரணம் என்ன? **E P. 346 ¶ 1**

(25) Will the spirit of a sound mind make its possessor the best husband or wife, the best sister or brother, the best parent, or the best child? Why so, or why not? Give the philosophy of the matter. Page 261
25. தெளிந்த புத்தியுள்ள ஆவியானது, அதை உடையவரைச் சிறந்த கணவராகவோ அல்லது மனைவியாகவோ, சிறந்த சகோதரியாகவோ அல்லது சகோதரனாகவோ, சிறந்த பெற்றோராகவோ அல்லது சிறந்த பிள்ளையாகவோ ஆக்குமா? அப்படி ஆக்குவது ஏன்? அல்லது அப்படி ஆக்காதிருப்பது ஏன்? இவ்விஷயத்திற்கான தத்துவத்தை அளிக்கவும். **E P. 347 ¶ 1**

(26) What is sure to be the effect of this spirit of a sound mind? Page 262 ¶ 1
26. இந்தத் தெளிந்த புத்தியுள்ள ஆவியின் பலன் உண்மையில் என்னவாக இருக்கும்? **E P. 347 ¶ 2**

(27) Cite one of the evidences of the unsoundness of human judgment. Cite the Scriptural admonition touching the defect. Page 262 ¶ 2
27. தெளிவற்ற மனித சிந்தனை (நிதானிப்பு) குறித்த சாட்சியங்களில் ஒன்றை மேற்கோள்காட்டவும். இந்தக் குறைபாட்டைக்குறித்து வேதவசனத்தில் காணப்படும் அறிவுரையை மேற்கோள்காட்டவும். **E P. 348 ¶ 1**

(28) Who may have this spirit now and is there hope that others may have it in the future? Cite the Scriptures. Page 262 ¶ 3
28. இப்பொழுது இந்த ஆவியை யார் பெற்றிருக்க முடியும்? மேலும், எதிர்காலத்தில் மற்றவர்களும் அதைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதா? வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 348 ¶ 2**

(29) Is there anything to suggest or to prove that the spirit of a sound mind, the spirit of wisdom, the spirit of common sense, is a spirit being which comes into us, or is it simply an instruction, a basis of proper, sound reason?
29. தெளிந்த புத்தியின் ஆவி, ஞானத்தின் ஆவி, பொது அறிவின் ஆவி என்பது நமக்குள் வரக்கூடிய ஓர் ஆவியின் ஜீவி என்பதை நிரூபிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ ஏதாகிலும் உள்ளதா? அல்லது ஒரு சரியான தெளிவான காரணத்தின் அடிப்படையில் இருக்கக்கூடிய, வெறும் ஒரு அறிவுறுத்தல் தானா?

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் V மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 11

### ''ஒப்புரவாகுதலின் பரிசுத்த ஆவி மறுக்கும் செய்திகளை ஆழ்ந்து ஆராய்தல்''

(1) Is It possible that the translation of the Scriptures by Trinitarians would give a gloss or color to their work? Does this apply to the revised version as well? Page 263

1. திரித்துவ கொள்கைகாரர்களால் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால் அவர்களுடைய வேலைக்கே உரிய தோற்றத்தை அளிப்பதற்கு வாய்ப்புள்ளதா? அதுபோல இது திருத்தப்பட்ட பதிப்புக்கும் (Revised Version) பொருந்துமா? **E P. 349**

(2) Where do the Scriptures speak of our quenching the Holy Spirit? What does this signify? Page 264 ¶ 1

2. பரிசுத்த ஆவியை அவித்துப்போடுதல் குறித்து வேதாகமத்தில் எங்குப் பேசப்படுகிறது? இது அடையாளப்படுத்துவது என்ன? **E P. 350 ¶ 1**

(3) Where do the Scriptures speak of our being sealed with the Holy Spirit? What does this signify? Page 264 ¶ 2

3. நாம் பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்படுவதைக் குறித்து வேதாகமத்தில் எங்குப் பேசப்படுகிறது? இது அடையாளப்படுத்துவது என்ன? **E P. 350 ¶ 2**

(4) Do the Scriptures speak of grieving the Holy Spirit? What thought does this convey? Page 264 ¶ 2

4. பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவது குறித்து வேதாகமம் பேசுகிறதா? இது தெரிவிக்கும் சிந்தனை என்ன? **E P. 350 ¶ 2**

(5) Cite a Scripture passage referring to the Spirit of Truth as speaking of and showing things to come. Page 265 ¶ 1

5. வரப்போகிற காரியங்களைக்குறித்து அறிவிக்கவும், காண்பிக்கவும் கூடிய சத்திய ஆவியைக் குறிப்பிடும் வசனப்பகுதியை மேற்கோள்காட்டவும். **E P. 352 ¶ 1**

(6) When we previously considered this text what did we ascertain concerning its meaning? Page 170

6. இவ்வசனத்தை இதற்குமுன் நாம் ஆராய்ந்தபோது, அதன் அர்த்தம் குறித்து நாம் அறிந்துகொண்டது என்ன? **E P. 212, 213**

(7) Under what circumstances did our Lord utter the words of this text? What was the effect of the circumstances upon the Apostles? And why did He promise them a Comforter? Page 265

7. எந்தச் சூழ்நிலையில் நம்முடைய ஆண்டவர் இந்த வார்த்தைகளைக் கூறினார்? அப்போஸ்தலர்கள் மீது இந்தச் சூழ்நிலைகளின் தாக்கம் என்னவாக இருந்தது? மேலும், அவர் அவர்களுக்கு ஒரு தேற்றரவாளனை வாக்களித்தது ஏன்? **E P. 352**

(8) Explain our Lord's meaning in this promise of the Comforter, the Spirit of Truth. Did He mean another person than Himself? If so, in what manner could another person advantageously fill His place? Page 266 ¶ 1

8. சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் குறித்த இந்த வாக்குத்தத்தத்தில் நம்முடைய ஆண்டவர் அர்த்தப்படுத்தியதை விளக்கிக்கூறவும். அவர் தம்மைத்தவிர வேறொரு நபரை அர்த்தப்படுத்தினாரா? அப்படியானால், அவருடைய இடத்தை இன்னொரு நபர் எந்த வகையில் நிரப்ப முடியும்? **E P. 352 ¶ 2**

(9) Was it the Spirit of the Truth, the Spirit of Jesus or the Spirit of the Father or both, or was it a spirit being separate and distinct from them? Page 266
9. அது, பிதாவின் ஆவி அல்லது இயேசுவின் ஆவி அல்லது இருவருடைய ஆவியாகிய சத்திய ஆவியாக இருந்ததா? அல்லது அது அவர்களிடத்திலிருந்து தனித்து வேறுபட்ட ஓர் ஆவியின் ஜீவியாக இருந்ததா? **E P. 352 ¶ 2**

(10) Just what were the disciples to understand by the promise? Page 266 ¶ 2, 3
10. இந்த வாக்குத்தத்தத்தின் மூலமாக சீஷர்கள் எதை மாத்திரம் புரிந்துகொள்ள வேண்டியதாக இருந்தது? **E P. 353 ¶ 1 - E P. 354 ¶ 1**

(11) In the expression, "Holy Ghost," what is the meaning of **ghost**? Page 169
11. "ஹோலி கோஸ்ட்/ஆவி" (Holy Ghost) என்ற ஆங்கில சொற்றொடரில், கோஸ்ட்/**ஆவி** என்பதன் அர்த்தம் என்ன? **E P. 210 ¶ 2**

(12) Read John 14:26. Explain how the "Holy Ghost" could be sent, and what is implied by such expressions as "sin against the Holy Spirit," "pour out the Holy Spirit" etc. Page 267
12. யோவான் 14:26-ஆம் வசனத்தை வாசிக்கவும். "ஹோலி கோஸ்ட்" ("Holy Ghost") எப்படி அனுப்பப்பட முடியும் என்பதை விளக்கிக்கூறவும். மேலும், "பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்" மற்றும் "பரிசுத்த ஆவியை ஊற்றுவேன்" போன்ற சொற்றொடர்களினால் குறிப்பாய்த் தெரிவிப்பது என்ன? **E P. 354 ¶ 2**

(13) What is the significance of the expression that God would send the Holy Spirit in His (Jesus') name? Why not in the Father's own name? Page 267
13. பிதாவானவர் இயேசுவின் நாமத்தில் பரிசுத்த ஆவியை அனுப்புவார் என்ற சொற்றொடரின் முக்கியத்துவம் என்ன? பிதாவின் சொந்த நாமத்தில் இல்லாதிருப்பது ஏன்? **E P. 354 ¶ 2**

(14) Did the Holy Spirit of the Father ever act as a Comforter to our Lord Jesus? If so, where and how? Page 268 ¶ 1
14. பிதாவின் ஆவி (பரிசுத்த ஆவி) நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கு எப்போதாவது தேற்றரவாளனாக செயல்பட்டதா? அப்படியானால், எங்கு மற்றும் எப்படி? **E P. 355 ¶ 1**

(15) Does the knowledge of the Father's will and of things to come comfort the natural man or only the New Creature? Why? Page 268 ¶ 1
15. பிதாவின் சித்தத்தை அறிகிற அறிவும், வரப்போகிற காரியங்கள் பற்றின அறிவும் ஜென்மசுபாவமான மனுஷனைத் தேற்றுமா அல்லது புதுச் சிருஷ்டியை மாத்திரம் தேற்றுமா? ஏன்? **E P. 355 ¶ 1**

(16) Where do we read, "They were all filled with the Holy Spirit and began to speak with tongues as the Spirit gave them utterance"? Page 268 ¶ 2
16. "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவி தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" என்ற வசனத்தை நாம் எங்கு வாசிக்கிறோம்? **E P. 356 ¶ 2**

(17) Explain the double action of the Spirit in this text, first possessing or filling them, and second, speaking through them. Page 268 ¶ 3
17. இந்த வசனத்தில், முதலாவது ஆவியைப் பெறுதல் (அ) ஆவியினால் நிரப்பப்படுதல், மற்றும் இரண்டாவதாக ஆவியின் வரத்தினால் வெவ்வேறு பாஷையில் பேசுதல் போன்ற ஆவியின் இரண்டு செயல்பாட்டை விளக்கிக்கூறவும். **E P. 357 ¶ 1**

(18) Whom did St. Peter accuse of lying to the Holy Spirit? Cite the Scripture. Page 269 ¶ 1
18. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்யுரைத்ததாகப் பரிசுத்த பேதுரு யாரைக் குற்றஞ்சாட்டினார்? வேதவசனத்தை மேற்கோள்காட்டவும். **E P. 357 ¶ 2**

(19) How did Satan fill the heart of the evildoer? Did he come personally into the man? Is Satan personally present everywhere? And in all liars and evildoers? How could he be, except by his influence? Page 269 ¶ 2
19. தீமை செய்வோரின் இருதயத்தைச் சாத்தான் எவ்வாறு நிரப்பினான்? அவன் ஒரு நபராக/ஆள் தத்துவமாக மனுஷனுக்குள் வந்தானா? சாத்தான் நபராக/ஆள் தத்துவமாக எவ்விடத்திலும் இருக்கிறானா? மேலும், பொய்யுரைப்போர் மற்றும் தீமைசெய்வோர் ஆகிய அனைவருக்குள்ளும் இருக்கின்றானா? அவனுடைய செல்வாக்கின் மூலமாகத் தவிர, அவனால் எவ்வாறு புலப்பட முடியும்? **E P. 357 ¶ 3**

(20) St. Peter speaks of lying to the Holy Spirit. Why did he not say lying to God or lying against the Truth? Page 269 ¶ 2
20. பரிசுத்த பேதுரு பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொன்னதாகக் குறிப்பிடுகிறார். அவர், தேவனிடத்தில் பொய்சொன்னதாகவோ அல்லது சத்தியத்திற்கு விரோதமாகப் பொய்சொன்னதாகவோ சொல்லாதிருந்தது ஏன்? **E P. 357 ¶ 3**

(21) St. Peter is quoted as saying, "Ye have agreed together to tempt the Spirit of the Lord." Where is this written? Page 270 ¶ 1
21. "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன" என்று பரிசுத்த பேதுரு கூறினதாக மேற்கோள்காட்டப்பட்டுள்ளது. இது வேதத்தில் எங்கு எழுதப்பட்டுள்ளது? **E P. 358 ¶ 1**

(22) How are we to understand this matter of tempting the Spirit of the Lord? Page 270 ¶ 2
22. கர்த்தருடைய ஆவியைச் சோதித்தல் குறித்த இவ்விஷயத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? **E P. 358 ¶ 2**

(23) Our Lord mentions a sin against the Holy Spirit. Where? Quote the passage and cite it. Page 270 ¶ 3
23. பரிசுத்த ஆவிக்கு விரோதமான ஒரு பாவம் குறித்து நமது ஆண்டவர் குறிப்பிட்டது எங்கே? அந்தப் பகுதியை மேற்கோள்காட்டி எடுத்துரைக்கவும். **E P. 359 ¶ 1**

(24) Did our Lord here mean to teach that the Holy Spirit is a more distinguished person than either the Father or the Son? If not, why this form of statement? Page 270 ¶ 4
24. பிதாவை அல்லது குமாரனைப் பார்க்கிலும் பரிசுத்த ஆவி, மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு நபர் என்று நம்முடைய ஆண்டவர் இங்குக் கற்பிக்க (போதிக்க) நினைத்தாரா? அப்படி இல்லையென்றால், ஏன் இம்மாதிரியான வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது? **E P. 359 ¶ 2**

(25) Did our Lord disclaim the power which He used, and attribute it to the Father, saying that He cast out devils by the power of God? Page 270 ¶ 5
25. நம்முடைய ஆண்டவர் தாம் பயன்படுத்தின வல்லமையைத் தம்முடையது என்று சொல்ல மறுத்து, தாம் தேவனுடைய வல்லமையினாலே பிசாசுகளைத் துரத்தினதாகக் கூறி, அதை தேவன் பேரில் சாட்டினாரா? **E P. 359 ¶ 3**

(26) Explain this Scripture as a whole. Pages 271-273
26. இந்த வசனம் முழுவதையும் விளக்கிக்கூறவும். **E P. 360-363**

(27) Where do we read, "The Spirit said unto Philip, Go near and join thyself to this chariot"? Page 273 ¶ 2
27. "ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்..." என்பதை நாம் எங்கே வாசிக்கிறோம்? **E P. 363 ¶ 1**

(28) Is there anything in this passage which seems to imply that the spirit or influence or power which directed Philip was aside from the Father or Son? Is there any evidence in it of another God? Page 273 ¶ 3
28. பிலிப்புவை இயக்கிய ஆவி அல்லது ஆற்றல் அல்லது வல்லமையானது, பிதா அல்லது குமாரனுடைய ஆவியை அல்லாமல், வேறு ஏதோ ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கிறதைப்போல இந்த வாக்கியத்தில் ஏதேனும் இருக்கிறதா? இதில், வேறொரு தேவன் என்பது போன்ற சாட்சியம் ஏதேனும் இருக்கிறதா? **E P. 363 ¶ 2**

(29) Is there evidence of another God in the declaration "The Spirit said unto him, Behold, three men seek thee"? (Acts 10:19) How should this passage be understood? Page 274 ¶ 1
29. "ஆவியானவர்: இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்" (அப்போஸ்தலர் 10:19) என்ற வசன அறிக்கையில், வேறொரு தேவன் குறித்து சாட்சியம் ஏதேனும் உள்ளதா? இந்த வசனப்பகுதியானது எவ்வாறு புரிந்துகொள்ளப்பட வேண்டும்? **E P. 364 ¶ 1**

(30) "The Holy Ghost said, Separate Me Barnabas and Saul for the work for which I have called them." Where are these words found and what do they signify? Pages 274, 275
30. "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்." இந்த வார்த்தைகள் எங்குக் காணப்படுகிறது? மற்றும் அவைகள் அடையாளப்படுத்துவது என்ன? **E P. 364 ¶ 2 - E P. 366**

(31) Where is it written, "It seemed good to the Holy Ghost and to us," and what does this Scripture signify?
31. "பரிசுத்த ஆவிக்கும், எங்களுக்கும் நலமாகக் கண்டது" என்ற வசனப்பகுதி எங்கு எழுதப்பட்டுள்ளது? மேலும், இந்த வசனம் அடையாளப்படுத்துவது என்ன?

(32) How was the Apostle forbidden of the Holy Ghost to preach the Word in Asia? Give resume and cite the Scriptures. Page 276
32. ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலன் எவ்வாறு தடைபண்ணப்பட்டார்? தொகுப்பளித்து, வசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 367 ¶ 1, 2**

(33) Where do we read, "The Holy Ghost witnesseth in every city, saying that bonds and afflictions await me"? Page 277
33. "கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறார்" என்பதை நாம் எங்கே வாசிக்கிறோம்? **E P. 368, 369**

(34) What does this signify? Give details and cite the Scriptures.
34. இது அடையாளப்படுத்துவது என்ன? விளக்கங்கள் கொடுத்து, வசனங்களை மேற்கோள்காட்டவும்.

(35) How did the Holy Ghost make the Elders of Ephesus overseers in the Church? Page 278
35. பரிசுத்த ஆவி, எபேசுவிலுள்ள மூப்பர்களை எவ்வாறு சபையின் கண்காணிகளாக ஏற்படுத்திற்று? **E P. 369 ¶ 4 - E P. 370 ¶ 2**

(36) The Apostle speaks of his own preaching as being "not in the words which man's wisdom teacheth, but which the Holy Ghost teacheth." Where are these words found? What do they imply? Page 279
36. அப்போஸ்தலர் தனது சொந்த உபதேசத்தைக் குறித்துச் சொல்லும்போது, "அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசுகிறோம்" என்று கூறினார். இந்த வார்த்தைகள் எங்குக் காணப்படுகிறது? அவை குறிப்பாய்த் தெரிவிப்பது என்ன? **E P. 371 ¶ 1, 2**

(37) We read that "the natural man receiveth not the things of the spirit of God," etc. Where is the Scripture? What does it signify? Give the philosophy of the matter. Page 279 ¶ 3, 4; Page 280 ¶ 1
37. "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்" என்று நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் எங்கே இடம்பெறுகிறது? அது அடையாளப்படுத்துவது என்ன? இந்த விஷயத்திற்கான தத்துவத்தைக் அளிக்கவும். **E P. 372, 373**

(38) Read I John 2:20, 27. What thought is suggested in the words **"unction"** and **"anointing"** in these texts and how are they applicable to the Church? Pages 280, 281
38. 1 யோவான் 2:20, 27-ஆம் வசனங்களை வாசிக்கவும். இந்த வசனங்களில் **"அபிஷேகம்"** (unction மற்றும் anointing) என்ற வார்த்தைகளில் பரிந்துரைக்கப்படும் சிந்தனை என்ன? மேலும், இவை சபைக்கு எவ்வாறு பொருந்துகிறது? **E P. 373 ¶ 1 - E P. 374 ¶ 1**

(39) What does the word **unction** signify? What is the Greek word rendered unction and its import? Page 281 ¶ 3
39. **அபிஷேகம்** (unction) என்ற வார்த்தை அடையாளப்படுத்துவது என்ன? **அபிஷேகம்** (unction) என்ற மொழியாக்கத்திற்கான கிரேக்க வார்த்தை என்ன? மேலும், அதன் உட்பொருள் என்ன? **E P. 375 ¶ 1**

(40) Could these words, unction and anointing of the Spirit, apply to a person or only to a power or influence? Page 282 ¶ 1
40. ஆவியினுடைய அருள் பொழிவு மற்றும் அபிஷேகம் என்ற இந்த வார்த்தைகளானது, ஒரு நபருக்குப் பொருந்தக்கூடியதா அல்லது ஒரு வல்லமை அல்லது ஆதிக்கத்துக்கு மாத்திரமே பொருந்தக்கூடியதா? **E P. 375 ¶ 2**

(41) Who is the Holy One in the expression, "An unction from the Holy One"? Page 282 ¶ 2
41. "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று" என்ற சொற்றொடரில், பரிசுத்தர் என்று சொல்லப்படுபவர் யார்? **E P. 376 ¶ 1**

(42) Cite other Scriptures which speak of the pouring out, shedding forth, anointing, etc., of the Holy Spirit. Page 282 ¶ 2
42. பரிசுத்த ஆவி பொழியப்படுதல், ஊற்றப்படுதல், பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்படுதல் போன்றவற்றைக் குறித்துப் பேசும் மற்ற வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 376 ¶ 1**

(43) In 1 John 2:20, the wording implies that those who have the unction "know all things," are all-wise. What about this statement? Give a preferred translation. Is it here as in the oldest manuscripts? Page 282 ¶ 3
43. 1 யோவான் 2:20-ஆம் வசனத்தின் வார்த்தைகள், அபிஷேகம் பெற்றிருப்பவர்களே "சகலத்தையும் அறிந்து" சர்வ ஞானமும் உடையவர்களாக இருக்கின்றனர் என்பதாகச் சுட்டிக்காட்டுகிறது. இந்த வசனம் குறிப்பிடுவது என்ன? விரும்பத்தகுந்த மொழியாக்கம் ஒன்றை அளிக்கவும். பழைய மூலப்பிரதிகளில் உள்ளதுபோல்தான் இங்கேயும் உள்ளதா? **E P. 376 ¶ 2**

(44) What is the truth and meaning of the words, "Ye need not that any man teach you"? Page 283 ¶ 1
44. "ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை" என்ற வார்த்தைகளின் அர்த்தமும், அதில் அடங்கியுள்ள சத்தியமும் என்ன? **E P. 377 ¶ 1-3**

(45) As it stands in our common version, would not this passage be in conflict with many others? Quote and cite some of these. Page 283 ¶ 2; Page 284 ¶ 1, 2
45. நம்முடைய பொதுவான மொழிப்பெயர்ப்பில் உள்ளதுபோல், இந்த வசனம் மற்ற அநேக வசனங்களுடன் முரண்படும் அல்லவா? இவைகளில் சிலவற்றை மேற்கோள்காட்டி எடுத்துரைக்கவும். **E P. 378 ¶ 1 - E P. 380 ¶ 7**

(46) About when is it supposed that John wrote this Epistle? Tell something of the world's condition at that time. Page 285
46. யோவான் இந்த நிருபத்தை எப்பொழுது எழுதினதாக நம்பப்படுகிறது? அந்தக் காலப்பகுதியில் காணப்பட்ட உலகத்தின் நிலை குறித்துச் சிலவற்றைக் கூறவும். **E P. 380 ¶ 8 - E P. 382 ¶ 1**

(47) To what class did the Apostle refer as "them that seduce you"? (vs. 26) Page 286 ¶ 1
47. "உங்களை வஞ்சிக்கிறவர்களாக" (வசனம் - 26) என்று அப்போஸ்தலர் எந்த வகுப்பாரைக் குறித்துச் சொல்லுகிறார்? **E P. 382 ¶ 2**

(48) Give a paraphrase of the 27th verse of this text. Page 286 ¶ 3; Page 287 ¶ 1
48. இந்த அதிகாரத்தின் 27-ஆம் வசனத்திற்கான ஒரு விளக்கவுரையைத் தருக. **E P. 383 ¶ 1, 2**

(49) Where is it written that "The Spirit itself maketh intercession for us with groaning which cannot be uttered," and what spirit is here referred to? Page 287 ¶ 2
49. "ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்பது எங்கே எழுதப்பட்டுள்ளது? மேலும், இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆவி என்ன? **E P. 384 ¶ 1** (வசனம்)

(50) How is this Scripture generally misunderstood? Page 287 ¶ 3
50. இந்த வசனம் பொதுவாக எவ்வாறு தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது? **E P. 384 ¶ 2**

(51) With the theory that it is the Holy Spirit, one of three equal Gods, is it reasonable to suppose that there would be anything too hard for it to utter? Page 288 ¶ 1
51. மூன்று சமநிலையான தேவர்களில் ஒருவர், பரிசுத்த ஆவியானவர் என்ற கோட்பாட்டின் மூலம், உச்சரிக்கமுடியாத (வாக்குக்கடங்காத) அளவிற்கு, அதற்கு (பரிசுத்த ஆவிக்கு) ஏதாவதொன்று இருக்கும் என கருதுவது நியாயமாக இருக்குமா? **E P. 385 ¶ 1**

(52) Is the popular thought that we must approach the Father and Son through the Holy Spirit as another person a reasonable one or in accord with other Scriptures? Page 288, top
52. நாம் பிதாவையும் குமாரனையும், வேறொரு தனி நபராகிய பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே அணுகமுடியும் என்ற பிரபலமான கருத்தானது நியாயமான ஒன்றாக உள்ளதா அல்லது மற்ற வேதவசனங்களுடன் இசைவாக உள்ளதா? **E P. 385** மேற்பகுதி.

(53) If the groaning cannot be uttered, how would there be groanings at all? Wherein is the error of the ordinary view of this text? Give a detailed explanation of it and cite the Scripture. Pages 288, 289, 290
53. புலம்பல்கள் என்பது உச்சரிக்கப்படவே முடியாதென்றால், பின்பு அங்கு புலம்பல்கள் என்பது எப்படி இருக்க முடியும்? இந்த வசனத்தைப் பற்றின பொதுவான பார்வையினுடைய பிழை எங்கு/எதில் இருக்கிறது? இதைப் பற்றின விரிவான விளக்கத்தைத் தந்து, வேதவாக்கியங்களை மேற்கோள்காட்டவும். **E P. 386 - E P. 389**

(54) We read of the Holy Spirit, "He will reprove the world of sin and of righteousness and of Judgment" Where are these words found, and why is the Holy Spirit referred to by the masculine pronoun **he**? Pages 170, 171, 291
54. "அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" என்று பரிசுத்த ஆவியைக்குறித்து நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் எங்குக் காணப்படுகிறது? மேலும், பரிசுத்த ஆவி, **அவர்** என்ற ஆண்பால் பெயரால் குறிப்பிடப்பட்டிருப்பது ஏன்? **E P. 212, 213; E P. 389 ¶ 2, 3**

(55) Does this Scripture imply that the Holy Spirit operates in sinners for their reproof and their reformation? Page 291 ¶ 1, 2
55. பாவிகளைக் கண்டிக்கவும், சீர்த்திருத்தவும் பரிசுத்த ஆவி பாவிகளுக்குள் செயல்பட்டு வருகிறதாக இந்த வசனம் சுட்டிக்காண்பிக்கிறதா? **E P. 389 ¶ 2, 3**

(56) If it operates only in the Church, the Spirit-begotten, what would this text signify? Page 291 ¶ 3
56. அது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகிய சபையினிடத்தில் மாத்திரம் செயல்படுகிறதென்றால், இந்த வசனப்பகுதி எதை அடையாளப்படுத்தக்கூடும். **E P. 390 ¶ 1**

(57) Explain how the Holy Spirit reproves the world, what influence it exercises and how, and the outward evidences thereof. Page 292
57. பரிசுத்த ஆவி உலகத்தை எவ்வாறு கண்டித்து உணர்த்தும் என்பதையும், அது எம்மாதிரியான தாக்கத்தை செயல்படுத்துகிறது என்பதையும் மற்றும் எப்படி செயல்படுத்துகிறது என்பதையும், அதன் வெளிப்புற சாட்சியங்களையும் விளக்கிக்கூறவும். **E P. 391 ¶ 1, 2**

(58) In what sense are the Lord's people "children of light," and whom do they enlighten, and what is the enlightening power? Page 293
58. எவ்விதத்தில் கர்த்தருடைய ஜனங்கள் "வெளிச்சத்தின் பிள்ளைகளாக" இருக்கிறார்கள்? மேலும் அவர்கள் யாரைப் பிரகாசிக்கச்செய்வார்கள்? மேலும், பிரகாசிக்கச்செய்யும் வல்லமை என்ன? **E P. 392 ¶ 2 - E P. 393 ¶ 4**

(59) Mention some of the things which the Holy Spirit reproves through the children of the light. Is such a reproving of the world the chief work of the Holy Spirit in this Age, and the chief work of the Church, or not? Page 294
59. வெளிச்சத்தின் பிள்ளைகள் மூலமாக பரிசுத்த ஆவி கண்டித்து உணர்த்தும் காரியங்கள் சிலவற்றைக் குறிப்பிடவும். இந்த யுகத்தில் இப்படியாக உலகத்தைக் கண்டித்து உணர்த்துவதே பரிசுத்த ஆவியின் பிரதான வேலையாகவும், சபையின் பிரதான வேலையாகவும் இருக்கிறதா? அல்லது இல்லையா? **E P. 394**

(60) Give illustrations of how the light of the Holy Spirit in the children of the light might become darkness. Page 294 ¶ 2
60. வெளிச்சத்தின் பிள்ளைகளிடத்தில் பிரகாசிக்கக்கூடிய பரிசுத்த ஆவியின் வெளிச்சமானது எப்படி இருளடையக்கூடும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் கொடுக்கவும். **E P. 394 ¶ 3**

(61) In what verse of the Bible is the Spirit of God contrasted with the spirit of antichrist? Page 295 ¶ 1
61. வேதாகமத்தின் எந்த வசனத்தில் தேவனுடைய ஆவி அந்திக்கிறிஸ்துவின் ஆவியுடன் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது? **E P. 395 ¶ 1**

(62) Is the spirit of antichrist a person? If not, what is the inference as respects the Spirit of God when thus used in comparison? Page 295 ¶ 2
62. அந்திக்கிறிஸ்துவின் ஆவி என்பது ஓர் ஆள்தத்துவமா? இல்லை என்றால், இவ்வாறு ஒப்பிடும்போது, தேவனுடைய ஆவி குறித்த அனுமானம் என்ன? **E P. 395 ¶ 2**

(63) How should we "try the spirits"? And are both the spirit of the Truth and the spirit of error personated through human agencies, teachers, etc.? Page 295 ¶ 2
63. நாம் "ஆவிகளைச் சோதித்தறிவது" எப்படி? மேலும், சத்திய ஆவியும், தப்பறையின் ஆவியுமாகிய இரண்டுமே மனுஷ பிரதிநிதிகள், போதகர்கள் போன்றவர்கள் மூலமாக வெளிப்படுகிறது? **E P. 395 ¶ 2**

(64) Give one general Scripture text as respects false faith and true and false teachers which refers to the spirit of antichrist as not confessing the coming of Jesus in the flesh. Page 295 ¶ 1
64. மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கைபண்ணாத அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் குறிப்பிடும் பொய்யான விசுவாசம் குறித்தும், பொய் போதகர்கள் மற்றும் உண்மை போதகர்கள் குறித்துமான பொதுவான வசனப்பகுதி ஒன்றைக் கொடுக்கவும். **E P. 395 ¶ 1**

(65) Give illustrations of teachings which deny that our Lord came in the flesh and which, therefore, should be classed as **anti** or against, opposed to, the doctrines of Christ. Page 296 ¶ 1, 2, 3; Page 297 ¶ 1
65. மாம்சத்தில் வந்த நம்முடைய ஆண்டவரை மறுதலிக்கக்கூடிய உபதேசங்களுக்கும், அதனால் கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு **எதிரிடையானது**, முரண்பாடானது என்று வகையறுக்க வேண்டிய உபதேசங்களுக்குமான எடுத்துக்காட்டுகள் கொடுக்கவும். **E P. 397 ¶ 1 - E P. 398 ¶ 2**

(66) What objection is sometimes raised to the common version of this text? Explain the matter in detail and show that our common version is well sustained. Page 297, last par.; Page 298 ¶ 1
66. இந்த வசனத்தின் பொதுவான மொழிப்பெயர்ப்புக்கு சிலசமயங்களில் எழுப்பப்படும் எதிர்ப்பு என்ன? இந்த விஷயத்தை விவரமாக விளக்கிக்கூறவும்; மற்றும் நம்முடைய பொதுவான மொழிப்பெயர்ப்பு நன்றாக நிலைகொண்டிருக்கிறது என்பதைக் காட்டவும். **E P. 399 ¶ 1 - E P. 400 ¶ 1**

(67) Give Prof. Rinehart's definition of the Greek text. Pages 298, 299
67. இதன் கிரேக்கப் பதத்திற்குப் பேராசிரியர் ரைன்ஹார்ட் என்பவரின் விளக்கத்தைக் கொடுக்கவும். **E P. 400 ¶ 2 - E P. 402 ¶ 1**

(68) Is it necessary to believe that Christ came in the flesh to logically believe in the Ransom? If so, how and why? Page 299, last par.
68. ஈடுபலியில் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதற்காகவே, கிறிஸ்து மாம்சத்தில் வந்தார் என்பதை விசுவாசிக்க வேண்டியது அவசியமா? ஆம் என்றால், எப்படி மற்றும் ஏன்? **E P. 402 ¶ 2**

---

## அத்தியாயம் 12

### "ஒப்புரவாகுதலின் பாடம் - மனிதன்"

(1) What two general views are there in response to the question, what is man that God is mindful of him? And what is the proper basis of our information on this subject? And, why is that information provided? Page 301

1. தேவன் மனுஷனை நினைக்கிறதற்கு அவன் எம்மாத்திரம் என்ற கேள்விக்குப் பதிலாகக் காணப்படும் இரண்டு பொதுவான கண்ணோட்டங்கள் என்ன? மேலும், இந்தத் தலைப்பின் மீது நம்முடைய தகவலின் சரியான அடித்தளம் என்ன? மற்றும் இந்தத் தகவலானது அளிக்கப்பட்டது ஏன்? **E P. 405**

(2) Explain these two popular theories--the "Orthodox" and the "Scientific." Pages 302-304

2. புராதன கருத்து மற்றும் விஞ்ஞான கருத்து - ஆகிய இந்த இரண்டு பிரபலமான கொள்கைகளை விளக்கிக்கூறவும். **E P. 407 ¶ 1 - E P. 410 ¶ 1**

(3) What is the importance of an understanding of what man is, as related to the subject of the Atonement for man's sins? Page 302, top

3. மனுஷனுடைய பாவத்திற்கான ஒப்புரவாகுதல் என்ற பாடத்திற்குத் தொடர்புடையதாக, மனுஷன் என்பவன் யார் என்ற கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் என்ன? **E P. 406**

(4) Why should we ignore the two general views and accept the Bible testimony respecting the nature of man? Page 304 ¶ 3

4. மனுஷனுடைய சுபாவம் குறித்துப் பொதுவாகக் காணப்படும் இரண்டு கண்ணோட்டங்களை நாம் தவிர்த்து, வேதாகம சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது ஏன்? **E P. 410 ¶ 2**

(5) Cite some texts frequently misunderstood and misapplied on this subject and show their true meaning. Pages 305-307

5. இந்த விஷயத்தில் அடிக்கடி தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, தவறாகப் பயன்படுத்தப்பட்டு வரும் வசனப்பகுதிகள் சிலவற்றை மேற்கோள்காட்டி, அதன் உண்மையான அர்த்தத்தையும் காண்பிக்கவும். **E P. 411 ¶ 1 - E P. 413 ¶ 2**

(6) Is man, as scientists claim, an animal? And what is the meaning of the word "animal"? Page 307 ¶ 2

6. விஞ்ஞானிகள் கூறுவதுபோல் மனுஷன் ஒரு விலங்கின வகையைச் சார்ந்தவனா? மேலும், "விலங்கு" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? **E P. 414 ¶ 1**

(7) What is the relationship or comparison between man and the lower animals--beasts, birds, fishes, etc? And did man receive a special spark of Divinity at first, or at conception or at any time? Page 307 ¶ 2, 3

7. மனுஷனுக்கும், மனுஷனைப்பார்க்கிலும் சற்று சிறிய நிலையில் இருக்கும் விலங்கினங்களான மிருகங்கள், பறவைகள், நீர்வாழ் ஜந்துக்கள் போன்றவைகளுக்கும் இடையே உள்ள உறவு நிலை அல்லது ஒப்புமை என்ன? மேலும், மனுஷன் முதன் முதலில் அல்லது கருவில் உற்பத்தியானபோது அல்லது எச்சமயத்திலாவது ஒரு விசேஷமான தெய்வீகச் சுபாவத்தின் பொறியைப் பெற்றவனாக இருக்கிறானா? **E P. 414 ¶ 1, 2**

(8) What theory is built upon the assumption that a Divine spark comes to each human being? Page 307 ¶ 4
8. ஒவ்வொரு மனுஷனுக்கும் தெய்வீகச் சுபாவத்தின் பொறி கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற யூகத்தின் மீது கட்டப்பட்ட கொள்கை என்ன? **E P. 415 ¶ 1**

(9) How do the Scriptures recognize man--of how many parts or elements? Page 308 ¶ 1
9. வேத வசனங்கள் மனுஷனை எவ்வாறு அடையாளங்கண்டு கொள்கிறது--அதாவது, எத்தனை பகுதிகளால் அல்லது மூலக்கூறுகளால் உண்டானவனாக அடையாளம் கண்டுகொள்கிறது? **E P. 416 ¶ 1**

(10) Is the body the soul? Is the spirit the soul? Explain what is meant by the spirit of life. Show distinctions between the human spirit of life and the spirit of life in the brute. Pages 308, 309
10. சரீரம் என்பது ஆத்துமாவா? ஆவி என்பது ஆத்துமாவா? ஜீவ ஆவி என்றால் என்ன என்பதை விளக்கிக்கூறவும். மனுஷனுடைய ஜீவ ஆவிக்கும், மிருகத்தினுடைய ஜீவ ஆவிக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் காண்பிக்கவும். **E P. 416, 417**

(11) Is each human being separately and specially created by the Almighty? Is God, therefore, responsible for the birth of idiots and for the general unbalance and imperfection of the human family, or what is the explanation? Page 309
11. ஒவ்வொரு மனுஷனும் தனித்தனியாகவும் விசேஷமாகவும் சர்வ வல்லவரால் சிருஷ்டிக்கப்பட்டார்களா? மூடர்களின் பிறப்புக்கும், மனுஷீக குடும்பத்தின் பொதுவான சமநிலையின்மைக்கும் அபூரணத்திற்கும் தேவன் பொறுப்பானவரா? அல்லது இதற்குரிய விளக்கம் என்ன? **E P. 417, 418 ¶ 1**

(12) Did God implant a divine spark which the human imparts to his offspring, or what is the secret of man's superiority over the beast? Page 310
12. தேவன், மனுஷன் தன் சந்ததிக்கு அளிக்க ஒரு தெய்வீக சுபாவத்தின் பொறியை வழங்கினாரா? அல்லது விலங்கினங்களைப் பார்க்கிலும் மனுஷனுக்கு உள்ள மேன்மையின் இரகசியம் என்ன? **E P. 418 ¶ 2**

(13) Give a little dissertation on the spirit of man--what the word implies. Pages 310, 172
13. மனுஷனுடைய ஆவி குறித்து - அதாவது அந்த வார்த்தை எதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதைக் குறித்துச் சிறிய ஆய்வுக்கட்டுரை ஒன்றை அளிக்கவும். **E P. 419, 216**

(14) Compare and contrast the spirit of man with the Spirit of God. Page 311
14. மனுஷனுடைய ஆவியை தேவனுடைய ஆவியுடன் ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் காண்பிக்கவும். **E P. 420** மேற்பகுதி.

(15) The Spirit-begotten, the Church of the First-born, are, during this Gospel age, spoken of as in the Spirit, spiritual, possessed of a new mind or a new spirit, etc. Explain the meaning of these words and show the difference between these and the remainder of mankind, the natural man, in this respect. Page 311 ¶ 1
15. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட முதற்பேறானவர்களாகிய சபை, இந்தச் சுவிசேஷ யுகத்தில், **ஆவியில்** (in the spirit), ஆவிக்குரிய, ஒரு புதிய (புது) சிந்தையை அல்லது ஒரு புது ஆவியைப் பெற்றிருப்பதாகப் பேசப்படுகிறார்கள். இந்த வார்த்தைகளுக்குரிய அர்த்தத்தை விளக்கிக்கூறி, இந்த விஷயத்தில் இவர்களுக்கும், ஜென்ம சுபாவமான மனுஷனாகிய மீதமுள்ள மனுக்குலத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காண்பிக்கவும். **E P. 420 ¶ 1 - E P. 421 ¶ 3**

(16) Give illustrations of the use of the word **spirit** in the New Testament and classify and explain them. Pages 312, 313
16. புதிய ஏற்பாட்டில் **ஆவி** என்ற வார்த்தையின் பயன்பாட்டிற்கான எடுத்துக்காட்டுகளைக் கொடுத்து, அவற்றை வகைப்படுத்தி, விளக்கிக்கூறவும். **E P. 421 ¶ 4 - E P. 424**

(17) What can we say of the word **spirit** in respect to mankind, in the Old Testament? Page 314
17. பழைய ஏற்பாட்டில், மனுக்குலத்தைப் பொறுத்தவரையில் **ஆவி** என்ற வார்த்தைக்குறித்து நாம் என்ன சொல்லலாம்? **E P. 424 ¶ 7**

(18) Cite the Scriptures of the Old Testament referring to the spirit of life or animation and explain these. Pages 314-317
18. ஜீவ ஆவி அல்லது உயிரூட்டுதல் ஆகியவற்றைக் குறிப்பிடக்கூடிய பழைய ஏற்பாட்டு வசனங்களை மேற்கோள்காட்டி, அவைகளை விளக்கிக்கூறவும். **E P. 424 ¶ 8 - E P. 430 ¶ 2**

(19) Cite the Scriptures of the Old and New Testaments in which **ruach**--spirit--is used to signify mind or will. Pages 318, 319
19. மனம் அல்லது சித்தத்தை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட **ரூவாக்** - ஆவி - என்ற வார்த்தை வரக்கூடிய பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு வசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 430, 431**

(20) Explain the Scriptural use of the Hebrew word **neshamah**, the breath of life. Cite the Scriptures and analyze them. Page 319, 320
20. வசனத்தில் பயன்படுத்தப்படும் ஜீவ சுவாசம் என்ற வார்த்தைக்கான எபிரெய பதமாகிய **நெஷாமா** என்பதை விளக்கிக்கூறவும். வேதவசனங்களை மேற்கோள்காட்டி, அவைகளைப் பகுத்து ஆராயவும். **E P. 432 ¶ 1; E P. 433 ¶ 1**

(21) When we read, "Man became a living soul," why is there so much difficulty in understanding the expression? Page 320
21. "மனுஷன் ஜீவாத்துமாவானான்" என்று நாம் வாசிக்கும்போது, இந்தச் சொற்றொடரைப் புரிந்துகொள்வதில் இவ்வளவு சிரமம் இருப்பது ஏன்? **E P. 433 ¶ 2; E P. 434 ¶ 1**

(22) Give the Methodist Bishop's definition of a soul, and say whether or not it fairly represents the so-called "orthodox" view of the subject, and elaborate the same. Page 321 ¶ 1
22. ஆத்துமா குறித்து மெத்தடிஸ்ட் சபையின் பிஷப் ஒருவரின் விளக்கத்தை அளித்து, இது, இந்த விஷயத்தில் பழமைவாத கருத்துகளை நியாயமான முறையில் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா இல்லையா என்பதையும் கூறி, அதை விவரிக்கவும். **E P. 435 ¶ 1**

(23) What foundation is there for such fanciful speculations? Page 321 ¶ 2; Page 322 ¶ 1
23. இத்தகைய கற்பனையான யூகங்களுக்கு அடித்தளமாகக் காணப்படுவது என்ன? **E P. 435 ¶ 2; E P. 436 ¶ 1**

(24) Man has a body and he has a spirit; but has he a soul, or is he a soul? Page 322 ¶ 2
24. மனுஷன் ஒரு சரீரத்தைப் பெற்றவனாக இருக்கிறான், ஓர் ஆவியைப் பெற்றவனாகவும் இருக்கிறான்; ஆனால் அவன் ஓர் ஆத்துமாவைப் பெற்றவனாக இருக்கிறானா? அல்லது அவனே ஆத்துமாவாக இருக்கிறானா? **E P. 436 ¶ 2**

(25) What is the meaning of the word "soul" as found in the Scriptures? Page 322 ¶ 3
25. வேதவசனங்களில் காணப்படுவதுபோன்று, "ஆத்துமா" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? **E P. 437 ¶ 1**

(26) Has a soul a soul, or is a soul a soul? and why? What say the Scriptures respecting lower animals and the soul qualities? Page 323 ¶ 1
26. ஆத்துமாவுக்குள் ஒரு ஆத்துமா என்ற ஒன்று இருக்கின்றதா (அல்லது) ஒரு ஆத்துமாவே ஆத்துமாவாக இருக்கிறதா? விலங்குகள் குறித்தும், ஆத்துமாவின் தன்மைகள் குறித்தும் வேதவசனங்கள் சொல்வது என்ன? **E P. 438 ¶ 1**

(27) Give illustrations from the Scriptures respecting the application of the term "living soul" in the lower animals, and explain why this is hidden from the ordinary English reader. Page 323 ¶ 2
27. விலங்கினங்களுக்கு "ஜீவ ஆத்துமா" என்ற பதம் பயன்படுத்தப்படுவது குறித்து வேதவசனங்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் தருக. மேலும், பொதுவான ஆங்கில மொழிப்பெயர்ப்பிலிருந்து இது மறைக்கப்பட்டிருப்பது ஏன் என்பதை விளக்கவும். **E P. 438 ¶ 2**

(28) Quote and cite ten passages of Scripture in which the word "soul" is applied to the lower animals. Pages 324, 325
28. "ஆத்துமா" என்ற வார்த்தை விலங்கினங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பத்து வசனப்பகுதிகளை மேற்கோள்காட்டி, எடுத்துரைக்கவும். **E P. 439 ¶ 1 - E P. 441 ¶ 4**

(29) Does the fact that all animals, tadpole or whale, mouse or elephant, are souls imply a future life for these by resurrection or otherwise? Page 326 ¶ 3, 4
29. தேரை அல்லது திமிங்கலம், எலி அல்லது யானை ஆகிய அனைத்து விலங்கினமுமே ஆத்துமாக்கள் என்ற உண்மையானது, இவைகளுக்கு உயிர்த்தெழுதல் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ ஓர் எதிர்கால ஜீவன் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டுகிறதா? **E P. 442 ¶ 2, 3**

(30) In what does the difference between human souls and brute souls consist? Page 326 ¶ 5
30. மனுஷ ஆத்துமாக்களுக்கும், விலங்கினங்களினுடைய ஆத்துமாக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? **E P. 443 ¶ 1**

(31) If the power to reason is shared to some extent by the lower animals as well as man, where shall we draw the line between the brute soul, which has no future hope, and the redeemed human soul, which has a future?
31. பகுத்தறியும் ஆற்றலானது, ஒரு குறிப்பிட்ட அளவு சற்றுச்சிறிய நிலையிலுள்ள விலங்கினங்களுக்கும் அதே சமயம் மனுஷனுக்கும் பகிர்ந்தளிக்கப்படுமாயின், எதிர்கால நம்பிக்கையைப் பெற்றிராத விலங்கின ஆத்துமாவுக்கும், எதிர்கால நம்பிக்கையைப் பெற்றிருக்கும் மீட்கப்பட்ட மனுஷீக ஆத்துமாவுக்கும் இடையே நாம் எங்கே வித்தியாசத்தை உணரலாம்?

(32) What are and what are not the real differences between those lower animals and mankind? Page 327 ¶ 1, 2, 3
32. சற்றுச்சிறிய நிலையில் உள்ள விலங்கினங்களுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே உள்ள உண்மையான வேறுபாடு என்ன? எது உண்மையான வேறுபாடுகள் அல்ல? **E P. 443 ¶ 2 - E P. 444 ¶ 2**

(33) What theology teaches that the human soul is indestructible, and where is its authority for the assertion?
33. மனுஷீக ஆத்துமா அழியாதது என்று போதிக்கக்கூடிய சாஸ்திரம் என்ன/எது? மேலும், அதை வலியுறுத்துவதற்கான அதிகாரம் எதில் உள்ளது?

(34) What do the Scriptures teach on this subject? Cite proof texts. Page 328 ¶ 1
34. இந்தத் தலைப்புக்குறித்து வேதவசனங்கள் போதிப்பது என்ன? ஆதார வசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 445 ¶ 1**

(35) What is implied in the Scriptural suggestion that some "sleep in Jesus"? Explain this matter in the light of the Scriptures. Page 328 ¶ 1, 2, 3
35. சிலர் "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள்" என்ற வசனக்குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்ன? இவ்விஷயத்தை வசனங்களின் வெளிச்சத்தில் விளக்கிக்கூறவும். **E P. 445 ¶ 1, 2; E P. 446 ¶ 1**

(36) How does "sleep" represent the condition of the dead? Is it claimed that those in eternal torment are asleep and oblivious to it, or that any sleep in Purgatory, or that they sleep in Heaven? If not, in what sense do they sleep? Page 329 ¶ 1, 2
36. "நித்திரை" என்பது மரண நிலையை எவ்வாறு அடையாளப்படுத்துகிறது? நித்திய சித்திரவதைக்குள் காணப்படுபவர்கள், அல்லது உத்தரிக்கும் ஸ்தலத்தில் காணப்படுபவர்கள், அல்லது பரலோகத்தில் காணப்படுபவர்கள் நித்திரையில் இருக்கின்றவர்களாகச் சொல்லப்படலாமா? இல்லையென்றால், எந்த அர்த்தத்தில் அவர்கள் நித்திரைபண்ணுகிறார்கள்? **E P. 447 ¶ 1, 2**

(37) Was the original death penalty a "sleep" for a limited period of time from which there would be an awakening? If not, why is this expression "sleep" used in the Scriptures in reference to the death state? Page 330 ¶ 1
37. ஆதியிலே கொடுக்கப்பட்ட மரண தண்டனையானது, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு "நித்திரையாயிருந்து," பின்பு அதிலிருந்து விழித்தெழுவதைக் குறிக்குமா? இல்லையெனில், மரணநிலையைக் குறிப்பிடும் விதத்தில் வேதவசனங்களில் "நித்திரை" என்ற இந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது ஏன்? **E P. 448 ¶ 1**

(38) Is the Second Death to be everlasting? and is it styled in the Scriptures a "sleep"? If not, why not? Page 330 ¶ 1, 2, 3, 4
38. இரண்டாம் மரணம் என்பது நித்தியத்திற்கும் இருக்கக்கூடியதா? மேலும், இது வேதவசனங்களில் "நித்திரை" என்று அழைக்கப்படுகிறதா? இல்லையெனில், ஏன் இல்லை? **E P. 448 ¶ 1, 2, 3, 4**

(39) Explain the difference between Adamic death and Second Death, giving detailed Scriptural proof texts, etc. Pages 331, 332
39. ஆதாமின் மரணத்திற்கும், இரண்டாம் மரணத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை விரிவான வேதவசன ஆதாரங்கள், போன்றவைகள் கொடுத்து விளக்கிக்கூறவும். **E P. 449 ¶ 1 - E P. 452 ¶ 1**

(40) What two difficulties have tended to blind the Bible student respecting the subject of the soul? Page 333 ¶ 2
40. ஆத்துமா குறித்த தலைப்பின் விஷயத்தில் வேத மாணவர்களைக் குருடாக்க முனைந்திருக்கும் இரண்டு சிரமங்கள் என்ன? **E P. 452 ¶ 2**

(41) Have we additional assistance in our search for the Truth on the subject today? If so, what are some of the assistances? Page 334 ¶ 1
41. இன்றைய நம்முடைய பாடத்தின் மீதான சத்தியத்திற்கான ஆராய்ச்சியில் நாம் கூடுதலான உதவி பெற்றிருக்கிறோமா? அப்படியானால், அந்த உதவிகளில் சிலது என்ன? **E P. 453 ¶ 1-5**

(42) How many times does the word "soul" occur in the Old Testament, translated from the Hebrew word **neh-phesh**? Page 334 ¶ 2
42. **நெபேஷ்** என்ற எபிரெய வார்த்தையிலிருந்து மொழிப்பெயர்க்கப்பட்ட "ஆத்துமா" என்ற வார்த்தையானது, பழைய ஏற்பாட்டில் எத்தனைமுறை வந்துள்ளது? **E P. 454 ¶ 1, 2**

(43) Is this word **neh-phesh** always translated by the same English word in the Bible? If not, in how many different ways is it translated? Page 334 ¶ 2
43. **நெபேஷ்** என்ற இந்த வார்த்தையானது, வேதத்தில் உள்ள ஒரே ஆங்கில வார்த்தையைக் கொண்டே எப்போதும் மொழிப்பெயர்க்கப்படுகிறதா? இல்லையெனில், இது எத்தனை விதங்களில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது? **E P. 454 ¶ 1, 2**

(44) State the different words into which **neh-phesh** is translated in our Bible and how many times each. Page 334 ¶ 2
44. நம்முடைய வேதாகமத்தில் **நெபேஷ்** என்ற பதம் எந்தெந்த வார்த்தைகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது என்பதையும், அவை ஒவ்வொன்றும் எத்தனைமுறை கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடவும். **E P. 454 ¶ 1, 2**

(45) In the New Testament, where the Greek word **psuche** is used to express the thought of **sentient being** or soul, and which corresponds to the Hebrew word **neh-phesh**, how many times does the word **psuche** occur and how is it translated? Page 335 ¶ 1
45. **உணர்வுள்ள ஜீவி** (sentient being) அல்லது ஆத்துமா என்ற எண்ணத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய **சூக்கி** (psuche) என்ற கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் எங்கு பயன்படுத்தப்படுகிறது? மற்றும் **நெபேஷ்** என்ற எபிரெய வார்த்தைக்கு ஒத்திருக்கக்கூடிய, **சூக்கி** என்ற (கிரேக்க) வார்த்தை எத்தனைமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது? மற்றும் அவை எப்படி மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது? **E P. 454 ¶ 3**

(46) Are these various translations and mistranslations alike helpful or alike injurious? Page 335 ¶ 2
46. இந்தப் பல்வேறு மொழிப்பெயர்ப்புகளும், தவறாக மொழிப்பெயர்க்கப்பட்டிருப்பவைகளும் சரிசமமாக உதவிகரமாக உள்ளதா? அல்லது சரிசமமாகத் தீமை விளைவிக்கக்கூடியதாக உள்ளதா? **E P. 455 ¶ 1**

(47) Which translations most seriously confuse the mind? Quote the passages. Give citations and show the proper meaning. Pages 335-338
47. மிகவும் கடுமையாக மனதைக் குழப்பக்கூடிய மொழிப்பெயர்ப்புகள் என்னென்ன? அந்தப் பகுதிகளை மேற்கோள்காட்டி, அதன் சரியான அர்த்தத்தைக் காண்பித்து எடுத்துரைக்கவும். **E P. 455 ¶ 2 - E P. 460 ¶ 3**

(48) Explain the signification of **soul** and **ghost** in comparison and state if there is danger of error in supposing the body to be the soul-showing from the Scriptures that they are not the same. Page 338 ¶ 9, 10
48. **ஆத்துமா** மற்றும் **ஆவி** ஆகிய வார்த்தைகளை ஒப்பிட்டு, அதன் அர்த்தத்தை விளக்கிக்கூறவும். மேலும், சரீரத்தை ஆத்துமாவாகக் கருதுவதில் தவறு இருந்தால், அவை ஒரே மாதிரியானவை அல்ல என்பதை தேவத்திலிருந்து காண்பிக்கவும். **E P. 460 ¶ 4, 5**

(49) Take the account of man's creation in Genesis and explain the process of his creation according to the Scripture-his various parts and his completion as a soul. Page 339
49. ஆதியாகமத்தில் மனுஷனுடைய சிருஷ்டிப்பு குறித்த பதிவை எடுத்து, வசனத்தின்படி அவனுடைய சிருஷ்டிப்பின் செயல்முறையை - அதாவது ஓர் ஆத்துமாவாக அவனுடைய பல்வேறு அங்க உறுப்புகளும் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டு நிறைவடைந்தது என்பதை விளக்கிக்கூறவும். **E P. 460 ¶ 6 - E P. 462 ¶ 1**

(50) Is man's superiority to the brute the result of a better spirit or a better body or a better soul, or what? Page 340 ¶ 1
50. விலங்கினங்களைப் பார்க்கிலும் மனிதன் மேன்மையாக இருப்பது ஒரு மேம்பட்ட ஆவி அல்லது ஒரு மேம்பட்ட சரீரம் அல்லது ஒரு மேம்பட்ட ஆத்துமா என்பதன் விளைவாக உண்டானதா? அல்லது எதனால் உண்டானது? **E P. 462 ¶ 2**

(51) In the light of the foregoing give the definition of human soul. Show the effect of death upon it. Page 340 ¶ 2
51. மேற்சொல்லப்பட்டவைகளின் வெளிச்சத்திலிருந்து, மனித ஆத்துமா குறித்து விளக்கம் கொடுக்கவும். அதன் மீது மரணத்தின் விளைவைக் காண்பிக்கவும். **E P. 463 ¶ 1**

(52) Is it the body or the life or the soul that dies? Give proofs of your answer. Page 341 ¶ 1, 2
52. மரிப்பது சரீரமா அல்லது உயிரா அல்லது ஆத்துமாவா? உங்கள் பதிலுக்கான ஆதாரங்களைக் கொடுக்கவும். **E P. 463 ¶ 2; E P. 464 ¶ 1**

(53) Illustrate the human body, life and soul, by a candle, its lighting and its extinguishment. Pages 342, 343 ¶ 1
53. மனித சரீரம், உயிர் மற்றும் ஆத்துமாவை, ஏற்றப்பட்ட ஒரு மெழுகுவர்த்தியின் தீபம் கொண்டும், அணைக்கப்பட்ட ஒரு மெழுகுவர்த்தி கொண்டும் விளக்கிக்கூறவும். **E P. 464 ¶ 2 - E P. 466 ¶ 1**

(54) Is there such a thing as a spirit soul? If so, explain the difference between it and the human soul, and give the illustration of the candle. Page 343 ¶ 2
54. ஆவிக்குரிய ஆத்துமா என்று ஒன்று இருக்கிறதா? ஆம் என்றால், இதற்கும், மனுஷீக ஆத்துமாவுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்கிக்கூறி, மெழுகுவர்த்தியின் எடுத்துக்காட்டை அளிக்கவும். **E P. 466 ¶ 2**

(55) Describe the resurrection processes and show how the personal identity or soul will be restored, while the flesh will not be restored. Page 343 ¶ 3
55. உயிர்த்தெழுதலின் செயல்முறையை விவரித்துக்காட்டவும். மேலும், மாம்சம் திரும்பக்கொடுக்கப்படாத பட்சத்தில், தனிப்பட்ட அடையாளம் அல்லது ஆத்துமா எவ்வாறு திரும்பப்பெற முடியும் என்பதைக் காண்பிக்கவும். **E P. 467 ¶ 1**

(56) Is there danger of a miscarriage so that the resurrected ones would fail to identify themselves? And would the danger be any less if the same particles of matter were miraculously preserved, re-adjusted and quickened? Must we not in any event depend upon Divine power only? Page 343 ¶ 3
56. உயிர்த்தெழுப்பப்பட்டவர்கள் தங்களை அடையாளங்காண முடியாமற்போகும் அளவுக்கு சிதைவு ஏற்படும் அபாயம் உள்ளதா? அதே கூறுகள் அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டு, மறுசீரமைக்கப்பட்டு, உயிரளிக்கப்பட்டால், ஆபத்து குறைவாக இருக்குமா? நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தெய்வீக வல்லமையை மாத்திரமே சார்ந்திருக்க வேண்டுமல்லவா? **E P. 467 ¶ 1**

(57) Is there any suggestion of the Scriptures to the effect that the bodies which go down to the tomb will be restored atom by atom? What says the Apostle?
57. கல்லறைக்குள்ளாக இறங்கும் சரீரங்கள் அணு அணுவாகத் திரும்பக்கொண்டுவரப்படும் என்று வேதவசனங்களில் ஏதேனும் ஆலோசனை உள்ளதா? அப்போஸ்தலர் இதுகுறித்துக் கூறுவது என்ன?

(58) Quote the Apostle's words on this subject and explain the matter. Page 343, last par.
58. இந்தத் தலைப்பின் மீதான அப்போஸ்தலருடைய வார்த்தைகளை மேற்கோள்காட்டி, காரியத்தை விளக்கிக்கூறவும். **E P. 467 ¶ 2**

(59) In what sense does the "breath of life" return to God who gave it? Page 344 ¶ 1
59. எந்த வகையில் "ஜீவ சுவாசம்" அதைத் தந்த தேவனிடத்தில் திரும்புகிறது? **E P. 467 ¶ 3**

(60) In what sense did God give the spirit of life? In what sense did He remand that gift? In what sense is provision made for its restoration? If no arrangement had been made for its restoration what would have been man's condition in death? Page 344 ¶ 1
60. எந்த அர்த்தத்தில் தேவன் ஜீவ ஆவியைக் (ஜீவ சுவாசத்தைக்) கொடுத்தார்? எந்த அர்த்தத்தில் அவர் அந்த ஈவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்? எந்த அர்த்தத்தில் அது திரும்பக் கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது? அது திரும்பக் கொடுப்பதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படாதிருந்திருக்குமானால், மரணத்தில் மனுஷனுடைய நிலை என்னவாக இருந்திருக்கும்? **E P. 467 ¶ 3**

(61) Why is death so frequently spoken of as a "sleep," in the Scriptures? Give an illustration of our Lord's use of the word **sleep** as referring to death. Is there any record of Lazarus' having any conscious experiences during the four days he was asleep-dead? Would our Lord have called him from glory if he had been in heaven? Would such an awakening mean a blessing or a loss? Give a full explanation of it. Page 344 ¶ 2
61. மரணமானது தொடர்ச்சியாக வேதவசனங்களில் "நித்திரை" என்று பேசப்பட்டிருப்பது ஏன்? மரணத்தைக் குறிப்பிடும்படியாக நமது ஆண்டவர் **நித்திரை** என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதற்கான உதாரணம் ஒன்றைத் தரவும். லாசரு மரித்துப்போன - அதாவது நித்திரையில் இருந்த நான்கு நாட்களில் நினைவோடு இருந்திருப்பதற்கான அனுபவங்கள் ஏதேனும் பதிவாகி உள்ளதா? அவர் பரலோகத்தில் இருந்திருப்பாரானால், நம்முடைய ஆண்டவர் அவரை மகிமையிலிருந்து அழைத்திருந்திருப்பாரா? அத்தகைய ஓர் எழுப்பப்படுதல் ஆசீர்வாதமானதாக

இருக்குமா? அல்லது இப்படியாக இருக்குமா? அதற்கான முழு விளக்கத்தை அளிக்கவும். **E P. 468 ¶ 1**

(62) Why is the resurrection time spoken of as the "morning"? Give the quotation and citation. Page 345 ¶ 1
62. உயிர்த்தெழுதலின் காலப்பகுதி "காலை" வேளையாகப் பேசப்பட்டிருப்பது ஏன்? மேற்கோள்காட்டி எடுத்துரைக்கவும். **E P. 469 ¶ 1**

(63) Give nine quotations and citations from the New Testament in which death is referred to as a "sleep." Page 345
63. மரணத்தை "நித்திரையாக" குறிப்பிட்டிருக்கும் ஒன்பது மேற்கோள் வாசகங்களைப் புதிய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக்காட்டவும். **E P. 469 ¶ 2 - E P. 470 ¶ 8**

(64) Give similar citations from the Old Testament. Page 346
64. அதேபோன்ற மேற்கோள்களைப் பழைய ஏற்பாட்டிலிருந்து கொடுக்கவும். **E P. 470 ¶ 9**

(65) Will those awakening from the death "sleep" have any consciousness of the lapse of time between their falling asleep in death and their awakening in the resurrection? Page 346, last par.
65. மரண "நித்திரையிலிருந்து" எழுப்பப்படுகிறவர்கள், மரண நித்திரைக்குள்ளாகப் போவதற்கும், உயிர்த்தெழுதலில் அவர்கள் எழுப்பப்படுவதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவர்களுக்கு நினைவுகள் ஏதேனும் காணப்படுமா? **E P. 471 ¶ 1**

(66) Will the resurrection work be practically a reawakening and will it be as great or a greater manifestation of Divine power than the original creation of Adam and Eve? Page 347
66. நடைமுறையில் உயிர்த்தெழுதலின் வேலையானது மீண்டும் விழித்து எழுவதாக இருக்குமா? ஆதாம் மற்றும் ஏவாளின் சிருஷ்டிப்பில் வெளிப்பட்ட வல்லமையைவிட தெய்வீக வல்லமையின் மாபெரும் வெளிப்பாடாக இருக்குமா? **E P. 472 ¶1**

(67) Why is a "living dog better than a dead lion"? and how do the Scriptures use this comparison to illustrate the meaning of death to the human family? Page 347
67. "செத்த சிங்கத்தைவிட உயிருள்ள நாய் வாசி" என்பது ஏன்? மேலும், மனுக்குலத்திற்கு மரணத்தின் அர்த்தத்தை விளக்கிக்கூற வேதவசனங்கள் இந்த ஒப்பீட்டைப் பயன்படுத்துவது ஏன்? **E P. 472 ¶ 1**

(68) Quote some Scriptures which show that the dead know not anything and that there is no work nor device nor wisdom in the grave whither all go.
68. கல்லறைக்குள் செல்லும் அனைவரும் மரணத்தில் ஒன்றும் அறியார்கள் என்றும், அங்கே, செய்கையுமில்லை, வித்தையுமில்லை, ஞானமுமில்லை என்றும் காண்பிக்கக்கூடிய வசனப்பகுதிகள் சிலவற்றை மேற்கோள்காட்டவும்.

(69) What did St. Paul mean by his statement that some say "there is no resurrection of the dead"? And could there be a resurrection of the dead if nobody is dead if all, when they seem to die, really become more alive? Page 348 ¶ 2-4
69. "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை" என்று சிலர் கூறுவதாக பரிசுத்த பவுல் சொன்னபோது அவர் எதைக் குறிப்பிட்டார்? ஒருவரும் மரிக்கவில்லை என்றால் - அதாவது அனைவருமே, மரிப்பதை நாம் காணும்போது, உண்மையில் அவர்கள் என்றும் உயிரோடிருக்கிறவர்களாக ஆகிறார்கள் (become more alive) என்றால் மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டாயிருக்குமா? **E P. 473 ¶ 2-4**

(70) What did the Apostle mean by saying that "if there be no resurrection of the dead then is Christ not risen?" Page 348 ¶ 5
70. "மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே" என்று கூறுவதன் மூலம் அப்போஸ்தலர் அர்த்தப்படுத்துவது என்ன? **E P. 474 ¶ 1**

(71) What did St. Paul mean by the statement, "if Christ be not risen, then is our preaching vain, and your faith is also vain"? Page 348 ¶ 5
71. "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்களுடைய விசுவாசமும் விருதா" என்ற வாக்கியத்தின் மூலம் பரிசுத்த பவுல் அர்த்தப்படுத்துவது என்ன? **E P. 474 ¶ 1**

(72) What did he mean by the statement that "if the dead rise not, Christ is not risen," and the Apostles were false witnesses, preaching a false Gospel? Page 348 ¶ 5
72. "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை" என்ற அறிக்கையின் மூலம் அவர் அர்த்தப்படுத்துவது என்ன? மேலும், அப்போஸ்தலர்கள் பொய்சாட்சிகளாகவும், பொய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களாகவும் இருந்தார்களா? **E P. 474 ¶ 1**

(73) In his argument for the resurrection does the Apostle anywhere state or otherwise imply whether he refers to a resurrection of the body or of the soul? Give a Scriptural citation showing why. Page 349 ¶ 1
73. உயிர்த்தெழுதல் குறித்த அப்போஸ்தலருடைய விவாதத்தில், அவர் எங்காவது சரீர உயிர்த்தெழுதல் குறித்தோ அல்லது ஓர் ஆத்துமாவின் உயிர்த்தெழுதல் குறித்தோ குறிப்பிட்டிருக்கிறாரா? ஏன் என்பதைக் காண்பிப்பதற்கு வசனரீதியான மேற்கோள் ஒன்றைக் காட்டவும். **E P. 474 ¶ 2**

(74) How would the Apostle have stated himself if he held the same views that the majority of people hold on this subject? Page 349 ¶ 1
74. இந்த விஷயத்தில் பெரும்பாலானோர் கொண்டிருக்கும் அதே கண்ணோட்டத்தையே அப்போஸ்தலரும் கொண்டிருப்பாரானால், அவர் என்ன கருத்தைத் தெரிவித்திருந்திருப்பார்? **E P. 474 ¶ 2**

(75) Show how the Apostle taught a resurrection of the soul and how that denied the resurrection of the body which died. Page 349 ¶ 2
75. ஆத்துமாவின் உயிர்த்தெழுதல் குறித்து அப்போஸ்தலர் எவ்வாறு கற்பித்தார் என்பதைக் காண்பிக்கவும். மேலும், அப்போஸ்தலரின் போதனை மரித்துப்போன சரீரத்தின் உயிர்த்தெழுதலை எவ்வாறு நிராகரிக்கிறது? **E P. 475 ¶ 1**

(76) Why did the Apostle in arguing the importance of the resurrection of the dead in I Cor. 15 say (Vs. 17, 18), "If Christ be not raised, your faith is vain; ye are yet in your sins. Then they also which are fallen asleep in Christ are perished"? In what sense could they be perished if they went directly to heaven and were more than ever alive at the time when they appeared to be dead? Do those who claim that the soul cannot die thereby deny the resurrection of the soul or sentient being? Page 349, last par.
76. 1 கொரிந்தியர் 15:17-18-ஆம் வசனங்களில், மரித்தோரின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் குறித்த விவாதத்தில், "கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே" என்று அப்போஸ்தலர் கூறுவது ஏன்? அவர்கள் மரித்துவிட்டதாகத் தோன்றிய தருணத்தில், அவர்கள் நேரடியாகப் பரலோகத்திற்குச் சென்று இதுவரை இல்லாத அளவு என்றும் ஜீவிக்கிறவர்களாக இருந்தால், எந்த அர்த்தத்தில் அவர்கள் கெட்டுப்போகிறவர்கள் ஆகமுடியும்? ஆத்துமா சாகாது என்று கோரிடுபவர்கள், அதன் மூலமாக ஆத்துமாவின் உயிர்த்தெழுதலை மறுக்கிறார்களா? **E P. 476 ¶ 1**

(77) Why is it claimed, contrary to the Scriptures, that God's promise of a resurrection applies merely to the body, and why is there perplexity concerning the words of the inspired Apostle?
77. உயிர்த்தெழுதல் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தமானது சரீர உயிர்த்தெழுதலுக்கு மாத்திரமே பொருந்துகிறது என்று வேதவசனங்களுக்கு முரணாகக் கோரிடுவது ஏன்? மேலும், ஏவப்பட்டு எழுதப்பட்ட அப்போஸ்தலனின் வார்த்தைகள் குறித்து குழப்பங்கள் காணப்படுவது ஏன்?

(78) If, as is admitted, the death of Christ was the sacrifice for sin, what death was it? And if in dying He became more alive than before He died, in what sense did He die for our sins, or what was given as the ransom price for the sinner's forfeited life? Page 349. last par.
78. ஏற்றுக்கொள்ளப்பட்டபடி, கிறிஸ்துவின் மரணம் பாவத்திற்கான பலியாக இருந்தது என்றால், அது எப்படிப்பட்ட மரணமாக இருந்தது? மேலும், மரணத்தில் அவர், மரிப்பதற்கு முன் இருந்ததைவிட என்றும் ஜீவிக்கிறவராக இருந்தால், எந்த அர்த்தத்தில் அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அல்லது பாவிகளின் இழந்துபோன ஜீவனுக்காக **மீட்கும்பொருளாகக்** கொடுக்கப்பட்டது என்ன? **E P. 476 ¶ 1**

(79) Respecting those who fall asleep in Christ as members of His Body and whose hope is to share in the glory and honor of the First Resurrection, will theirs be a resurrection of the body or a resurrection of the soul possessed of a new body? Page 350 ¶ 1
79. கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அவருக்குள் நித்திரை அடைந்தவர்களும், முதலாம் உயிர்த்தெழுதலில் கனம், மகிமையைப் பெறுவோம் என்ற நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் குறித்த விஷயத்தில், அவர்களுடையது உயிர்த்தெழுதலானது சரீர உயிர்த்தெழுதலாக இருக்குமா அல்லது ஒரு புதிய சரீரத்தைச் சுதந்தரித்த ஓர் ஆத்துமாவின் உயிர்த்தெழுதலாக இருக்குமா? **E P. 476 ¶ 2**

(80) God is a Spirit (Being). Is He Scripturally said to be a soul? If so, where? Page 350 ¶ 1
80. தேவன் ஓர் ஆவியின் ஜீவியாக இருக்கிறார். அவர் ஓர் ஆத்துமா என்று வேதத்தில் சொல்லப்படுகிறதா? ஆம் என்றால், எங்கே? **E P. 476 ¶ 2**

(81) What philosophy did the Athenians have which led them to reject St. Paul's words relative to the resurrection of the dead? Quote and cite the texts. Page 350 ¶ 2
81. மரித்தோரின் உயிர்த்தெழுதல் தொடர்புடைய பரிசுத்த பவுலின் வார்த்தைகளை நிராகரிக்க வழிநடத்தின அத்தேனே பட்டணத்தாரின் தத்துவம் என்னவாக இருந்தது? வசனப்பகுதிகளை மேற்கோள்காட்டி எடுத்துரைக்கவும். **E P. 477 ¶ 1**

(82) To what extent had the Platonic philosophy invaded Judaism at the time of our Lord? Explain the matter with proof texts. Page 351
82. நமது ஆண்டவருடைய முதலாம் வருகையின் காலப்பகுதியில், பிளாட்டோவின் தத்துவ சாஸ்திரம் எந்த அளவு யூத மதத்தை ஆக்கிரமித்தது? ஆதார வசனங்களுடன் இவ்விஷயத்தை விளக்கிக்கூறவும். **E P. 477 - E P. 479**

(83) Why did Josephus mention prominently a sect of the Jews which was so small as not to be mentioned in the New Testament?
83. புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படாத அளவுக்குச் சிறியதாக இருந்த யூதர்களின் ஒரு பிரிவை ஜோசபஸ் ஏன் முக்கியமாகக் குறிப்பிட்டார்?

(84) Was eternal torment any part of the Jewish faith?
84. நித்திய வேதனை என்பது யூதர்களுடைய நம்பிக்கையின்/விசுவாசத்தின் ஏதேனும் ஒரு பகுதியாக இருந்ததா?

(85) Our Lord's words, "All live unto Him" (Luke 20:38), are sometimes cited as proofs that the dead do not die, but only seemingly die and become more than ever alive. How should these words be understood? Quote the passage and explain it in detail. Page 352
85. "எல்லோரும் அவருக்குள் பிழைத்திருக்கிறார்கள்" (லூக்கா 20:38) என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகளானது, சில சமயங்களில் மரித்தோர் மரிப்பதில்லை, ஆனால் வெளித்தோற்றத்தில் மரித்து, முன் எப்போதையும்விட என்றும் பிழைத்திருக்கிறவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்களாக மேற்கோளிடப்படுகிறது. இந்த வார்த்தைகள் எவ்வாறு புரிந்துகொள்ளப்பட வேண்டும்? அந்தப் பகுதியை மேற்கோள்காட்டி, அதை விரிவாக விளக்கவும். **E P. 479 ¶ 3; E P. 480 ¶ 1**

(86) If death signifies destruction, why do the Scriptures speak of the dead as being asleep and not as being destroyed? Page 353, top
86. மரணம் என்பது அழிவை அடையாளப்படுத்துகிறதென்றால், மரித்தோர் நித்திரையிலிருக்கிறார்கள், அவர்கள் அழிக்கப்படுவதில்லை என்று வேதவசனங்கள் கூறுவது ஏன்? **E P. 480 ¶ 1**

(87) In I Thess. 5:23 the Apostle speaks of the body and spirit and soul of the Church. Quote the passage and explain its meaning. Page 353
87. 1 தெசலோனிக்கேயர் 5:23-ஆம் வசனத்தில், அப்போஸ்தலர் சபையினுடைய சரீரம், ஆவி, ஆத்துமா குறித்துப் பேசியிருக்கிறார். அந்தப் பகுதியை மேற்கோள்காட்டி, அதன் அர்த்தத்தை விளக்கிக்கூறவும். **E P. 480 ¶ 2; E P. 481 ¶ 1**

(88) Could it be that the Apostle here meant to refer to the Church as individuals? Could he have meant that the body, the soul, and the spirit of the individual members of the Church would be preserved until the Second Coming of the Lord? Page 353
88. அப்போஸ்தலர் இங்குச் சபையைத் தனி நபர்களாகக் குறிப்பிடுவதாக அர்த்தங்கொள்ள முடியுமா? கர்த்தருடைய இரண்டாம் வருகைவரை சபையினுடைய தனிப்பட்ட அங்கங்களினுடைய சரீரம், ஆத்துமா மற்றும் ஆவியானது பாதுகாக்கப்படும் என்பதாக அவர் அர்த்தப்படுத்தியிருக்க முடியுமா? **E P. 480 ¶ 2; E P. 481 ¶ 1**

(89) It is held that since souls are said to go to sheol, to hades, therefore the human soul must be something tangible and conscious after dissolution. What is sheol? What is hades? Page 353, last par.
89. ஆத்துமாக்கள் பாதாளத்திற்குச் (ஷியோல், ஹேடீஸ்) செல்வதாகக் கூறப்படுவதால், மனித ஆத்துமா அழிந்தபின், உணர்வுள்ளதாகவும் தொடக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது. ஷியோல் என்பது என்ன? ஹேடீஸ் என்பது என்ன? **E P. 481 ¶ 2**

(90) How many times does the word sheol occur in the Old Testament Scriptures? How is it translated-by what English words--and are these translations reliable, when judged by the present definitions of the words used in translating it? State the various translations of sheol in English Bibles. Page 354 ¶ 1
90. ஷியோல் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் எத்தனை முறை இடம்பெறுகிறது? எந்தெந்த ஆங்கில வார்த்தைகளால் அது மொழிப்பெயர்க்கப்பட்டது? மேலும், அதை மொழிப்பெயர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளின் தற்போதைய விளக்கங்களால் மதிப்பிடப்பட்ட போது அந்த மொழிப்பெயர்ப்புகள் நம்பத்தகுந்தவைகளாக உள்ளதா? ஆங்கில வேதாகமங்களில் உள்ள ஷியோல் என்ற வார்த்தையின் பல்வேறு மொழிப்பெயர்ப்புகளைக் குறிப்பிடவும். **E P. 481 ¶ 3**

(91) Is there anything of joy or pain implied in the word sheol? What class of people is said to go to **sheol**? Page 354 ¶ 2
91. **ஷியோல்** என்ற வார்த்தையில் சந்தோஷம் அல்லது வலி குறித்து ஏதாகிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதா? ஜனங்களில் எவ்வகுப்பினர் ஷியோலுக்குச் செல்வதாகக் கூறப்படுகிறது? **E P. 482 ¶ 1**

(92) Why are all souls said to go to **sheol**? What do they do there? What is their state or condition and when will they be relieved? Page 354 ¶ 3, first part
92. எல்லா ஆத்துமாக்களும் **ஷியோலுக்குச்** செல்வதாகச் சொல்லப்படுவது ஏன்? அங்கு அவர்கள் என்னச் செய்வார்கள்? அங்கு அவர்களுடைய நிலை என்ன மற்றும் அவர்கள் எப்பொழுது விடுவிக்கப்படுவார்கள்? **E P. 482 ¶ 2** முதல் பகுதி

(93) What do we know about the English word hell and its origin and meaning in the unabridged dictionary? Page 354 ¶ 3, last part
93. ஹெல் (Hell) என்ற ஆங்கில வார்த்தை குறித்தும், அதன் துவக்கம் குறித்தும், unabridged/அன்னபிரிட்ஜ்ட் அகராதியில் அதன் அர்த்தம் குறித்தும் நாம் அறிந்திருப்பது என்ன? **E P. 482 ¶ 2** - கடைசி பகுதி

(94) Give illustrations of the use of the word **sheol** and show that it could not mean suffering, torment, etc. Page 355
94. **ஷியோல்** என்ற வார்த்தையின் பயன்பாட்டிற்கான எடுத்துக்காட்டுகள் கொடுத்து, அது உபத்திரவங்கள், வாதிக்கப்படுதலை அர்த்தப்படுத்த முடியாததைக் காண்பிக்கவும். **E P. 483 ¶ 1 - E P. 484 ¶ 5**

(95) What is the difference between **qeburah**, a grave, a tomb, and **the grave, sheol**, the state of death? Give illustrations in proof of answer. Page 356 ¶ 1
95. **Qeburah/கேபுரா,** கல்லறை, பிரேதக்குழி என்பதற்கும், **மரண நிலையாகிய ஷியோல்** (sheol, grave) என்பதற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? பதிலுக்கான ஆதாரமாக எடுத்துக்காட்டுகள் அளிக்கவும். **E P. 484 ¶ 6**

(96) Give illustrations of the use of **sheol**, translated **pit**, and show what it signifies thereby. Page 356, last par.
96. **பாதாளம்** (pit) என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கும் **ஷியோலின்** பயன்பாட்டிற்கான உதாரணங்களைக் கொடுத்து, அதன் மூலம் அது எதை அடையாளப்படுத்துகிறது என்பதையும் காண்பிக்கவும். **E P. 485 ¶ 1-3**

(97) In Deuteronomy 32:22 we read of the fire of God's anger which shall burn to the lowest hell. Explain this passage. Page 357
97. உபாகமம் 32:22-ஆம் வசனத்தில், "என் கோபத்தினால் அக்கினி பற்றிக்கொண்டது, அது தாழ்ந்த நரகமட்டும் எரியும்" என்று நாம் வாசிக்கிறோம். இந்த வசனப்பகுதியை விளக்கிக்கூறவும். **E P. 486 ¶ 1, 2**

(98) What is meant by the sorrows of hell **(Sheol)**? Page 358 ¶ 1
98. **பாதாளம்** (ஷியோல்) கட்டுகள் என்றால் என்ன? **E P. 487 ¶ 2, 3**

(99) Explain the statement of Job 7:9, "He that goeth down to the grave **(Sheol)** shall come up no more." Page 358, last par.
99. "**பாதாளத்தில்** இறங்குகிறவன் இனி ஏறிவரான்" என்ற யோபு 7:9-ஆம் வசனத்தின் அறிக்கையை விளக்கிக்கூறவும். **E P. 488 ¶ 1, 2**

(100) What is meant by "deeper than hell"? (Job 11:8) Page 359 ¶ 1
100. "பாதாளத்திலும் ஆழமானது" என்றால் என்ன? (யோபு 11:8) **E P. 489 ¶ 1, 2**

(101) What is meant by the expression, "Oh, that Thou wouldest hide me in **sheol**"? Page 359 ¶ 3, 4
101. "நீர் என்னைப் **பாதாளத்தில்** (ஷியோல்) ஒளித்து" என்ற வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 489 ¶ 3. 4**

(102) What is meant by the expression, "If I wait, the grave (sheol, oblivion) is my house"? (Job 17:13, 14) Page 360 ¶ 1
102. "அப்படி நான் காத்துக்கொண்டிருந்தாலும், பாதாளம் (ஷியோல், மறதிநிலை) எனக்கு வீடாயிருக்கும்" என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன? (யோபு 17:13-14) **E P. 490 ¶ 1, 2**

(103) What is meant by (Job 21:13) "They spend their days in wealth, and in a moment go down into sheol--hell"? Page 360 ¶ 5
103. "அவர்கள் செல்வவான்களாய்த் தங்கள் நாட்களைப் போக்கி, ஒரு கனப்பொழுதிலே **பாதாளத்தில்** (ஷியோல், ஹெல்) இறங்குகிறார்கள்" (யோபு 21:13) என்ற வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 490 ¶ 5, 6**

(104) We read that "hell is naked before Him." (Job 26:6) What is here signified? Page 361 ¶ 1, 2
104. "அவருக்கு முன்பாகப் பாதாளம் வெளியாய்த் திறந்திருக்கிறது" என்று யோபு 26:6-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். இங்கு அடையாளப்படுத்திக் காட்டுவது என்ன? **E P. 491 ¶ 3, 4**

(105) What is meant by the statement, "In death there is no remembrance of Thee; in the grave (sheol, oblivion), who shall give Thee thanks?" (Psa. 6:5) Page 361 ¶ 3
105. "மரணத்தில் உம்மை நினைவுகூருவதில்லை, பாதாளத்தில் **(ஷியோல்**, மறதி நிலை) உம்மைத் துதிப்பவன் யார்" (சங்கீதம் 6:5) என்ற வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 491 ¶ 5, 6**

(106) We read that "the wicked shall be turned into hell and **all the nations that forget** God." Where is the Scripture and what does it signify? Page 361 ¶ 5
106. "துன்மார்க்கரும், தேவனை **மறக்கிற எல்லா ஜாதிகளும்** நரகத்திலே தள்ளப்படுவார்கள்" என்பதாக நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் எங்கே காணப்படுகிறது மற்றும் அது அடையாளப்படுத்துவது என்ன? **E P. 492 ¶ 1, 2**

(107) When we read, "Thou wilt not leave my soul in hell (sheol, oblivion); neither wilt Thou suffer Thine Holy One to see corruption" (Psa. 16:10), what should we understand? Page 362 ¶ 1-4
107. "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் (ஷியோல், மறதிநிலை) விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்று சங்கீதம் 16:10-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கும்போது, நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்ன? **E P. 492 ¶ 3 - E P. 493 முழுவதும்.**

(108) We read, "The bonds of hell (**sheol**, oblivion) encircle me; the snares of death seize me" (Psa. 18:5); how should this statement be understood? Page 362 ¶ 5
108. "**பாதாளக்** (ஷியோல், மறதிநிலை) கட்டுக்கள் என்னைச் சூழ்ந்துகொண்டது; மரணக் கண்ணிகள் என்மேல் விழுந்தது" என்று சங்கீதம் 18:5-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்; இந்த வாக்கியம் எவ்வாறு புரிந்துகொள்ளப்பட வேண்டும்? **E P. 494 ¶ 1**

(109) We read, "O Lord, Thou hast brought up my soul from **sheol**"--hell. (Psa. 30:3) What is here signified? Page 362, last par.
109. "கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் **பாதாளத்திலிருந்து** (ஷியோல், மறதிநிலை) ஏறப்பண்ணி" என்று சங்கீதம் 30:3-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். இங்கு அடையாளப்படுத்தப்படுவது என்ன? **E P. 494 ¶ 2, 3**

(110) We read, "Let the wicked be ashamed. Let them be silent in hell." Explain. (Psa. 31:17) Page 363 ¶ 2
110. "துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் மவுனமாயிருக்கட்டும்" என்று சங்கீதம் 31:17-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். இந்த வசனத்தை விளக்கிக்கூறவும். **E P. 494 ¶ 4, 5, 6**

(111) "Like sheep they are laid in hell. . . . But God will redeem my soul from the power of **sheol**"--hell. (Psa. 49:14, 15) What does this signify? Page 363, last par.
111. "ஆட்டுமந்தையைப் போல பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள் . . . ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் (hell) வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார்" (சங்கீதம் 49:4,14-15). இது அடையாளப்படுத்துவது என்ன? **E P. 495 ¶ 1, 2**

(112) "Let them go down quickly into hell." (Psa. 55:15) How shall we understand this prayer? Page 364
112. "அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக" (சங்கீதம் 55:15). இந்த ஜெபத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? **E P. 496**

(113) "Thou hast delivered my soul from the lowest hell." --Psa. 86:13. Page 365 ¶ 1. Explain.
113. "என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர்" - சங்கீதம் 86:13. விளக்கவும். **E P. 497 ¶ 1, 2**

(114) Explain the Scripture, "My soul is full of troubles and my life draweth nigh unto sheol"--hell -- Psa. 88:3. Page 365 ¶ 3
114. "என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது; என் ஜீவன் **பாதாளத்திற்குச்** (ஹெல்) சமீபமாய் வந்திருக்கிறது" என்ற சங்கீதம் 88:3-ஆம் வசனத்தை விளக்கிக்கூறவும். **E P. 498 ¶ 1, 2**

(115) "What man is he that liveth and shall not see death? Shall he deliver his soul from the hand (power) of sheol" -hell? What is meant?-Psa. 89:48. Page 365, last par.
115. "மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் **பாதாள** (hell) வல்லடிக்கு விலக்கி விடுகிறவன் யார்?" என்ற சங்கீதம் 89:48-ஆம் வசனம் அர்த்தப்படுத்துவது என்ன? **E P. 498 ¶ 3, 4**

(116) What is meant by the statement, "The pains of hell gat hold upon me; I found trouble and sorrow"?-Psa. 116:3. Page 366 ¶ 1
116. "பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்" என்ற சங்கீதம் 116:3-ஆம் வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 498 ¶ 5, 6**

(117) Explain the Scripture, "If I ascend up into heaven, Thou art there; if I make my bed in hell, behold Thou art there."--Psa. 139:7, 8. Page 366 ¶ 3, 4
117. "நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கைப் போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்" என்ற சங்கீதம் 139:7-8-ஆம் வசனத்தை விளக்கிக்கூறவும். **E P. 499 ¶ 1, 2**

(118) Explain the statement, "Her steps take hold on hell"-**sheol**.-Prov. 5:5. Page 367 ¶ 1
118. "அவள் நடைகள் **பாதாளத்தைப்** (ஷியோல்) பற்றிப்போகும்" என்ற நீதிமொழிகள் 5:5-ஆம் வசனத்தின் வாக்கியத்தை விளக்கிக்கூறவும். **E P. 500 ¶ 1-2**

(119) "Her house is in the way of hell." "Her guests are in the depths of hell." (Prov. 7:27; 9:18) Explain these Scriptures. Page 367 ¶ 3-5
119. "அவள் வீடு பாதாளத்துக்குப் போகும் வழி." "அவளுடைய விருந்தாளிகள் நரக பாதாளங்களில் கிடக்கிறார்கள்" (நீதிமொழிகள் 7:27; 9:18). இந்த வசனங்களை விளக்கிக்கூறவும். **E P. 500 ¶ 3-6**

(120) "Hell and destruction are before the Lord." (Prov. 15:11) What does this signify? Page 367 ¶ 7
120. "பாதாளமும் (ஹெல்) அழிவும் கர்த்தரின் பார்வைக்குப் பிரத்தியட்சமாயிருக்கிறது" (நீதிமொழிகள் 15:11). இவ்வசனம் அடையாளப்படுத்துவது என்ன? **E P. 500 ¶ 7; E P. 501 ¶ 1**

(121) "The way of life is above to the wise, that he may depart from hell (**sheol**) beneath." (Prov. 15:24). What does this signify? Page 367 ¶ 9
121. "கீழான **பாதாளத்தை** (ஷியோல்) விட்டு விலகும்படி, விவேகிக்கு ஜீவ வழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம்" (நீதிமொழிகள் 15:24). இது அடையாளப்படுத்துவது என்ன? **E P. 501 ¶ 2, 3**

(122) What is meant by the statement, "Thou shalt beat him with the rod, and shall deliver his soul from hell **(sheol)** "? (Prov. 23:14) Page 368 ¶ 1
122. "நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் **பாதாளத்துக்கு** அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே" என்ற நீதிமொழிகள் 23:14-ஆம் வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 501 ¶ 4, 5**

(123) "Hell (**sheol**) and destruction are never full." (Prov. 27:20) What does this signify? Page 368 ¶ 2
123. "**பாதாளமும்** (ஷியோல்) அழிவும் திருப்தியாகிறதில்லை" (நீதி. 27:20) - இது அடையாளப்படுத்துவது என்ன? **E P. 502 ¶ 1, 2**

(124) "There is no work, nor device, nor knowledge, nor wisdom in the grave (**sheol**, hell)." (Ecc. 9:10) What is the meaning of this statement? Page 368 ¶ 7
124. "நீ போகிற **பாதாளத்திலே (ஷியோல்,** ஹெல்) செய்கையும், வித்தையும், அறிவும், ஞானமும் இல்லையே" (பிரசங்கி 9:10). இந்த வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 502 ¶ 5, 6**

(125) "Hell (**sheol**) hath enlarged herself." (Isa. 5:14) What is the significance of this Scripture? Page 369 ¶ 3
125. "**பாதாளம் (ஷியோல்)** தன்னை விரிவாக்கி" (ஏசாயா 5:14). இந்த வசனத்தின் முக்கியத்துவம் என்ன? **E P. 503 ¶ 3, 4**

(126) What is meant by the statement, "Hell (**sheol**) from beneath is moved for thee, to meet thee at thy coming"? (Isa. 14:9) Page 369 ¶ 5
126. "கீழே இருக்கிற **பாதாளம் (ஷியோல்)** உன்னிமித்தம் அதிர்ந்து, உன் வருகைக்கு எதிர்கொண்டு..." என்ற ஏசாயா 14:9-ஆம் வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 503 ¶ 5, 6**

(127) "We have made a covenant with death, and with hell (**sheol**) are we at agreement." (Isa. 28:15) What does this teach? Page 369, last par., and Page 370
127. "மரணத்தோடே உடன்படிக்கையும், **பாதாளத்தோடே (ஷியோல்)** ஒப்பந்தமும் பண்ணினோம்" (ஏசாயா 28:15). இவ்வசனம் போதிப்பது என்ன? **E P. 504 ¶ 3, 4; E P. 505 ¶ 1**

(128) What is meant by the statement, "The grave (**sheol**, hell) cannot praise Thee"? (Isa. 38:18) Page 371 ¶ 2
128. "**பாதாளம்** (ஷியோல், ஹெல்) உம்மைத் துதியாது" என்ற ஏசாயா 38:18-ஆம் வசனத்தின் அர்த்தம் என்ன? **E P. 506 ¶ 3, 4**

(129) "Thou . . didst debase thyself even unto hell (**sheol**)." (Isa. 57:9) What is signified by this expression? Page 371, last par.
129. "உன்னைப் **பாதாளம் (ஷியோல்)** மட்டும் தாழ்த்துகிறாய்" (ஏசாயா 57:9). இந்தச் சொற்றொடர் அடையாளப்படுத்துவது என்ன? **E P. 507 ¶ 1, 2**

(130) "He went down to the grave (**sheol**) . . I cast him down to hell (**sheol**); . . they also went down into hell (**sheol**)." (Ezek. 31:15-17) What is signified by this reference to hell? Page 372 ¶ 1
130. "அவன் **பாதாளத்தில்** (ஷியோல் - grave) இறங்குகிற நாளிலே... நான் அவனைக் குழியில் இறங்குகிறவர்களோடேகூடப் **பாதாளத்தில் (ஷியோல்)** இறங்கப்பண்ணுகையில்... அவனோடேகூட இவர்களும்... **பாதாளத்தில் (ஷியோல்** - hell) இறங்கினார்கள்" (எசேக்கியேல் 31:15-17). பாதாளம் (ஹெல்) என்ற இந்தக் குறிப்பு அடையாளப்படுத்துவது என்ன? **E P. 507 ¶ 3; E P. 508 ¶ 1**

(131) "The strong among the mighty shall speak to him, and them that help him, out of the midst of hell (**sheol**)." (Ezek. 32:21) Explain the Scripture in harmony with this statement, "There is no wisdom, nor knowledge in **sheol**."
131. "பராக்கிரமசாலிகளில் வல்லவர்களும், அவனுக்குத் துணைநின்றவர்களும், **பாதாளத்தின்** (hell - ஷியோல்) நடுவிலிருந்து அவனோடே பேசுவார்கள்" (எசேக்கியேல் 32:21). "நீ போகிற **பாதாளத்திலே...** (ஷியோல் - ஹெல்) அறிவும் ஞானமும் இல்லையே" என்ற வசனத்துடன் இசைவுப்படுத்தி இவ்வசனத்தை விளக்கிக்கூறவும்.

(132) What is meant by, "They which are gone down to hell with their weapons of war"? (Ezek. 32:27) Page 372, last par.
132. "தங்கள் யுத்த ஆயுதங்களோடு பாதாளத்திலிறங்கினவர்கள்..." என்பதன் அர்த்தம் என்ன? (எசே. 32:27) **E P. 508 ¶ 4, 5**

(133) What is meant by the statement, "I will ransom them from the power of the grave (**sheol**, hell) . . . O grave (**sheol**, hell), I will be thy destruction"? (Hos. 13:14) Page 373 ¶ 1-4
133. "அவர்களை நான் **பாதாளத்தின்** (grave - sheol, hell) வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்;... **பாதாளமே** (grave - sheol, hell), என் சங்காரம் எங்கே?" என்ற வசனத்தின் அர்த்தம் என்ன? (ஓசியா 13:14). **E P. 509 ¶ 1-3; E P. 510 ¶ 1**

(134) Who are they that "dig into hell"?--Amos 9:2. Page 374 ¶ 1
134. "பாதாள பரியந்தம் (ஆமோஸ் 9:2) தோண்டிப் பதுங்கிக் கொண்டவர்கள் யார்? **E P. 510 ¶ 2, 3**

(135) Who prayed to God "out of the belly of hell" and was heard? (Jonah 2:2) Page 374 ¶ 4
135. "பாதாளத்தின் (ஹெல்) வயிற்றிலிருந்து" தேவனை நோக்கி ஜெபித்து, கேட்கப்பட்டவர் யார்? (யோபு 2:2) **E P. 511 ¶ 1, 2**

(136) What is meant by the statement, "Enlargeth his desire as hell (sheol)"? (Hab. 2:5) Page 374, last par.
136. "அவன் தன் ஆத்துமாவைப் பாதாளத்தைப் போல (ஹெல் - ஷியோல்) விரிவாக்கித் திருப்தியாகாமல்..." என்ற வாக்கியத்தின் அர்த்தம் என்ன? (ஆபகூக் 2:5) **E P. 511 ¶ 3, 4**

(137) What word in the New Testament Greek corresponds exactly to the Hebrew word **sheol** in the Old Testament? Page 375 ¶ 1
137. பழைய ஏற்பாட்டில் **ஷியோல்** என்ற எபிரெய வார்த்தைக்குத் துல்லியமாக ஒத்திருக்கக்கூடிய (சமமான) புதிய ஏற்பாட்டின் கிரேக்க வார்த்தை என்ன? **E P. 512 ¶ 1**

(138) When translations are made from the Old Testament Scriptures into the New Testament and the word sheol is included, how is it uniformly translated in the New Testament Greek? Page 375 ¶ 1
138. ஷியோல் என்ற வார்த்தை உள்ளடக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனங்கள், புதிய ஏற்பாட்டிற்கு மொழிப்பெயர்க்கப்பட்டபோது, புதிய ஏற்பாட்டு கிரேக்கப் பதத்தில் அது எவ்வாறு ஒரே விதமாக மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது? **E P. 512 ¶ 1**

(139) What is the meaning of the Scripture, "Thou, Capernaum, which art exalted unto heaven, shalt be brought down to hell"? (Matt. 11:23) Page 375 ¶ 2
139. "வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் (hell) தாழ்த்தப்படுவாய்" என்ற வசனத்தின் அர்த்தம் என்ன? (மத்தேயு 11:23) **E P. 512 ¶ 2, 3**

(140) Explain the Scripture, "I will build My Church, and the gates of hell shall not prevail against it." (Matt. 16:18.) Page 375 ¶ 4
140. "என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் (hell) வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்ற வசனத்தை விளக்கிக்கூறவும். (மத்தேயு 11:23) **E P. 512 ¶ 4, 5**

(141) Quote Luke 10:15 and explain it. Page 376 ¶ 1
141. லூக்கா 10:15-ஆம் வசனத்தை மேற்கோள்காட்டி, அதை விளக்கிக்கூறவும். **E P. 513 ¶ 1, 2**

(142) "In hell he lifted up his eyes, being in torments." (Luke 16:23) Explain this Scripture in harmony with the declaration that there is no wisdom, nor knowledge, nor device in **sheol**, in **hades**. Is the **nation** of Israel dead, but its people alive? Page 376, last par.
142. "பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து..." (லூக்கா 16:23). இவ்வசனத்தை, **பாதாளத்திலே (ஷியோலில், ஹேடீசில்)** வித்தையும், அறிவும், ஞானமும் இல்லையே என்ற அறிக்கையுடன் இசைவுபடுத்தி விளக்கிக்கூறவும். இஸ்ரயேல் **தேசம்** முழுவதும் மரித்த நிலையிலும், ஆனால் அதின் ஜனங்கள் உயிருள்ளவர்களாகவும் இருக்கின்றனரா? **E P. 514 ¶ 1, 2**

(143) What is meant by the Scripture, "Thou wilt not leave my soul in hell"? (Acts 2:27) Page 377 ¶ 2
143. "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்" என்ற வசனத்தின் அர்த்தம் என்ன? (அப். 2:27) **E P. 514 ¶ 3, 4**

(144) Christ's soul was not left in hell. (Acts 2:31) What does this signify? Page 377 ¶ 3
144. கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லை (அப்போஸ்தலர் 2:31). இது அடையாளப்படுத்துவது என்ன? **E P. 515 ¶ 1, 2**

(145) What did the Apostle mean by "O hell (hades), where is thy victory?" (I Cor. 15:55) Page 377, last par.
145. "பாதாளமே! (hell - ஹேடீஸ்) உன் ஜெயம் எங்கே?" என்ற வசனத்தின் மூலம் அப்போஸ்தலர் அர்த்தப்படுத்துவது என்ன? (1 கொரிந்தியர் 15:55) **E P. 515 ¶ 3, 4**

(146) "I have the keys of hell and of death." Please explain. (Rev. 1:18) Page 378 ¶ 1
146. "நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்." தயவுகூர்ந்து விளக்கிக்கூறவும் (வெளிப்படுத்தல் 1:18). **E P. 516 ¶ 1, 2**

(147) "Hell followed with him." (Rev. 6:8) What does this statement signify? Page 378 ¶ 5
147. "பாதாளம் அவன் பின் சென்றது" (வெளிப்படுத்தல் 6:8). இந்த வாக்கியம் அடையாளப்படுத்துவது என்ன? **E P. 517 ¶ 1, 2**

(148) "Death and hell delivered up the dead which were in them." (Rev. 20:13) Explain this Scripture. Page 379 ¶ 2
148. "மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன" (வெளிப்படுத்தல் 20:13). இந்த வசனத்தை விளக்கிக்கூறவும். **E P. 517 ¶ 3, 4**

(149) What is meant by the statement that "death and hell were cast into the lake of fire"? (Rev. 20:14) Page 380
149. "மரணமும் பாதாளாமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன" என்ற வாக்கியத்தின் அர்த்தம் என்ன? (வெளிப்படுத்தல் 20:14) **E P. 518 ¶ 1, 2; E P. 519 ¶ 1**

(150) What conclusion should we reach in respect to these various Scriptures examined? Page 381
150. ஆராய்ந்துபார்க்கப்பட்ட இந்தப் பல்வேறு வேதவசனங்களைப் பொறுத்தவரையில் நாம் என்ன முடிவுக்கு வரவேண்டும்? **E P. 520 ¶ 1, 2**

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 13

### *''ஒப்புரவினால் உண்டாகும் நித்திய ஜீவனுக்கும் சாகாமைக்கும் உரிய நம்பிக்கை''*

(1) What is meant by the statement that "Our Savior, Jesus Christ, . . . hath abolished death and brought life and immortality to light through the Gospel"? (2 Tim. 1:10) Page 383
1. "நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து . . . மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" என்ற வாக்கியத்தின் அர்த்தம் என்ன? (2 தீமோத்தேயு 1:10) **E P. 523**

(2) Have mankind a longing for a future life? If so, why so? Page 383
2. எதிர்கால வாழ்க்கைக்காக மனுக்குலம் ஏங்கிக்கொண்டிருக்கின்றார்களா? ஆம் என்றால், ஏன்? **E P. 523**

(3) Did God encourage man's aspirations for a future life? Page 383, last par.
3. எதிர்கால வாழ்க்கைக்கான மனுஷனுடைய ஆவல்களை தேவன் ஊக்குவித்தாரா? **E P. 524 ¶ 1**

(4) Is there any direct promise of eternal life in the Old Testament? If so, what and where? And does it contain any statement respecting human immortality either present or prospective? Page 383, last par.
4. பழைய ஏற்பாட்டில் நித்திய ஜீவனுக்கான நேரடி வாக்குத்தத்தம் ஏதேனும் உள்ளதா? ஆம் என்றால், அது என்ன மற்றும் எங்குக் காணப்படுகிறது? மேலும், தற்கால ஜீவியத்திலோ அல்லது எதிர்கால ஜீவியத்திலோ மனுஷன் அழியாமையை உடையவனாக இருப்பான் என்பது குறித்து ஏதேனும் வாக்கியத்தை உள்ளடக்கியுள்ளதா? **E P. 524 ¶ 1**

(5) "The Gospel was preached to Abraham"; did it contain any mention of human immortality? Did it contain any basis for suggestion of a future life? Page 384
5. "சுவிசேஷமானது ஆபிரகாமுக்கு முன்னறிவிக்கப்பட்டது;" இந்த வாக்கியத்தில் மனுஷனுடைய அழியாமை குறித்து ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா? அது எதிர்கால வாழ்க்கைக்கான பரிந்துரைகளுக்கு ஏதேனும் அடிப்படையைக் கொண்டுள்ளதா? **E P. 525**

(6) State what assurances of everlasting life or immortality or both are mentioned in the New Testament and to whom they are applicable. Page 384
6. நித்திய ஜீவன் அல்லது அழியாமை அல்லது இரண்டையும் குறித்துப் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நம்பிக்கைகள் என்ன என்பதையும், அவை யாருக்குப் பொருந்தக்கூடியது என்பதையும் குறிப்பிடவும். **E P. 525**

(7) State what the New Testament assurances respecting a future life imply--the basis for the hope, the conditions for its attainment and the process by which those blessings may be secured. Page 385
7. எதிர்கால வாழ்க்கைப் பற்றிய புதிய ஏற்பாடு உத்திரவாதம் என்ன என்பதை - அதாவது அந்த நம்பிக்கைக்கான அடித்தளம், அதை அடைவதற்கான நிபந்தனைகள் மற்றும் அந்த ஆசீர்வாதங்களை உறுதிப்படுத்தக்கூடிய செயல்முறை என்ன என்பதைக் குறிப்பிடவும். **E P. 526 - E P. 527 ¶ 2**

(8) Does the abundance of the Divine provision imply that eternal life is already a possession of **humanity or that** it will be forced upon Adam and his race? Page 385, last par.
8. தேவனுடைய இந்த தாராளமான ஏற்பாடுகள்/சலுகைகள் என்பது நித்திய ஜீவன் **மனுக்குலம்** ஏற்கெனவே பெற்றுவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறதா **அல்லது** ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்கு நிபந்தனைக்குட்பட்டு கொடுக்கப்படும் ஒன்றா? **E P. 527 ¶ 3, 4**

(9) Quote some Scriptures bearing upon this subject and showing that eternal life is a gift from the Almighty and that it must be striven for to be obtained. Page 386
9. நித்திய ஜீவன் என்பது சர்வவல்லவரிடமிருந்து கிடைக்கக்கூடிய ஈவு என்றும், அதைப் போராடியே அடைய முடியும் என்றும் காணக்கூடிய இந்தப் பாடத்திற்குச் (விஷயம்) சம்பந்தமான வசனங்கள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 527, 528**

(10) State the difference between the imaginings of worldly philosophers respecting the immortality of the soul, and the distinct statements of God's Word on the subject. Page 387 ¶ 2, 3-first part
10. ஆத்துமா அழியாது என்பது குறித்து உலக தத்துவ ஞானிகளின் கற்பனைகளுக்கும், இவ்விஷயத்தின் மீதான தேவனுடைய வார்த்தையின் தனித்துவமான அறிக்கைகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டைக் குறிப்பிடவும். **E P. 529 ¶ 2, 3**-முதற்பகுதி

(11) Give some arguments for the proposition that God intends to give life everlasting only to the righteous and to withhold it from others. Page 387 ¶ 3, last part
11. தேவன் நீதிமான்களுக்கென்று மாத்திரமே நித்திய ஜீவனை அளிக்கத் திட்டமிட்டிருக்கிறார் என்பதிலும், மற்றவர்களுக்கு அதைக் கொடுக்க மறுக்கிறார் என்பதிலும் உள்ள நியாயமான காரணங்களை அளிக்கவும். **E P. 529 ¶ 3** கடைசி பகுதி

(12) State what is the ordinary acceptation of the word "Immortality," and then give the Scriptural limitations of that word. Page 388
12. "சாகாமை" என்ற வார்த்தையின் சாதாரணமான ஏற்றுக்கொள்ளல் (புரிதல்) என்ன என்பதைக் குறிப்பிட்டு, அவ்வார்த்தைக்கு வேதவசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள வரையரைகளைக் குறிப்பிடவும். **E P. 531**

(13) In discussing the subject with those who have the usual thought that the words **eternal life** and **immortality** signify the same thing, is it not wise on our part to assent that we believe in immortality, as our friends in general do; that we believe that Divine arrangements have made possible everlasting life for every member of our race? Would it not be wise, then, before leaving the topic to explain that the Scriptures make a distinction between these terms **everlasting life** and **immortality**; and while declaring that all the obedient ones of God's creation shall have **everlasting life**, they also declare that God alone possessed **immortality** originally and that He has given this great blessing of inherent life to His Son and purposes to give this same inherent life to the Bride class and to none others? Page 388
13. **நித்திய ஜீவன்** மற்றும் **அழியாமை** என்ற வார்த்தைகள் ஒரே பொருளைக் குறிக்கின்றன என்ற பொதுவான சிந்தனை உள்ளவர்களுடன் இந்த விஷயத்தைப் பற்றி விவாதிப்பதில், பொதுவாக நம் நண்பர்கள் நம்புவதுபோல் நாமும் அழியாமையை நம்புகிறோம் என்பதை ஒப்புக்கொள்வதும், தெய்வீக ஏற்பாடுகள் நம் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நித்திய ஜீவனை சாத்தியமாக்கியுள்ளன என்று நாம் நம்புகிறோம் என்பதை ஒப்புக்கொள்வதும் நம் தரப்பில் புத்திசாலித்தனமாக இருக்காதல்லவா? அப்படியானால், தலைப்பைவிட்டு வெளியேறுவதற்கு முன், வேதம் **நித்திய ஜீவன்** மற்றும் **அழியாமை** ஆகிய இந்த வார்த்தைகளுக்கு இடையே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்பதை விளக்கிக்கூறுவது புத்திசாலித்தனமாக இருக்கும் அல்லவா? மேலும், தேவனுடைய சிருஷ்டிப்பில் கீழ்ப்படிகிறவர்கள் அனைவரும் **நித்திய ஜீவனைப்** பெறுவார்கள் என்று அறிவிக்கும் அதேவேளையில், தேவன் மாத்திரமே தம்மில்தாமே **அழியாமை ஜீவன்** உடையவர் என்றும், இந்த மாபெரும் ஆசீர்வாதமாகிய தம்மில்தாமே ஜீவன் உடையதை அவர் தமது குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார் என்றும், அதே ஜீவனை மணவாட்டி வகுப்பாருக்கும் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார் என்றும் விளக்கிக்கூறுவது புத்திசாலித்தனமாக இருக்குமல்லவா? **E P. 531**

(14) Is there hope of immortality held out in the Scriptures for any human being? Page 388, last par.
14. எந்த மனுஷீக ஜீவிக்காவது வசனங்களில் சாகாமைக்குரிய நம்பிக்கை விடுக்கப்பட்டிருக்கிறதா? **E P. 531 ¶ 3**

(15) Show the reason (philosophy) of your answer. Page 389
15. உங்கள் பதிலுக்கான காரணகாரியத்தைக் (தத்துவத்தைக்) காண்பிக்கவும். **E P. 532 ¶ 1, 2**

(16) What is the correct definition of the word "mortal" and of the word "immortal"? Page 389 ¶ 3; Page 390 ¶ 1
16. "சாவுக்கேதுவான" மற்றும் "சாவாமை" ஆகிய வார்த்தைகளின் சரியான விளக்கம் என்ன? **E P. 532 ¶ 3; E P. 533 ¶ 1**

(17) Was Adam created mortal or immortal? Show the philosophy of the answer. Pages 390, 391
17. ஆதாம் சாகக்கூடியவராக சிருஷ்டிக்கப்பட்டாரா அல்லது சாவாமையுடையவராக சிருஷ்டிக்கப்பட்டாரா? விடையின் தத்துவத்தைக் காண்பிக்கவும். **E P. 534, 535**

(18) What is said of immortal souls, dying souls, never-dying souls? Page 392 ¶ 1
18. சாகாமை வாய்ந்த ஆத்துமா, சாகாத ஆத்துமா, ஒருபோதும் சாவை காணாத ஆத்துமா ஆகியவை குறித்துச் சொல்லப்பட்டிருப்பது என்ன? **E P. 536 ¶ 1**

(19) What do we know about the mortality or immortality of angels? Page 392
19. தேவதூதர்களுடைய சாகக்கூடிய அல்லது சாவாமைக்குரிய காரியங்கள் குறித்து நாம் அறிந்து வைத்திருப்பது என்ன? **E P. 536 ¶ 2 - E P. 537 ¶ 2**

(20) When was immortality brought to light in the Scriptures and by whom and how? Page 393 ¶ 2
20. வேதவசனங்களில் சாவாமை குறித்து எப்பொழுது வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டது? மேலும், யாரால் மற்றும் எப்படி கொண்டுவரப்பட்டது? **E P. 538 ¶ 1-3**

(21) Did Christ's death secure immortality to men or to the angels or to the saints of this Gospel Age? Page 394 ¶ 1, 2
21. கிறிஸ்துவின் மரணமானது மனுஷருக்கு அழியாமையை உறுதி செய்ததா (secure) அல்லது தூதர்களுக்கு உறுதி செய்ததா (secure) அல்லது இந்தச் சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களுக்கு உறுதி செய்ததா? **E P. 539 ¶ 1, 2**

(22) Explain the relationship of Christ's death to human Restitution and to the obtaining of immortality on the part of the Church. Page 393, last par.
22. மனுக்குலத்தின் திரும்பக்கொடுத்தலுக்கான கிறிஸ்துவின் மரணத்திற்கும், சபையின் தரப்பில் சாகாமையைப் பெற்றுத்தருவதற்கான கிறிஸ்துவின் மரணத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கிக்கூறவும். **E P. 538 ¶ 4, 5**

(23) What did our Lord's Gospel bring to light respecting God's provision for mankind in general? Page 393, last par.
23. பொதுவாக மனுக்குலத்திற்கான தேவனுடைய முன்னேற்பாடு குறித்து நமது ஆண்டவருடைய சுவிசேஷம் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தது என்ன? **E P. 538 ¶ 4, 5**

(24) What is God's provision for the "elect" of this Gospel Age? Page 394 ¶ 1
24. இந்தச் சுவிசேஷ யுகத்தின் "தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான" தேவனுடைய முன்னேற்பாடு என்ன? **E P. 539 ¶ 1**

(25) Is immortality an element of the divine nature? Prove the answer. Pages 393, 389 ¶ 3
25. சாகாமை என்பது தெய்வீகச் சுபாவத்தின் ஒரு மூலக்கூரா/அம்சமா? விடையை நிரூபிக்கவும். **E P. 537 ¶ 2; E P. 538 ¶ 1-3; E P. 532 ¶ 3**

(26) Will the "elect" attain to a station more or less glorious than that of the holy angels of the highest order, and why? Pages 394, 395
26. "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" உயர்ந்த நிலையில் உள்ள பரிசுத்த தூதர்களை விட ஏறத்தாழ ஒரு மகிமையின் நிலையை அடைவார்களா? ஏன்? **E P. 539 ¶ 2 - E P. 541 ¶ 1**

(27) When is the reward of the divine nature conferred upon the Church? At the begetting of the Holy Spirit, or in the First Resurrection? Explain. Page 395 ¶ 4
27. தெய்வீகச் சுபாவத்தின் வெகுமதியானது சபைக்கு எப்பொழுது அளிக்கப்படுகிறது? பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலின்போதா அல்லது முதலாம் உயிர்த்தெழுதலின்போதா? விளக்கிக்கூறவும். **E P. 541 ¶ 2**

(28) If we are all called in the one hope of our calling and all begotten by the same Word of Truth and same Holy Spirit, how does it come that only a "little flock" of these really obtain the divine nature, while the "Great Company" obtain spirit life, but without the immortal feature? Page 396 ¶ 2, 3
28. நாம் அனைவரும் நம் அழைப்பின் ஒரே நோக்கத்திற்காக அழைக்கப்பட்டு, சத்திய வசனத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் அனைவருமே ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோமென்றால், "சிறு மந்தையினர்" மாத்திரமே உண்மையில் தெய்வீக சுபாவத்தை அடைகிறவர்களாகவும், "திரள் கூட்டத்தினர்" சாவாமை என்ற அம்சம் இல்லாத ஆவிக்குரிய ஜீவனை அடைகிறவர்களாகவும் எப்படி ஆகிறார்கள்? **E P. 542 ¶ 2; E P. 543 ¶ 1**

(29) Is the natural begetting and birth the figure or illustration of the spiritual begetting and birth? And would not the fact that some are born males and some born females fully correspond to the fact that in the spiritual birth some will be of the "Little Flock" and some of the "Great Company"? And if it is a fact that no appreciable difference is discernible between the male and the female fetus for a considerable time, does not this correspond to the thought that there is no difference between the experiences of the "Little Flock" and the "Great Company" for a considerable time after justification, consecration and the begetting of the Holy Spirit?
29. இயற்கையான கருத்தரிப்பு (ஜெநிப்பிக்கப்படுதல்) மற்றும் பிறத்தல் என்பது ஆவிக்குரிய ஜெநிப்பிக்கப்படுதல் மற்றும் பிறத்தலுக்கு உருவகமாக அல்லது எடுத்துக்காட்டாக இருக்கிறதா? மேலும், சிலர் ஆண் குழந்தைகளாகப் பிறப்பது மற்றும் சிலர் பெண் குழந்தைகளாகப் பிறப்பது என்ற உண்மையானது ஆவிக்குரிய பிறத்தலிலும் சிலர் "சிறு மந்தையினராகவும்," சிலர் "திரள் கூட்டத்தினராகவும்" பிறப்பதற்கு முழுமையாக ஒத்துப்போகிறதல்லவா? மேலும், ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஆண் சிசுவுக்கும் பெண் சிசுவுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் ஏதும் இராது என்பது உண்மையென்றால், நீதிமானாக்கப்படுதல், அர்ப்பணிப்பு மற்றும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலுக்குப் பின்னர் ஒரு குறிப்பிட்ட காலம் வரை "சிறு மந்தையினரின்" அனுபவங்களுக்கும், "திரள் கூட்டத்தினரின்" அனுபவங்களுக்கும் இடையே வேறுபாடுகள் இராது என்ற கருத்திற்கு இது ஒத்திருக்கிறதா?

(30) Why is the resurrection of the Church spoken of as **the** resurrection? Page 396 ¶ 1
30. சபையின் உயிர்த்தெழுதல் குறித்து உயிர்த்தெழுதலும் **அப்படியே** இருக்கும் என்று சொல்லப்பட்டிருப்பது ஏன்? **E P. 542 ¶ 1**

(31) Are the terms of our election too exacting or is the Divine requirement only a "reasonable service"? Show how. Explain John 5:26 and also Ephesians 3:6, and say whether or not these texts give intimation of the gift of immortality extending beyond the elect Church. Page 396 ¶ 2, 3
31. நம்முடைய தெரிந்துகொள்ளப்படுதலுக்கான நிபந்தனைகள் மிகவும் கடுமையானதா அல்லது தேவனுடைய அந்த நிபந்தனைகள் "புத்தியுள்ள ஆராதனையாக" மாத்திரம் காணப்படுகின்றதா? எப்படி என்று காண்பிக்கவும். யோவான் 5:26-ஆம் வசனத்தையும், எபேசியர் 3:6-ஆம் வசனத்தையும் விளக்கிக்கூறி, இவ்வசனங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கும் அப்பாற்பட்டு சாவாமைக்குரிய ஈவு நீட்டிக்கப்படுவதாக அறிவிக்கிறதா அல்லது இல்லையா என்பதைக் கூறவும். **E P. 542 ¶ 2; E P. 543 ¶ 1**

(32) Is there more than one word translated **immortality** in the Bible? What other? Page 396, last par.
32. வேதத்தில் **சாவாமை** என்று மொழிப்பெயர்க்கப்பட்ட ஒன்றிற்கும் மேற்பட்ட வார்த்தைகள் உள்ளதா? மற்றவை என்ன? **E P. 543 ¶ 2**

(33) Give two Greek words rendered **immortality** and state the particulars of their meaning. Page 397
33. **சாகாமை** என்று மொழிப்பெயர்க்கப்பட்ட இரண்டு கிரேக்க வார்த்தைகளை அளித்து, அவைகளினுடைய அர்த்தத்தின் விவரங்களைக் குறிப்பிடவும். **E P. 543, 544**

(34) Quote all the texts of Scripture in which the word **athanasia** (immortality) occurs.
34. **அத்தனேசியா** (சாகாமை/அழியாமை) என்ற வார்த்தை இடம்பெறக்கூடிய வசனப்பகுதிகள் அனைத்தையும் மேற்கோள்காட்டவும்.

(35) Quote the texts in which **aptharsia** and **apthartos** occur. And examine and explain each of these sixteen texts, in harmony with the foregoing. Pages 397, 398
35. **அப்தார்சியா, அப்தார்டோஸ்** ஆகிய வார்த்தைகள் இடம்பெறும் வசனப்பகுதிகளை மேற்கோள்காட்டவும். மேலும் அவைகளை ஆராய்ச்சிசெய்து, மேற்கூறப்பட்டவைகளுடன் இசைவுபடுத்தி, இந்தப் பதினாறு வசனப்பகுதிகள் ஒவ்வொன்றையும் விளக்கிக்கூறவும். **E P. 544, 545**

(36) What are the claims of evolutionists respecting mankind's hope for everlasting life? Explain the falsity of their premises and deductions. Page 398
36. நித்திய ஜீவனுக்கான மனுக்குலத்தின் நம்பிக்கை குறித்துப் பரிணாமவாதிகளின் கோரிக்கைகள் என்னவாக இருக்கிறது? அவர்களுடைய அனுமானங்கள் மற்றும் யூகங்களின் பொய்மையை விளக்கிக்கூறவும். **E P. 545 ¶ 10**

(37) What does the Christian see in the Bible contrary to these evolution propositions? Page 398
37. இந்தப் பரிணாம கூற்றுக்கு நேர் எதிர்மாறாகக் கிறிஸ்தவர்கள் வேதாகமத்தில் காண்பது என்ன? **E P. 545 ¶ 10**

(38) Taking the Bible as the oldest authority and crediting it with no higher authority than other histories, what are the evidences that Father Adam and Mother Eve were close relatives to the ape family? Elaborate this. Page 399
38. வேதாகமத்தை மிகப் பழமையான சான்றாக எடுத்துக்கொண்டு, மற்ற வரலாற்றுக் கதைகளைவிட உயர்ந்த அதிகாரத்தை வேதாகமம் கொண்டிருக்கவில்லை எனக் கருதும்போது, தந்தையாகிய ஆதாமும் தாயாகிய ஏவாளும் குரங்கு குடும்பத்திற்கு நெருங்கிய உறவினர்கள் என்பதற்கு உள்ள ஆதாரம் என்ன? **E P. 547 ¶ 1**

(39) What can be said of the shallow reasoning of some who pose as scientists and who claim that matter is indestructible and that this proves that humanity is indestructible? Does not such a claim imply a desire for eternal life and also a desire to get away from the Divine provision as expressed in the sentence of death and in the promise that through Christ there shall in due time be a resurrection of the dead? Page 399, last par.
39. விஞ்ஞானிகளாகக் காட்டிக்கொண்டு, "பொருள்கள் அழிக்க முடியாதவை" என்றும், மனுக்குலம் அழியாததற்கு இதுவே சான்று என்றும் கூறும் சிலரின் மேலோட்டமான பகுத்தறிவு குறித்து என்ன சொல்லமுடியும்? அத்தகைய கூற்று நித்திய ஜீவனுக்கான விருப்பத்தையும், மரண தண்டனையிலும் கிறிஸ்துவின் மூலம் ஏற்ற சமயத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இருக்கும் என்ற வாக்குத்தத்தத்திலும் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக ஏற்பாட்டிலிருந்து விலகி ஓடுவதற்கான விருப்பத்தையும் குறிக்கவில்லையா? **E P. 547 ¶ 2**

(40) Explain the Divine Program from the Bible standpoint and show the reasonableness thereof. Pages 400-402
40. வேதாகம கண்ணோட்டத்திலிருந்து தெய்வீகத் திட்டத்தை விளக்கிக்கூறி, அதிலுள்ள நியாயத்தைக் காட்டவும். **E P. 548 ¶ 1 - E P. 552 ¶ 1**

(41) If the word **"curse,"** as used in connection with the condemnation of our race, signifies the blight of sin and death, what does the promised removal of the **"curse"** imply? Page 403 ¶ 1
41. நமது சந்ததியினரின் தண்டனை தொடர்பாக பயன்படுத்தப்பட்ட **"சாபம்"** என்ற வார்த்தையானது பாவம் மற்றும் மரணத்தின் பாதிப்பை அடையாளப்படுத்துகிறது என்றால், **"சாபம்"** நீக்கப்படுவதற்கான வாக்குத்தத்தம் குறிப்பாகத் தெரிவிப்பது என்ன? **E P. 552 ¶ 2**

(42) What advantages accrue through the Divine arrangement of permitting sin, redeeming from sin, and, in due time, restoring obedient sinners to Divine favor and everlasting life? Page 403 ¶ 1
42. பாவத்தை அனுமதிப்பதும், பாவத்திலிருந்து மீட்டெடுப்பதும், ஏற்ற சமயத்தில், கீழ்ப்படியும் பாவிகளுக்கு தெய்வீகத் தயவையும், நித்திய ஜீவனையும் திரும்பக்கொடுப்பதற்கான தெய்வீக ஏற்பாட்டின் மூலமாக கிடைக்கப்பெறும் நன்மைகள் என்ன? **E P. 552 ¶ 2**

(43) Why has the dying of the race been a gradual one, rather than a sudden execution of the sentence, "Dying, thou shalt die"? Page 403 ¶ 2
43. "சாகவே சாவாய்" என்ற தீர்ப்பானது, மரித்துக்கொண்டிருக்கிற சந்ததியின் மீது உடனடியாக நிகழக்கூடிய ஒன்றாக இருப்பதற்குப் பதிலாக, படிப்படியாக நிகழக்கூடிய ஒன்றாக இருந்துவருவது ஏன்? **E P. 553 ¶ 1**

(44) Quote three strong texts of Scripture in support of the thought that death, not eternal torment is God's penalty for sin, and answer the queries of those who claim that resurrection would require of the Almighty more power than He is able to exercise. Page 404
44. பாவத்திற்கான தேவனுடைய தண்டனை மரணமே ஒழிய, மாறாக நித்திய வேதனை அல்ல என்ற கருத்தை ஆதரிக்கும் மூன்று வலுவான வசனப்பகுதிகளை மேற்கோள்காட்டவும். மேலும், உயிர்த்தெழுதலில் சர்வவல்லவருக்கு தாம் செயல்படுத்தும் வல்லமையைப் பார்க்கிலும் அதிகப்படியான வல்லமை தேவைப்படும் என்று கோரிடுபவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். **E P. 553 ¶ 2 - E P. 554**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் V மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 14

### ''ஒப்புரவாகுதலின் அவசியம் - சாபம்''

(1) What is implied in the statement of Revelation 22:3, "And there shall be no more curse"? Page 405

1. "இனி ஒரு சாபமுமிராது" என்ற வெளிப்படுத்தல் 22:3-ஆம் வசனத்தின் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது என்ன? **E P. 555**

(2) Is it generally admitted that there is a curse or blight upon mankind and upon his earthly inheritance or home such as the Creator did not impose upon the holy angels? Is it more reasonable to suppose that this accursed condition resulted from an imperfection of the Creator's work or that it is a penalty for man's disobedience? Which theory is sustained by the Scriptures? Quote the Scriptures.

2. மனுக்குலத்தின் மீதும், அவனுடைய பூமிக்குரிய வீட்டின் மீதும், சிருஷ்டிகர் தூதர்கள் மீது சுமத்திடாத ஒரு சாபம் சுமத்தப்பட்டுள்ளது என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறதா? இந்தச் சபிக்கப்பட்ட நிலையானது சிருஷ்டிகருடைய வேலையின் அபூரணத்தினால் விளைந்ததாகக் கருதுவதா அல்லது மனுஷனுடைய கீழ்ப்படியாமைக்கான தண்டனையாகக் கருதுவது மிகவும் நியாயமானதா? வேதவசனங்களினால் ஆதரிக்கப்படுகிற கோட்பாடு என்ன? வசனங்களை மேற்கோள்காட்டவும்.

(3) Does any theory fit better to the facts as we know them than the presentation given us in the Bible on the subject of the curse, the cause of its infliction and the period of its continuance and the time and cause of its removal? Page 405

3. சாபம் குறித்தும், அது சுமத்தப்பட்டதன் காரணம் குறித்தும், அது நீடிக்கும் காலம் குறித்தும், அது எடுத்துப்போடப்படும் காலம் மற்றும் காரணம் குறித்தும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட விளக்கத்தைப் பார்க்கிலும், பொருத்தமாக இருக்கும் ஏதேனும் கொள்கைகள் இருக்கின்றதா? **E P. 555**

(4) What is the ordinary theory respecting the curse and wherein is it wrong and contrary to the Bible teaching?

4. சாபத்தைக் குறித்துப் பொதுவாகக் காணப்படும் கொள்கை என்ன? மேலும், இது எதனில் வேதாகம போதனைக்கு முரணாகவும் தவறாகவும் உள்ளது?

(5) Does the Scriptural account imply such a moral responsibility as should belong to a perfect man made in the image of his Creator or does it imply a low degree of moral perception akin to that of the brute? Give the philosophy of this subject. Pages 406, 407

5. இந்த வேதாகமப் பதிவானது, தனது சிருஷ்டிகருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பரிபூரண மனுஷனுக்குச் சொந்தமான ஒரு தார்மீக ரீதியிலான பொறுப்பைச் சுட்டிக்காட்டுகிறதா அல்லது மிருகங்களைப்போன்று ஒரு குறைந்த அளவிலான தார்மீக உணர்வைச் சுட்டிக்காட்டுகிறதா? இவ்விஷயத்தின் தத்துவத்தை அளிக்கவும். **E P. 556, 557, 558**

(6) Does not the fact that Adam was placed on trial before the great Judge of the Universe imply that he was perfect and therefore fit for trial and responsible for his curse as a penalty for his sin? Page 407, last par.

6. ஆதாம் அண்டசராசரத்தின் மகா நியாயாதிபதிக்கு முன்பாக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டார் என்ற உண்மையானது, அவர் பரிபூரணராக இருந்தார் என்றும், அதனால் பரீட்சைக்குத் தகுதியுள்ளவராக இருந்தார் என்றும், அவருடைய பாவத்திற்கான தண்டனையாக அவருடைய சாபத்திற்குப் பொறுப்பாளியானார் என்றும் சுட்டிக்காட்டவில்லையா? **E P. 558 ¶ 2**

(7) Does God's proposal of the judgment of the Church during this Gospel Age necessitate an Advocate for each accepted son of God? And does the judgment of the world during the Millennial Age under a Mediator imply that they will be dealt with as a whole and not be introduced to the Father as sons until the end of the Millennium, when the Mediatorial office shall cease?
7. இந்தச் சுவிசேஷ யுகத்தில் சபையினுடைய நியாயத்தீர்ப்பு குறித்த தேவனுடைய திட்டமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவனுடைய புத்திரர் ஒவ்வொருவருக்காகவும் பரிந்துபேசுபவரை அவசியமாக்குகிறதா? மேலும் ஒரு மத்தியஸ்தரின் கீழ் ஆயிர வருட யுகத்தின்போது நடக்கயிருக்கும் மனுக்குலத்தின் நியாயத்தீர்ப்பின் விஷயத்தில் அவர்கள் ஒட்டுமொத்தமாகக் கையாளப்படுவார்களா மற்றும் ஆயிர வருட யுகத்தின் முடிவு வரை பிதாவின் புத்திரர்களென அறிமுகப்படுத்தப்படாமல் காணப்படுவார்களா?

(8) Does not the fact that the Church now needs an Advocate and that a Mediator is being provided for the world's judgment day corroborate the thought that there is a curse or Divine condemnation upon every member of the human family through sin? Page 408 ¶ 1
8. சபைக்கு தற்போது ஒரு பரிந்துபேசுகிறவர் அவசியம் என்பதும், உலகத்தின் நியாயத்தீர்ப்பு நாளுக்காக ஒரு மத்தியஸ்தர் வழங்கப்படுகிறார் என்பதும், மனித குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினர் மீதும் பாவத்தினிமித்தம் சாபம் அல்லது தெய்வீக தண்டனை உள்ளது என்ற உண்மையை உறுதிப்படுத்தவில்லையா? **E P. 559 ¶ 1**

(9) Does this curse affect mankind physically only? Does it also affect his mentality and his morality? Give an explanation. Cite Scriptures. Page 408, last par.; Page 409
9. இந்தச் சாபமானது மனுக்குலத்தைச் சரீர ரீதியாக மாத்திரமே பாதிக்கிறதா? அது, அவனை உள்ளப்பூர்வாகவும், ஒழுக்கப்பூர்வமாகவும்கூட பாதிக்கிறதா? விளக்கம் அளிக்கவும். வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 559 ¶ 2**

(10) In what Scripture is the curse upon our race spoken of as the wrath of God? Page 409 ¶ 1
10. எந்த வசனத்தில் நம்முடைய சந்ததியின் மீதான சாபமானது தேவனுடைய கோபாக்கினையாகப் பேசப்பட்டுள்ளது? **E P. 560 ¶ 1, 2; E P. 561 ¶ 1**

(11) How long has this wrath been upon the race and how much longer will it continue? If it will come to an end, what will be the process? Page 410 ¶ 1
11. இந்தக் கோபாக்கினை, இந்தச் சந்ததியினர் மீது எவ்வளவு காலமாக இருந்துவருகிறது மற்றும் அது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? அது ஒரு முடிவுக்கு வந்தால், அதன் செயல்முறை என்னவாக இருக்கும்? **E P. 561 ¶ 2**

(12) Is there also a **special** day of wrath mentioned in the Bible? In what sense is it particularly different from the remainder of the 6,000 years of Divine wrath and why? Page 410 ¶ 1
12. வேதாகமத்தில் **விசேஷித்த** கோபாக்கினையின் நாள் குறித்துக்கூட குறிப்பிடப்பட்டிருக்கிறதா? எந்த அர்த்தத்தில் அது குறிப்பாக எஞ்சியுள்ள ஆறாயிரம் வருட தெய்வீகக் கோபாக்கினையிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது? மற்றும் ஏன்? **E P. 561 ¶ 2**

(13) What distinction do the Scriptures draw between the Church and the world as respects this subject of wrath? Are Christians still "children of wrath"? Or did the wrath of God pass from them? If so, on what conditions? Page 410 ¶ 2
13. கோபாக்கினை என்ற இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் சபைக்கும் உலகத்திற்கும் இடையே வேதவசனங்கள் வரையறுக்கும் வேறுபாடு என்ன? கிறிஸ்தவர்கள் இன்னமுமே "கோபாக்கினையின் பிள்ளைகளாக" இருக்கின்றனரா? அல்லது தேவனுடைய கோபாக்கினை இவர்களிடமிருந்து கடந்துபோய்விட்டதா? ஆம் என்றால், எந்த நிபந்தனைகளின் அடிப்படையில்? **E P. 562 ¶ 1**

(14) Do Christians experience trouble in the same degree as the world or have they offsetting circumstances and conditions which ameliorate their sorrows and distress and disease? What is the

process by which they get into this **eased** condition and free from the Divine "curse" or "wrath"? Quote and explain six Scriptures. Page 411 ¶ 1
14. உலகத்தைப் போலவே கிறிஸ்தவர்களும் அதே அளவில் உபத்திரவத்தை அனுபவிக்கிறார்களா அல்லது அவர்களுடைய துக்கங்களையும், துயரங்களையும், நோய்களையும் சீர்ப்படுத்தும் சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் பெற்றவர்களாக இருக்கின்றனரா? தெய்வீகச் "சாபம்" அல்லது "கோபாக்கினையில்" இருந்து விடுபட்டு, இந்தச் **சுகமான** நிலைக்குள்ளாக அவர்கள் வருவதற்கான வழிமுறை என்ன? ஆறு வசனங்களை மேற்கோள்காட்டி விளக்கிக்கூறவும். **E P. 562 ¶ 2**

(15) What is God's verdict or curse against sin? If it is a death sentence, why does He delay the execution of it? Page 411, last par. 1
15. பாவத்திற்கு எதிரான தேவனுடைய தீர்ப்பு அல்லது சாபம் என்ன? அது மரண தண்டனை என்றால், அதை நிறைவேற்றுவதை அவர் தாமதப்படுத்துவது ஏன்? **E P. 563 ¶ 1**

(16) What were the circumstances which brought on the curse and were there any ameliorating circumstances? Page 412 ¶ 1
16. சாபத்தை வருவித்த சூழ்நிலைகள் என்னவாக இருந்தது மற்றும் சரிசெய்வதற்கான சூழ்நிலைகள் ஏதேனும் இருந்ததா? **E P. 564 ¶ 1**

17) Admitting that the penalty that God is executing against mankind is a just one, would it have been possible for Him to deal with sin otherwise than as He did? Page 412, last par.
17. தேவன் மனுக்குலத்திற்கு எதிராக நிறைவேற்றிக்கொண்டிருக்கும் தண்டனையானது நீதியான ஒன்றே என்பதை ஒத்துக்கொள்வது, அவர் இப்படி செய்ததுபோல் அல்லாமல், பாவத்தை அவரால் வேறு விதமாகக் கையாண்டிருக்க முடியுமா? **E P. 564 ¶ 2**

(18) Explain how God could have dealt with sin and sinners differently and state whether or not the Plan He is pursuing has special advantages over any other one. Page 413
18. தேவன் பாவம் மற்றும் பாவிகளை எப்படி வித்தியாசமாகக் கையாள முடியும் என்பதை விளக்கிக்கூறி, அவர் செயல்படுத்திவருகிற திட்டம் வேறு எந்தத் திட்டத்தைப்பார்க்கிலும் விசேஷித்த நன்மைகளைப் பெற்றிருக்கிறதா இல்லையா என்பதைக் குறிப்பிடவும். **E P. 565 ¶ 1**

(19) Admitting that a more moderate course could have been pursued by the Almighty in dealing with sin, but that the Plan adopted was the wisest, shall we suppose that disadvantage shall be permitted to come to mankind in any sense or degree? Page 414 ¶ 1
19. பாவத்தைக் கையாள்வதில் சர்வவல்லமையுள்ளவர் மிகவும் மிதமான போக்கைக் கடைப்பிடித்திருக்கலாம் என்றும், ஆனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமே மிகவும் புத்திசாலித்தனமானது/ஞானமானது என்றும் ஒப்புக்கொண்டாலும், எந்த விதத்திலாகிலும் (அ) எந்த அளவிலாகிலும் மனுக்குலத்திற்கு பாதகம் வர அனுமதிக்கப்படும் என்று நாம் கருதலாமா? **E P. 566 ¶ 1**

(20) Has God limited the operation of His grace to this Gospel Age or is there to be a further development during the Millennium? Page 414 ¶ 2
20. தேவன் தம்முடைய கிருபையின் செயல்பாட்டை இந்தச் சுவிசேஷ யுகத்திற்கு மட்டுப்படுத்தி இருக்கின்றாரா அல்லது ஆயிர வருட அரசாட்சியின்போது இது மேலும் தொடருமா? **E P. 566 ¶ 2**

(21) Of the Millennial conditions we read that "Every knee must bow and every tongue confess to the glory of God." Shall we understand this to mean that their obedience will be entirely compulsory? Or shall we understand that, while compulsory lessons will prevail for a time, nevertheless eventually the test will be along the line of the heart, the human will-either for life everlasting or death eternal? Quote a Scripture relating to the Millennial Age which so teaches. Page 415 ¶ 1
21. "முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும்" என்று ஆயிர வருட அரசாட்சியின் சூழ்நிலைகள் குறித்து நாம் வாசிக்கிறோம். அவர்களுடைய கீழ்ப்படிதல் முற்றிலும் கட்டாயமாக்கப்படும் என்ற அர்த்தத்தில் இதை நாம்

புரிந்துகொள்ளலாமா? அல்லது ஒரு காலப்பகுதி வரை கட்டாயப் பாடங்கள் நடப்பிலிருக்கும் என்றாலும், இறுதி பரீட்சையானது நித்திய ஜீவனுக்கோ அல்லது நித்திய மரணத்திற்கோ என்பது, மனுஷீக சித்தத்தைச் சார்ந்ததாக, அதாவது இருதயத்தைச் சார்ந்ததாகவே இருக்கும் என்பதாக நாம் புரிந்துகொள்ளலாமா? இப்படியாகப் போதிக்கக்கூடிய ஆயிர வருட யுகத்துக்குச் சம்பந்தமான வசனம் ஒன்றை மேற்கோள்காட்டவும். **E P. 567 ¶ 1**

(22) Viewed as a whole, how does the Divine Plan appeal to us? As kind or unkind, just or unjust, loving or loveless? Page 415 ¶ 2; Page 416
22. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, தெய்வீகத் திட்டம் நம்மை எப்படியாகத் தோற்றமளிக்கின்றது? இரக்கமுள்ளதாகவா அல்லது இரக்கமற்றதாகவா, நீதியுள்ளதாகவா அல்லது அநீதியுள்ளதாகவா, அன்பானதாகவா அல்லது அன்பற்றதாகவா? **E P. 567 ¶ 2; E P. 568 ¶ 1**

(23) In what sense did the nation of Israel have a Second Trial for life under their Law Covenant? Page 417 ¶ 1
23. எந்த அர்த்தத்தில், இஸ்ரயேல் தேசமானது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் ஜீவனுக்கான இரண்டாம் சோதனையைப் பெற்றிருந்தனர்? **E P. 568 ¶ 2**

(24) Did Israel receive a blessing under the Law Covenant or an additional curse or sentence of death? And will their experiences prove permanently injurious to them? Page 417 ¶ 1
24. இஸ்ரயேலர், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார்களா அல்லது ஒரு கூடுதல் சாபத்தை அல்லது மரண தண்டனையைப் பெற்றுக்கொண்டார்களா? மேலும், அவர்களுடைய அனுபவங்கள் அவர்களுக்கு நிரந்தரமான பாதிப்பாக இருக்குமென நிரூபிக்கிறதா? **E P. 568 ¶ 2**

(25) We read that Christ was made a curse for Israel. because it is written, "Cursed is everyone that hangeth on a tree." In what way did our Lord's death accomplish for Israelites what was unnecessary for the remainder of mankind? Page 417 ¶ 1
25. "மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன்" என்று எழுதியிருக்கிறபடியால், கிறிஸ்து இஸ்ரயேலருக்காக சாபமாக்கப்பட்டார் என்று நாம் வாசிக்கிறோம். எஞ்சியுள்ள மனுக்குலத்திற்கு அவசியமில்லாததையும், இஸ்ரயேலருக்கு அவசியமானதையும் நம்முடைய ஆண்டவருடைய மரணம் எவ்விதத்தில் நிறைவேற்றியது? **E P. 568 ¶ 2**

(26) What is the necessity for reconciliation between God and man? And what does it secure to the reconciled? Page 417 ¶ 2
26. தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையே ஒப்புரவாகுதல் அவசியப்படுவது ஏன்? மேலும், அது ஒப்புரவாக்கப்பட்டவர்களுக்கு அளிக்கும் உத்திரவாதம் என்ன? **E P. 569 ¶ 1**

(27) Give an explanation of the philosophy of the matter--of the fall, and the redemption, the Restitution and just how they are related. Page 417 ¶ 2
27. வீழ்ச்சி, மீட்பு, திரும்பக்கொடுத்தல் மற்றும் இவைகளின் தொடர்பு குறித்த விஷயத்தின் தத்துவத்தை விளக்கிக்கூறவும். **E P. 569 ¶ 1**

(28) At what time did God's wisdom see man's condition and how did He provide the aid needed? And was there any other power which could have served His purpose or any other agency by which it could be accomplished? Page 418
28. எச்சமயத்தில் தேவனுடைய ஞானம் மனுஷனுடைய நிலையைக் கண்டது? மேலும், தேவைப்பட்ட உதவியை அவர் எவ்வாறு அளித்தார்? மேலும், அவருடைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வேறு ஏதேனும் வல்லமையோ அல்லது வேறு ஏதேனும் கருவியோ (agency) இருந்ததா? **E P. 570 ¶ 1**

(29) What are the three parts of the Divine program as God is carrying it out? Explain these and associate them. Page 419
29. தேவன் செயல்படுத்திக் கொண்டுவரக்கூடிய தெய்வீகத் திட்டத்தின் மூன்று பகுதிகள் என்னென்ன? இவைகளை விளக்கி, தொடர்புபடுத்தவும். **E P. 570 ¶ 2; E P. 571 ¶ 2**

(30) For what proportion of the human family has the Atonement been arranged? And which alone of humanity will fail to profit by its provisions? Page 419, last par.
30. மனுஷீகக் குடும்பத்தின் எந்த எண்ணிக்கையுள்ளவர்களுக்கு ஒப்புரவாகுதல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? மேலும், மனுக்குலத்தில் யார் மாத்திரமே இந்த ஏற்பாட்டினால் பயனடையத் தவறிவிடுவார்கள்? **E P. 571 ¶ 3**

(31) What is meant by the testimony, "in due time"? (1 Tim. 2:6) And what may we expect as to the number of the saved? Page 420
31. "ஏற்றகாலங்களில்" என்ற சாட்சியத்தின் அர்த்தம் என்ன? (1 தீமோத்தேயு 2:6) மேலும், இரட்சிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறித்து நாம் என்ன எதிர்பார்க்கலாம்? **E P. 572**

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் V மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 15

### ''எல்லாரையும் மீட்கும்பொருளாக'' ஒப்புரவாகுதலுக்கு ஒரே அடிப்படை

(1) What is meant by the Atonement between God and man? And what is necessary before it could be accomplished for any member of the human family? Explain the matter? Page 421

1. தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலான ஒப்புரவாகுதல் என்றால் என்ன? மேலும், மனுஷீகக் குடும்பத்தின் எந்த ஓர் அங்கத்திற்கும் அது நிறைவேற்றப்படுவதற்கு முன் அவசியப்படுவது என்ன? இந்த விஷயத்தை விளக்கிக்கூறவும். **E P. 573**

(2) Was the penalty against sin a just one? And how may we judge of justice or injustice on the part of the great Creator, seeing that He is so great and we are so little? Contrast the penalty of sin from the Scriptural standpoint--the death penalty--with the erroneous popular theory of eternal torment, and explain the errors of the latter and the reasons of the former. Page 422 ¶ 1

2. பாவத்திற்கு எதிரான தண்டனை என்பது நீதியான ஒன்றா? மேலும், மாபெரும் சிருஷ்டிகர் மிகவும் பெரியவர் என்றும், நாமோ மிகவும் சிறியவர்கள் என்றும் காண்கையில், தேவன் நீதியாக நடந்துகொண்டார் அல்லது அநீதியாக நடந்துகொண்டார் என்று நாம் நியாயந்தீர்ப்பது எப்படி? பாவத்தின் தண்டனை - மரண தண்டனை - என்ற வேதாகம கண்ணோட்டத்திலிருந்து, பாவத்தின் தண்டனை நித்திய வாதை என்ற தப்பறையான பிரபலியமான கொள்கையுடன் வேறுபடுத்திக் காண்பித்து, பின்னால் குறிப்பிடப்பட்டவைகளின் தவறுகளையும், முதலில் சொல்லப்பட்டவைகளின் நியாயங்களையும் விளக்கிக்கூறவும். **E P. 574 ¶ 1**

(3) How can the sacrifice of one be made the offset for the sins of many? Page 422 ¶ 2

3. அநேகருடைய பாவங்களுக்கு ஒருவருடைய பலி எவ்வாறு ஈடுசெய்ய முடியும்? **E P. 575 ¶ 1**

(4) Since none who received his life from Father Adam had an unimpaired life we may see that none could ransom or redeem his brother or brethren. But could not a holy angel, free from condemnation, have laid down his life as the redemption price for man's life? If not why not? Page 422 ¶ 2

4. தகப்பனாகிய ஆதாமினிடமிருந்து ஜீவன் பெற்ற எவரும் குறைவற்ற ஜீவனைப் பெற்றிராததினால், ஒருவரும் தன் சகோதரனையும் (அ) சகோதரர்களையும் மீட்டுக்கொள்ள முடியாது என்று நாம் காண்கிறோம். ஆனால், மரண தண்டனைக்கு உட்படாத தேவதூதர்களில் ஒருவர் மனுஷனுடைய ஜீவனுக்கான மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திருக்க முடியாதா? இல்லையென்றால், ஏன் இல்லை? **E P. 575 ¶ 1**

(5) If, then, a spirit being, in order to become man's Redeemer, would need to exchange his nature for an earthly nature, upon what basis did the Father determine who might become man's Redeemer and obtain the glorious reward proper for the service? Page 423

5. மனுஷனுடைய மீட்பர் ஆகும்படிக்கு ஓர் ஆவிக்குரிய ஜீவி, பூமிக்குரிய சுபாவத்திற்குத் தம்முடைய சுபாவத்தை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கும் என்றால், யார் மனுஷனுடைய மீட்பராகிய அந்த ஊழியத்திற்கான சரியான மகிமையான வெகுமதியைப் பெறுவார் என்பதைப் பிதா எதன் அடிப்படையில் தீர்மானித்தார்? **E P. 576 ¶ 1**

(6) What priority or right did our Lord as the **Logos** or Word of God have over others in respect to this special opportunity to become man's Redeemer? Page 424

6. மனுஷனுடைய மீட்பராகுவதற்கான இந்த விசேஷித்த வாய்ப்பைப் பொறுத்தமட்டில் **லோகோஸாக** அல்லது தேவனுடைய வார்த்தையாக இருக்கும் நம்முடைய ஆண்டவர் மற்றவர் மீது கொண்டிருக்கும் உரிமை என்ன? **E P. 577 ¶ 1; E P. 578 ¶ 1**

(7) Was it a spirit being that God offered or sacrificed for man's sin? Page 424 ¶ 2
7. மனுஷனுடைய பாவத்திற்காக தேவன் பலியாகக் கொடுத்தது ஓர் ஆவிக்குரிய ஜீவியா? **E P. 578 ¶ 2**

(8) Did our Lord's Sin-offering begin when He, as a spirit being, the **Logos**, accepted the Divine proposition to become man's Redeemer, or when did the Sin-offering begin and where did it end? Cite the Scriptures. Pages 425, 426
8. நம்முடைய ஆண்டவர், ஓர் ஆவிக்குரிய ஜீவியாக, **லோகோஸாக** (இருந்த நிலையில்), மனுஷனுடைய மீட்பராகுவதற்கான தெய்வீக முன்மொழிவை ஏற்றுக்கொண்டபோது, அவருடைய பாவநிவாரணபலி தொடங்கியதா? அல்லது எப்போது பாவநிவாரணபலி தொடங்கியது மற்றும் அது எங்கு முடிவடைந்தது? வேதவசனங்களை மேற்கோள்காட்டவும். **E P. 579, 580**

(9) When did our Lord's presentation of Himself begin? And when was the corresponding price offered and accepted and the acceptance fully manifested? Page 426, last par.
9. நம்முடைய ஆண்டவர் தம்மை ஒப்புக்கொடுத்த காரியம் எப்போது துவங்கியது? மேலும், சரிநிகர் சமான விலை எப்போது கொடுக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டது? மற்றும் அந்த அங்கீகரிப்பானது எப்போது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது? **E P. 581 ¶ 1, 2**

(10) What is the signification of the word **ransom** in the English and in the Greek? Cite the Scripture. Page 427, last par.
10. ஆங்கிலத்திலும், கிரேக்கப் பதத்திலும் **மீட்கும்பொருள்** (ransom) என்ற வார்த்தையின் பொருள் என்ன? வேதவசனத்தை மேற்கோள்காட்டவும். **E P. 582 ¶ 1; E P. 583 ¶ 1**

(11) What light does the meaning of the word **ransom** throw upon the work of Atonement? Page 428
11. ஒப்புரவாகுதலின் பணியின் மீது **மீட்கும்பொருள்** என்ற வார்த்தையின் அர்த்தம் கொடுக்கும் வெளிச்சம் என்ன? **E P. 583 ¶ 2, 3**

(12) Does the word **redeem** have a somewhat similar signification to the word **ransom**? And have the translators of the English Bible helped or hindered the student, and how? Pages 429-431
12. **மீட்பு** என்ற வார்த்தையானது ஏறக்குறைய **மீட்கும்பொருள்** என்ற வார்த்தைக்குரிய அதே அர்த்தத்தைப் பெற்றிருக்கிறதா? மேலும், ஆங்கில வேதாகம மொழிப்பெயர்ப்பாளர்கள் மாணவர்களுக்கு உதவிசெய்பவர்களாக இருந்திருக்கின்றார்களா அல்லது தடைபண்ணுகிறவர்களாக இருந்திருக்கின்றார்களா? மற்றும் எப்படி? **E P. 585 - 589**

(13) What about the word **lutroo**? Explain its significance and use. Pages 431, 432
13. **லூட்ரோ** என்ற வார்த்தை குறித்த காரியம் என்ன? அதன் அர்த்தத்தையும், பயனையும் விளக்கிக் கூறவும். **E P. 588, 589**

(14) Explain the word **lutrosis**, also rendered **redemption**, and cite Scripture. Pages 432, 433
14. **லூட்ரோசிஸ்** என்ற வார்த்தையும் **மீட்பு** என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருப்பதை விளக்கிக்கூறி, வசனமேற்கோள் காட்டவும். **E P. 590**

(15) Explain the meaning of the Greek word **poieolutrosin** and its uses in the Scriptures. Page 433 ¶ 3, 4
15. **பாயோலுட்ரோசின்** (poieolutrosin) என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தத்தையும், வேதவசனங்களில் அதன் பயன்பாட்டையும் விளக்கிக்கூறவும். **E P. 591 ¶ 1 - 3**

(16) About the word **apolutrosis:** explain it and refer to its use and its meaning. Pages 434-437
16. **அப்போலுட்ரோசிஸ்** என்ற வார்த்தையை விளக்கிக்கூறி, அதன் பயன்பாட்டையும், அர்த்தத்தையும் குறிப்பிடவும். **E P. 591 ¶ 4 - E P. 598 ¶ 1**

(17) Cite the uses of the words **redeem, redeemer**, **redeemed, redemption,** in the Old Testament. Examine these and show their proper application. Page 438
17. பழைய ஏற்பாட்டில் **மீட்டல், மீட்பர், மீட்கப்பட்ட, விலைக்கிரயம் கொடுத்து மீட்டல்** ஆகிய வார்த்தைகளின் பயன்பாடுகளை மேற்கோள்காட்டவும். இவைகளை ஆராய்ந்துப்பார்த்து, அதின் சரியான பயன்பாட்டைக் காண்பிக்கவும். **E P. 598 ¶ 2 - E P. 599 ¶ 4**

(18) Is the commercial idea involved in the words describing man's redemption and its cost? Page 439 ¶ 1
18. மனுஷனுடைய மீட்பு மற்றும் அதன் விலை குறித்து விவரிக்கும் வார்த்தைகளில் வியாபார ரீதியான யோசனை சம்பந்தப்பட்டுள்ளதா? ***E P. 599 கடைசி பத்தி***

(19) How does this commercial thought harmonize with the substitution thought and with the signification of the word **ransom**? Page 439 ¶ 1
19. இந்த வியாபார ரீதியான சிந்தனை, ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொன்று என்ற பதிலீட்டுச் சிந்தனையுடனும், **மீட்கும்பொருள்** என்ற வார்த்தையின் அர்த்தத்துடனும் எவ்வாறு இசைவாக உள்ளது? ***E P. 599 கடைசி பத்தி***

(20) What object is served by the teaching of this Scripture that our Lord "gave Himself a ransom for all"?--that the penalty of man's sin was death, under the Divine arrangement? Page 439 ¶ 2
20. தெய்வீக ஏற்பாட்டின்கீழ் மனுஷனுடைய பாவத்திற்கான தண்டனை மரணமாக இருந்தபடியால், நம்முடைய ஆண்டவர் "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" என்ற இந்த வசனம் உபதேசிப்பது என்ன? **E P. 600 ¶ 1**

(21) So far as the redeemed are concerned, what does it matter by what process God satisfies the demands of His own Justice, if to them it comes as a gift? What purpose, then, is served in the Divine explanation as to how we were redeemed and how the Divine Justice was satisfied before we could be delivered from the power of sin and death--the curse or sentence of the Divine Law? Page 439 ¶ 3
21. மீட்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், அது அவர்களுக்கு ஒரு ஈவாக வந்தால், தேவன் தம்முடைய நீதியின் கோரிக்கைகளை எந்தச் செயல்பாட்டின்/வழிமுறையின் மூலம் திருப்திப்படுத்துகிறார் என்பது முக்கியமானதா? அப்படியானால், நாம் எவ்வாறு மீட்கப்பட்டோம் என்பதற்கான தெய்வீக விளக்கத்தில் உள்ள நோக்கம் என்ன? மேலும், நாம் தெய்வீக பிரமாணத்தின் தண்டனை தீர்ப்பு அல்லது சாபத்திலிருந்து, அதாவது பாவம் மற்றும் மரணத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக்கப்படுவதற்கு முன்பு தெய்வீக நீதி எவ்வாறு திருப்திபடுத்தப்பட்டது? **E P. 601**

(22) Mention some of the Scriptures which show that our Redeemer gave all that He had; that He kept nothing back, but made a full sacrifice of His every talent, power, position, and right, that thereby He might become man's Redeemer and eventually have a right to be the Mediator of the New Covenant between God and mankind in general. Page 440
22. நம்முடைய மீட்பர் தமக்குண்டான எல்லாவற்றையும் கொடுத்துவிட்டார் என்றும், தமக்கென்று ஒன்றையும் தக்கவைத்துக்கொள்ளாமல், மாறாகத் தம்முடைய ஒவ்வொரு தாலந்தையும், அதிகாரத்தையும், ஸ்தானத்தையும், உரிமையையும் முழுமையாகப் பலியாக்கினார் என்றும், அதன் விளைவாக அவர் மனுஷனுடைய மீட்பராகும்படியாகவும், இறுதியில் தேவனுக்கும், மனுக்குலத்திற்கும் இடையே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகுவதற்கான உரிமையைப் பெற்றிருக்கிறார் என்றும் காண்பிக்கக்கூடிய வசனப்பகுதிகள் சிலவற்றைக் குறிப்பிடவும். **E P. 602 ¶ 1, 2, 3**

(23) Cite some Scriptures showing what Ransom was given. Page 441 ¶ 1
23. மீட்கும்பொருளாகக் கொடுக்கப்பட்டது என்ன என்பதைக் காண்பிக்கும் வசனப்பகுதிகள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 603 ¶ 1**

(24) Cite some Scriptures showing what was the penalty for sin and what the price to be paid in offset or cancellation of that sin. Page 441
24. பாவத்திற்கான தண்டனை என்ன என்பதையும், அந்தப் பாவம் நீக்கப்படுவதற்கு அல்லது அதற்கு ஈடாகச் செலுத்தப்பட வேண்டிய விலை என்ன என்பதையும் காண்பிக்கக்கூடிய வேதவசனங்கள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 603 ¶ 1; E P. 604 ¶ 3**

(25) Did the giving of the **ransom-price** effect the forgiveness and release of all mankind or any number of them from the death sentence? Page 442 ¶ 1
25. **மீட்கும்பொருளை** அளிப்பது மனுக்குலம் அனைவரையும் அல்லது ஏதேனும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ளவர்களை மன்னித்து மரண தண்டனையிலிருந்து விடுவித்ததா? **E P. 604 ¶ 3 - E P. 605 ¶ 1**

(26) When our Lord ascended on high, was He possessed of a sufficiency of merit which, if applied, would have effected the cancellation of the sins of the whole world? And did He so apply it? And if not, what did He do with it? Page 442 ¶ 1
26. ஒருவேளை முழு மனுக்குலத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்வதற்குத் தேவைப்படும் புண்ணியத்தினை, நமது ஆண்டவர் உன்னதத்திற்கு ஏறிச்சென்றபோது, பெற்றிருந்தவராக இருந்தாரா? மேலும், அவர் அதை அவ்விதமாகப் பயன்படுத்தினாரா? மேலும் இல்லை என்றால், அதைவைத்து அவர் செய்தது என்ன? **E P. 604 ¶ 3 - E P. 605 ¶ 1**

(27) Who are included in the term us? For whom did the Lord make application of His merit when He ascended on high, and what proof was furnished to the Church showing that the Father accepted the merit thus applied?
27. நாம் என்ற சொல்லுக்குள் அடங்குபவர்கள் யார்? ஆண்டவர் பரமேறினபோது அவர் யாருக்காக தம்முடைய புண்ணியத்தைப் பயன்படுத்தினார்? மேலும், இப்படியாக உபயோகிக்கப்பட்ட புண்ணியத்தைப் பிதா அங்கீகரித்தார் என்பதைக் காண்பிப்பதற்குச் சபைக்கு வழங்கப்பட்ட ஆதாரம் என்ன?

(28) What can we say respecting the meaning of the words **hilasmos** and **hilasterion**? What Scriptures refer to these and what do they teach? Page 442, foot note
28. **ஹிலாஸ்மோஸ்** (hilasmos) மற்றும் **ஹிலாஸ்டேரியான்** (hilasterion) என்ற வார்த்தைகளின் அர்த்தம் குறித்து நாம் என்ன சொல்லக்கூடும்? இவைகளைக் குறிப்பிடும் வசனப்பகுதிகள் என்ன? மேலும், அவை போதிப்பது என்ன? (அடிக்குறிப்பு: தமிழில் மொழிப்பெயர்க்கப்படவில்லை... ஆங்கிலத்தில் பக்கம் 442 அடிக்குறிப்பு பார்க்கவும்).

(29) When we read that without the shedding of blood there is no remission of sins, did it mean any blood? If not, what blood? And did it mean that shedding of the blood remitted the sins or that the blood must be shed and then be used as a basis for sin remission? Page 442, last par.
29. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவத்திற்கான மன்னிப்பு உண்டாகாது என்று நாம் வாசிக்கும்போது, எந்த இரத்தத்தையும் அது குறிப்பதாகப் பொருள்படுகிறதா? இல்லையெனில், அது எந்த இரத்தம்? மேலும், இரத்தம் சிந்துதலே பாவங்களை மன்னித்துவிட்டதாகப் பொருள்படுகிறதா, அல்லது இரத்தம் சிந்தப்பட்டு, பின்பு பாவம் மன்னிக்கப்படுவதற்கான அடிப்படையாக அது பயன்படுத்தப்பட வேண்டும் என்ற விதத்தில் பொருள்படுகிறதா? **E P. 605 ¶ 2**

(30) Explain how and why the shame and ignominy of the cross, etc., were necessary to our Lord, whereas the penalty of sin as originally stated to Father Adam was merely death without stipulations respecting shame and ignominy. Page 443 ¶ 1, 2
30. ஆதியிலே தகப்பனாகிய ஆதாமுக்குக் கூறப்பட்ட பாவத்திற்கான தண்டனை என்பது அவமானம் மற்றும் இழிவுபடுத்துதல் குறித்த நிபந்தனைகள் ஏதும் இல்லாமல் வெறும் மரணமாகவே இருந்த அதேசமயத்தில், நம்முடைய ஆண்டவர் அவமானம், சிலுவையின் இழிவுபடுத்துதல், போன்ற அனுபவங்களைப் பெற வேண்டியது அவசியமாக இருந்தது ஏன் மற்றும் எப்படி என்பதை விளக்கிக்கூறவும். **E P. 606 ¶ 1, 2**

(31) What Scriptures particularly show that mankind is in a wrong condition, alienated from his Creator, and nothing but the sacrifice of Christ could be effective for his reconciliation, either through justification by faith now or actual justification by and by during the Millennium? Pages 444, 445
31. மனுக்குலம் சிருஷ்டிகருக்கு அந்நியராாக இருப்பதாகவும், தவறான நிலைப்பாட்டில் உள்ளதாகவும், மற்றும் மனுக்குலத்தின் ஒப்புரவாகுதலுக்கு, அதாவது தற்போது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் மூலமாகவோ அல்லது ஆயிர வருட அரசாட்சியின் போது படிப்படியாக உண்மையான நீதிமானாக்கப்படுதலின் மூலமாகவோ மனுக்குலம் ஒப்புரவாக்கப்படுவதற்குக் கிறிஸ்துவின் பலியே அல்லாமல் வேறொன்றும் பயனுள்ளதாக இருக்க முடியாது என்பதைக் குறிப்பாகக் காண்பிக்கும் வசனப்பகுதிகள் என்ன? **E P. 606 ¶ 3 - E P. 608 ¶ 3**

32) Cite some Scriptures which teach that our Lord's sacrifice was not for the Church alone, but also for the sins of the whole world. Page 446
32. நம்முடைய ஆண்டவருடைய பலி சபைக்காக மாத்திரமே கொடுக்கப்படாமல், மாறாக ஒட்டுமொத்த உலகத்தின் பாவத்திற்காகவும் கொடுக்கப்பட்டது என்பதைப் போதிக்கும் வேதவசனங்கள் சிலவற்றை மேற்கோள்காட்டவும். **E P. 609 ¶ 1 - E P. 610**

(33) What Scriptures directly state that mankind's purchase price has been laid down-the blood of Christ? Page 446, last par.
33. மனுக்குலத்திற்கான விலைக்கிரயமாக கிறிஸ்துவின் இரத்தம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை நேரடியாகக் குறிப்பிடும் வசனப்பகுதிகள் என்ன? **E P. 611**

(34) By whom is the purchase made? Page 447
34. யாரால் இந்த விலைக்கிரயம் செலுத்தப்பட்டது? **E P. 611**

(35) Of whom is the purchase made? Pages 447-449
35. யாருக்காக இந்த விலைக்கிரயம் செலுத்தப்பட்டது? **E P. 611 ¶ 4 - E P. 616 ¶ 1**

(36) For what purpose is the purchase made? Page 450
36. எந்த நோக்கத்திற்காக இந்த விலைக்கிரயம் செலுத்தப்பட்டது? **E P. 616 ¶ 2**

(37) What part did Love and Wisdom have with Justice in this arrangement for human sin? Page 451
37. மனுஷனுடைய பாவத்திற்காக, இந்த ஏற்பாட்டில் நீதியுடன், அன்பு மற்றும் ஞானம் பெற்றிருக்கும் பங்கு என்ன? **E P. 617 ¶ 1 - E P. 618 ¶ 2**

(38) May we then say that although man be released from sin and death only by the satisfaction of Justice, nevertheless the triumph of Justice was pre-eminently a victory of Divine Love through Justice? If so, show it. Page 452 ¶ 1, 2
38. நீதியை திருப்திசெய்வதினால் மட்டுமே மனிதன் பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவான் என்றாலும், நீதியின் வெற்றி என்பது எல்லாவற்றிற்கும் மேலாக நீதியின் மூலம் தெய்வீக அன்பின் வெற்றி என்று நாம் கூறலாமா? அதை விவரிக்கவும். **E P. 618 ¶ 3; E P. 619 ¶ 1**

(39) Who sold the race into sin what wage did he receive? Page 452 ¶ 3
39. இந்தச் சந்ததியைப் பாவத்திற்குள்ளாக விற்றுப்போட்டது யார்? அதற்கான கூலியாக அவன் பெற்றது என்ன? **E P. 620 ¶ 1**

(40) Is this matter of the laying down of the purchase price of our race by the Lord Jesus Christ a mere figure or theory, or is it bona fide, actual, and does it carry with it actualities of progression and control? Page 452 ¶ 4
40. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமது இனத்திற்கான ஈட்டுக்கிரயம் கொடுக்கப்படுகிற இந்த விஷயமானது, வெறும் உருவகம் அல்லது கூற்றா, அல்லது நேர்மையானதாக, நிஜமானதாக இருந்து அதோடு முன்னேற்றம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின் உண்மையை பெற்றுள்ளதா? **E P. 620 ¶ 2, 3**

(41) Is it by virtue of this ransom price that the Redeemer has the right to be the Restorer of the race, and, by giving to it the purchased life, does He become its Life-Giver or Father, and is this term "Father" Scripturally applied to Him? Explain the process or the philosophy. Page 453 ¶ 1
41. இந்த மீட்கும்பொருளின் அடிப்படையிலேயா நம்முடைய மீட்பர் மனுக்குல சந்ததியை மீட்டெடுப்பதற்கான உரிமையைப் பெற்றிருந்தார்? மேலும், மனுக்குலத்திற்கு விலைக்கு வாங்கப்பட்ட ஜீவனைக் கொடுப்பதன் மூலமாகவா மனுக்குலத்திற்கு ஜீவன்-அளிப்பவராக அல்லது தகப்பனாக (பிதாவாக) ஆனார்? மேலும், "தகப்பன்/பிதா" என்ற இந்தச் சொல் வசனத்தின் அடிப்படையில் அவருக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? இதன் தத்துவத்தை அல்லது செயல்முறையை விளக்கிக்கூறவும். **E P. 621 ¶ 1**

(42) Our Lord laid down the price of the race when He died. Did He take it back again when He arose from the dead on the third day? If not, why not? Explain the entire transaction and show positively that the ransom for sin remained and will always remain and that thus our forgiveness and reconciliation are upon a firm basis. Page 453, last par.; Page 454 ¶ 1
42. நம்முடைய ஆண்டவர் மரித்தபோது மனுக்குல சந்ததியினருக்கான கொடுத்துவைத்தார். மூன்றாம் நாளில் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபோது அதை மீண்டுமாகத் திரும்ப எடுத்துக்கொண்டாரா? இல்லை என்றால், ஏன் இல்லை? இதன் முழு பரிவர்த்தனையையும் விளக்கிக்கூறி, பாவத்திற்கான மீட்கும்பொருள் கொடுத்துவைக்கப்பட்டது மற்றும் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும், மற்றும் என்றென்றும் தொடர்ந்து நீடித்திருக்கும் என்பதையும், மற்றும் இப்படியாக நமக்கான பாவமன்னிப்பும், ஒப்புரவாகுதலும் ஓர் உறுதியான அஸ்திபாரத்தின்மீது போடப்பட்டிருக்கிறது என்பதையும் நேர்மறையாகக் காண்பிக்கவும். **E P. 621 ¶ 2; E P. 622 ¶ 1**

(43) What would have been implied had our Lord risen from the dead a human being? Page 454 ¶ 2
43. நம்முடைய ஆண்டவர் ஒரு மனுஷீக ஜீவியாக மரித்தோரிலிருந்து எழுந்திருந்தாரேயானால் அது எதைச் சுட்டிக்காண்பிக்கக் கூடியதாக இருந்திருக்கும்? **E P. 622 ¶ 2-4**

(44) Could the Man Jesus possibly be referred to as the new Father of the race—the Second Adam? Why not? Explain the matter fully. Page 454 ¶ 3, 4
44. மனுஷனாகிய இயேசுவை மனுக்குல சந்ததியின் புதிய பிதாவாக, அதாவது இரண்டாம் ஆதாமாகக் குறிப்பிடமுடியுமா? ஏன் கூடாது? இந்த விஷயத்தை முழுமையாக விளக்கிக்கூறவும். **E P. 623 ¶ 1, 2**

(45) Has the payment of the Ransom by our Lord any bearing upon His Office as Mediator of the New Covenant? Page 455
45. நம்முடைய ஆண்டவரால் செலுத்தப்பட்ட மீட்கும்பொருளின் விலைக்கிரயத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக அவருடைய பணிக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கின்றதா? **E P. 624 ¶ 1**

(46) Did our Lord by his redemptive work seal the New Covenant, or did He merely become the "surety" (Heb. 7:22) of the New Covenant, and has He left the sealing of it to be accomplished at the end of this Gospel Age after His faithful shall have drunk with Him His cup, the blood of the New Covenant sharing in His sacrifice and "filling up that which is behind of His afflictions"?
46. நம்முடைய ஆண்டவர் தம்முடைய மீட்பின் வேலையின் மூலமாகப் புது உடன்படிக்கையை முத்திரித்தாரா அல்லது வெறும் புது உடன்படிக்கையின் "பிணையாளியாக" (surety) (எபிரெயர் 7:22) மாத்திரம் ஆனாரா? மேலும், அவர் அதின் முத்திரித்தலை, இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில் அவரிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருப்பவர்கள் அவருடைய பாத்திரத்தில், புது உடன்படிக்கையின் இரத்தத்தில் அவரோடுகூட பானம்பண்ணின பிற்பாடு அதாவது, அவருடைய பலியில் பங்கெடுத்து, "அவருடைய உபத்திரவங்களில் குறைவானதை . . . நிறைவேற்றின" பிற்பாடு நிறைவேற்றப்படும்படி விட்டிருக்கின்றாரா?

(47) When did Christ become the Mediator of the New Covenant? when that Covenant was promised (Jeremiah 31:31), or when He was promised that He should be its Mediator or Servant? Cite Malachi 3:1.
47. கிறிஸ்து எப்பொழுது புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரானார்? அந்த உடன்படிக்கை எப்போது வாக்களிக்கப்பட்டது (எரேமியா 31:3), அல்லது அவர் அதன் மத்தியஸ்தர் அல்லது ஊழியக்காரராக வேண்டும் என்று அவர் எப்போது வாக்களிக்கப்பட்டார்? மல்கியா 3:1-ஆம் வசனத்தை எடுத்துரைக்கவும்.

(48) Does the fact that He is the appointed Mediator of the New Covenant imply that He has already done all the work pertaining to the New Covenant or any of the work pertaining to it?
48. அவரே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டவர் என்ற உண்மையானது புது உடன்படிக்கைக்குத் தொடர்புடைய அனைத்துப் பணியையும் அல்லது ஏதேனும் பணிகளையும் அவர் ஏற்கெனவே செய்து முடித்துவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறதா?

(49) When St. Peter tells of the Times of Restitution of all things that will be brought in at the Second Coming of Christ, he also tells of a Great Prophet, greater than Moses, the Antitype of Moses, who shall be "raised up from amongst His brethren." Are we to understand that this great Prophet is the Messiah as a whole, Jesus the Head and the Church His Body, and that the raising up process has been in progress throughout this Gospel Age, and that this antitypical Moses is to be the Mediator of the New [Law] Covenant, as Moses was the Mediator of the Old Law Covenant?
49. எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்களானது கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின்போது கொண்டுவரப்படும் என்று பரிசுத்த பேதுரு கூறினபோது, நிஜமான மோசேயும், மோசேயைப் பார்க்கிலும் பெரியவருமான, மாபெரும் தீர்க்கத்தரிசியானவர் ஒருவரை "(அவருடைய) சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்" என்றும்கூட கூறியிருக்கிறார். இந்த மாபெரும் தீர்க்கத்தரிசியானவர் தலையாகிய இயேசுவும், அவருடைய சரீரமாகிய சபையுமாக ஒரு முழுமையான மேசியாவாகவும், மற்றும் இந்த எழும்பப்பண்ணும் செயல்முறையானது இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது என்றும், மற்றும் பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராக மோசே இருந்ததுபோல, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இந்த நிஜமான மோசே இருக்கவேண்டும் என்றும் நாம் புரிந்துகொள்ள வேண்டுமா?

(50) By Divine arrangement this great Mediator sacrificed His earthly rights that He may have the privilege of giving them as His legacy, or testament, or will to Israel as its New [Law] Covenant. When will He thus seal or ratify the New Covenant? The Apostle says that no will is valid until after the death of the testator. Should we understand this to mean that not until the entire Body of Christ has tasted death would it be possible for the New Covenant to be sealed and made operative toward the natural seed of Abraham?
50. தெய்வீக ஏற்பாட்டினால் இந்த மாபெரும் மத்தியஸ்தர், இஸ்ரயேலுக்கு அதன் புது உடன்படிக்கையாக அவருடைய உயிலாக அல்லது ஏற்பாடாக அல்லது சித்தமாக அவர்களுக்கு அளிக்கும் சிலாக்கியத்தை அவர் பெற்றுக்கொள்ளும்படிக்கு அவருடைய பூமிக்குரிய உரிமைகளைப் பலிசெலுத்தினார். இவ்வாறாகப் புது உடன்படிக்கையை அவர் எப்பொழுது முத்திரையிடுவார் அல்லது உறுதிசெய்வார்? மரண சாசனத்தை எழுதியவரின் மரணம் நிகழும் வரை எந்த உயிலும் செல்லுபடியாகாது என்று அப்போஸ்தலர் கூறினார். கிறிஸ்துவினுடைய முழுச் சரீரமும் மரணத்தை ருசிபார்க்கும் வரையிலும் புது உடன்படிக்கை முத்திரையிடப்பட்டு, ஆபிரகாமின் மாம்சீக வித்து/சந்ததியை நோக்கிச் செயல்படுவது சாத்தியமில்லை என்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டுமா?

(51) If the earthly blessings surrendered by Christ and the Church are to be given to Israel and to the world through Israel, under the terms of Restitution during the Millennium, when should we expect that New Covenant to begin to be operative, and should we expect its manifestation to be actual Restitution in some form? Pages 456, 457
51. கிறிஸ்து மற்றும் சபையினால் ஒப்புக்கொடுக்கப்பட்ட பூமிக்குரிய ஆசீர்வாதங்களானது இஸ்ரயேலுக்கும், அவர்கள் மூலமாக உலகிற்கும், ஆயிர வருட அரசாட்சியின்போது திரும்பக்கொடுத்தலின் நிபந்தனைகளின் கீழ், கொடுக்கப்பட வேண்டியதாயிருக்க, புது உடன்படிக்கை எப்போது செயல்படத் துவங்கும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும்? மேலும், அதன்

வெளிப்பாடானது ஏதோ ஒருவிதத்தில் நிஜமான திரும்பக்கொடுத்தலாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டுமா? **E P. 625-627**

(52) How completely will the world recognize The Christ, the Mediator, during the Millennium? Will He be the all-responsible Head of the world or will mankind approach the Father through the name and merit of the Mediator? Page 458
52. ஆயிர வருட அரசாட்சியின்போது மத்தியஸ்தராகிய கிறிஸ்துவை உலகம் எப்படி முழுமையாக அடையாளம் கண்டுகொள்ளும்? அவர், எல்லா பொறுப்பும் ஏற்ற உலகத்தின் தலையாக இருப்பாரா? அல்லது மனுக்குலத்தார், மத்தியஸ்தரின் நாமம் மற்றும் புண்ணியத்தின் மூலமாகப் பிதாவை அணுகக்கூடியவர்களாக இருப்பார்களா? **E P. 628**

(53) Some, ignoring the force of the word **Ransom**, if not, indeed, denying it, are in the habit of speaking of receiving pardon for their sins. What shall we say as to the Scripturalness of this? Explain the difference between the two words, **pardon** and **forgiveness**, and show why one is right and the other is wrong in this connection. Page 459
53. சிலர், **மீட்கும்பொருள்** என்ற வார்த்தையின் வலிமையைப் புறக்கணித்தவர்களாக, இல்லையென்றால், உண்மையாகவே மறுக்கிறவர்களாக, பாவத்திற்கான மன்னிப்பைப் பெறுவதாகப் (பெற்றுக்கொண்டு வருவதாகப்) பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இதுகுறித்து வசனத்தின் அடிப்படையிலான தன்மையைப் பற்றி நாம் என்ன கூறுவோம்? மன்னித்தல் **(pardon)** மற்றும் மன்னிப்பளித்தல் (தண்டனை தருவதிலிருந்து விடுவித்தல்) **(forgiveness)** ஆகிய இரண்டு வார்த்தைகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தை விளக்கிக்கூறி, இது தொடர்பாக ஒன்று சரியாகவும், மற்றொன்று தவறாகவும் காணப்படுவது ஏன் என்பதைக் காண்பிக்கவும். **E P. 629, 630**

(54) Even if we should admit that the word **pardon** might be used in such a way as not to ignore the Ransom feature of the Divine testimony, is it wisest and best to use these words indiscriminately and synonymously to the confusion of some?
54. தேவன் விளக்கியுள்ள மீட்கும்பொருளின் அம்சத்தைப் புறக்கணிக்காத விதத்தில் மன்னிப்பு (pardon) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருந்தாலும், சிலருக்குக் குழப்பம் ஏற்படும் வண்ணமாகப் பாகுபாடற்ற வகையிலும், ஒரே பொருளைக் கொண்ட வேறு வார்த்தையாகவும் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவது ஞானமாகவும், சிறந்ததாகவும் இருக்குமா?

(55) While it is true that the effect of the Divine arrangement toward mankind is practically the same as though we were pardoned, may we not conclude that our Creator had some good purpose in explaining to us the philosophy of the means by which He could be "just and yet be the Justifier" of sinners? Give a short statement of the philosophy of the matter from this standpoint. Pages 460, 461
55. மனுக்குலம் விஷயத்திலுள்ள தெய்வீக நடவடிக்கையின் விளைவானது நாம் மன்னிக்கப்பட்டதைப் போலவே உள்ளது என்பது உண்மைதான் என்றாலும், நம்முடைய சிருஷ்டிகர், தாம் நீதியுள்ளவராகவும், அதேசமயம் பாவிகளை நீதிமான்களாக்குகிறவராகவும் இருக்கக்கூடிய வழிமுறையின் தத்துவத்தை நமக்கு விளக்குவதில் சில நல்ல நோக்கங்களைக் கொண்டிருந்தார் என்று நாம் முடிவுசெய்ய முடியுமா? இக்கண்ணோட்டத்திலிருந்து இவ்விஷயம் குறித்த ஒரு சுருக்கமான தத்துவ அறிக்கையை அளிக்கவும். **E P. 630 *கடைசி பத்தி* - E P. 633 ¶ 1**

(56) Some have proclaimed that they do not see the Justice of God in compelling our Lord Jesus to be man's Redeemer. Do any Scriptures put the matter in this light? If not, how shall we view it? Page 462 ¶ 1
56. மனுஷருடைய மீட்பர் ஆகும்படிக்கு நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை தேவன் நிர்பந்தித்ததில் தேவனுடைய நீதியைத் தங்களால் காணமுடியவில்லை என சிலர் வலியுறுத்தியிருக்கின்றனர். எந்த வேதவசனமாகிலும் இந்த வெளிச்சத்தில் காரியத்தை முன்வைக்கிறதா? இல்லையெனில், இதை நாம் எவ்வாறு கண்ணோக்க வேண்டும்? **E P. 633 ¶ 2; 634 ¶ 1**

(57) We have seen that Jehovah cannot forgive sin-in the true sense of the word pardon without consideration and without the satisfaction of Justice. We now inquire, Is it possible for our Lord

Jesus, or for the disciples, or for us to pardon the transgressions of others? If so, how and why? Explain the difference between the rules which govern us and those which control the Almighty's course of action. Pages 462, 463, 464
57. நீதியைத் திருப்திசெய்யாமலும், கருத்தில் கொள்ளாமலும் இருக்கும் வரையில் தேவனாகிய கர்த்தரினால் - pardon என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்திலிருந்து - பாவத்தை மன்னிக்க இயலாது என்று நாம் பார்த்திருக்கிறோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கோ அல்லது சீஷர்களுக்கோ அல்லது நமக்கோ மற்றவருடைய மீறுதல்களை மன்னிப்பது என்பது சாத்தியமானதா என்பதை நாம் இப்பொழுது ஆராயலாம். அப்படியானால், எவ்வாறு மற்றும் எப்படி சாத்தியம்? நம்மை ஆளும் சட்டங்களுக்கும், சர்வவல்லவரின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டங்களுக்கும் இடையே காணப்படும் வித்தியாசத்தினை விளக்கிக்கூறவும். **E P. 634 ¶ 2 - E P. 637 ¶ 1**

(58) Since death is the wage of sin, what shall we say to the suggestion of some that every man pays his own death penalty when he dies? Explain the matter thoroughly. Page 464 ¶ 2
58. மரணம் பாவத்தின் சம்பளமாக இருக்கின்றபடியினால், ஒவ்வொரு மனுஷனும் தான் மரிக்கின்றபோது தன்னுடைய சொந்த மரண தண்டனையைச் செலுத்தித் தீர்க்கிறான் என்ற சிலருடைய கருத்துக்கு நாம் என்ன சொல்ல முடியும்? இந்த விஷயத்தை முற்றிலுமாக விளக்கிக்கூறவும். **E P. 638 ¶ 1**

(59) Why is the Adamic death spoken of as a complete and not as an everlasting destruction? Pages 464, 465
59. ஆதாமின் மரணம் ஒரு முழுமையான மரணமாகவும், மாறாக நித்தியத்துக்குமான அழிவாகப் பேசப்படாமலும் இருப்பது ஏன்? **E P. 638 - 640**

(60) In what way does Universalism deny the Ransom? Pages 466, 467
60. எந்த வகையில் இந்தப் பிரபஞ்சம் மீட்கும்பொருளை ஒப்புக்கொள்ள மறுக்கிறது? **E P. 641 - E P. 642 ¶ 1**

(61) Why did God not make us in such condition that we could not sin? Page 467 ¶ 3
61. நாம் பாவமே செய்யக்கூடாத வகையில்/நிலையில் தேவன் நம்மைச் சிருஷ்டிக்காதது ஏன்? **E P. 642 ¶ 2**

(62) What kind of worship does God desire? And does His plan contemplate His rejection of any other worship? Page 467 ¶ 3
62. எவ்வகையான தொழுதுகொள்ளுதலில் தேவன் பிரியப்படுகிறார்? மேலும், வேறு எந்த தொழுதுகொள்ளுதலையும் நிராகரிக்கும் வண்ணம் அவருடைய திட்டம் யோசித்திருக்கிறதா? **E P. 642 ¶ 2**

(63) How will a permission of choice eventually operate for the best interests of all concerned? Page 468
63. சம்பந்தப்பட்ட அனைவரின் நலன்களுக்காக, தெரிவுசெய்வதற்கான அனுமதி எவ்வாறு செயல்படும்? **E P. 643 ¶ 1; E P. 644 ¶1**

(64) What kind of salvation has God tendered to the race? Are there terms connected with it and what are they? Page 468 ¶ 3
64. தேவன் இந்தச் சந்ததியினருக்கு எவ்வகையான இரட்சிப்பை ஒப்பந்தம் பண்ணியிருக்கின்றார்? அதனுடன் தொடர்புடைய விதிமுறைகள் உள்ளதா? மேலும் அவை என்ன? **E P. 644 ¶ 2**

(65) Was the original trial of Father Adam a favorable one, a just one, and will the new trial secured for him and his race through our Savior's death be any the less just or fair or favorable? Page 469 ¶ 1
65. தகப்பனாகிய ஆதாமின் முதல் பரீட்சையானது சாதகமான ஒன்றாக, நீதியான ஒன்றாக இருந்ததா? மேலும், நம்முடைய இரட்சகருடைய மரணத்தின் மூலம் அவருக்காகவும், அவருடைய சந்ததியினருக்காகவும் பாதுகாத்து வைக்கப்படும் புதிய பரீட்சையானது எவ்வகையிலாகிலும் நீதிக்குக் குறைவாக அல்லது மிதமாக அல்லது சாதகமானதாக இருக்குமா? **E P. 645 ¶ 1**

(66) Why did Christ die to save us from the curse? Page 469 ¶ 2
66. சாபத்திலிருந்து நம்மை இரட்சிப்பதற்கு கிறிஸ்து மரித்தது ஏன்? **E P. 645 ¶ 2**

(67) Explain the Scripture, "God will have all men to be saved," and the other Scripture, "So all Israel shall be saved." Is either of these salvations eternal? Give a full statement of what each implies. Page 469 ¶ 3
67. "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் . . . அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்ற வசனத்தையும், "இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" என்ற மற்றொரு வசனத்தையும் விளக்கிக்கூறவும். இந்த இரட்சிப்புகளில் ஏதேனும் ஒன்று நித்தியத்திற்கும் உரியதா? இவை ஒவ்வொன்றும் எதைச் சுட்டிக்காண்பிக்கிறது என்பது பற்றின முழு அறிக்கை ஒன்றைக் கொடுக்கவும். **E P. 645 ¶ 3 - E P. 646 ¶ 2**

(68) Why does God will that our race shall be saved from the blindness of ignorance and superstition which came through the great Adversary's machinations and human weaknesses? Page 469 ¶ 3, last part
68. மாபெரும் எதிராளியினுடைய சூழ்ச்சியினாலும், மனுஷீகப் பெலவீனங்களின் மூலமாகவும் வந்திட்ட அறியாமை மற்றும் மூடநம்பிக்கை எனும் குருட்டுத்தனத்திலிருந்து நம்முடைய சந்ததியினரை இரட்சிக்கும்படி தேவன் சித்தம்கொண்டது ஏன்? **E P. 646 ¶ 1, 2**

(69) Since we read that Christ died, "The Just for the unjust, that He might bring us to God," should we understand this to mean that Justice is obligated to recover man from all that was lost in Adam? Give the reasons for the answer. Page 470
69. "நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" கிறிஸ்து மரித்தார் என்று நாம் வாசிக்கிறபடியினால், ஆதாமில் இழக்கப்பட்ட அனைத்திலிருந்தும் மனுஷனை மீட்டெடுப்பது நீதிக்குக் கடமையாயிருக்கிறது என்ற அர்த்தத்தில் இந்த வசனத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டுமா? **E P. 647**

(70) Does Justice have anything to do with mankind's restoration, except as the Redeemer makes application of His merit-now as Advocate for the Church and in the Millennium as Mediator for the world? Page 471, Page 472 ¶ 1
70. மீட்பர் தம்முடைய புண்ணியத்தை - தற்போது சபைக்குப் பரிந்துபேசுகிறவராகவும், ஆயிர வருட அரசாட்சியில் உலகிற்கு மத்தியஸ்தராகவும் - பயன்படச் செய்வதைத் தவிர்த்து, மனுக்குலத்தின் திரும்பக்கொடுத்தல் விஷயத்துடன் நீதிக்கு ஏதாவது தொடர்பு இருக்கிறதா? **E P. 647 ¶ 2 - E P. 649**

(71) What force is there in the expression that "there is no name given under heaven or amongst men whereby we must be saved" except the name of Jesus? Show how this is so and why this is so, connecting the same with the Divine Plan of Salvation in its worldwide application. Page 472 ¶ 2
71. இயேசுவின் நாமமே அல்லாமல் "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்ற சொற்றொடரில் காணப்படும் அழுத்தம் என்ன? அதன் உலகளாவிய பயன்பாட்டில் இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்துடன் இணைத்து, இது எப்படி சாத்தியம் மற்றும் ஏன் சாத்தியம் என்பதைக் காண்பிக்கவும். **E P. 650 ¶ 2, 3**

(72) If all the world's affairs will be in the hands of the Mediator of the New Covenant, what shall we understand to be His mind, His will, His good pleasure, respecting those for whom He will make mediation? Pages 473, 474 ¶ 1
72. இந்த உலகத்தின் காரியங்கள் அனைத்தும் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தருடைய கரங்களில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் என்றால், அவர் மத்தியஸ்தம் செய்யப்போகிறவர்கள் விஷயத்தில் அவருடைய மனம், அவருடைய சித்தம், அவருடைய பிரியம் குறித்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்ன? **E P. 650 ¶ 4 - E P. 652 ¶ 1**

(73) Will God accept any less standard than perfection as the terms of eternal life? Page 474
73. தேவன் நித்திய ஜீவனுக்கான விதிமுறைகளாகப் பரிபூரணம் என்ற தரத்திற்கும் குறைவான தரத்தை ஏற்றுக்கொள்வாரா? **E P. 652 ¶ 2**

(74) How will that item of our Lord's prayer be fulfilled which speaks of God's will being done in earth as in heaven? Page 475 ¶ 1
74. தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்ற நம்முடைய ஆண்டவருடைய ஜெபத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியம் எவ்வாறு நிறைவேறும்? **E P. 653 ¶ 1**

(75) Will the Restitution from sin and death conditions be effected instantaneously? If not, why not? Page 475 ¶ 2
75. பாவம் மற்றும் மரண நிலைகளிலிருந்து திரும்பக்கொடுத்தல் (திரும்பக் கொண்டுவருதல்) என்பது உடனடியாக செயல்படுத்தப்படுமா? இல்லையென்றால், ஏன் இல்லை? **E P. 653 ¶ 2**

(76) Give six reasons why a gradual process of Restitution, such as the Scriptures imply will be granted to man, will be more to their advantage than instantaneous Restitution or perfecting. Pages 475-477
76. உடனடியான திரும்பக்கொடுத்தல் அல்லது பூரணமாக்கப்படுதலைப் பார்க்கிலும், அதிக நன்மை உண்டாகும்படி, வசனங்களில் சுட்டிக்காட்டுவதுபோன்று திரும்பக்கொடுத்தலின் செயல்முறை மனுஷனுக்குப் படிப்படியாக அளிக்கப்படுவது ஏன் என்பதற்கான ஆறு காரணங்களை அளிக்கவும். **E P. 653 ¶ 2 - E P. 656**

(77) Give three reasons why a gradual Restitution Divinely provided will be the most advantageous arrangement possible for the redeemed. Pages 478, 479
77. தெய்வீகத் திட்டத்தின்படியான ஏற்பாடாகிய படிப்படியான திரும்பக்கொடுத்தல் (மறுசீரமைத்தல்) என்பது மீட்கப்பட்டவர்களுக்கான மிகவும் அனுகூலமான ஏற்பாடாக இருக்கப்போவது ஏன் என்பதற்கான மூன்று காரணங்கள் அளிக்கவும். **E P. 657 ¶ 1 - E P. 660 ¶ 1, 2**

(78) State the philosophical relationship between **ransom** and **substitution**. Pages 480, 481 ¶ 1
78. **மீட்கும்பொருளுக்கும், பதிலீட்டுக்கும்** இடையே காணப்படும் தத்துவ உறவைக் குறிப்பிடவும். **E P. 661 ¶ 1, 2**

(79) Give illustrations of such substitution and ransom. Page 481 ¶ 2
79. இத்தகைய மீட்கும்பொருளுக்கும், பதிலீட்டுக்கும் உதாரணங்கள் அளிக்கவும். **E P. 662 ¶ 1; E P. 663 ¶ 1**

(80) What thought of substitution has led to confusion? Explain the matter, showing the right and the wrong view of the question. Page 482 ¶ 1, 2
80. பதிலீடு குறித்த எந்தக் கருத்தானது குழப்பத்திற்கு வழிநடத்தியிருக்கிறது? இந்தக் கேள்வி குறித்த சரியான மற்றும் தவறான கண்ணோட்டத்தைக் காண்பித்து, விஷயத்தை விளக்கிக் கூறவும். **E P. 663 ¶ 2 - E P. 665 ¶ 1**

(81) Could the Divine Plan for human salvation have been different from what it is? Page 483
81. மனுஷனுடைய இரட்சிப்புக்கான தெய்வீகத் திட்டமானது, போடப்பட்ட திட்டத்திலிருந்து வேறுபட்ட விதத்தில் இருந்திருக்க முடியுமா? **E P. 665 ¶ 2, 3**

(82) What two lines of reasoning prove the wisdom of the Plan which God has adopted? Pages 484, 485
82. தேவன் ஏற்பாடு செய்திருக்கின்ற திட்டத்தின் ஞானத்தை எந்த இரண்டு வாதங்கள் நிரூபிக்கின்றன? **E P. 666 ¶ 1 - E P. 668 ¶ 1**

(83) How would any other Plan than the one adopted Ransom and Restitution, have affected the Gospel Church? Page 485, last par.
83. மீட்கும்பொருள் மற்றும் திரும்பக்கொடுத்தல் என்ற திட்டத்தைப் பார்க்கிலும் வேறு ஏதேனும் திட்டம் இருந்திருந்தால், சுவிசேஷ யுகம் எப்படிப்பட்டதாகக் காணப்பட்டிருக்கும்? **E P. 668 ¶ 2**

(84) May we not expect that time will show that every feature of the Divine Plan has been most wise and helpful? Page 486
84. தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் மிக ஞானமானதும், பயனுள்ளதுமாக இருந்திருக்கிறது என்பதைக் காலமானது காண்பித்துக் கொடுக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம் அல்லவா? **E P. 669**

---

## வேத ஆராய்ச்சி
## தொகை நூல் V மீதான
## பெரோயரின் கேள்விகள்

### அத்தியாயம் 16

### *"ஒப்புரவாகுதலின் ஊழியம் அல்லது ஒப்புரவாகுதல்"*

(1) What is signified by the Ministry of Reconciliation? Page 487

1. ஒப்புரவாகுதலின் ஊழியம் அடையாளப்படுத்துவது என்ன? **E P. 671**

(2) Who participate in this ministry? Page 487

2. இந்த ஊழியத்தில் பங்கேற்பவர்கள் யார்? **E P. 671**

(3) Is this Reconciliation a feature of the Millennial Age or is there a feature of it now in operation? Cite a Scripture which declares that the Church was reconciled to God. Page 487 ¶ 2

3. இந்த ஒப்புரவாகுதல் ஆயிர வருட யுகத்தின் ஓர் அம்சமாக உள்ளதா? அல்லது தற்பொழுது செயல்பாட்டில் இருக்கும் ஒரு அம்சமா? சபை தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டுவிட்டனர் என்பதை அறிக்கைசெய்யும் வேதவசனத்தை மேற்கோள்காட்டவும். **E P. 671 ¶ 2**

(4) When we read that God was in Christ reconciling the world to Himself, should we here differentiate between the Church which accepts the reconciliation through faith, and the world which is to be reconciled or brought into harmony with God by the great Mediator during the Millennium? Page 487

4. தேவன் கிறிஸ்துவில் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொண்டார் என்று நாம் வாசிக்கும்போது, விசுவாசத்தின் மூலமாக ஒப்புரவாகுதலை ஏற்றுக்கொள்ளும் சபைக்கும், ஆயிரம் ஆண்டு காலத்தில் மாபெரும் மத்தியஸ்தர் மூலமாக தேவனோடு ஒப்புரவாக்கப்படப்போகும் அல்லது அவருடன் இணக்கத்திற்குள் கொண்டுவரப்படப்போகும் உலகத்துக்கும் இடையே நாம் வேறுபடுத்திப் பார்க்கவேண்டுமா? **E P. 671**

(5) What constitutes authority to act as a minister or servant of the Atonement between God and the world? Page 487, last par.

5. தேவனுக்கும், உலகத்திற்கும் இடையே ஒப்புரவாகுதலின் ஊழியராகச் செயல்படுவதற்கான அதிகாரத்தை உருவாக்குவது எது? **E P. 672 ¶ 3**

(6) To whom may these ministers or servants tell of the grace of God operating through Christ for the forgiveness of sins? What is there in this connection which operates disadvantageously, hindering the servants from bearing record to all mankind? Pages 488, 489

6. பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவின் மூலம் செயல்படுகிற தேவனுடைய கிருபையைக் குறித்து இந்த ஊழியக்காரர் யாருக்கு அறிவிப்பார்கள்? மனுக்குலம் அனைவருக்கும் அறிவிப்பதிலிருந்து ஊழியர்களை தடைசெய்யும் விதத்தில் பாதகமாகச் செயல்படும் தொடர்பில் காணப்படுவது என்ன? **E P. 672** கடைசி பத்தி முதல் **675 ¶ 1**

(7) Will the opening of the blind eyes and unstopping of the deaf ears during the Millennium permit these servants of reconciliation to do a more effective work--to a larger number--to all the families of the earth? Page 490

7. ஆயிர வருட அரசாட்சியின்போது குருடான கண்கள் திறக்கப்படுதலும், செவிடான காதுகள் கேட்கப்பண்ணுதலுமாகிய காரியங்கள் இந்த ஒப்புரவாகுதலின் ஊழியர்களை - இன்னும் அதிக வல்லமையான கிரியையை - பெருமளவில் - பூமியின் குடும்பங்கள் அனைவருக்கும் செய்யும்படி அனுமதிக்குமா? **E P. 675, 676**

**முற்றிற்று**